
பட்டினத்தார் பாடல்
மூலமும் உரையும்
Rs. 2.

உ

திருச்சிற்றம்பலம்.

# பட்டினத்தார் பாடல்

## திருப்பாடற்றிரட்டும், அருட்புலம்பலும்

## பத்திரகிரியார் அருளிச்செய்த

## மெய்ஞ்ஞானப் புலம்பலும்

## மூலமும் - பொழிப்புரையும்

இவை

சென்னை தொண்டமண்டலம் கல்விச்சாலை

பிரதம தமிழ்ப்பண்டிதர்

**வித்வான் சூ. அப்பன் செட்டியார் அவர்கள்**

மாணாக்கர்

**மா. வடிவேலு முதலியார் அவர்களால்**

இயற்றியதை

---

பூவிருந்தவல்லி,

**பி. எஸ். டி. எம். அண்டு சன்ஸ்**

தமது,

சென்னை, சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1932.

இதன் விலை] ரிஜிஸ்தர் காப்பி ரைட். [ரூபா 2.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்து பிள்ளையாருடைய

# சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீசிவபெருமானானவர் முன்னொரு காலத்தில் குபேரனுடைய வேண்டுகோளால், தாம் தென் தேசங்களிலுள்ள க்ஷேத்திரங்களில் ஆன்மகோடிகள் உய்யும்படியாக திருவுளங் கொண்டு, ஸ்ரீபர்வதராஜ புத்திரியோடு இடபவாகனரூடராய் விநாயகர் முதலாகச் சொல்லப்பட்டவர்கள் சூழ்ந்து போற்றிவர, திருவோலக்கங்கொண்டு திருக்கயிலாயத்தி லிருந்து எழுந்தருளி, ஸ்ரீ காசி முதலிய திருப்பதிகளைக் கண்டருளி அக்குபேரனது குறையை முடிக்கத் திருக்காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்தருளினார்.

இப்பட்டினமானது மிக்க விசித்திரக் காட்சிகளுடையதா யிருந்தமையானும், அதிலுள்ள வைசியர் வீதி அப்பட்டின விசித்திரங்களைப் பார்க்கிலும் பதின்மடங்கு உயர்ந்ததா யிருந்தமையானும், தமது தோழனாகிய குபேரனுக்கு அப்பட்டணத்தை விட்டு நீங்க மனமெழவில்லை இதைச் சிவபெருமானுணர்ந்து, குபேரனைப் பார்த்து "நீ இந்தப் பட்டணத்தில் வாசஞ் செய்ய நினைத்தாயாகையால் இப்பூவுலகத்தில் பிறக்கக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அச்சிவபெருமான் கட்டளையைத் தலைமேற்கொண்டு திடுக்கிட்டு மிகவும் வருத்தப்பட்டுக் கடவுளை வணங்கி நின்று தேவரீர், அடியேனைப் பிறவிக் கடலில் விழாத வண்ணம் ஆட்கொள்ள வேண்டும், என்று கேட்கச் சிவ பெருமான் அவ்வாறே ஆகுக? என்று சொல்லித் தமது கபிலை மலைக்குச் சென்றனர்.

அச்சிவபெருமானுடைய உத்தரவின்படி குபேரன் அப்பட்டினத்தில் சிவாநுபவச் செல்வரா யிருந்த, சிவ நேயகுப்தருக்கும், ஞானகலை என்பவருக்கும், புத்திரராக அவதரித்துச் சுவேதாரண்யர் என்னும் திருப்பேர் வைக்கப் பெற்று ஐந்தாம் வயதை யடைந்து, தந்தையார் சிவ பத மடைய அவருக்குச் செய்ய வேண்டிய கடன்களை முடித்துப் பின்னர் நல்லாசிரியரிடத்தில் சகலகலைகளையும் ஓதி யுணர்ந்து, ஆறும் வயதில் பிறவித்துன்பத்தை நினைத்து நினைத்து வருந்திச்சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து வருகையில் ஓர்நாள் அச்சிவபெருமான் ஒரு விருத்த வேதியராக இவரது கனவில் எழுந்தருளி "நாளையதினம் திருவோண நக்ஷத்திரமும் பிரதோஷமும் கூடிய சோமவாரமாக விருத்தலால் நீ சுவேதாரண்யர் ஆலயத்திற்குச் சென்று சிவபெருமானைப் பூசித்து வழிபடக்கடவாய்'' என்று சொல்லி மறைய, அவ்வாறே மறுநாட் சென்று பூசித்து நிற்கையில் கனவில் தோன்றிய சிவ பெருமானே ஞானசாரியராய்த் தம்மைத் தேடி வந்தடையவும், அவராற் சிவதீக்ஷை செய்யப்பெற்று அவராற் கொடுக்கப்பட்ட தங்கப்பெட்டகத்தைத் திறந்து அதினுள்ளிருந்த ஸ்படிகலிங்க மூர்த்தியையும், மரகதவிநாயக மூர்த்தியையுங் கண்டு, மிக்க ஆச்சரிய மடைந்து ஞானசாரியரை வணங்கி அவருடைய உத்திரவின்படி நல்ல தீர்த்த



சிவசருமரும் சுசீலையும் சிவபிரானாகிய குழந்தையைக் காணுதல்.

மாடி ஷை மூர்த்திகளைப் பீடத்தில் எழுந்தருளப்பண்ணி விதிப்படி பூசை செய்து முடித்து, ஆசாரியர் முதலி யோருக்கு உணவிட்டுத் தாயும் தாமுமுண்டு மகிழ்ந்து தமதிடத்திருந்த செல்வம் யாவையும் சிவபூஜா விஷயத்தி லும் சிவனடியார் விஷயத்திலும் செலவிட்டபடியால் மறு குருபூஜைக்குப் பொருளில்லாமையைப் பற்றித் தமது தாயினிடத்தில் சொல்லி வருந்தி, இருவரும் துயி லுகையில், சிவபெருமான் கனவிற்றோன்றி "நீ வருந்தற்க; நும்மில்லத்தில் வெகு திரவிய மிருக்கின்றது, அதைக் கொண்டு உன் குறையை முடிப்பாயாக" என்று சொல்லி மறைந்தனர், பின்னர் சுவேதாரண்யர் விழித்தெழுந்து பொழுது விடிந்தவுடன் அப்பொருள்களைக் கண்டு, அவற் றைக் கொண்டு தமது குறைகளை முடித்துத் தமக்கும் பதினாறுமாண்டில் அக்காவிரிப்பூம் பட்டினத்தில் தம்மர பிற் கொத்த மரபினரான சிவ சிதம்பர செட்டியாருக்கும், சிவகாமியம்மைக்கும் பிறந்த சிவகலை என்னும் பெண்ணை விவாக முடித்து இல்லற நடாத்திக் குலத்தொழிலை விர்த்தி செய்து பட்டணத்துச் செட்டியார் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்று வாழ்ந்து வயது முப்பதாகவும் மகப் பேறின்றி திருவிடை மருதூரரைக் குறித்து விரதங்க ளியற்றி வந்தனர்.

அத்திருவிடை மருதூருடைய சிவபெருமான் தன் னைப் பூசிக்கும் சிவசருமர் என்னும் ஆதிசைவப் பிராமண னுடைய தரித்திரத்தை நீக்கும் பொருட்டு அவ்வேதியர் பால் பல அதிசயங்களைக் காட்டிக் கடைசியில் அச்சிவ சருமரும், சுசீலையும் நித்திரை செய்கையில் அவர்களு டைய கனவில் சிவபெருமான் தோன்றி "நாம் காருண் யாமிர்தத் தீர்த்தக்கரையின் கீழண்டை வில்வ விருக்ஷத்

தின் கீழ் மகவுருக் கொண்டிருப்போம் நீங்கள் அம்மக வை யெடுத்துக் கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தில் மக வின்மையால் வருந்தித் தவம்புரியும் சுவேதாரண்யனிடத் தில் கொடுப்பீர்களானால், அவன் அம்மகவி னெடைப் பொன் கொடுப்பன், அதைக் கொண்டு உங்கள் தரித்திர நீங்கி வாழ்வீராக" என்று திருவாய் மலர்ந்து மறைந் தருளினர். அங்ஙனமே சிவசருமர் அக்குழவியைக் கண்டு எடுத்து அப்பட்டினத்தின் ஓர் சோலையில் தழைகளில் அக்குழவியைக் கிடத்திச் சற்றிளைப்பாறி யிருந்தனர்.

இவ்வாறே சிவபெருமான் சுவேதாரண்யர் சிவகலை இவர்களிருவர் கனவிற்றோன்றி சோலைக்கண்ணிருக்கும் குழந்தையைப் பெற்றுக்கொள்ளும் வகையையும் அதற்கு விலை கொடுக்கவேண்டிய அளவையும் சொல்லி மறைந் தனர்.

அவ்வாறே சுவேதாரண்யர் சோலையிற்போய் அவ் விருவரையும் அழைத்துக்கொண்டுவந்து அக்குழவியைப் பெற்றுக்கொண்டு அதின் எடைக்குச்சரியாகத் திரவியத் தைக்கொடுத்து சிலநாள் வைத்திருந்து பிறகு தமது தேறிலேற்றி அவர்களுடைய வூருக்கநுப்ப அவர்களும் தமது வூரையடைந்து சிவனடியார்களுடனுண்டு வாழ்ந் திருந்தனர்.

மேற்படி சுவேதாரண்யர் இங்ஙனம் கிடைக்கப் பெற்ற புத்திரனுக்கு மருதப்பிரான் என்னும் திருநாம மிட்டுப் புத்திரோற்சவம் கொண்டாடினர் இங்ஙனமாய் மருதப்பிரான் தமது விளையாட்டுப் பருவத்தில் அனேக மான அற்புதங்களைச்செய்து நல்லாசிரியனிடத்தில் சகல கலைகளையும் சிலநாளிலேயே சற்றறிந்தனர், இவ்வாறு இப் பருவத்திலேயே பலவகையான அதிசயங்களையெல்லாம்



குழந்தையை சுவேதாரண்யனிடத்தில் கொடுத்துப் பொன் பெறுதல்.

ஓலைச் சீட்டொன்றும் இருந்தது. அதில் ஓலைச்சீட்டை எடுத்து வாசிக்க "காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடை வழிக்கே" என்று எழுதி யிருப்பதைப் பார்த்து, தாய்க்கு ஒரு வழியான ஆறுதலை சொல்லித் துறந்து வெளிவர, மனைவி வந்து தடுக்க அவ்வம்மைக்குச் சில தொண்டுகள் கற்பித்து நிற்கச் செய்து தமது பொக்கிஷாதிபதியான சங்கமருக்குத் தமது பொருள்களைச் சூறையாடும்படி ஆஞ்ஞாபித்து அவ்வூர் புறத்திலுள்ள பொது மண்டபத்தில் போயிருந்தனர்.

அவ்விடத்தில் சாதியார்களெல்லாம் கூட்டம் கூட்டமாகப் போக அதற்கு "மாடுண்டு கன்றுண்டு" என்பது முதலிய திருப்பாடல்களைப்பாடி மௌன மடைந்திருந்தனர்.

அதன் பின்னர் அவ்வூரரையன் வந்து பலவாறான நியாயங்களைச் சொல்ல அதையும் மறுத்துப் பசியெடுத்தால் பிச்சை யேற்றுண்டு பேரானந்தத்தில் மூழ்கி யிருந்தனர்.

இவரது சுற்றத்தார் இவர் விஷயத்திற் செய்த குற்றங்களையும் தன் சமக்கையார் செய்த பெரும் இடையூற்றையும் ஒருவாறாக நீங்கிப் பிச்சை யேற்றுண்டும், ஞான நிஷ்டை கூடியும் வருகின்ற காலத்தில் தமது அன்னையார் தேகவியோகமடைய மயானத்துக்குக் கொண்டு போன சுற்றத்தார்கள். அஞ்சியோடும்படி அங்ஙனம் சென்று அவர்களடுக்கிய சிதையைத் தள்ளிப் பச்சை வாழை மட்டை கொண்டு வந்து சிதையடுக்கி அதன்மேற் றம்முடைய தாயைக் கிடத்தி, "ஐயிரண்டு" என்னும் முதற்குறிப்பினை யுடைய வெண்பா முதலாகப் பாடித்



மருதப்பிறுன் வாணிபஞ்செய்ய கப்பலிற் செல்லல்.



திருவொற்றியூரில் பட்டினத்தார் தன்னை சிவலிங்க மாகக் காட்டல்.

கடவுள் துணை.

பட்டினத்துப் பிள்ளையார்

அருளிச் செய்த

# திருப்பாடற் றிரட்டு.

மூலமும் - பொழிப்புரையும்.

---

முதலாவது.

## கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

நினை மின் மனனே நினை மின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே.

(பொழிப்புரை) சிவபெருமான் என்னும் திருப்பெயரை உடையவனை, செவந்த பொன்னம்பலத்தில் நடனஞ்செய்கின்றவனை, மனமே? துதி செய்யக்கடவை (அப்படி துதி செய்வதைவிட்டு,)

அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலேபோம் பற்க

(பொ - ரை) பிசாசுபோன்ற பொய்யாகிய உலக வாழ்வையும் அலைகின்ற காற்றைப்போன்ற உடம்பையும் பாதுகாவாதிருப்பாயாகவும். (ஏனென்றால்,)

பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிருக்கும் சிருத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தன மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்

(பொ - ரை) பிறந்தவைகளெல்லாம் சாகின்றன; செத்தவைகளெல்லாம் பிறக்கின்றன; வெளிபட்டவைகளெல்லாம் மறைகின்றன? மறைந்தவைகளெல்லாம் வெளிபடுகின்றன? பெறுத்தவைகளெல்லாம் சிறுக்கின்றன? சிறுத்தவைகளெல்லாம் பெருக்கின்றன? தெரிந்தவைகளெல்லாம் மறக்கின்றன; மறைந்தவைகளெல்லாம் தெரிகின்றன? சேர்ந்தவைகளெல்லாம் பிரிகின்றன; பிரிந்தவைகளெல்லாம் சேர்கின்றன; தின்றவைகளெல்லாம் மலமாகின்றன? தரித்துக்கொண்ட (உடைகளெல்லாம்) அழுக்காகின்றன? விரும்பினவைகளெல்லாம் வெறுக்கப்படுகின்றன? வெறுப்பவைகளெல்லாம் விரும்பப்படுகின்றன? என்று (சொல்லுகின்ற) இவைகளையெல்லாம் தெரிந்துகொண்டாய் ஆகையால் (அல்லாமலும்)

பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து நினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன

ஓம்பின யனைத்து மனைத்து நினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன்றொழியா துற்றனை யன்றியும்

(போ - ரை ) உலகத்தில் இதுவரைக்கும்) பிறந்து ள்ள ஜென்மங்களி லெல்லாம் எல்லா உயிர்களையும் நீ கொன்றாய்? அவைகளும் உன்னைக் கொன்றன, அவை களை யெல்லாம் நீ தின்றாய், அவைகளும் உன்னைத் தின்றன, எல்லாவற்றையும் நீ பெற்றாய், அவைகளும் உன்னைப் பெற்றன், எல்லாவற்றையும் நீ பாதுகாத் தாய், அவைகளும் உன்னைப் பாது காத்தன. செல்வம் வந்தபோது சந்தோஷித்தாய், தரித்திரம் வந்தபோது வருத்தப்பட்டாய், சொர்க்கலோகத்தில் இருந்தாய், நர கத்தில் கிடந்தாய், இவ்வுலகத்தில் இன்பதுன்பங்களை அநுபவித்தாய், (ஆகையால் மேலே சொன்னவைகளில் ஒவ்வொன்றையும் விட்டு விடாமல் அனுபவித்தாய்) அல் லாமலும்,

புற்புதக் குரம்பை துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பூளையும் நீரும் புறப்படுமொரு பொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவிழு மொரு பொறி
உமிழ் நீர்கோழை யொழுகு மொரு பொறி
வளியு மலமும் வழங்கு மொரு வழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொரு வழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்

சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து

(பொ - ரை) நீர்க்குமிழி போல் நிலையில்லாமல்) அருவருக்கத்தக்கதாய் இருந்து விளங்குகின்ற சரீரத்தைக் கருங்கல்லைப் பார்க்கிலும் பலமுடையதாக நினைத்தாய்; (அப்படி நினைத்த இந்த உடம்பில் ஒரு பொறியில் பீளையும் சலமும் வெளிப்படும், ஒரு பொறியில் குறும்பி வெளிப்படும், ஒரு பொறியில் சளியும் சலமும் இழியும், ஒரு பொறியில் எச்சிலும் கோழையும் ஒழுகும், ஒருவழியில் அபானவாயுவும் மலமும் வெளிப்படும்? ஒரு வழியில் சலமும் சீயும் ஒழுகும் அல்லாமலும் உள்ளிருந்து வெளிவரைக்கும் நாறும் முடிவில் சுட்ட எலும்பாகும், (ஆகையால்) இப்படிப்பட்ட உடம்போடு கூடிய வாழ்வை மனதில் நன்றாய்த் தெளிந்து (இது நமக்குத் துணையல்லவென்று உணர்ந்து)

கடிமலர் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவர விருவினை மலமற
வரவொடு செலவற வருளற விருளற
இரவொடு பகலறவிகபற மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்கு நெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

(பொ - ரை) வாசனை பொருந்திய கொன்றைப் பூ மாலையைத் தரித்த சடாபாரத்தை யுடைய கடவுளை, நீங்காத சுகத்தைக் கொடுக்கின்ற சிவ போகத்தை? (நீஅடையத் தகுந்த) நிழலாகக் கொண்டு (அந்த நிழலில்) அழியாத குணத்தோடு இருந்து எனதென்னும் மமகாரமும், ஒருபொருளை நினைப்பதும், நல்வினை தீவினைகளும்,ஆணவ கன்மமாயைகளும், பிறப்பு இறப்புக்களும், மயக்கமும் அஞ்ஞானமும் இரவும் பகலும், இம்மை மறுமைகளும், ஒழியும் பொருட்டு(தன் போல் வேறொருவரையும் சொல்லக்கூடாத) ஒப்பற்ற முதல்வனை, சிதம்பரத்தில் வெளிப்படையாய்க் காணப்படுகின்ற சோதி சொரூபமானவனை சிற்றம்பலத்திற்குத் தலைவனை, ஆநந்தத்தாண்டவஞ் ,செய்கின்றவனை நெருப்பைக்கண்ட அரக்கைப்போல நெகிழ்ந்துருகி, திருச்சிற்றம்பலம் என்கிற சிதாகாசத்தில் விளங்குகின்ற சிவபெருமானை மனமே? நீ துதிசெய்யக் கடவாய் சிவபெருமான் என்னும் திருப்பெயரை யுடையவனை, செவந்த பொன்னம்பலத்தில் நடனஞ் செய்கின்றவனை மனமே நீ துதிசெய்யக் கடவாய். (எ - று)

---

## இரண்டாவது

# கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் விண்ணுட னுடங்
காதலுங் கருத்துமல் லாலின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ டலமலருங் கள்வர்

ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித் தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை
ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கழுஞ் சருமி
பவழக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருகிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட கண்காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்

இமைய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக்சழகே

(பொ - ரை) அங்கும் இங்குமாக அலைகின்ற ஐந்து திருடர்கள் கலகஞ்செய்து அழிக்குங்காடு, சலமும்மல மும் நிறைந்த பெறியபெட்டி, நல்வினை தீவினைகளைச்சேர்த்துவைத்தற் கிடமான சிறியபெட்டகம் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்கிற மும்மலங்களும் வாசஞ்செய்கின்ற சிறியவூர், ஊத்தைபோடுகூடிய அற்பத்தோலாலும், இரத்தப் பந்தத்தாலும், (உருவாகத் தோன்றும்) துர்நாற்றத்தையுடைய பாண்டம், நான்குமுழம் நீளமும். ஒன்பது துவாரமுள்ள (ஒருமரத்துண்டு) பேய்ச்சுரைச் செடி பயிராகுந்தோட்டம், புழுநிமிகுந்த பெரிய சுடுகாட்டுமேடை, ஆசையென்கிற கயிற்றினல் ஆடுகின்ற பம்பரம், நீங்காமல் என்றும் வந்துகொண்டேயிருக்கும் நோய்க்கு இடம், ஓடுகின்ற சப்பல் நீங்காமயக்கத்தையுடைய அழியுங்கூண்டு, சோற்றை அடைத்து உபயோகிக்குந் துருத்தி, தூற்றுகின்றபதர், காற்றில்பறக்கின்ற கானப்பட்டம். ஏற்படுத்திய அளவின் பிரகாரம் எமனல் வெட்டப்பட்டகட்டை, நான்கு முகங்களையுடைய பிரமனல் தைக்கப்படுஞ் சட்டை, சுடுகாட்டுநெருப்புக்கு இடுகின்ற விருந்து, காமத் தீயில் கறுகிப்போகின்ற உலர்ந்த இலை, புழுக்களால் கிண்டப்படுகின்ற கிழங்குத்தோல், பாவமாகிய துளிர் ஏறுவதற்காக வைத்திருக்கும் கொழுகொம்பு, முன்னர் விவாகத்தோடு நடந்து பின்னர் பிணமாய்ப் படுக்கும் பிண்டம், (செத்தபிறகு) வூரினுள்ளே இருக்கக் கூடாத துன்பம், காற்றுக்கு எதிர்ப்பட்ட பூளைமலர், காலையில் உதயமாகும் சூரியனுக்கு எதிர்ப்பட்ட

கொடியபனிக் கூட்டம், ஆகாயத்தில் தோன்றுகின்ற இந்திரவில், சத்தஞ் செய்கின்ற மப்பினுடைய ரூபத்தின் அரியநிழல், நீரினிடத்தில் உண்டாகும் முட்டை, நீரின் மேல் எழுதும் எழுத்து நித்திரை செய்யும் கனவிற்கண்ட காக்ஷி (அந்தக் காக்ஷியிலும்) பொல்லாததாகிய மாய்கையையுடைய களங்க மென்னும் இத்தேகமானது எம் பெருமானே? எனக்குவரும் (ஆகையால்) அந்தத் தேகம் வாராதபடி தடுத்துக் காதுவரைக்கும் நீண்டிருக்கிற கலகத்தைச் செய்கின்ற கண்களையுடைய பெண்களிடத்தில் துன்பத்தோடு நாடுகின்ற ஆசையும் எண்ணமு மல்லாமல் உன்னுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் (சிரசின் மேல்) சூட்டிக்கொள்வதற்காகப் பாக்கியஞ் செய்யாத சங்கடம் மிகுந்த அடியேன் பக்கத்திலிருந்து பார்வதா தேவியார் வாழ்த்துச் சொல்லி ஏத்தும்படியாக நடிக்கின்ற ஆநந்தக் கூத்தை அடியேனுக்குக் காட்டி ஆண்டு கொள்ளுதல் உன்னுடைய திருவருளுக்கு அழகாகும். ()

---

## மூன்றுவது

# கோயிற்றிருவகவல்.

பாற்கடல் சடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடங்கிய சிவனே யடைக்கலம்

(பொ - ரை) தேவர்களும் அரசர்களும் திருப்பார்கடலைக் கடைய அதிலிருந்தும் உண்டான ஆலகால விஷத்தை அழகிய கழுத்தில் இருக்கச்செய்த சிவபெருமானே! நான்உன்னை அடைக்கலமடைந்தேன்.

அடங்கலு மடங்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கட வுணின் னடைக்கலம்

(பொ - ரை) எல்லாவற்றையும் அடக்கும் தொழிலில் வல்லமையுடைய கொல்லுந் தொழிலைச் சுபாவமாகப்படைத்திருக்கும் எமனைக்காலால் உதைத்து அடக்கிய கடவுளே; நான் உன்னை அடைக்கலமடைந்தேன்.

உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்

(பொ - ரை) எல்லா உலகங்களையும் படைத்திருக்கின்ற பிரமதேவனது தலையைக் கிள்ளி இடதுகையில் தாங்கியிருக்கின்ற தலைவனே நான் உன்னை அடைக்கலமடைந்தேன்,

செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்

(பொ - ரை) செவந்த பொன்னம்பலத்திலிருக்கும் செல்வனே! நான் உன்னை அடைக்கல மடைந்தேன்,

ஐயநின் னடைக்கல மடியநின் னடைக்கலம்

(பொ - ரை) ஐயனே! (எனக்கு வேறோர் துணையில்லாமையால்) அடியேனாகிய நான் உன்னை அடைக்கலமடைந்தேன்,

மனவழி யளைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருளறிய வழக்குறு மனனும்
ஆணவமலத்துதித் தளைந்ததி லுளைந்திடும்
திணைவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்கறு மிவரும் பொச்சாப்பும்
கவடு பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பணிப்பும்

முக்குண மடைமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பினித்துக்
கொழுந்தசை மேய்ந்து மெழுக்கூவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சுறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விலைமரப் பொதும்பை
ஆசைக்கயிற்றி லாடும்பம் பரத்தை
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக்காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்கு
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக்கரைசேர் கெடுமரக் கலத்தை;
இருவினை விபங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும்யாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
னடிமலர்க்கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுஞ்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்

மறைபவர் தில்லை மன்றுணின்றுடிக்
கருணை மொண்டலைபெறி கடவுளே யடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்தப்
பாசிழைக்கொடியொடு பரிந்தருள்புரியும்
எம்பெருமானின் ணிணையடிக்கபயம்
அம்பலத்தரசே யடைக்கலமுனக்கே.

(பொ - ரை) மனம்போகும் வழியிலேயே போய் என்னை அலைத்துக்கெடுக்கின்ற கனவுபோலொத்த இந்த வாழ்வும், உயர்ந்த பொருள்களை ஆராய்ந்தறியாத குற்றம்பொருந்திய மனமும், ஆணவம் என்கிற மலத்தில் பிறந்து அதிலேயே பூசிக்கொண்டு தவழ்கின்ற நிணத்தில் இருக்கும் புழுவைப்போல நெளிகின்ற சிந்தையும், மிகுந்தபாவமும், (பலபேர்களால்) பழிக்கப்படுகின்ற எண்ணமும், தவறிப்போவதும், பொறுமையும், மறதியும், கவடும், பொய்யும், குறியும் மிகுந்த கோபத்தால் உண்டாகும் விரோதமும், கொலையும், இழிவான அஞ்ஞானமும், அச்சமும் நிச்சயமும், நடுக்கமும், இராசத, தாமத, சாத்துவிக குணங்களினுடைய அறிவில்லாமையும், மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறிகளின் வாசமும், தரித்திரமும், நோயும், (ஆகிய இவைகளெல்லாம் கூடி) வருத்தப்படுகின்ற தேகத்தை, உயிர் என்கிற பக்ஷியானது விட்டு விட்டு ஓடிப்போகும் கூண்டை எலும்பாலும் நரம்பாலும் கட்டப்பட்டதும் தோலால் பூசப்பட்டதுமாகிய ஒழுகும் குடிசையை செழுமையான உதிரத்தையுடைய சிறியபுழுக்கள் நெளியும் கூண்டை, மலம்நிறைந்த பாண்டத்தை, புலால் சரக்கைக் கொண்டிருக்கும் கூடையை, ஒழியாத துன்பங் கொடுக்கும் சோற்றுக்குழியை, கொலை செய்வதற்குரிய பலஆயுதங்

களும் சேர்ந்திருக்கும் கூண்டை, மிகுந்த வெருப்பையுடைய பலவகைப்பட்ட வினைச்சரக்குகளாகிய குப்பையை, கோள் சொல்லுதல் என்னும் சரக்குகள் சிந்துகின்ற துவாரம் பொருந்திய கோணியை, கோபமாகிய நெருப்பை மூட்டுகின்ற கொல்லனுடைய (உலைக்களத்திலுள்ள துருத்திபோன்ற) துருத்தியை, சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்கிற ஐம்புலன்கள் என்னும் பக்ஷிகள் குடிகொள்ளுகின்ற கூண்டை, நீங்காத விபசனமாகிய மரங்கள் நெருங்கியிருக்கின்ற சோலையை, ஆசையென்கிற கயிற்றினல் ஆடப்படும் பம்பரத்தை, காசுக்கும், பணத்துக்கும் சுழலாநிற்கும் காற்றூடியை, மனிதர்களுடைய வினைக்குத் தகுந்தபடி மறைந்து மறைந்து வருகின்ற சக்கரத்தை, கொடிய வெளியில் உருட்டிய தேர்க்காலை பாவமாகிய சரக்குகளோடு ஜன்மம் என்கிற சமுத்திரத்தில் புகுந்து காமமாகிய காற்றானது எழுந்து அலைக்கக்கெட்ட வழியாகிய கரையில் சேர்கின்ற கொடிய கப்பலை, நல்வினை, தீவினை என்று சொல்லும் இருவினைவிலங்குடனே சஞ்சரிக்கும் மானை, எமனானவன் வந்து கூப்பிடும்போது பயப்படுகின்ற (மேலேசொன்ன இலட்சணங்களோடு கூடின) தேகத்தைப் பிணமாகக் கீழேதள்ளிப்போட்டு உயிராகிய நான் வெளியில் புறப்பட்டுப் போகும்பொழுது உன்னுடைய திருவடி தாமரைகளில் அபயமடையும் பொருட்டு உன்னையடைக்கல மடைகல் வேண்டும் ஆகாயத்திலுள்ள மேககர்ச்சனைபோல் ஆர்ப்பரித்து எழுகின்ற கடிய நடையையுடைய வெள்ளிய ரிஷபவாகனரூடராகிய கடவுளே; நான் உன் அடைக்கலம். இமைக்காத பார்வையை யுடைய தலைவனே! நான் உன் அடைக்கலம் அன்பர்களுக்கு எளியவனே, அடைக்கலம்! அடைக்கலம்!! மூவாயிரம் பிராமணர்கள்

வாழ்கின்ற சிதம்பரத்தின்கண் சிற்றம்பலத்தில் திருநடனஞ்செய்து திருவருளாகிய அலையை வீசுகின்ற தெய்வக் கடலே! நான் உன்னடைக்கலம், தேவர்களும், முனிவர்களும் வந்திருந்து துதிசெய்யும்படி பார்வதாதேவியோடும் எழுந்தருளியிருந்து உயிர்களுக்கு அருள்செய்கின்ற எம்பெருமானே! உன்னுடைய இரண்டு திருவடிகளுக்கும் அபயமானேன் அம்பலத்திற்குத் தலைவனே? (நான் வேறொரு தெய்வத்தினிடத்தில் அடைக்கலமடையாமல்) உன்னிடத்திலேயே அடைக்கல மடைந்தேன். (ஆகையால் நீயேஎன்னை ஆண்டருள் செய்யவேண்டும்) (எ-று)

---

நான்காவது

## கச்சித்திருவகவல்.

திருமால்பயந்த திசைமுகனமைத்து
வருமேழ்பிறவியு மானிடத்துதித்து
மலைகள்கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானுடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமார்க்க டெளிவுரக்கேண்மின்

(பொ - ரை) விஷ்ணுவினால் (புத்திரனாகப்) பெறப்பட்ட பிரமதேவன் சிருஷ்டித்து வருகின்ற எழு சன்மங்களும் மானிட ஜென்மத்திலேயே பிறந்து, பார்வதாதேவியின் தலைவனாகிய சிவபெருமானது திருவடிகளை வணங்கி விளங்குகின்ற சிவ பதவியை யடையாமல் வீணாகப் பெண்களைப்பார்த்துப் புகழ்ந்து கொண்டாடுகின்ற மனிதர்களுக் கெல்லாம் நான் (சிலவிஷயங்களை எடுத்துச்

சொல்வேன். அப்படி நான் சொல்லும் விஷயங்களை) ஓ மனிதர்களே? நீங்கள் தெளிவாகக் கேளுங்கள், (அவை எவையென்றால் பெண்களினுடைய)

முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும்பாலே மேவியகணைக்கால்
துள்ளுவாளெனச் சொல்லித்துதித்தும்
தசையுமெலும்புந் தக்கபுன்குறங்கை
இசையுங்கதலித் தண்டெனவியப்பியும்
நெடுமுடைநாங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் வழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் சீப்பாய்ந்தேறி
உகிரார்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்

(பொ-ரை) முள்ளிலும்,கல்லிலும் நடக்கின்ற உள்ளங் காலை செம்பஞ்சு என்று சொல்லியும், வெள்ளை எலும்பினால் ஆகிய கணைக்காலை வாரல்மீனென்று? சொல்லியும், சதையும், எலும்பும் தகுந்தவாராக அமைந்திருக்கின்ற அற்பத்துடையை இசைந்த வாழைத்தண்டென்று சொல்லியும், நீண்ட உடம்புகளை யெல்லாம் சுமந்துகொண்டிருக்கும் இடுப்பை உடுக்கை யென்றும், பிடியளவானதென்றும் சொல்லிப் புகழ்ந்தும். மலமும், நீரும், கொழுப்பும் அலைந்துகொண்டிருக்கும் வயிற்றினை ஆலிலையென்று

சொல்லியும், சிலந்திப் புற்றுப்போல் வெளிபட்டு பார்வைக்கு முன்னே எழுந்து குவிந்து பரந்து சீவடிந்து நகத்தாற் கீற உலர்ந்து உள்ளே உருகிப் பலபேர் சிரிக்கும்படி (சிலகாலத்திற்குள்) நீண்டு வற்றிப்போகின்ற முலைகளைப் பார்த்து தாமரைமொக்கு என்று சொல்லியும், அழிகின்ற காமத்தால் குருடராயிருக்கின்றவர்களுக்கே நான் எடுத்துச் சொல்லுவேன். (இப்படிசொன்னதினால் மோனத்தில் உள்ளவர்களுக்கு நான் சொல்லவரவில்லை என்பது கருத்து.)

நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டவும்பிசையவு முதவியிங்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தைப்
பாரினிலினியகமு கெனப்பகர்ந்தும்
வெப்புமூத்தையு மேவியவாயைத
துப்புமுருக்கின் றாய்மலரென்றும்
அன்னமுங்கரியு மசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும்
கூரியமூக்கைக் குமிழெனக்கூரியும்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டின வளமெனவாழ்த்தியும்
ஊகையுமெண்ணெயுங் கலவாதொழியில்
வெய்யவதரும பேனும்விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண்முகிலென்றும்

சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகவாசல்

(பொ - ரை) நீட்டுதற்கும், முடக்குதற்கும், மிகுந்த பொருள்களை வாங்குதற்கும், ஊட்டுதற்கும், பிசைவதற்கும், உதவியாய் (அக்காரியங்களை யெல்லாம்) இவ்விடத்தில் செய்கின்ற அழகிய கைகளைப் பார்த்துக் காந்தட்பூவென்று சொல்லியும், வேர்வையும் அழுக்குஞ் சேர்ந்துள்ள கழுத்தை பாக்குமரமென்று சொல்லியும், வெப்புநாற்றமும், ஊத்தையுமுள்ள வாயை பவழ மென்றும், முருக்கம்பூ வென்றும் சொல்லியும், சோற்றையுங் கறியையும் மென்று தின்னும் பற்களை முத்தென்று சொல்லியும், சலமும், சளியும், இருந்திருந்து ஒழுகுகின்ற கூர்மையான மூக்கைக் குமிழம்பூ வென்று சொல்லியும், சலமும் பீளையும் என்றும் வந்தடையும் கண்களைப்பார்த்து நீலோற்பலமா் என்று சொல்லியும், குறும்பி,குடிகொண்டிருக்குங் காதை வளமான வள்ளைத் தண்டென்று சொல்லியும், கையில் குழைப்பிய எண்ணெயைத் தடவாவிட்டால் கொடிய சுண்டுகளும், பேன்களும் உண்டாகும்படி தலையோட்டில் முளைத்திருக்கும் சிக்கோடு கூடிய மயிரை மேகக் கூட்டமென்று சொல்லியும் (இப்படிப்பட்ட உவமானச்) சொற்களால் பலவகையாகப் புகழ்ந்து நீங்கள் விரும்பிப் போகின்ற நரகவாசலானது;

தோலு மிறைச்சியுந் துதைந்துசிப்பாயும்
காமப்பாழி கருவிளை கழனி
தூமைக்கடைவழி தொளை பெறுவாசல்
எண்சாணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக்காமுக நாய்தானென்றும்

இச்சித்திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் சவலைப்பெருவழி
புண்ணிது வென்று புடவைய மூடி
உண்ணீர்பாயு மோசைச் செழும்பின்
மால்கொண்டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண்டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கியகாமுகர் சாரும் படுகுழி
செருக்கியகாமுகர் சேறுஞ் சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாசற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாசல்

(பொ - ரை) தோலும், மாமிசமும் சேர்ந்து சீவழிகின்ற காமப்பாழியாம்; கருக்கள் உண்டாகத்தக்க கழனியாம், தூமையொழுகுகின்ற வழியாம், தொல்லையையுடைய வாசலாம், எட்டுஜாண் அளவுள்ள உடம்பானது வெளிப் படும்படியான பெரிய வழியாம், உலகத்தில் காமத்தை ஒழிக்கின்ற மறைவிடமாம். அதைவிரும்பி ஆசையுடையவனயிருக்கத்தக்க மத்தியினுள்ள பெரிய வாசலாம்? சடையில் சந்திரனைத் தரித்த சிவபெருமானுடைய திருவருளில்லாதவர்கள் இருந்து திரிகின்ற சவலையான பெரியவழியாம்; இது புண்ணாகுமென்று அதை புடவையால் மூடவும் உள்ளிருந்துஞ் சலத்தைக்கக்குகின்ற செவந்த புண்ணும். சிவபெருமானது திருவருளை அறியாதவர்கள் மயக்கங்கொண்டு புகுகின்றவழியாம். நீங்காத காமநோயைத் தம்மிடத்தில் பெற்றிருக்கும் அற்பர்கள் போகின்றவழியாம், தர்க்கத்தையும், செருக்கையுமடைந்த காமவான்களால் அடையப்படும் சிறிய படுகுழியாம், பெண்ணும் ஆணும் பிறப்பதற்கு இட

மான பெரியவழியாம், மலமானது வெளிப்பட்டிழிகின்ற வாசலுக்குச் சமீபமாகயிருந்து சலம் வெளிப்பட்டிழியும் தண்ணீர் வாசலாம் (ஆகையால் இப்படிப்பட்ட தன்மை யதாகிய)

இத்லை தநீங்க ளினிதெனவேண்டா
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவண்ணலைக் கக்கியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிரஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

(பொ - ரை) இந்தக் காமக்குழியை உலகத்தவர் களே? நீங்கள் சுகமுடையதென்று நினைத்து அந்தவழியில் செல்லவேண்டும். (அப்படி செல்வதில் மோக்ஷசாதனத்திற்குக் கெடுதியுண்டாகும் ஆகையால் மேல்சொன்னபடியெல்லாம்) போகத்தைக் கொடுக்கும் பெண்களைப் புகழ்வதைவிட்டு அன்பர்கள் பசிய இலைப்போட்டு பூசித்தாலும் அவர்களுக்கு மனமிரங்கிச் சிவபதவி யான மோக்ஷத்தைக் கொடுப்பவனும் மோட்சத்திற்குத் தலைவனும், அழியாதமுதல்வனும், அண்டரண்டங்களையும் ஈரேழுபதினான்கு உலகங்களையும், சிருஷ்டித்த காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனும் (தன்னைப் போல் வேறொரு தெய்வமில்லாமல் தானே தெய்வமாயிருக்கும்; தன்னந்தனியனும் ஆகிய சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் வணங்குங்கள். (அப்படி வணங்குவீரானல் அவன் உங்களுக்குப் பிறவாநெறியைக் கொடுப்பான் என்பது குறிப்பு.)

# திருவேகம்பமாலை.

அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற் [னே
றிறந்தான்பெருமையை யென்சொல்லுவேன்கச்சி யேகம்ப

(பொ - ரை.) காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! வீட்டை நீங்கிய துறவியானவன் தருமம் செய்பவனைப் பார்க்கிலும் கோடிபங்கு உயர்ந்தவனுவான், மனத்தை நீங்கியதுறவி (முன் வீட்டை நீங்கியவனைப் பார்க்கினும்) நூறு கோடிபங் கதிகமாவான் (இப்படி யிருக்கையில்) வஞ்சனை முழுமையும் நீங்கும்படி கற்று ஞானத்தோடிருந்து இருவினைகளும் நீங்கி மனமிறந்த ஞானியின் பெருமையை நான் எவ்வளவென்றுசொல்லுவேன், (எ-று.)

அந்த மூவர்களுடைய செய்கையில் சிறிதேனும்என்னிடத்தில் இல்லாமையால் நான் உஜ்ஜீவிப்பது அருமை. ஆகையால் நீயே முன்னின்று என்னைப் பாதுகாத்தருள்வாய் என்பது குறிப்பு. 1

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற்சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார்மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) என்னுடைய தலைவனே, காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே, சேர்த்து அணைப்பதற்குரிய ஸ்திரீகளும், பிள்ளைகளும், வெட்டி முறித்துக் கீழே தள்ளிவிடுகின்ற மரத்தைப் போல என்

னுடைய உடம்பை எமனானவன் தள்ளிவிட்டால், (சுற்றத்தார்களுடன் கூடி) பறைகொட்டிச் சத்தித்து சுடுகாடு சேர்ந்தும் அழுவார்கள் (அப்படி அழுவதே தவிர அச்சுடுகாட்டுக்கு) அப்புறத்தில் ஓரடியாயினும் எட்டி வைக்கக் கூடுமோ; கூடாது (எ - று.)

பெண்டு, பிள்ளைகள் முதலிய யாவரும் எனக்குத் துணையல்லா நீயே துணையாம். ஆகையால் என்னைக் காப்பாற்றி யருள் செய்வாய் என்பதாம், 2

கைப்பிடி நாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத்
தப்புறந்தன்னி லசையாமன்முன் வைத் தயல்வளவி
லொப்புடன்சென்று துயினீத்துப்பின்வந் துறங்குவளை
யெப்படிநானம்புவே னிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே? (விவாக காலமுதல்) கையைப்பிடிப்பதற்குச் சுவாதீன முடைய புருஷனானவன் தூங்கும்போது (தன்மேலிருக்கும்) அவனுடைய கையை எடுத்து அசையாதபடி அப்புறத்தில் வைத்து வேறே ஒரு வீட்டுக்குப் போய் (களவியலின் லட்சணத்தை அநுபவித்து) சோரநாயகனிடத்திலிருந்து நித்திரை செய்து பிறகு அவனிடத்திற்கு வந்து (முன் படுத்திருந்தது போலவே படுத்துக் கொண்டு) தூங்குங் குணமுடைய பெண்களை நான் எப்படி துணையானவர்கள் என்று நம்புவேன். (எ - று)

இப்படி சோரத்தன்மை வாய்த்தும் வாய்க்காமலும் இருக்கும் பெண்கள் ஆசையால் படுகுழியில் வீழ்ந்தழிவதே நிச்சயமாகையால் அவர்களை நான் விரும்பேன் என்பது கருத்து.

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னார் தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோலந்தத் தன்மையைப்போ
லுன்னாலியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங் காவதுண்டோ விறைவாகச்சியேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே! நல்ல நாரினால் இணைக்கப்பட்டிருக்கிற சூத்திரத்தை யுடைய பொம்மையானது அந்த நார் அறுந்தாலும் தவறினாலும் தானே சற்று நேரம் ஆடிப்பின் விசையடங்க நின்றுவிடுவது போல, உன்னால் நானும் (உலகத்தில்) திரிகின்றேனே யொழிய நான் உன்னைப் பிரியும் பக்ஷத்தில் என்னால் ஆகுங் காரியம் ஏதாயினும் ஒன்று உண்டோ; இல்லை (எ - று)

எல்லாஞ் சிவன்செயலே யென்பது கருத்து, ஏனென்றால் சிவன் அந்தந்த உயிர்களுக்கு உள்ளிருந்து அவ்வவ்வுயிர்களை ஆட்டுகின்றான் ஆகையால்,

சிவன் ஆட்ட உயிர்கள் ஆடுகின்றன என்பதற்கு உதாரணம்:—

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
யடக்குவித்தா லாரொருவ ராடாதாரே
யோட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பார் கண்ணுதலாய் காட்டாக்காலே"

என்னும் அப்பர்சுவாமிகள் திருவாக்காலுணர்க. 4

நல்லாரிணக்கமு நின் பூசைநேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமு மைந்தரும்வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம்வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே: வீடும், பொன்னும், பெண்சாதியும், சாதியாரும், பிள்ளைகளும், வாழ்க்கையும், அழகிய உடம்பும் ஆகிய இவை யெல்லாம் வெளியில் வேஷங்காட்டி மயக்கத்தை யுண்டுபண்ணத்தக்கவைகளே. (ஆகையால் அம்மயக்கத்தை நீக்கி அருள் செய்யத்தக்கவை)நல்லவர்களுடைய சினேகமும், உன்னுடைய பூசையில் விருப்பமும், ஞானமுமே அல்லாமல் வேறு உறுதிநிலையுண்டோ; இல்லை (எ - று)

உன்னுடைய அருளைக்கொடுப்பவை நல்லாரிணக்கம் முதலியவையாம், மயக்கத்தைதருபவை அகம் பொருள் முதலியவையாம். ஆகையால் உன்னுடைய அருளைக் கொடுப்பவைகளே எனக்கு வேண்டும் என்பது கருத்து.

பொல்லாதவனெறி நில்லாதவனைம் புலன்கடமை
வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
சொல்லாதவனுண்மை சொல்லாதவனின் றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணி லேன்பிறந்தேன்கச்சி யேகம்பனே

(போ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் யேகாம்பரக்கடவுளே, மிகவும் கொடியனாகவும், சன்மார்க்கத்தில் வாசஞ்செய்யாதவனாகவும், சத்த, ஸ்பரிச, ரூப ரச, கந்தங்களாகிய ஐம்புலன்களை அடக்காதவனாகவும், ஞானநூல்களைக் கற்றுக் கெள்ளாதவனாகவும், உன்னுடைய திருத்தொண்டர் குழாத்துள்கூடி நட்பாயிராதவ

னாகவும், என்னதீங்கு நேர்ந்தாலும் பேசவேண்டிய உண்மையைப் பேசாதவனாகவும், உன்னுடைய திருவடிகளிடத்தில் அன்பிலாதவனாகவும் இவ் வுலகத்தினிடத்தில் நான்பிறந்தது எற்றுக்கோ: அறியேன்.

ஆன்மாவானது ஒரு தேகத்தொடு கூடி உலகத்தினிடமாக வருவது மேற்சொன்ன சன்மார்க்க முதலியவைகளை அடைவதற்கேயாம். அப்படி நான் அந்தச் சன்மார்க்கமுதலியவைகளை அடையாமையால் இந்தச் சென்மத்தால் எனக்கோர் பிரயோசனமும் இல்லை ஆகையால் கழிந்த நாள்போக இனியேனும் எனக்கு நீயே அருளளித்து ஆளவேண்டும் என்பது கருத்து. 6

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.

(பொ - ரை) காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக் கடவுளே. உயிர்கள் உலகத்தில் பிறக்கும்போதே செல்வத்தைக் கொண்டு வந்ததில்லை, அப்படி பிறந்து சிலகாலம் வாழ்ந்து சாகும்போதும் அதைத் தங்களோடு கூடக்கொண்டு போவதுமில்லை ஆகையால், இவ்விரண்டிற்கும் மத்தியில் கிடைக்கும் இந்தச் செல்வத்தை சிவபெருமானால் கொடுக்கப் பட்டதா மென்று நினைத்து இறப்போர்க்குக்கொடுக்காமலே வாணாளை வீணாக்கழித்துச் சாகின்ற குலாமருக்கு நான் என்ன சொல்லுவேன். (எ - று)

நாம் உலகத்தினிடமாகப் பிறந்து செல்வம்கிடைத்தபோது அப்பிறப்பினாலடையத்தக்க பயனாகியதர்மத்தைச் செய்யவேண்டும் என்பது கருத்து. 7

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையாவிசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம் வைத்தாயிறைவா கச்சியேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே, காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே. எனக்கு உணவைப்பற்றிய துக்கம் முன்னே உண்டாகும். அது தீர்ந்தால் பொருளைப்பற்றிய துக்கமாம் அதுவும் நீங்குமானல் பெண்கள்மேல் மனம் செல்லுதலாகிய துக்கமாம் இப்படி பலநாளும் துக்கப்படும்படியாக எவ்வளவு வருத்தத்தை எனக்குக் கூட்டிவைத்தாய். அவ்வருத்தங்களை யெல்லாம் நீக்கியருள்வதென்றோ? (எ - று)

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையு நினையாப்பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும் பொருத்தருள்வாய் கச்சியேகம்பனே

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே? நான் ஞானநூல்களைக் கற்காத குற்றத்தையும் அதைச் சிந்திக்காத குற்றத்தையும், மனமிளகிக் கரைந்து தன்வசமற்றிராத குற்றத்தையும், அப்படி இருப்பதற்கான மார்க்கத்தை எண்ணிப் பாராத குற்றத்தையும், உன்னுடைய பஞ்சாட்சரத்தை வாயாற் சொல்லாத குற்றத்தையும், அவற்றைச் சூக்குமைவாக்கால் தியானிக்காத குற்றத்தையும், இன்னுமுள்ள வேறு குற்றங்களையும் பொருத்துத் திருவருள் செய்யவேண்டும், (எ - று)

மாயநட்போரையு மாயாமலமெனு மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக்கூடிப்பின் றாயைமறந்
தேயுமதேநிட்டை யென்றானெழிற் கச்சியேகம்பனே.

(போ - ரை) அழகினை யுடைய காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! (என்னை அடிமைகொண்டு ஆளுதற் பொருட்டு எழுந் தருளிவந்த மௌனாசிரியன்) வஞ்சனையையுடைய சிநேகரையும் ஒழியாத ஆணவமென்னும் பெண்களையும் நீக்கித் துறவறம் பூண்டு உண்மையருளாகிய சத்தியோடு கூடிச்சென்று பிறகு தகப்பனாகிய சிவபிரானைக்கூடிப் பிறகு தாயை மரந்து பொருந்தி யிருப்பதே மௌன நிஷ்டையாகும் என்று உபதேசித்தான். (எ - று)

ஆனாலும் என்னை அவ்வுபதேச வழியில் நிறுத்தி அது கைகூடும்படி காத்து ரக்ஷிக்கவேண்டியவன் நீயே என்பது குறிப்பு.

தாயுடன்கூடி என்றது — குண்டலி சத்தியோடு சென்று சிவத்தினிடத்தைச்சேர்தலை. சிவத்தைச்சேர்ந்த பிறகு குண்டலி தோன்ற வில்லையாகையால் "தாயை மறந்து" என்றும் கூறினார். 10

வரிக்கோலவேல்விழி யாரனுராக மயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத் தஞ்சுஞ்சொலேன் றமியேனுடல்
நரிக்கோகழுகு பருந்தினுக்கோவெய்ய நாய்தனக்கோ
வெரிக்கோவிரை யெதுக்கோ விறைவாகச்சி யேகம்பனே

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சீபுரத் தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே, அழகிய கண்களுடைய பெண்களுடைய மாய்கையில் அகப்பட்டு

அவர்களைப் புகழ்வேனே யொழிய உனக்குறிய பஞ்சா க்ஷரத்தியானத்தை ஒருபோதுஞ் செய்தேனில்லை. ஆகை யால் அடியேனுடையதேகமான துநரிக்குஇரையாகுமோ? கழுகினுக்கு இரையாகுமோ; பருந்தினுக்கு இரை யாகு மோ! கொடியநாய்க்கு இரையாகுமோ, நான் அறியேன்.

காதென்றுமூக்கென்று கண்ணென்றுகாட்டியென் கண்
[ணெதிரே
மாதென்றுசொல்லி வருமாயைதன்னை மறலிவிட்ட
தூதென்றெண்ணுமற் சுகமென்றுநாடுமித் துர்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சிபுரத் தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! காது களையும், மூக்கையும், கண்களையும் காட்டி என் கண் முன்னே நான்தான் பெண் என்று சொல்லிக்கொண்டு வரும்மாயையை எமனால்விடப்பட்ட தூதென்று நினைக் காமல் சுகந்தரத்தக்கதாமென்று எண்ணி மயங்கும் என் னுடைய துர்புத்தியை என்னவென்று எடுத்துச்சொல்லு வேன். (எ - று)

பெண்ணாசை கொடிதாயினும் அதையே நன்மை யுடையதாக எண்ணும் என்புத்தியைச் சீர்திருத்தி ஆட் கொள்ளவேண்டும் என்பது கருத்து. 12

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே.

(போ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! (எனக்கு) ஊர்துணையல்ல, சாதி

யார் துணையல்ல, தாய் தகப்பன்மாரும் துணையல்ல, பெண்சாதி துணையல்ல, பிள்ளைகள் துணையல்ல, சிறப்பு துணையல்ல, பொருள் துணையல்ல, இன்னும் வூரிலுள்ளவருந் துணையல்ல, (ஆகையால் இவைகள் நீங்கிய) உன்னுடைய திருவடிகளே எனக்குத் துணையாகும் ஆகையால் அந்தத் திருவடிகளை எனக்குக் கொடுத்தருளவேண்டும். (எ - று) 13

சீறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடையதலைவனே, காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே. கொடுமை மிகுந்த தீவினையே பெண்ரூபங்கொண்டு திரண்டுருண்ட முலையும், சதையுமாகவா, அந்தப்பெண்ணுருவில் ஒரு அங்கமாக விருக்கும் மலமும் இரத்தமும் இழிகின்ற பெரிய குழியைவிட்டு ஏறி வெளியே வரும்படியான கரையைக் காணவில்லையே, ஈதென்ன விபரீதமோ அறியேன். (எ - று)

இச்செய்யுள் பெண்ணாசையினின்றும் நீங்கப் பலவகையான பிரயத்தனப்பட்டும் என்னால் முடியவில்லை, ஆகையால் நீயே என்னை அதினின்றும் நீக்கியருளல் வேண்டும் என்பதை விளக்குகின்றது.

பொருளுடைபோரை செயலினும்வீரரைப் போர்க்களத்துந், தெருளுடையோரை முகத்திலுந்தேர்ந்து தெளிவதுண்டோ, லருளுடையோரை தவத்திற்குண

த்தி லருளிலன்றி, விருளறுசொல்லினுங் காணத்தகுங் கச்சி யேகம்பனே.

(போ - ரை) காஞ்சிபுரத்தில் எருந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே, செல்வமுடையவர்களை அவர்களுடைய செய்கைகளாலும், வீரத்தன்மை யுடையவர்களை யுத்தத்தினாலும், தெளிந்த அறிவுடையோர்களை அவர்களுடைய முகக்குறியினாலும், இவர்செல்வமுடையவராக இருக்கலாம். இவர் மகாபராக்கிரமத்தை யுடையவராக இருக்கலாம் என்று உணர்ந்து கொள்வதுபோல, இவர்கள் திருவருள் கிடைக்கப்பெற்றவர்கள் என்பதை அவர்களுடைய தவமேம்பாட்டாலும், நற்குணத்தாலும், மன்னுயிர்மேல் கடாட்ச வீண்சண்ணிய முள்ளமையாலும், இதோபசாரங்களாலும், இனியவசனங்களாலுந் தெரிந்து கொள்ளப்படும். (எ - று)

இங்ஙனமிருத்தலால் நான் மேற்கூறிப்போந்த பலவகை நற்குணங்களில் ஒன்றிற் சிறிதேனும் இல்லாதவனாகி விருக்கின்றேன் என்பதை நீயேயறிவாய் ஆகையால் நான் அப்படிப் பட்டவனாகி இருந்தாலும் திருவருள் செய்யவேண்டியவன் நீயேயாம் என்பது கருத்து.

இதனைச், "சிவன் செயலாலேயாதும் வரும்" என மேலோர்கூறியவாக்கியத்தானறிக. 15

பருத்திப் பொதியினைப் போலேவயிறு பருக்கத்தங்க
டுறுத்திக்கறுசுவை போடுகின்றூர் துறந்தோர்தமக்கு
வருத்திபழுதிடமாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண்டே யிருந்தாயிறைவாகச்சி யேகம்பனே

(போ - ரை.) என்னுடைய தலைவனே, காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே. பருத்

திப்பஞ்சின் சுமையைப்போல் வயிரானது பெருக்கும் படி அவ்வயிற்றில் அறுசுவையோடு கூடியபண்டங்களைப் போட்டடைகின்றார்களே யொழிய, இல்லறத்தினின்றும் நீங்கிய துரவிகளுக்குப் போசன மளிக்கமாட்டார்கள், ஆகையால் அப்படிப்பட்ட உலோபிகளை இவ்வுலகத்தின் கண் ஏன் வைத்திருக்கின்றாய். (எ - று)

சீக்கிரத்தில் அவர்கள் நகரத்துக்குச் செல்வது அவசியமாயிற்றே என்பது குறிப்பு.

உலகத்தார் தாங்கள் தின்னுவதையே பார்க்குறார்களே யொழிய துறவிகளுக்கு அமுதளிக்க விரும்பார் என்பது கருத்து.

அறுசுவை என்றது - கைப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்பன. 16

பொல்லா விருளகற் றுங்கதிர்கூகைபெண் புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடு மாறொக்குமே யறிவோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார்தமக்கு மயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே, காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே. ஞானானந்தப் பெருவெள்ள மானது கொடிய இருட்டினைச் சேதித்துத் தள்ளுஞ் சூரியனானவன் கூகை என்கிற ஒரு வகைப் பட்சியின் கண்ணுக்கு இருளா யிருப்பதைப் போலத் (தங்கள் தங்கள் மலமயக்கத்திற்கு ஈடாகத் தெரிந்து கொள்ளக் கூடியதாகவும் கூடாத தாகவும் இருக்கும்) ஏனென்றால், ஞானமுதிர்ச்சியுள்ளார் அறிவார், அந்தமுதிர்ச்சி யில்லார் மயங்குவார் ஆகையால்

இவையெல்லாம் அகக்கண் புறக்கண்களது விபரீத வுணர்ச்சியாலேயாம். (எ - று) 17

வாதுக்குச்சண்டைக்குப் போவார்வருவர் வழக்குரைப்
தீதுக்குதவியுஞ் செய்திடுவர் தினந்தேடி யொன்று [பர்
மாதுக்களித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தா ரிறைவா கச்சியேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே, காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே இவ்வுலகத்தி லுள்ளார் வாதாடவும், சண்டை செய்யவும், வழக்கிடவும் போவதும் வருவதுமாக யிருப்பார், தீயகாரியங்களுக்கு உபகாரியமுஞ் செய்வார் இவர்களுடைய ஆயுள் முடியும் வரைக்கும் தினந்தோரும் பொருள்தேடி ஒரு பெண்ணுக்குக் கொடுத்தழித்து மயங்கா நிற்பர். ஆகையால், இவர்கள் இவ்வுலகத்தில் பிறந்தது எற்றுக்கோ, அறியேன். (எ-று.)

இவ்வுலகத்தார் பிறந்ததொன்றுக்காக அதை விட்டு வாணாளை வீணாளாக்கிப் பெண்கள் மயக்கத்தினால் அலைகின்றார்கள் என்பது கருத்து. 18

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுப் பெற்
தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க [ற
ளாயார்பிறக்குப காரஞ்செயர்தம்மையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்ன போயென்னகாண் கச்சியேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக் கடவுளே! (உலகத்தில் சிலர்) எப்பொழுதும் பொய்யே பேசுவார், பெரியோர்களை நிந்தனை செய்வார்கள், கஷ்டப்பட்டுப் பெற்றதாயைப் பலவகையாக வைவார்கள், அநேகமாகக் கொடியதீமைகளைச் செய்வார்கள்,

சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யமாட்டார்கள், அந்நியர்களுக்கு உபகாரஞ் செய்யார்கள், தம்மைவந்து அடுத்து யாசித்தவர்களுக்கு ஒரு பொருளையும் கொடார்கள். அப்படிப்பட்டவர்கள் இவ்வுலகத்தில் இருந்தா லென்னபயன் போனுல் என்ன நஷ்டம். (எ - று.)

தாய் கஷ்டத்தோடு பெற்றவள் என்பதை,

"தக்கதசமதி தாயொடு தான்படுந்
தக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்"

என்று மாணிக்கவாசகப்பிரான் அருளிச்செய்தமை யானறிக. 19

அப்பென்றும் வெண்மையதாயினுமாங்கந்நிலத்தியல்பால்
தப்பின்றியேகுண வேற்றுமைதான்பல சார்தலினுற்
செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ள சீவனிலு
மிப்படியேநிற்ப னெந்தைபிரான் கச்சியேகம்பனே.

(பொ - ரை) எனக்குத் தந்தையொப்பானும், எம்பெருமானுமாகிய காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரேஸ்வரனுன கடவுள் ஜலமானது எப்பொழும் வெண்மையுடையதாக யிருந்தாலும் அது தங்கியிருக்கின்ற நிலங்களின் வேறுபாட்டால் பலவகையான நிறங்களைப் பெருவதுபோல அபக்குவ ஆன்மாக்களிடத்தில் மறைவாகவும் பக்குவ ஆன்மாக்களிடத்தில் வெளிப்படையாகவும் இருப்பான், (எ - று)

ஆகையால் அவ்வெஞ் சிவபெருமானுடைய சர்வவியாபகத்திற்குக் குறைவென்னை என்பது குறிப்பு.

தண்ணீர் நிலவேறுபட்டால் நிறபேதம் அடைகின்றது என்பதை,

"நண்ணீர் நிலகலத்தால் தக்கோர்குணங்கொடையால்
கண்ணீர்மைமாருக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியாவாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி"

என்னும் ஔவையார் திருவாக்கானு முணர்க. 20

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்
தாயார்வயிற்றினி னரராய்ப்பிறந்துபின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங்குளமுங் கல்லாவுமென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய் கச்சியேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே! நாய்ச் செனன மெடுத்தாலும் அந்த நாயானது நல்லவேட்டையால் செய்து (அதை வளர்ப்பவர்க்கும், மற்றவர்க்கும்) நன்மையை உண்டாக்கும் (அப்படியல்லாமல்) நரமனிதர்களாய்த் தாயார் வயிற்றினின்றும் பிறந்து பிறகு செல்வமுடையவர்களாகிக் காயாத மரத்தைப் போலவும், ஜலமில்லாக் குளத்தைப்போலவும், கல்லால் செய்த பசுவைப் போலவும், அன்னியர்களுக்கு ஒரு பிரயோசனத்தையும் உண்டு பண்ணு மனிதரை (தருமஞ் செய்யாதமனிதரை) நீ சிருஷ்டித்தது எற்றுக்கோ: அறியேன். (எ - று)

மானிடப்பிறவியிற் பிறந்தோர் மற்றோர் மனமகிழத் தருமஞ் செய்ய வேண்டியது அத்தியாவசியமா யிருக்க அதைச் செய்யாதவர்களை நீ உண்டு பண்ணினது ஏனோ என்பது கருத்து.

தருமம் செய்ய வேண்டியது அத்தியாவசியம் என்பதை,

"நின்றனநின்றன நில்லாவெனவுணர்ந்
தொன்றினவொன்றின வல்லேசெயிற்செய்க
சென்றனசென்றன வாழ்நாள்செறுத்துடன்
வந்ததுவந்தது கூற்று"
என்னும் நாலடியாரா னறிக, 21

ஆற்றிற்கரைத்த புளியக்கிடாமலென் னன்பை யெல்லாம்
போற்றித்திருவுளம் பற்றுமையா புரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய் குன்றவில்லுடையா
யேற்றுக்கொடியுடையா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) திரிபுரங்களையும் தகித்து எமனை ஆட்கொண்டருளிய திருவடிகளை யுடையானே, மேருமலையாகிய வில்லினையுடையானே, இருஷபக்கொடியை யுடையானே, என்னுடைய தலைவனே, காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே, அடியேனுடைய அன்பு யாவற்றையும் ஆற்றிலே கரைக்கப்பட்ட புளியைப்போல் செய்து விடாமல் காத்து என்னைமோக்ஷவீட்டுக்குஅனுப்பும்படியாகச் சித்தம் வைக்க வேண்டும். ()

ஆற்றிலே கரைக்கப்பட்ட புளி, தன்னுடைய புளித்தலாகிய பிரயோசனத்தை அடையாதவாறு போல எனனுடைய அன்பால் அடைய வேண்டிய உன்னை எனக்குக் காட்டாமலிருக்க வேண்டாம் என்பது கருத்து ()

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டி முலையான் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தே னிறைவாகச்சி யேகம்பனே

(பொ - ரை) என்னுடைய தலைவனே, காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே, ஒரு

மாயாபிசாசானது பெண்ருபங் கொண்டு வந்து என்னைப் பிடித்துக் கொண்டு தன்னுடைய கண்களால் என்னை மருளச் செய்து, முலைகளால் மயக்கத்தைக் கொடுத்து அல்குலாகிய துன்பம் மிகுந்த குழியில் தள்ளி என்னுடைய அறிவாகிய பொருளை அபகரித்துக் கொண்டமையால், உன்னைச்சற்றேனும் நினைக்காமல் மறந்து விட்டேன். ()

ஆகையால் அப்படிப்பட்ட குழியினின்றும் என்னை வெளிப்படுத்தி அருளாகிய கரையில் சேர்ப்பது உனது கடமையே யாகும் என்பது கருத்து. 23

நாவாரவேண்டும் விதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்தார்
சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்கள் கைதான்வரண்
போய்வாருமென்றுநடுத்தலைக்கேகுட்டும்பூவையருக்[டாற்
கீவார்தலைவிதியோ விரைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே, காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே, செல்வம் உள்ள பொழுது நாவினால் நன்மையான வார்த்தைகளைச் சொல்வார்கள், நான் உன்னைப் பிரிந்தாலோ யிறந்து விடுவே னென்று சொல்லிக் கூடவிருந்து பொசிப்பார்கள் பின்னர் செல்வம் நீங்கினால் (உமக்கு இங்கொன்றும் வேலையில்லை) போய்வாரும் என்று சொல்லித் தலையில் குட்டி யனுப்புவார்கள்: (ஆகையால்) இப்படிப்பட்ட செய்கையையுடைய பெண்களுக்குப் பொருளைக் கொடுக்கின்றார்களே இதுவென்னை? அவர்களுடைய தலைவிதியோ அறியேன். (எ - று)

செல்வம்கிடைத்தபோது சற்பாத்திரத்தில் தருமஞ் செய்யாமல் வேசிகளுக்கீந்து வருந்து கின்றவர்களைப்

போல் என்னையும் செய்துவிடாமல் நற்கதிக் காட்படுத்த வேண்டும் என்பது கருத்து. 24

கல்லார்சிவகதை நல்லோர்தமக்குக் கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்ன
நில்லா ரறத்தை நினையார்நின்னாம நினைவிற்சற்று [படி
மில்லாரிருந்தென் னிறந்தென்புகல்கச்சி யேகம்பனே

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! சிவசம்பந்தமான கதைகளைக் கல்லாமலும், நல்லவரிடத்தில் கனவிலும் மெய்சொல்லாமலும், பசித்து வந்தவர்களுக்கு அன்னங்கொடாமலும், குருசொன்ன உபதேசத்தின்படி நிற்காமலும், தரும காரியங்களை எண்ணாமலும், உன்னுடைய திரு நாமங்களைச் சிறிதேனும் மனதில் நினையாமலும் இருப்பவர்கள் இவ்வுலகத்தின் கண் இருந்தாலும். பயனொன்றுமில்லை ()

வானமுதத்தின் சுவையறியாதவர் வண்கனியின்
ஊனமுதத்தின் சுவையெண்ணல்போலத் தனித்தனியே
தேன்முதத்தின் தெளிவாயஞானஞ் சிறிதுமில்லார்க்
கினமுதச்சுவை நன்றல்லவோ கச்சியேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே, தேவாமிர்தத்தினுடைய ருசியை உணரப் பெறாதவர் கற்பக விருக்ஷத்திலுண்டாகும் பழத்தினுடைய ருசியை எண்ணிப் பார்ப்பது போல, தேனைப் போலும் பாலைப்போலும் தெளிவா யிருக்கின்ற ஞானம் கொஞ்சமுங் கிடைக்கப் பெறாதவர்களுக்கு அவர்களால் உண்ணப்படுகின்ற அமுர்தத்தின் ருசி நல்லதல்லவோ? ஆம். (எ - று)

ஞானஞ்சிறிது மில்லார்க்கு மற்றப்பண்டங்கள் நன்மையை யுண்டு பண்ணத்தக்கதாக முடியும் என்பது கருத்து. 26

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலையூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச் சோறிடுந்தோற்பையைப் பேசரிய
காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக்காதல்செய்தே
யேற்றத்திரிந்துவிட்டே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே; காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் எகாம்பரக் கடவுளே? நாறுகின்ற சரீரமும் ஆபாசமாகிய பொருளைக் கொட்டிவைக்கும் வீடும். தசை நிறைந்த துவாரத்தோடு கூடிய துருத்தியும் சோற்றைப் போட்டு அடைத்து வைக்கும் தோலாற் செய்யப்பட்டுள்ள பையும் சொல்லுதற்கரிய காற்றினால் நிறைபப்பட்டுள்ள நிலையில்லாத பாண்டமுமாகிய இந்த உடம்பை யெடுத்து அதின்மேல் அதிக பற்றாக விருந்து திரிந்து என்காலத்தை வீணாக்கினேன். ()

நான் இதுகாறும் உன்னைத் துதிப்பதை விட்டு என் தேகத்தின் மேல் வைத்த வாஞ்சனையால் காலத்தை வீணாக்கிக் கொண்டேன் என்பது கருத்து. 27

சொல்லால்வருங்குற்றஞ் சிந்தனையால்வருந்தோடஞ்செய்
பொல்லாததீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியநூ [த
லல்லாதகேள்வியைக் கேட்டிடுந்தீங்குக ளாயவுமற்
றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் எகாம்பரக் கடவுளே! நான் பேசும்போது என் சொற்களால் வருங் குற்றங்களையும், நான் பலகாரியங்களையும் எண்ணுவதால் வரும் தோஷங்களையும், என்னால் செய்யப்பட்ட பொல்லாத தீவினையினால் உண்டாகும் பாவத்

தையும், பாபநூல்களாற் சொல்லப்படும் கேள்வியைக் கேட்கின்ற தீமைகளையும், இன்னுமுள்ள வேறு குற்றங்களையும் பொறுத்து எனக்குத் திருவருள் பாலிக்க வேண்டும். (எ - று)

பலகாரணவழியாக என்னைச்சேரும் பாவங்களையெல்லாம் போக்கி என்னைப புனிதமாக்கி உனது திருவடிகளுக் குரியவனுக்கித் திருவருள் பாலிக்க வேண்டும் என்பது கருத்து.

28

முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நல்ல பசு மஞ்சளை எண்ணெய்யோடு சம்பந்தப்படுத்தி முகத்திற் பூசி மினுக்கிக் காலில் ஒருவகையாகச்சத்தம் கொடுக்கின்ற மோதிரத்தைத் தரித்து, முகத்தில் ஒரு திலக மணிந்து, காதில் பித்தளையோலைச் சுருளைச் சுத்தித்துப் போட்டுப் பகற் பொழுதின்கண்ணே வெளிமயக்கத்தைக் கொடுக்கும் பெண்கள்மீது நானடைந்துள்ள இஷ்டத்தை நீயே நீக்கியருளல் வேண்டும். (எ-று.)

பலவகையான ஆபரணங்களைப் பூண்டு வெளிமயக்கத்தையே செய்கின்ற பெண்ணாசையை நீக்கித் திருவருளுக் கிலக்காக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

வெளிமயக்கம் என்றது உட்புறத்தின்கண் இம்மயக்கமில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது.

29

பிறந்துமண்மீதிற் பிணியேகுடி கொண்டு பேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின் மேன்மயலாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன்றேதடு மாறிப்பொன்றேடியப் பாவையர்க்கீந்
திறந்திடவோ பணித்தாயிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே; இவ்வுலகத்தில் பிறந்து பலவியாதிகளையும் அநுபவித்து, பேரின்பாநுபவத்தை மறந்து சிற்றின்பத்தின்மேல் மயக்கத்தையடைந்து, அற்பப்பெண்களிடத்தில் வைத்த அவாவினால் திரிந்து தடுமாறித் திரவியஞ் சம்பாதித்து அப்பெண்களுக்கே கொடுத்துக் கடையில் இறந்துபடவோ நீ சிருஷ்டித்து ஏவியது. (எ-று)

கடவுளே; நீ சிருஷ்டித்து ஏவியது பெண்கள்மீது ஆசைப்பட்டு அவர்களுக்காகப்பணம் தேடிக்கொடுத்து வீணே யிறந்துபடவோ? என்பது கருத்து. 30

பூதங்களற்றுப் பொறியற்றுச்சாரைம் புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்றுக்
காதங்கரணங் களுமற்றவானந்தக் காட்சியிலே
யேதங்களைந்திருப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், குணங்களும், பேராசையும், பின்னும், முன்னும், கணங்களும் ஆகிய யிவைகளெல்லாம் நீங்கிய பேராநந்தக் காட்சியிலே (என்னுடைய அஞ்ஞானங்களை யெல்லாம் உன்னால் நீக்கியருளப்பெற்று) அமர்ந்திருப்பேன். (எ - று)

பூதமுதலியவை யொழிந்தவிடமே பேரானந்தமாகை யால் அவ்விடத்தில் உன்னுடைய திருவருட்பாலிப்பால் அமர்ந்திருப்பேனே யொழிய என்னுடைய சுதந்திரத்தால் இல்லை என்பது கருத்து. 31

நல்லாயெனக்குமனுவொன்று தந்தருண் ஞானமில்லாப் [ஞ்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதீயல்பூசைசெப
சொல்லார்நற்கோயி னியமம்பலவகைத் தோத்திரமு
மெல்லாமுடிந்தபின் கொல்லுகண்டாய்கச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே; எனக்குமிக்க நன்மையை விளைவிப் பவனே: எனக்கோருத்தரவு கொடுத் தருளவேண்டும் அது யாதென்றால் அறிவில்லாமையால் பொல்லாதவனு யிருக்கின்ற என்னைக் கொன்று விடும்பொழுது, பூசை, ஜெபம், கோயில், நியமம், பலவகைப்பட்ட தோத்திரம், ஆகிய இவைகளெல்லாம் முடிந்தபின்பு கொல்லவேண் டும் என்பதேயாம்.

கடவுளே; பூசை, ஜெப தபமுதலியவை முடிந்த பின்பு நான் இறந்து படும்படியான வரத்தைத் தந்தருள வேண்டும் என்பது கருத்து. 32

சடக்கடத்துக்கிரை தேடிப்பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண் டிருமாந்திருந்து மிகமெலிந்து
படக்கடித்தின்றுழல் வார்கடமைக்கரம் பற்றிநம
னிடக்கடிக்கும்பொழு தேதுசெய்வார்கச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே; இந்த உடலினுக்கு ஆகாரந்தேடிப் பலவுயிர்களைக் கொன்று தின்று கர்வித்துத் திரியும்

மானிடர்களை யமன் அடித்துக்கொண்டு போம்போது அவர்கள் என்னசெய்யவல்லவர்கள். (எ-று)

ஈண்டு, பலவுயிர்களை அடித்துக்கொன்று தின்று மகிழ்ந்தவர்களை ஆண்டு யமன் அடித்துக் கொண்டு போவதுண்மை, ஆகையால் அப்படிப்பட்ட செய்கைக்குள் என்னையும் அகப்படுத்தாமல் கருணைக்குரியவனுக்கி ரக்ஷிக்கவேண்டும் என்பது கருத்து. 33

நாறுமுடலை நரிப்பொதிச்சோற்றினை நான்தினமுஞ்
சோறுங்கறியு நிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்
கூருமலமு மிரத்தமுஞ் சேருங் குழியில்விழா
தேறும்படியருள்வா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே; நாறுகின்ற உடம்பும், நரியின் விருந்தான பொதிச்சோறும், நான் தினந்தோறும், சோற்றாலும், கறியாலும், நிரப்பி வைக்கப்பட்ட பாத்திரமுமாகிய (என்னுடைய) தேகத்தைப் பெண்களுடைய மலமும்; இரத்தமும் சேர்தற்கேதுவாகிய பெருங்குழியில் விழாமல் (சிவபேறாகிய கரையில்) ஏறும்படி திருவருள் பாலிக்கவேண்டும். ()

நான் சிற்றின்பத்தை விட்டுப் பேரின்பத்தை அடையும்படி திருவருள் செய்யவேண்டும் என்பது கருத்து.

சொக்கிட்டரமனைப் புக்குட்டிருடிய துட்டர்வந்து
திக்குற்றமன்னரைக் கேட்பதுபோற்சிவ நிந்தைசெய்து
மிக்குக்குருலிங்க சங்கமநிந்தித்து வீடிச்சிக்கு
மெக்குப்பெருத்தவர்க் கென்சொல்லுவேன்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக் கடவுளே? ஓரரசன் அரண்மனைக் குள்ளே

புகுந்து திருடிய துஷ்டர்கள் மீண்டும் அவ்வரசன் சமுகத்தில் வந்து யாசிப்பதுபோல, பலவகையாகச் சிவநிந்தை செய்து, குரு, லிங்க, சங்கமங்களைத் தூஷித்து, மோக்ஷத்தைவிரும்பி விருத்திஞானம் பெற்றவர்களுக்கு நான் என்ன சொல்லுவேன். (எ - று)

அங்ஙனம் எதையும் நிந்திக்காத என்னை எந்த விதத்திலாயினும் அடிமைகொள்ள வேண்டும் என்பது கருத்து. 35

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெற வாழ்வார்நின்னுமத்தைப் போற்
மருந்தாமுலைபங்க ரென்றுரைப்பாதக ரம்புவியி [றிநித்த
லிருந்தாவதேதுகண்டா யிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! உண்ணுமுலையை இடது பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமானே? என்று உன்னுடைய திருநாமத்தைத் தினமும் துதி செய்யாத பாவிகள், விருந்தாக வந்தவர்களுக்கு அன்னமளியார், தாங்கள்மாத்திரம் செம்மையாக வாழ்வர் இப்படிப்பட்டவர்கள் உலகத்தின் கண்ணிருந்தலையால் பயன் என்னை? (எ - று)

உலோபிகளால் என்னபயன் என்பது கருத்து. 36

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்ளபடி
வல்லானறிந்துள னென்றுணராது மதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலே யென்பர்காண்கச்சியேகம்பனே

(போ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே! எல்லா நூல்களையும் வாசித்தறிந்

திருக்கும், நமக்குள்ள அளவைச் சிவபெருமான் அறிந்துளான் என்று அறியாமல் புத்திகலங்கி மருண்டு, விதிப்படி துக்கப்பட்டுப் பின் (ஒரு வகையாய்த் தெளிந்து) இவையெல்லாஞ் சிவனது செயலேயாம் என்று சொல்வார். ஈதென்ன அறியாமையோ அறியேன். (எ - று)

எல்லா நூல்களையும் கற்றகலைஞானிகளையும் மாயை வந்து மயக்குவது சுபாவமென்பார், இங்ஙனம் கூறினர்.

பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவார் பூவையன்னா
டன்னைநினைந்து வெதுவா யுருகுவார் தாரணியி
லுன்னைநினைந்திங் குனைப்பூசியாத வுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே: சிவபெருமானாகிய உன்னைச் சிந்தித்துத் துதித்துப் பூசை செய்யாத கொடியர்களெல்லாம், திரவியத்தின்மேல் ஆசை அதிகரித்து அதைத்தேடுவார்கள்? மாதர்களை நினைந்து நினைந்து அவர்களுக்காகக் கரைவார்கள், ஆகையால் அப்படிப்பட்ட மனிதர்கள் இவ்வுலகத்தின்கண் இருப்பதினால் பயன் என்னை. (எ - று)

சிவசிந்தனையில்லாத்தீயோர் திரைகடலுலகில் ஜீவித்திருப்பதினல் ஒரு பயனுமில்லை என்பது கருத்து. 38

கடுஞ்சொலின்வம்பரை யீனரைக்குண்டரைக் காமுகரைக்
கொடும்பவமேசெயு நிர்மூடர்தம்மைக் குவலயத்து
ணெடும்பனைபோல வளர்ந்துநல்லோர்த நெறியறியா
விடும்பரையேன்வகுத்தா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடையதலைவனே? காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் யேகாம்பரக் கடவுளே?

கொடியவார்த்தை யாடுகின்ற வம்பர்களையும், ஈனத்துவம் உடையவரையும், முரடர்களையும், மதனலீலா விநோதிகளையும், கொடிய பாபங்களையே செய்துவருகின்ற மூடர்களையும், இப்பூமியின்கண் நீண்டபனைமரம் போல் வளர்ந்து நல்லவர்களது நன்மார்க்கங்களை உணராத துட்டர்களையும்நீஉண்டாக்கியது எற்றுக்கோ? அறியேன். (எ - று)

சிவபத்தி, அடியார்பத்தி சிறிதேனுமில்லாமல் தீமையையே தம்மிடத்து இருப்பிடமாக வைத்திருக்கிறவர்களைச் சிருட்டித்ததற்குக் காரணம் யாதோ? அறிந்திலேன் என்பது கருத்து. 39

கொன்றேனனேகமுயிறை யெல்லாம்பின்பு கொன்று கொன்று, தின்றேனதன்றியுந் தீங்குசெய்தேனது தீர்கவென்றே, நின்றேனின்சந்திக் கேயதனுற்குற்ற நீபொறுப்பா, யென்றேயுனைநம்பினே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற யேகாம்பரக் கடவுளே? நானே, அனேக ஜீவராசிகளை யெல்லாம் கொன்றேன். அதன்றியும் அவைகளையும் தின்றேன் வேறுதீமைகளையும் பலபடச்செய்தேன். (இங்ஙனம் செய்தமையால் உண்டான) பாவங்களெல்லாம் நீங்கும்படி உன்னுடைய திருச்சந்நிதியில் நின்று நீ அவைகளையும் பொறுத்துக் கொள்வாயென்று பலமுறை முறையிட்டுக் கொண்டு உன்னை நம்பினேன், நீ அங்ஙனமே செய்து என்னைக் காப்பாற்றவேண்டும். (எ - று)

கொல்லாவிரதம் தெரிந்திருந்தும் மயக்க வாசனையால் கொன்ற என்பாவத்தை நீக்கிப் பதந்தருளல்வேண்டும் என்பது கருத்து. 40

ஊரிருந்தென் நல்லோரிருந்தென் னுபகாரமுள்ள [யாள்
பேரிருந்தென் பெற்றதாயிருந்தென் மடப்பெண்கொடி
சீரிருந்தென்னனற் சிறப்பிருந்தென்ன வித்தேயத்தினி
லேரிருந்தென்வல்லவா விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) சர்வவல்லமை யுடையானே? என்னு டையதலைவனே? காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் யேகாம்பரக்கடவுளே? இந்த உலகத்திலே ஒரு ஊரும், நல்லவர்களும்; நன்றியுடைய வர்களும், பெற்றதாயா ரும், பெண்சாதியும், சிறப்பு, பேர்களும் ஆகிய இவை களெல்லாம் இருந்தாலும் (உன்னுடைய அருளில்லா விடின்) என்னபயன்.

நீ அவ்வருளைச் சீக்கிரத்தில் தந்தருள வேண்டும் என்பது கருத்து. 41

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லாலெறியப் பிரம்பாலடிக்க களிவண்டுகூர்ந்
தல்லார்பொழிற்றில்லை யம்பலவாணர்க்கோ ரன்னைபிதா
வில்லாததாலல்லவோ விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை) என்னுடைய தலைவனே? காஞ்சீபுரத் தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே. ஒரு வன் வில்லினால் அடிக்கவும், ஒருவன் பிரம்பினால் அடிக் கவும் நேரிட்டது யேனென்றால், வண்டுகள் மதுவை யுண்டு வெறிகொண்டு ரீங்காரம் செய்தற் கேதுவாகிய சோலைசூழ்ந்த சிதம்பரத்தில் எழுந்தருளி யுள்ள அம்பல

வாணர் என்னும் சுவாமிக்குப் பெற்றதாய் தகப்பன்மார் இல்லாத குறைவால் அல்லவோ?

வில்லாலடித்தவன் - அருச்சுனன், செருப்பாலடித்தவன் - கண்ணப்பன், கல்லா லெறிந்தவன் - சாக்கியன், பிரம்பாலடித்தவன் - பாண்டியன். 42

---

## திருவேகம்ப விருத்தம்.

அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ
வப்பனெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னையெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனாயடி யேனு மறிந்திலே
னின்னமெத்தனை யெத்தனை சென்மமோ
வென்னசெய்வேன் கச்சி யேகம்பநாதனே.

(போ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே? பூர்வத்திலே நான் எத்தனைஜென்மங்கள் எடுத்தேனோ, அப்படி எடுக்கப்பட்ட ஜென்மங்களில் என்னைப் பெற்றெடுத்த தாய்மார்கள் எத்தனை பேரோ? தந்தையர்கள் எத்தனைப்பேரோ? பிறகு பெண் சாதியாக வந்தவர்கள் எத்தனைபேரோ? பிள்ளைகள் எத்தனை பேரோ ஆகையால் அம்மட்டிலொழியாமல் எனக்காக இன்னும் எத்தனை ஜென்மங்கள் இருக்கின்றனவோ? இவற்றையெல்லாம் நாயினும் கடைப்பட்ட மூடனாகிய நான் அறிந்தேனில்லையே. (ஆகையால் எனக்கு வினைப் பாகுபாட்டால் வரப்படும் ஜென்மங்களை நீக்கி உன்திருவருட் பிரகாசத்தை யருளல்வேண்டும் என்பது குறிப்பு)

எடுக்கும் ஜென்மங்கள்தோறும், தாய்மாறும், தந்தையரும், பெண்சாதி பிள்ளைகளும் பலவாக விருத்தலின் "அன்னையெத்தனை நாதனே" என்றார். 1

---

## திருத்தில்லை.

காம்பிணங்கும்பணைத் தோளார்க்கும்
பொன்னுக்குங் காசினிக்குந்
தாம்பிணங்கும்பல வாசையும்விட்டுத்
தனித்துச் செத்துப்
போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப்
புரண்டினி மேற்
சாம்பிணங் கத்துதையோ
வென்செய்வேன் றில்லைச்சங்கரனே.

(பொ-ரை) சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்குஞ்சங்கரப் பெருமானே? மூங்கிலை யொத்த தோட்களையுடைய பெண்கள்மீதும் பொருள்களின்மீதும்பூமியின்மீதும்வைத்துள்ளபலவகையான பற்றுக்களையும் விட்டுத் தனியே இறந்துபட்ட பிணத்தைச் சுற்றிக் கூட்டமாகக் கூடி புரண்டு இனிமேல் சாகவிருக்கின்ற பிணங்களெல்லாம் கத்துகின்றனவே இதற்கு நான் என்னசெய்வேன். ()

பணைத்தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்கும் என்றது பெண்ணாசை, பொன்னாசை மண்ணாசைகளை, உயிர்கள் இறக்கும்பொழுது இம்மூன்றாசைகளையும் விட்டு விடுவது சுபாவமாகையால் இங்ஙனம் கூறினார்.

செத்தபிணத்தை இனிசாகும் பிணங்கள் சுற்றியழுவதினால் பயனில்லை யென்பார் "இனிமேற் சாம்பிணம் கத்துதையோ வென்செய்வேன்" என்றார்.

இதனை, "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்திர்—வேண்டாம்
நமக்கு மதுவழியே நாம் போமளவும்
எமக் கென்னென் றிட்டுண்டிரும்." என்பதினாலறிக. 1

சோறிடுநாடு துணிகருங்குப்பை தொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைக ளிறங்கிடுந்தீவினை யெப்பொழுது
நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்க ளுருகிடுநெஞ்சமென் னுள்ளமுமே.

(போ - ரை) சதா நீறுபூத்த திருமேனி யோடு சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவ பெருமானுடைய நடனத்தை தெரிசித்தால், உலகத்தார் அன்னமளிப்பார்கள்? குப்பைக்காடானது வஸ்திர மளிக்கும் அன்பர்களைக் கண்டவுடன் கைகள் அஞ்சலிசெய்யும், தீவினைக ளெல்லாம் நீங்கும். கண்கள் மகிழ்ந்தூறும், மனமும் சித்தமும் கரைந்து மகிழும். (எ - று)

சிற்றம்பலவர் நடனதரிசனம் இங்ஙனம் பலவகை நன்மைகளை விளைப்பது உண்மையாகலான், மனமே. நீ எப்பொழுதும் அவரது நடனதரிசனமே செய்துகொண்டிருப்பாய் என்பது கருத்து. 2

அழலுக்குள்வெண்ணெ யெனவேயுருகிப் பொன்னம்பல
நிழலுக்குணின்று தவமுஞற்றும னிட்டரமின்னா [த்தார்
குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டு குற்றேவல்செய்து
விழலுக்குமுத்தலை யிட்டிறைத்தேனென் விதிவசமே.

(போ - ரை.) சிதம்பரத்தின் கண்ணே தாண்டவஞ் செய்யாநின்ற எம்பெருமானது திருவடி நிழலிலிருந்து, அக்கினியிற்பட்ட வெண்ணெயைப்போல் கரைந்து தவஞ் செய்யாமல், பலராலும் இகழப்படுகின்ற பெண்களது

சிறப்பினையோர் மாலையாகப்பாடி அவர்களுக்குக் குற்றேவல் செய்து,ஒரு பிரயோசனத்தையுந்தராதவிழாலரிசிக்கு முத்தால் உலைவைத்து இறைத்தவன் போலாயினேன் அந்தோ! இது என்னுடைய தலைவிதியேயாம். (எ - று)

எம்பெருமானுக்கு வேண்டிய தவஞ் செய்யாமல் பெண்களிடத்தில் பெருங்களி கொண்ட நான் எவ்வாறுய்வேன் என்பது கருத்து. 3

ஓடாமற்பாழுக் குழையாமலோர முரைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சி
னூடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ - ரை) சிதம்பரத்தின் கண் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே, வீணான காரியங்களின் பொருட்டு ஓடாமலும் உழைக்காமலும் பால் பற்றிப் பேசுகின்றவர்களுடன் சிநேகியாமலும், சாது சங்கத்தைப் பிரியாமலும், கொடுமையை விளைக்கும் கோபத்தை மனத்தில் வையாமலும், நன்மையினின்றும் நீங்காமலும், இன்றைக்கு வேண்டுமே, நாளைக்கு வேண்டுமே என்கிற எண்ணத்துடன் செல்வத்தைத் தேடாமலும் என்றும் அழிவற்ற பேராநந்தச் செல்வத்தை தந்தருள வேண்டும். (எ - று)

எம்பெருமானே, சிவாநந்தப் பேறாகிய செல்வத்தை அடியேனுக்குக் கொடுத்தருள வேண்டும் என்பது கருத்து. 4

பாராமலேற்பவர்க் கில்லையென்னுமற் பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள் வந்தணுகாமன் மனமயர்ந்து
பேராமற்சேவை பிரியாமலன்பு பெறுதவரைச்
சேராமற்செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(பொ - ரை) சிதம்பரத்தின் கண் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே, முன் பின் பார்க்கா வண்ணம் என்னை யடைந்து யாசிப்பவர்களுக்கு இல்லை யென்று சொல்லாமலும், குற்றங்களைச் சொல்லிக் கொண்டு திரியாமலும், பாவங்கள் என்னைச் சேராமலும், மனஞ் சோர்ந்து சஞ்சரியாமலும், நினது திருவடி சேவையிலிருந்து பிரியாமலும், அன்பைப் பெறாத அறிவீனர்களைச் சேராமலும் இருக்கத்தக்க பேரானந்தச் செல்வத்தைக் கொடுத்தருள வேண்டும். (எ - று)

இதன் கருத்து வெளிப்படை 5

கொல்லாமற்கொன்றதைத் தின்னாமற்குத்திரங் கோள்கள
கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவிலும் பொய் [வு
சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர் மாயையிலே
செல்லாமற்செல்வந் தருவாய சிதம்பர தேசிகனே.

(பொ - ரை) சிதம்பரத்தின் கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! ஒருயிரையும் கொல்லாமலும், அங்ஙனம் கொன்றதைத் தின்னாமலும், குத்திரம்,கோள், களவு முதலியவற்றைக் கற்றுக்கொள்ளாமலும், வஞ்சகரோடு சிநேகியாமலும், கனவிலும் பொய் சொல்லாமலும், அப்படிப் பேசும் பொய்சொற்களைக் கேளாமலும், பெண்கள் மயக்கத்தில் செல்லாமலும் இருக்கத் தக்க பேரானந்தச் செல்வத்தைக் கொடுத்தருள வேண்டும். 6

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்துநாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே.

(போ - ரை) மனமே! இவ்வுலகத்தின் கண் அரசர்களா யுள்ளவர்களும் இன்னுமுள்ளவர்களும் கடைசியில் ஒரு பிடிசாம்பராய் வெந்து மண்ணாய் விடுவதைப் பார்த்திருந்தும், இவ்வுலகத்தில் வாழவேண்டியதையே நினைக்கின்றார்களே யொழிய, சிதம்பரத்தில் நடனஞ்செய்கின்ற சிவபெருமானது திருவடிகளைச் சேர்ந்து நாம் பிழைக்க வேண்டும் என்று அறிந்து நடப்பவரில்லையே. இதற்கு நாம் என்ன செய்வோம். (எ-று.) 7

காலையுபாதி மலஞ்சலமாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமாமுற் சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காமமாமிவை மாற்றிவிட்டே
யாலமுகந்தரு ளம்பலவாவென்னை யாண்டருளே.

(போ - ரை) ஆலகால விஷத்தை யமிர்தமாகக் கொண்டு திருமிடற் றடக்கிய சிதம்பர தேவனே, எனக்குக் காலையில் நிகழ்வன மலமும் சலமுமாகும், உச்சிக்காலத்தில் நிகழ்வன பசியும், தாகமுமாகும் இரவில் நிகழ்வன நித்திரையும், காமமும் ஆகும், (ஆகையால்) இவைகளாற் பயனில்லை யென் றுணரப்பெற்றேன், நீ அவைகளை நீக்கி என்னை உன் திருவடிகளுக்குப் பாத்திரனாக்கிக் கொள்ளல் வேண்டும். (எ - று)

ஆயும்புகழ்த்தில்லை யம்பலவாண ரருகிற்சென்றாற்
பாயுமிடபங் கடிக்குமரவம்பின் பற்றிச்சென்றாற்
பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும் பின்றொடரப்
போயென்செய்வாய்மனமே பிணக்காடவர் போமிடமே.

(போ - ரை) ஓ மனமே: யாவராலும் ஆராயப்படுகின்ற சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய சமீபத்திற் சென்றால் ரிஷபமானது பாயாநிற்கும்; பாம்பானது கடிக்கும். ஆகையால் நீ அவருக்குப் பின்

னே சென்றாலோ, பேய்க்கணங்களும் சிவகணங்களும் பூதக்கணங்களும் உன்னைப் பின் தொடர்ந்து மருட்டும், ஆகையால் நீ அவரிடத்திற் போய் என்ன செய்வாய். (ஒன்றுஞ் செய்யமாட்டாய் ஏனென்றால்) அவர் போகின்ற இடமாயுள்ளது சுடுகாடு ஆகையால் (எ - று) 9

ஓடுமெடுத்தத ளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்ள
வீடுகடோறும் பலிவாங்கியேவிதி யற்றவர்போ
லாடுமருட்கொண்டிங் கம்பலத்தேநிற்கு மாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்ன காண்சிவகாம சவுந்தரியே.

(போ - ரை) சிவகாமசுந்தரி என்னும் திருப்பெயர் பூண்டு எழுந்தருளியுள்ள பார்ப்பதா தேவியே ஓட்டை யெடுத்து, தோலாகிய வஸ்திரத்தையும் தரித்துத்திரிந்து வீடுகள் தோறும் பிச்சை யெடுத்துத் திக்கில்லாமையாற் பரதேசிகளானவர்கள்போல் திருவருளை முன்னிட்டுச் சிதம்பரத்தின் கண்ணே நடனஞ்செய்யா நிற்கின்ற சிவ பெருமானை நீ தேடுதற்கு நியாயம் என்னையோ, நான் அறிகிலேன்.

சத்தியானவள் சகல உயிர்களையும் பெற்றுப்பாலித் துப்பின் அவரவர்கள் வினைக்கீடாகச் சங்காரஞ் செய்ய வேண்டுங் காலத்தில் எம்பெருமானாகிய சிவனைத்தேட வேண்டி அவசரமுள்ள தாதலால், "அம்பலத்தே நிற்கு மாண்டிதன்னைத் தேடுங்கணக்கென்னகாண் சிவகாம சவுந்தரியே" என்றார் இதனை,

"சுற்றுநெடுநேமிச் சுவர்கிசையவெட்டுச்
சுவர்க்கா னிருத்தி பேருத்
தூணொன்று நடுநட்டுவெளி முகடுமூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற

வெற்றுபுன லிற்கழுவு பவனப்பழங்கல
மெடுத்தடுகிப் புதுச்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னை நீபன்முறை
யிழைத்திட வழித்தழித்தோர்"

"முற்றவெளியிற்றிரியு மத்தப்பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவும்
முனியாதுவைகலு மெடுத்தடுக்கிப்பெரிய
மூதண்ட கூடுமூடும்
சிற்றில்விளையாடுமொரு பச்சிளம்பெண்பிள்ளை
செங்கீரையாடி யருளே
தென்னற்குமம்பொன்மலை மன்னற்குமொருசெல்வி
செங்கீரையாடி யருளே"

எனக் குமரகுருபரசுவாமிகள் திருவாக்காலறிக.

இங்ஙனமன்றி யாதொரு செல்வமுந் தனக்குச் சுவாதீனமாக வைத்திராத சிவபெருமானை நான் பேரானந்தச் செல்வத்தை விரும்பித் தேடுவது எற்றுக்கு என்று உரைத்தலுமாம். 10

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானு மிங்கொன்றோடொன்
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை [றை
காட்டுவிப்பானு மருவினைப்பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே.

(பொ - ரை) ஓ மனமே! சிதம்பரத்தின் கண்ணே உயிர்களை உண்பிக்கிறவனும், உறங்குவிக்கிறவனும், ஒரு பொருளோடு ஒரு பொருளைக் கூட்டுவிப்பவனும், அநுபவிப்பவனும், நல்வினை தீவினைகளைக் காட்டுவிப்பவனும், இருவினைகளாகிய பாசக்கயிற்றின் வழியாக உயிர்களை ஆட்டுவிப்பவனுமாகிய சிவபெருமானென்னும் திருநாம

முடையவன் ஒருவன் இருக்கின்றான். அவனைச் சதா தியானிக்கக் கடவை. 11

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வறம்பெரலாம்வைய மேழளந்த
நெடியோனும் வேதனுங் காணாதநித்த நிமலனருட்
குடிகாணுநாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே.

(பொ - ரை. நாங்கள் சத்த உலகங்களையும் அளந்த விஷ்ணுவும், பிரமனுங்காணாத என்றும் அழியாதவனும், பரிசுத்தனும், ஆகிய சிவபெருமானது அடியேங்களாவோம். அவரோ எங்களுக்கு குலதெய்வமாவார். ஆகையால் அவர் அன்பர்களுக்கு எளியவர், சிதம்பரத்தில்வாழ்பவர், அவருடைய திருவடிகளை வணங்கினால் என்று மழியாத செல்வமாகிய வரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ()

தெய்வச்சிதம்பர நேவாவுன்சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பனமாமன்னர்வாழ்வும்புவியுமெங்கே
மெய்வைத்தசெல்வமெங்கேமண்ட லீகர்தம் மேடையெங்
கைவைத்தநாடக சாலையெங்கேயிது கண்மயக்கே. [கே

(பொ - ரை) சிதம்பரத்தின் கண்ணே வாழ்கின்ற சிதம்பர நாதன் என்னும் திருப்பெயரினை வாய்ந்த சிவ பெருமானே! உன்னுடைய மனமானது சற்றுத் திரும்பி விடுமானால் அரசர்களுடைய வாழ்வும் அவ்வாழ்தலுக்ுரித்தான தேசங்களும் எங்கே? செல்வங்களெங்கே? மண்டலாதிபதிகளுடைய மேடைமாளிகைகள் எங்கே? நடனசாலைகள் எங்கே? ஆகையால் எல்லாம் கண்களுக்கு மயக்கத்தைத் தருவனவே யொழிய மெய்யல்ல. (எ-று)

உடுப்பானும்பாலனமுண்பானுமுய்வித்தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்றுகேள்விசெய்வானுங்கெதிபடக்க

கொடுப்பானுந்தேகியென் றேற்பானுமேற்கக்கொடாமனி
தடுப்பானுநீயல்லையோதில்லையோனந்தத்தாண்டவனே[று

(போ - ரை) சிதம்பரத்தின் கண்ணே நடனஞ் செய்கின்ற நடராஜனே உடுப்பவனும், பாலுஞ்சோறுமாகப் புசிப்பவனும், ஒருவரைப் பிழைக்கப் பண்ணிப் பின்பு கெடுப்பவனும், கேட்பவனும், தானங் கொடுப்பவனும், பிச்சை யெடுப்பவனும் கொடுப்பவர்களைத் தடுப்பவனும் ஆகிய எல்லாஞ் செய்யவல்லவன் நீயேயல்லவா. (எ - று)

இச்செய்யுள் எல்லாம் சிவன்செயல் என்பதை விளக்குகின்றது. 14

வித்தாரம்பேசினுஞ் சோங்கேறினுங்கம்ப மீதிருந்து
தத்தாவென்றோதிப்பவுரிகொண்டாடினுந் தம்முன்றம்பி
யொத்தாசைபேசினுமாவதுண்டோதில்லை யுண்ணிறைந்த
கர்த்தாவின்சொற்படி யல்லாதுவேறில்லை கன்மங்களே.

(போ - ரை) அவரவர் கருமங்கள் சிதம்பரத்தின் கண்ணே எழுந்தருளு யிருக்கும் சிவபெருமானுடைய சொற்படியே யல்லாமல் வேறு வழியில்நடவாதாகையால் பெருக்கப்பேசினும், சோம்பியிருந்தாலும், கம்பமேல் இருந்து சுற்றிவருதலாகிய பவுரி யென்கிற ஒருவகைக்கூத்தாடினும், தாமும், தம்பியும் மற்றுமுள்ளாறும் ஒருமிக்கச் சேர்ந்து ஆசையான வார்த்தைகளைப் பேசினும் சிவானந்தப் பேற்றிற்குரியகாரியம் ஏதாயினும், ஆவது இருக்கின்றதோ; இல்லை என்றபடி,

இச்செய்யுள் அவளன்றி ஓரணுவும் அசையாது என்பதை விளக்குகின்றது. 15

பிறவாதிருக்க வரந்தரல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ

வறமார்புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவா திருமனமே யதுகாணன் மருந்துனக்கே

(போ - ரை) ஓ மனமே! சிவபெருமானானவர் உனக்குப் பிறவாம லிருக்கும்படி வரங்கொடுக்க வேண்டும்(அங்ஙனம் கொடாமல் (உலகத்தின் கண் பிறந்துவிட்டாலோ; சாகாமலிருக்க மருந்திருக்கின்றது (அது எந்தமருந்தென்றால்) தருமங்குடி கொண்டமையால் புகழ் விளங்குகின்ற சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள அம்பலவாணருடைய திருவடித்தாமரைகளை மறவாதிருப்பாயானால் அதுவே உனக்குநல்ல மருந்தாகும். (எ - று)

உனது பிறவியை யொழிக்கத்தக்க மருந்து சிவபிரானது திருவடிகளே யாம் என்பது கருத்து. 16

தவியா திருநெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்
பவியார்ந்திருக்கின்ற ஞானாகரனைப் புராந்தகனை
யவியாவிளக்கைப்பொன் னம்பலத்தாடியை யைந்தெழுத்
செவியாமனிசெவித்தாற் பிறவாமுத்திசித்திக்குமே. [தாற்

(போ - ரை) ஓ மனமே! நீ துன்பப்படாதிருப்பாயாக, (ஏனென்றால்) சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கின்றசங்கரனும், ஞானமே திருமேனியாக வுடையவனும், என்றும் கெடாத விளக்குப்போல்வானும், என்னுடைய சிற்றம்பலத்தில் நடனஞ் செய்கின்றவனுமாகிய சிவபெருமானை நீ பஞ்சாட்சரத்தைக் கொண்டு செபியாமற் செபிப்பையானால் என்றும் பிறப்பதற் கிடமிராத மோக்ஷமானது உனக்குக் கைகூடும். (எ - று)

நீ பஞ்சாட்சர தியானத்தைச் செய்ய வேண்டிய முறைப்படி செய்தால் மோக்ஷமடைவாய் என்பது கருத்து. 17

நாலின்மறைப்பொரு ளம்பலவாணரை நம்பியவர்
பாலிலொருதரஞ் சேவிக்கொணுதிருப் பார்க்கருங்கல்
மேலிலெடுத்தவர் கைவிலங்கைத்தைப்பர் மீண்டுமொரு
காலினிறுத்துவர் கிட்டியுந்தாம்வந்து கட்டுவரே.

(போ - ரை) நான்கு வேதங்களினுட் பொருளா யுள்ள அம்பலவாணர் என்னுந் திருப்பெயருடையவரை நம்பி அவரை ஒருதரமாயினும் சேவை செய்யா திருப்பவரை எமதூதர்கள் கருங்கல்லை மேலாக எடுக்கச் செய்து அவர்களுடைய கையில் விலங்கையிட்டு மறுபடியும் ஒற்றைக்காலில் நிறுத்துவதன்றியும் சமீபத்தில் போய் மற்றைய உறுப்புகளையும் கட்டுவார்கள். (எ-று.)

ஆகையால் சீக்கிரத்தில் சிவபெருமானை வணங்கித் தேகத்தாலாகும் பயனை யடைய வேண்டும் என்பது குறிப்பு. 18

ஆற்றோடுதும்பை யணிந்திடுமம்பல வாணர்தம்மைப்
போற்றுதவர்க்கடை யாளமுண்டேயிந்தப் பூதலத்திற்
சோற்றுவிசற்றுச் சுகமற்றுச் சுற்றத்துணியுமற்றே
யேற்றாலும்பிச்சை கிடையாமலேக்கற் றிருப்பார்களே.

(போ - ரை) கங்காநதியையும், தும்பைமலரையும் தாங்கி நடனஞ் செய்கின்ற சிவபெருமானைப் பூசியாத பாவிகள் அடையாளங்களுடன் கூடி யிருப்பார்கள், (அவையாவை யென்றால்)இந்தப் பூமியின்கண்ணே சோறு கிடையாமலும், சுகமில்லாமலும், உடலிற் சுற்றத்துணி யில்லாமலும், இரந்தாலும் பிச்சை அகப்படாமலும், துக்கத்துடன் இருப்பதே அடையாளமாகக் குடியிருப்பார்கள். (எ - று.)

இச்செய்யுள் எல்லாம் சிவன் தருதலால் அவனை வணங்காதவர் இங்ஙனமாய தன்மையை யடைவார்கள் என்பதை விளங்குகின்றது. 19

அத்தனைமுப்பத்து முக்கோடிதேவர்க் கதிபதியை
நித்தனையம்மை சிவகாமசுந்தரி நேசனையெங்
கத்தனைப்பொன்னம் பலத்தாடுமையனைக் காணக்கண்க
ளெத்தனைகோடி யுகமோதவஞ்செய் திருக்கின்றனவே.

(பொ - ரை) செல்வனும், தேவர்களுக் கெல்லாம் தலைவனும், என்றும் அழியாதவனும், என் தாயாகிய சிவகாம சுந்தரிக்குக் கணவனும், எம்பெருமானும்பொன்னம்பலத்தில் நடனஞ் செய்யும் தலைவனுமாகிய சிவபெருமானைத் தரிசிக்கும் பொருட்டு என்னுடைய கண்கள் எத்தனையோகோடி யுகங்களாகத் தவஞ்செய் திருக்கின்றன. (எ - று)

அப்படி யிருந்தும் அந்தத் தரிசனம் எப்பொழுது கிடைக்குமோ நான் அறிந்திலேன் என்பது குறிப்பு. 20

---

## திருச்செங்காடு.

நெருப்பானமேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே [க்
யிருப்பார்த்திருவுளமெப்படியோ வின்னமென்னையென்ன
கருப்பாசயக்குழிக் கேதள்ளுமோகண்ணன் காணரிய
திருப்பாதமேதருமே தெரியாது சிவன்செயலே.

(பொ - ரை) எல்லாம் சிவன் செயலே யாகையால் அவர் இன்னமும் என்னை, தாயின் கருப்பாசயக் குழியிலேயே தள்ளுவாரோ? அன்றி, விஷ்ணுவால் காணப்படாத திருவடிகளில் தள்ளி அவைகளைக்கொடுப்பாரோ, இவ்விரண்டில் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை (ஏனென்

ருல்) செவந்த திருமேனியை யுடையவரும் திருச்செங்கா டென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் ஆத்திமரத்தின் கீழ் எழுந்தருளி யிருப்பவருமாகிய சிவபெருமானுடைய திரு வுள மெப்படியிருக்கின்றதோ? ஆகையால். (எ - று)

தாயின் கருப்பாசயக்குழியில் தள்ளுவாரோ என்பது பிறக்கச்செய்வாரோ என்னும்பொருட்டு. (க)

---

## திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்
செய்யுந்திருவொற்றி யூருடைவீர்திரு நீறுமிட்டுக் [யான்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

(போ - ரை) திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள தியாகப் பெருமானே? சிலேஷ்மம் மேலிட்டுக் கண் உள் ளிட்டு அறிவுகுலைந்து மெய்யாகிய தேகம் விழுஞ்சமயத் தில் நான் செய்யவேண்டியதாகிய ஒரு வார்த்தைகேட்கின் றேன். (அஃது என்னவென்றால்) விபூதியுத்தூளனம் செய்து கைகுவித்துப் பஞ்சாட்சர தியானஞ் செய்யும்படி யாக நீ எனக்குக் கற்பிக்கவேண்டும் என்பதேயாம். ()

அறிவானது கெட்டுத் தேகம் விழும்போம் சமயத் தில் செய்யவேண்டியது இன்னதென்று தெரியாமல் மயங் குவேனாகையால் நீ அப்பொழுது மேல் நான் கேட்டுக் கொண்டவற்றை அறிவுறுத்தவேண்டும் என்பது கருத்து.

சுட்டப்படுவா ரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான்
றிட்டப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக் கிழிப்பதுவே.

(பொ - ரை) ஓமனமே! பிரமனால் எழுதப்பட்டுள்ள லிபியைக்கிழித்துச் சுகத்தையடைவது எங்ஙனமென்றால், வேறொருவரால் எரிக்கப்படாத திரிபுரத்தையும் எரித்த பெருமானும், தியாகபெருமானுமாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள வலிமைதங்கிய பெரிய மதில்களால் சூழப்பட்ட திருவொற்றியூரின் வீதியில் நடப்பவர்களுடைய அழகிய திருவடிகள் நம்முடைய தலைமேல் படும்படியாக செவ்வனேயுருண்டு கிடப்பதேயாம். ஆகையால் நீ இதையறிந்து அங்ஙனம் செய்வையானால் முத்திப்பேறு எளிதிற் கைகூடும் என்பதேயாம் இது குறிப்பு.

இங்ஙனம் சொன்னமையால் அக்காலத்தில் திருவொற்றியூர் வாசிகளெல்லாம் தபமகிமையுடையார் என்பது வெளிப்படுகின்றது.

---

## திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
யோடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவரோங்கு விண்
நாடேயிடைமரு தீசர்க்குமெய்யன்பர் நாரியர்பால் (ணோர்
வீடேயிருப்பினு மெஞ்ஞானவீட்டின்ப மேவுவரே.

(பொ - ரை) ஓ மனமே! மனத்தின்கண் அன்பில்லாதவர்கள், காட்டையே இருப்பிடமாகக்கொண்டு அதனிடத்தில் வசித்தாலும், காற்றையே ஆகாரமாகப் புசித்தாலும் கந்தையான வஸ்திரங்களை அரையிற்சுற்றி ஓட்டையெடுத்துக்கொண்டு பிச்சையெடுத் துண்டாலும் என்ன பயன்? ஒன்றுமில்லை பொன்னாட்டையளாவும் மதில்களால் சூழப்பட்ட திருவிடை மருதூரிலிருக்கும் மருதீசரிடத்தில் உண்மையான அன்பைச்செலுத்துவோர்கள் வீட்

டின்கண் ணிருந்து பெண்களோடு கூடியிருந்தாலும் மெய்ஞ்ஞானமாகிய முத்தி வீட்டில் அநுபவிக்க வேண்டிய சுகத்தை அடைவார்கள். (எ - று)

அன்பில்லார் காட்டிலிருந்தாலும் பயனொன்றுமில்லை. அன்புள்ளா வீட்டிலிருந்தாலும் பயனுண்டு என்பது கருத்து. 1

தாயும்பகைகொண்ட பெண்டீர்பெரும்பகை தன்னுடைய
சேயும்பகையுற வோரும்பகையிச் செகமும்பகை
யாயும்பொழுதி லருஞ்செல்வநீங்கிலிங் காதலினாற்
றோயுநெஞ்சேமரு தீசர்பொற்பாதஞ் சுதந்தரமே.

(போ - ரை) வருந்துகின்ற மனமே; அருமையாகத் தேடிச் சேகரிக்கப்பட்ட செல்வமானது போய்விட்டால் பெற்றதாய், பெண்சாதி, தன்னுடைய பிள்ளைகள், சாதியார், உலகத்தார் ஆகிய எல்லாரும் பகைவராவார்கள் ஆகையால் என்றும் ஒரே தன்மையாக இருக்கும் நம்முடைய மருதீசருடைய அழகிய திருவடிகளே நமக்குச் சுவாதீனமான அழியாத பொருளாயுள்ளவை (ஆகையால்) அத்திருவடிகளையே சதாதியானஞ் செய்யக்கடவை. ()

உலகத்தில் செல்வம் நீங்கினால் யாவரும் பகையாவாராகையால் சிவபிரானைத் துதிசெய்வாய் என்பது கருத்து.

---

## திருக்கழுக்குன்றம்.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோநல மேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிட
நீடோய்கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

(பொ -ரை) ஆகாயத்தை அளாவுகின்ற திருக்கழுக் குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் ஈஸ்வரனே! அடியேனு டைய தேகமானது விழப்படும் இடமாயுள்ளது, காடோ, அக்காட்டின் உறுப்புகளில்ஒன்றாகிய செடியோ, கடலின் பக்கங்களோ, நாடோ, பட்டணமோ, அப்பட்டணத் திற்கு நடுவோ, நன்மைமிகுந்த வீடோ, அன்றிப் புறந்தி ண்ணையோ, அறியேன், ஆனாலும் அக்காலத்தில் என்னு டைய உயிர்க்குத்துணையாக இருப்பது உன்னுடைய திரு வடிகளேயாம் (ஆகையால்) எந்த இடத்தில் என்தேகம் விழுந்தாலும் என்னை உன் திருவடிகளிடத்தில் அன்பனாக் கிக்கொள்வது உன்னுடைய சர்வகாருண்ணியத்தின் கட மை என்பது குறிப்பு. 1

---

## திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண் கயிலாபுரிக் காளத்தியே.

(பொ - ரை) தென்கயிலாயமென்று சொல்லுகின்ற திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் காளத்திநாதரே? (தாயின் வயிற்றிடமாகப்) பத்து மாதம் இருந்து பின்பு இப்பூமியில் பிறந்துவளர்ந்து நல்லவஸ்திரங்கள் ஆபரணங் கள் முதலியவைகளைத் தரித்து சிற்றின்பம் முதலியவற் றில், ஓடியாடித் தீர்ந்தபிறகு மாண்டுகிடக்கும் ஒரு பிணத் தினிடத்தில் இனிமேல் மாளும்பொருட்டாக இருக்கின்ற பல்பிணங்கள் கூடிக்கொண்டு கத்துகின்ற விதமென் னமோ? அரியேன்.

இறந்துகிடக்கும் பிணத்தைப்போல் நாமும் போக வேண்டுமேயொழிய இவ்வுலகத்தில் நிற்பது இல்லையே யென்றுணர்ந்து காளத்திநாதரை வணங்காமலிருக்கின்றனரே இது என்னவோ தெரியவில்லையே என்பது இரக்கக்குறி.

பொன்னாற்பிரயோஜனம்பொன்படைத்தார்க்குண்டு
பொன்படைத்தோன்
தன்னாற்பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டத்
தன்மையைப்போ
லுன்னாற்பிரயோசனம் வேணதெல்லாமுண்
டுனைப்பணியு
மென்னாற்பிரயோசன மேதுண்டுகாளத்தி
யீச்சுரனே.

(போ - ரை) திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே? பொன்னைப்பெற்றுள்ள செல்வர்களுக்கு அப்பொன்னினாற் பல பிரயோசனங்களிருக்கின்றன? அவர்களால் அப்பொன்னுக்கு ஒரு பிரயோசனமுமுண்டோ! இல்லை. அதுபோல உன்னைச் சாஷ்டாங்க நமஸ்காரம்பண்ணி வணங்கும் எனக்கு உன்னால் அநேக பிரயோசனங்களுள்ளன. என்னால் ஏதாயினும் ஒரு பிரயோசன முண்டோ? இல்லை என்றபடி (எ - று)

இப்படியிருப்பதால் என்னைச் சிவபோக வின்பத்திலமிழ்த்திமுத்திபேற்றைத் தந்தருளல் வேண்டும் என்பது குறிப்பு 2

வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து

நாளாறிக் கண்ணிடந்தப்பவல்லேனல்ல ஞனினிச்சென்
ருளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே.

(பொ-ரை) வாளைக்கொண்டு (அருமையாகப்பெற்ற) பிள்ளையை அரிந்து கடவுளுக்கு ஊட்டவல்லமை யுடையேனல்லன்? மனையாள் செய்துகொண்ட சபதத்தை மேற்கொண்டு இளம்பிராயத்தை யெல்லாம் கழிக்கச் சக்தியுடையேனல்லன்! அருமையான திருத்தொண்டு செய்து ஆறுநாட்களில் கண்ணைப்பிடுங்கிச் சிவபிரானது கண்ணில் அப்பிவைக்கச் சக்தியுடையேனல்லன்? ஆகையால் நான் இனிமேல் திருக்காளத்தியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அடிமைப்படுவது எப்படியோ? அறியேன் ()

இம்மூத்திரத்தில் ஏதேனு மொன்றைச் செய்யவும் சக்தியில்லாதவனுன நான் சிவபெருமானது திருவடிக்குப் பாத்திரனுவது எப்படி? என்பது கருத்து.

வாளான் மகவரிந்தது! சிறுத்தொண்ட நாயனுரிடத்தில் நிகழ்ந்தமை. மனையாள் சபதஞ் செய்து கொண்டது? திருநீலகண்ட நாயனுரிடத்தில் நிகழ்ந்தமை. நாளாறில் கண்ணிடந்தது! கண்ணப்ப நாயனுரிடத்தில் நிகழ்ந்தமை.

மூப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவும்மோகத்திறை
செப்போதிளமுலே யாருடன்சேரவுஞ் சீவன்விடு
மப்போதுகண் கலக்கப்படவும்மைத் தாயைய்யனே
யெப்போதுகாணவல்லேன் திருக்காளத்தி யீச்சுரனே.

(பொ - ரை.) திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே? என் தந்தையே; ஒருநாளைக்கு, மூன்றுவேளையும் போஜனம் பண்ணவும், நித்திரை செய்யவும், மாயாவிகாரத்தால் பெண்களிடத்தில் கலவிசெய்யவும், உயிர் இறந்துபடுந்தருவாயில் துக்கப்படவுமே ஏற்

படுத்தினாய் ஆகையால் நான் இப்படிப்பட்டவைகளை யெல்லாம் ஒழித்து உன்னுடைய திருவடித்தாமரைகளை எப்பொழுது தரிசிக்கப் பாத்திரனாவனோ! (எ-று)

இரைக்கேயிரவும் பகலுந்திருந்திங் கிளைத்துமின்னா
ரரைக்கேயவலக் குழியருகே யசும்பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந் தமியேனையாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல்லா நிழற்கீழமர்ந்தருள் காளத்தியே.

(பொ-ரை.) பொன்முகரி நதிக்கரையிலும், கல்லால மரத்தின் நிழலிலுமே சதா எழுந்தருளியிருக்கின்ற திருக் காளத்திநாதரே! நான் இரவும் பகலும் ஆகாரத்தின் பொருட்டே திரிந்திளைத்துப் பின்னர் பெண்களுடைய முடைவீசும் கலமொழுகா நின்ற அரையினிடமாகப் பட்சம்வைத்துத் திரிகிறேன். ஆகையால் என்னை நீயே பாது காத்தருள வேண்டும். (எ-று) 5

நாறுங்குருதிச் சலதாரை தோட்புரை நாடொறுஞ்சீ
யூறுமலக்குழி காமத்துவார மொளித்திடுப் புண் /
டேறுந்தசைப்பிளப் பந்தரங்கத்துள சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சுரனே

(பொ - ரை) திருக்காளத்தியில் எழுந்தருளி யிருக்கின்ற காளத்தி நாதனே! நாற்றம் வீசுகின்ற இரத்தமானது ஒடிக்கொண்டே யிருக்கும் வாய்க்காலும், தோலால் புரைக்கப்பட்டதும். தினந்தோறும் சீயானது கசிந்து கொண்டேயிருக்கும் மலக்குழியும், காமத்துவாரமும், ஒளித்து வைத்திருக்கப்பட்டதான புண்ணும், சதைப் பிளப்பானதுமான மறைவிடத்திலே யிருந்து அநுபவித் தற்குரிய சிற்றின்பத்தை விட்டுக் கரையேறத் தகுந்த பதவி அடியேனுக்கு அநுக்கிரகஞ் செய்வாய். (எ - று)

## கைலாயம்

கான்சாயும்வெள்ளி மலைக்கரசேகின் கழனம்பினை
ஊன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய் கருவூரனுக்கா
மான்சாயச்செங்கை மழுவலஞ்சாய வளைந்த கொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே.

(பொ - ரை) திருக்கயிலாய மலையில் எழுந்தருளி யிருக்கும் தலைவனே? மார்க்கண்டேயருக்காகத் தங்கள் திருக்கரங்களி லிருக்கின்ற மான் மழுக்கள் சாயவும், தரித் திருக்கிற தேனோடு கூடிய கொன்றை மலர் மாலை சாய வும், நல்ல திருவுடலைச் சாய்ந்து (எமனை உதைத்துத் தள்ளிய) சிவபெருமானே? (நீஇங்ஙனம் செய்தமையால்) எனக்கும் வரவிருக்கின்ற பிறவியை நீக்கி என்னையுமாட் கொள்ள வேண்டும். 1

இல்லறந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துதின்று
பல்லுங்கரையற்று வெள்வாயுமாயொன்றிப்பற்று மின்றிச்
செல்லும்பொருளு மிழந்துசுகானந்தத் தூக்கத்திலே
யல்லும்பகலு மிருப்பதென்றோ கயிலாயத்தானே.

(பொ - ரை) திருக்கயிலாய மலையில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே; நான் இல்லறத்தை விட்டுத் துறவியாகிப் பசிநேரிட்ட காலத்தில் பிச்சை யெடுத்துத் தின்று பற்கள் கறைநீங்க வெறும் வாயனாகி யாதொன்றி லும் பற்றுதலில்லாமல் சொற்களையும் அதன் பொருள் களையும் நீங்கிச் சுகானந்தம் உதயமாகுதற்குரிய தூங்கா மற் றூங்குதலான தூக்கத்திலே சதா இருந்து அநுபவிப் பது எந்தக்காலமோ அறியேன். 2

சிந்தனையற்றுப் பிரியமுந்தானற்றுச் செய்கையற்று
நினைந்துமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனைத்

தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வனந்தனிலென் றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

(போ - ரை) பெருஞ் செல்வனே! திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானே! கோபமும், ஆசையும், செயலும், நினைப்பும், மறப்பும் (ஆகிய இவைகளெல்லாம்) நீங்கி ஒரு சிந்தனையும் இல்லாதவனாய்த் தனியே யிருந்து சகோதயமாதற்குறிய பேரானந்தத் தூக்கத்திலே எக்காலத்தில் அமர்ந்திருப்பேன் (எ - று) 3

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று கரித்துணியைத்
தையாதுடுத்துநின் சன்னிதிக்கேவந்து சந்ததமு
மெய்யாரநிற்பணிந் துள்ளேயுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவென்றோல மிடுவதென்றோகயி லாயத்தானே.

(போ - ரை) திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே? பிச்சையிடும் அன்னத்தை கையாற் பெற்றுப் புசித்துக் கரித்துணியைத் தைக்காமலே யுடுத்து உன்னுடைய திருக்கோயிலின் கண் வந்து எப்பொழுதும் உன்னைப் பணிந்து மயிர்க்கூச்செரியும்படி என்னுடைய தலைவனே! என்று முறையிட்டு என் எண்ணத்தைச் சொல்லிக் கொள்வது எப்பொழுதோ. (எ-று)

நீறார்த்தமேனியு ரோமஞ்சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க்கசிந்து கசிந்தேயுருகிநின் சீரடிக்கே
மாறாத்தியானமுற் றானந்தமேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராறாய்ப்பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தனே

(போ - ரை திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! திருநீற்றைத் தரித்திருக்கும் அடியேனுடைய உடம்பானது மயிர்க்கூச் செறியவும், மனமானது கசிந்து உருகவும் உன்னுடைய் சிறந்த திரு

வடிகளிடத்தில் என்றும் நீங்காத தியானத்தை வைத்து இன்பமேலிட்டுக் கண்களினின்றும் வரும் ஆநந்த பாஷ்பமானது மார்பின் வழியாகத் தாரை தாரையாய் இழியவும் நான் பரவசமாகி இருப்பது எந்தக் காலமோ(எ-று)

செல்வரைப்பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக் காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பே னத்தனேகயி லாயத்தனே.

(போ - ரை) பேரானந்தச் செல்வனே; திருக்கயிலாய மலையில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே! நானோ, பணமுள்ளவர்களைப் பின் தொடர்ந்து பலவகையான சங்கடங்களை முறையிட்டுச் சதா அவர்களோடு உபசாரமாகச் சிரித்துப் பரிதவிக்கின்றேன், அங்ஙனம் அநுபவிக்குந் துன்பத்தை நீக்கி) சுகாநந்த வெல்லையில் போய்நான் ஏகாந்தமாய் ஆகக்கூடிய இடத்தின் கண் எப்பொழுது என்னுடைய துன்பங்களை யெல்லாம் ஒழித்திருப்பேனோ.

ஏகாந்தம் என்றால் சிவத்தோடிரண்டறக் கலத்தல், இதனையே அத்துவைதமென்று பெரியோர் சொல்வர்.

மந்திக்குருளையொத் தேனில்லைநாயேட் வழக்கறிந்து
சிந்திக்குஞ்சிந்தையை யானென்செய்வேனெனைத்தீதகற்றி
புந்திப்பரிவிற் குறளைபையேந்திய பூசையைப்போ [ப்
லெந்தைக்குறியவன் காணத்தனேகயி லாயத்தனே.

(போ - ரை) சிவாநந்தச் செல்வனே! திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நான் குரங்குக்குட்டியைப் போன்ற வனல்லேன் ஆகையால் என்னுடைய வழக்கத்தை உணர்ந்தும் பல வியவகாரங்களை நினைக்கின்ற மனத்தை நான் என்னசெய்யக் கட

வேன் ஒன்றுமில்லை, ஆகையால் நீயே என்னுடைய தீமைகளை நீக்கி மனவிருப்பத்தோடு தன்னுடைய குட்டியையணைத்து ஏந்தி நீகொள்ளும் பூனையைப்போல என்னையணைத்து உன்னுடைய திருத்தொண்டிற் குரியவனாக்கிக் கொள்ளல்வேண்டும் (எ - று) 7

வருந்தேன்பிறந்து மிறந்துமயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற் புகுகின்றிலேன் புகழ்வாரிடத்தி
லிருந்தேனினியர் கூட்டம்விடேனிய லஞ்செழுத்தா
மருந்தேனருந்துவ னின்னருளாற்கயி லாயத்தனே.

(போ - ரை) திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே? உன்னுடைய திருவருளைமேற்கொண்டு இருப்பதால் நான் யாதொன்றாலும் வருத்தத்தை யடையேன், பிறப்புக்களுக்கு காரணமாயுள்ள ஐம்புலன் வழியிற் போகேன், நகரத்தை யடையமாட்டேன் உன்னைச் சதாதுதி செய்கின்றவரிடத்திலிருந்தேன் இனிமேல் அவர்களுடைய கூட்டத்தை விட்டுப்பிரியேன். (அன்றியும்) பஞ்சாட்சரமாகிய அரிய தேனைப் புசித்துக் கொண்டேயிருப்பேன் (எ - று.)

இவை யனைத்தும் உன்னுடைய திருவருட்டுணையாலே யாகையால் என்னை என்றும் அவ்வருளானது பிரியாதிருக்கும்படி கருணை செய்ய வேண்டும் என்பது குறிப்பு. 8

---

## மதுரை..

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியே தினமேயலையக்
கடப்படுமோவற்பர் வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்க நாதாசவுந்தர பாண்டியனே.

(பொ - ரை) சொக்க நாதர்க்கடவுளே? சோமசுந்தர பாண்டியனாய் வந்து அரசு செலுத்தினவனே உன்னுடைய திருவருள் மேலிட்டாலல்லாமல் இந்தஉலகவாழ்வை விடுவதற்குக் கூடுமோ? அங்ஙனம்விட்டாலும் மனமானது திடத்தை யடையுமோ? இல்லை. (ஆகையால்) நின்னுடைய அருளைப்பெற விரும்புகின்ற யான் தினமும் அலைந்து திரிந்து அற்பர்கள் வீட்டினிடமாகச் சென்று கண்ணீர் விட்டழுது துன்பத்தை யடையப்படுமோ: (ஆகையால்) இத்துன்பங்களை நீக்கிஎன்னையும் ஆட்கொள்ளவேண்டும் என்பது குறிப்பு. 1

---

## போது.

உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந்துணைக்கே
விடையேறுமீசர் திருநாமமுண்டிந்தமேதினியில்[றைக்கே.
வடகோடுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்னவான்பி

(பொ - ரை) இந்த உலகத்தின்கண்ணே எனக்கு உடுக்கும் வஸ்திரமாகக் கோவணமிருக்கின்றது; நித்திரைசெய்யவோ வெளியில் திண்ணையிருக்கின்றது? ஆகாரமாகஇலை, காய் முதலியவைகள் இருக்கின்றன: குடிப்பதற்குத் தண்ணீருமிருக்கின்றது! அரிய இறையாயிருப்பதற்கு ரிஷப வாகனரூடனை சிவபெருமானது பஞ்சாட்சரமிருக்கின்றது: (ஆகையால்) உயர்ந்த சந்திரனுக்கு வடதுமுனை உயர்ந்தா லென்னபயன்; தென்பக்க முனைசாய்ந்தாலென்ன நஷ்டம்! (ஒன்று மில்லை என்றபடி )

வடகோடுயர்தல் தென்கோடுசாய்தல் உலகக்ஷேம ஹிம்சாகரமங்களைப் பற்றியதாகையால் அது எப்படி யிரு

ந்தாலும் மேற்சொல்லிய அங்கங்கள் என்றுமுள்ளனவா கையால் எனக்கு ஒரு குறைவுமில்லை என்பது கருத்து.

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
வோடுநமக்குண்டு வற்றாதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
யீடுநமக்குச் சொலவேயொருவரு மிங்கில்லையே.

(பொ - ரை) நமக்கு வீடானது திருவாலங்காடாம், என்றும் அழியாத பாத்திரமாக வுள்ளது; சிவபெருமானால் கொடுக்கப்பட்ட ஓடாம்! செல்வம் மிகுந்த ஓர் நாடும் நமக்குள்ளது? அதுவன்றி, யார் எதைக் கேட்டாலும் அதைக் கொடுக்க நல்ல நெஞ்சமு மிருக்கிறது. ஆகையால் இவ்வுலகத்தின் கண்ணே நமக்கு ஒப்பானவர்கள் வேறொருவரும் இல்லை. (எ - று) 2

நாடிக்கொண்டீசரை நாட்டமுற்றாயிலை நாதரடி
தேடிக்கொண்டாடிதெளிந்தாயிலைசெகமாயைவந்து [றும்
மூடிக்கொண்டோமென்றுங்காமாயுதங்கண்முனிந்தவென்
பீடிப்பையோநெஞ்சமேயுனைப்போலில்லைப்பித்தர்களே.

(பொ - ரை) மனமே! சிவபெருமானை யடுத்துச்சேர்ந்தாயில்லை. அன்றி அவரை உள்ளபடி விசாரித்துத் தெளிந்தது மில்லை (நீ இப்படி யிருப்பதால்) செகமாயை வந்து மூடிக்கொண்டதே யென்றும், காமத்தைச் செலுத்தும்படியான கருவிகள் கோபித்தனவே யென்றும் துன்பப்படுத்துகின்றாய். ஆகையால் உன்னைப் போன்ற பித்தர்கள் ஒருவரு மில்லை (எ - று) 3

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ண, பொய்யொன்று வஞ்சகநாவொன்று பேசப் புலால்கமழு ,மெய்யொன்றுசாரச் செவியொன்று கேட்க

ட்க, விரும்புமியான், செய்கின்றபூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே.

(பொ - ரை) அன்பர்க்குள்ள வினையைத் தீர்த்து அடிமைகொள்ளும் சிவபெருமானே! என்னுடைய கையானது ஒன்றைச் செய்யவும், கண்கள் ஒன்றைப் பார்க்கவும், மனம் ஒன்றை யெண்ணவும், நாக்கு ஒன்றைப்பேசவும், தேகம் ஒன்றைப் பரிசிக்கவும், காதுகள் ஒன்றைக் கேட்கவும், செய்கின்ற என்னுடைய பூசையை நீ எப்படி ஏற்றுக் கொள்வாய் (எ - று)

அங்ஙனம் ஏற்றுக்கொள்ளாவிடினும் என்னை ரக்ஷிக்க வேண்டியவன் நீயேயாவாய் என்பது குறிப்பு. 4

கண்ணுண்டு காணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச னிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானிடமே.

(பொ - ரை) இவ்வுலகத்தின் கண்ணுள்ள மனிதர்களே! தரிசிக்கக் கண்களும், சிந்திக்கக் கருத்தும், பாடுவதற்கு இசையும், அவனுடைய புகழைக்கேட்கக் காதுகளும், சாத்துதற்குப் பலவகையான பச்சிலைகளும் இருக்கின்றன வாகையால் இவைகளைப் பெற்று நமக்கு எதிரே வந்து காக்ஷிகொடுத் தருளும் பொருட்டு ஈசனென்னும் சிவபெருமான் இருக்க. அப்படி அவனைப் பூஜியாமல் விட்டு நீங்கள் அருமையாக எடுத்த தேகத்தைமண்ணுக்கு இரையாக்கிக் கெடுக்கின்றீரே ஈதென்னமோ! அறியேன்.

சொல்லினுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதியிலு
மல்லிலுமாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோ
ரில்லிலுமன்ப ரிடத்திலுமீச னிருக்குமிடங்
கல்லினுஞ்செம்பிலுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே.

(பொ - ரை) எங்களுடைய நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமான் கல்லிலும், செம்பிலுமட்டோ யிருப்பான் (அப்படியன்று) இவ்விரண்டிலிருப்பதுந் தவிர, வாசகத்திலும், வாசகாதீசத்திலும், வேதங்களிலும், இருளிலும், வெளிச்சத்திலும், நிர்மலமான ஆகாசத்திலும், அவனைத் தெளிந்தோருடைய வீட்டிலும், அடியார்களிடத்திலும் கூட விருப்பான் (ஏனென்றால்) சர்வவியாபகன் ஆகையால்,

இப்படிக்கல்லாமல் கல்லிலும் செம்பிலுமில்லை என்று பலரும் பொருள் கொள்கின்றனர் அப்படி யிருப்பின் இவர்கள் "அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்" என்னும் ஆன்றோர் வாக்கியததிற்கும், மார்க்கண்டேயரிடத்திலும், பிரகலாதாழ்வானிடத்திலும் நிகழ்ந்த ஒருவகை அதிசயத்திற்கும் வழிதெரிந்து கொள்வாராக.

அன்றி, இப்பட்டினத்தடிகள் பாரமார்த்திகத்தையடைந்து உண்மைப் பொருளைத் தன்னிடத்தில் அறிந்தமையால் அங்ஙனம் கூறினர் என்னலுமாம். 6

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய்வினை தானொழிந்
தினைப்போதளவுநில் லாதுகண்டாய்சிவன்பாதநினை [தாற்
நினைப்போரைமேவு நினையாரைநீங்கி நெறியினின்று
னினைப்போலொருவருண்டோ மனமேயெனக் குற்றவரே.

(பொ - ரை) மனமே? இருவினைகளின் சம்பந்தமே தேகமாகையால் அவ்வினைகள் ஒழியுமானால் தேகமானது கொஞ்சநேரமும் நில்லாது, (இப்படி யிருப்பதால்) நீ சிவனுடைய திருவடிகளை நினைப்பாயாக அன்றியும், அவனை நினைப்பவர்களைச் சினேகி, நினையாதவர்களைச் சினேகியாதை நான் சொன்ன இந்த வழியில் நீ நிற்பையானால்



காதற்ற வூசியைக்கண்ட சுவேதாரண்ணியர் துறவி யாய்ப் போதல்.

எனக்குப் பொருந்திய துணையாவார் உன்னைப்போல் ஒருவருமில்லை. (எ-று) 7

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து [துக்
முட்டச்சுருட்டியென் மொய்குழலாள்கையில்முன்கொடுத்
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்டதுவே.

(போ - ரை) சிவபெருமான் இவ்விடத்தில் எழுந்தருளிவந்து, பட்டு வஸ்திரத்தில் ஒரு ஊசியை வைத்துச் சுருட்டி என் மனைவியினிடத்தில் கொடுத்தது மாயாசத்தியால் உண்டாகும் காம மயக்கங்களை யெல்லாம் நீங்கிப் பிரிவதற்கோ? (எ - று) 8

சூதற்றகொங்கையு மானார்கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்றபூசலுக் கென்செயலாஞ்செய்த புண்ணியத்தாற்
றீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்றவூசியும் தந்துவிட்டானென்றன் கைதனிலே.

(போ - ரை) யாதொருகுற்றமும் சாரப்பெறாத சிவபெருமான் சொக்கட்டான் காயைப்போன்ற கொங்கை முதலிய உறுப்புகளையுடைய பெண்கள் மயக்கத்தினின்று நீங்கிப் பிழைப்பதற் காகவோ காதில்லாத வூசியை என்னுடைய கையில் கொடுத்து விட்டான். (எ - று) 9

வாதுற்றதிண்புய ரண்ணுமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும் புகலுநெஞ்சேயிந்தப் பூதலத்திற்
றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

(போ - ரை) ஓ மனமே! உயிர் நீங்குங்கால் (அவ்வுயிருடன் கூடி) காதறுந்த வூசியும் வாராதாகையால்,

இவ்வுலகத்தில் பழிப்போடு கூடிய செல்வத்தால் பய
னென்னை! சம்பாதித்து புதைத்து வைத்த செல்வத்தால்
பயனென்னை! ஒன்றுமில்லை, ஆகையால் திருவண்ணாமலை
யில்எழுந்தருளியுள்ள அருணாசலக்கடவுளுடையதிருவடித்
தாமரைகளை நல்ல காலத்திற் சென்று தரிசித்துத் தியா
னித்துத் துதிப்பாயாக. (எ - று) 10

வேதத்தினுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டு
விடப், போதித்தவன்மொழி கேட்டிலையோ செய்த புண்
ணியத்தா, லாதித்தன் சந்திரன் போலேவெளிச்சம் தாம்
பொழுது, காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழி
க்கே.

(போ-ரை) அவரவர்கள் செய்த புண்ணிய வசத்
தால், சூரிய சந்திரர்களைப் போல சோதியை உயிர்அடை
யும் பொழுது (இறக்கும் பொழுது) காதற்ற வூசியும்
வாராதாகையால் வேதங்களிலே விட்டு விடும்படி சொல்
லுகின்ற பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை, இவை
களை விட்டு சிவசம்பந்தத்தை விரும்பாயாக. (எ - று) 11

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாசன்மட்டே
யினமானசுற்ற மயானமட்டேவழிக் கேதுதுணை
தினையாமளவெள் ளளவாகினுமுன்பு செய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ்சித்திக்குஞ் சத்தியமே.

(போ - ரை) பெண்சாதி, பிள்ளைகள் வாழ்வு, செல்
வம், ஆகிய இவைகளெல்லாம் தம்முடையவாசல் மட்டே
யாம், சுற்றத்தாரெல்லாரும் சுடுகாட்டினளவேயாவார்,
(ஆகையால்) உயிரானது போகின்ற வழிக்குத் துணையா
யுள்ளது எள்ளளவாகவே பூர்வத்தில் செய்த புண்ணிய
மாம். அப்புண்ணியத்தால் பரலோகம் கைகூடும், இது

சத்தியம், ஆகையால் மனமே; நீ அப்புண்ணியத்தைத் தேடுவாயாக. (எ - று) 12

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலமேல்வைத்த தழுமைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப்புண்ணிய பாவமுமே.

(போ - ரை) மனமே! நாம் தேடியசெல்வமும், நாம் வாழ்ந்த வாழ்வும் வீட்டளவேயாம்? கண்களில்நீரொழுக அழுகின்ற மனைவியரும் வீதியளவே யாவர்? இரண்டு கைகளையும் தத்தம் தலைமேல் வைத்துத் தேம்பித் தேம்பி யழுகின்ற மைந்தர்களும் சுடு காட்டளவே யாவர். நம மைப் பின்பற்றித் தொடர்ந்து வருவனவாயுள்ள புண் ணிய பாவங்களாகிய இருவினைகளாம். ஆகையால் நீ பெண்டு பிள்ளைகளைத் துணையாக எண்ணுமல் சிவபெரு மானையே சதா சிந்திக்கக் கடவை. (எ - று) 13

சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன் றில்லாதபோது பகலிரவா
யீயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவுபகன்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே.

(போ - ரை) மேலே கட்டப்படுகின்ற புடவையில்லா விட்டால் சீயும் இரத்தமும், வழும்பும் இழிந்து பாய்ந்து பகலும் இரவும் ஈயும், எறும்பு புகுகின்ற பெண்கள் குறி க்கு ஆசைப்பட்டு அதனல் இறந்து போகின்ற மனிதர் களை இறவாமல் வைக்க ஒரு மருந்தும் இல்லையே. (எ-று)

ஆனல் சிவபெருமான் என்கிற ஒரு மருந்து உண்டு என்பது கருத்து. 14

சீதப்பனிக்குண்டு சிக்கெனக்கந்தை தினமிரந்து
நீதய்க்கச்சோறு மனைதோறுமுண்டு நினைவெழுந்தால்
வீதிக்குனல்ல விலைமாதருண்டிந்த மேதினியி
லேதக்குநீசலித்தாய் மனமேயென்றும் புண்படவே.

(போ - ரை) நெஞ்சமே? குளிர்ந்த பனியை நீக்கிக் கொள்ளக் கந்தை யிருக்கின்றது? தினமும் பசித்தபோது அதை யடக்கிக் கொள்ள வீடுகள் தோறும் அன்னமிருக்கின்றது? காமத்தில் எண்ணம் வந்தால் தெருக்களில் வேசிகள் இருக்கின்றனர்! ஆகையால் இவ்வுலகின் கண் நீ துன்பப்படுவது எற்றுக்கோ. (எ - று)

ஆகையால் இவைகளைச் சுவாதீனமாக வைக்காமல் சதாசிவபெருமானைத் துதி செய்வாய் என்பது கருத்து,

ஆருண்டுதோப்புண் டணிவீதியம்பலந் தானுமுண்டு
நீறுண்டுகந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த
மாறுண்டுலாவி மயங்குநெஞ்சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின் சும்மாவிருக்கச் சுகமுமுண்டே.

(போ - ரை) தினமும் மாறுபட்டுத் திரிந்து மயங்குகின்ற மனமே! ஆறு, தோப்பு, அழகிய தெரு, அம்பலம் நீறு, கந்தை, கோவணம், ஆகிய இவைகளெல்லாம் இருக்கின்றன. ஆகையால் வீடுகள் தோறும் சென்று அன்னம் புசித்து நித்திரை செய்து பின்னர் (சுகாநந்த வெள்ளத்தில் மூழ்கிச்) சும்மா யிருந்தால் சுகமும் உண்டு.

உடுக்கக்கவிக்கக் குளிர்காற்றுவெய்யி லொடுங்கிவந்தாற்
றடுக்கப்பழைய வொருவேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்குக் குறைவில்லையே.



பத்திரகிரியார் சேவகர் பட்டினத்தாரை திருடனெனக் கட்டிப்போதல்.

(பொ - ரை) மனமே? உடுப்பதற்கும், போர்வை யிடுவதற்கும், குளிர்காற்றிலும், வெய்யிலிலும் வருந்தி வந்தால் அவ்வருத்தத்தை நீக்கிக் கொள்வதற்கும்பழமை யான ஒருவேட்டி யிருக்கின்றது; படுப்பதற்காக உலக மெங்கும் திண்ணை யிருக்கின்றது! பசியால் வருந்தி வந்த விடத்தில் பசியை நீக்கிக் கொள்ளும் பொருட்டு அன்ன மளிக்கச் சிவன் இருக்கின்றான் ஆகையால் நமக்கு ஒரு குறைவு மில்லை (எ - று)

மனமே ஆனாலும் அச்சிவபெருமானையே சதா துதி செய்யக் கடவை என்பது கருத்து 17

மாடுண்டுகன் றுண்டு மக்களுண்டென் று மகிழ்வதெல்லாங் கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமினிக் கேண்மனமே யோடுண்டுகந்தையுண்டுள்ளே யெழுத்தைந் துமோதவுண்டு தோடுண்டுகண்ட னடியார்நமக்குத் துணையுமுண்டே.

(பொ - ரை) மாடு, கன்று, இருக்கின்ற மக்கள், இருக்கின்றார்கள் என்று சொல்லி சந்தோஷிக்கப்படுவன வெல்லாம் கேட்டையடைகின்றன என்பதை நாம் நம் முடைய காதுகளால் கேட்டோம் ஆகையால் மனமே? இனிமேல் ஒன்று சொல்வேன் கேட்பாயாக, அது என்ன வென்றால், ஓடும் கந்தையும் இருக்கின்றன? துதிசெய் யப் பஞ்சாக்ஷர மிருக்கின்றது! கவச குண்டல மணிந்த திருநீலகண்டருடைய அடியார்கள் நமக்குத் துணையாக வும் இருக்கின்றனர் ஆகையால் நமக்கு ஒரு குறைவு மில்லை. (எ - று.) 18

மாத்தானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு நீத்தார் தமக்கொருநிட்டையுண்டோ நித்தனன்புகொண்டு வேர்த்தாற்குளித்துப் பசித்தாற்புசித்து விழிதுயின்று பார்த்தாலுலகத் தவர் போலிருப்பர் பற்றற்றவரே.

(பொ - ரை) (ஐந்து) அவஸ்தைகளையும், மாயையின் வியவகாரத்தையும் நீக்கிய பெரியோர்களுக்கு ஒரு நிஷ்டை கூட வேண்டுமோ? வேண்டியதில்லை (ஏனென்றால்) அவர்கள் சிவபெருமானிடத்தில் பேரன்பு பூண்டு வேர்த்தால் குளித்தும், பசித்தாற் புசித்தும், நித்திரை வந்தால் தூங்கியும் பார்க்கிறவர்களுக்கு உலகத்தார்கள்போலவே இருப்பார்களாகையால். (எ - று)

பெரியோர்கள் உலகத்தார் போல் பல காரியங்கள் செய்தாலும் பற்றற்றிருப்பார்களாகையால் அவர்களுக்கு நிஷ்டை வேண்டாமென்று கூறினர். 19

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர்செல்வ மெல்லா
மன்றென்றிருபசித் தோர்முகம்பார்நல் லறமுநட்பு
நன்றென்றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென்றிருமனமே யுனக்கேவுப தேசமிதே.

(பொ - ரை) மனமே! ஒரு பொருள்உண்டென்றும், அதுவே தெய்வமென்றும், அது நித்திய வஸ்து வென்றும், நினைத்திருப்பாயாக உயர்ந்த திரவியங்களெல்லாம் நிலையில்லாதன வென்றும் இருப்பாயாக, பசித்து வந்தவர்கள் முகத்தைப்பார், நல்ல தருமமும், நல்லவாசமும் நல்லதென்று இருப்பாயாக, நடுவு நிலைமையினின்று நீங்காமல் நமக்கு விதித்தபடியே யாகுமென்றும் இருப்பாயாக, இதுவே உனக்குபதேச மாகும் ஆகையால் இவ்வுபதேசத்தைக் கைவிடாமல் மேற்கொண்டு நடந்து வருவாயானல் சிவகதிகைகூடும். (எ - று) 20

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தைவாழ்வைக் குடக்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக்குபதேசமிதே.

(பொ - ரை) ஓ மனமே! சற்குருவின் திருவடிகளை நம்பத் தகுந்த திருவருட் குறிப்பென்றும், நமது தேகத்தைப் பொம்மலாட்ட மென்றும், சுற்றத்தாரை சந்தையிற் கூட்டப்படும் கூட்டத்தாரென்றும், வாழ்க்கையைக் குடமானது கவிழ்தலால் ஓடப்படுகின்ற நீரோட்டமென்றும் இருப்பாயாக. இதுவே உனக்குப் பெரிய உபதேசமாகும்.

என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே.

(பொ - ரை) நான், இந்தச் சரீரத்தை எடுத்த பின்னர் ஒரு தீவினையையும் செய்ததில்லை, அப்படி யிருந்தும், இப்பொழுது வந்து என்னை விழுங்கி யிருக்கிற தீவினையானது பூர்வஜென்மத்தில் செய்ததாக விருக்கு மென்று எண்ணுகின்றேன் (ஆகையால் இதை நீக்கிக் கொள்ள) என்னுடைய செய்கையால் ஒன்றும் ஆகாது. (ஏனென்றால்) எல்லாம் உன்னுடைய செய்கைகளே யென்று தெரிந்து கொண்டேனாகையால். (எ- று)

எல்லாம் உன்னுடைய செய்கைகளே யாகையால் என்னுடைய தீவினைகளை நீக்கி யருள்பவனும் நீயே என்பது கருத்து. 22

திருவேடமாகித் தெருவிற்பயன்றெனைத் தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றுனைப் பதம்பணிந்தேன்
கருவாகுமேதக் கடற்கறைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லோ விங்ஙனேசிவனுற்றதுவே.

(போ - ரை) மனமே; சந்நியாசி வேடங்கொண்டு தெருவழியாக என்னைத்தேடிக்கொண்டு வந்து பிச்சை கேட்ட ஒருவனுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்தேன். அவனே சிவபெருமானானவன், அவன் இங்ஙனம் வந்தது ஏனென்றால் ஜெனன சமுத்திரத்தில் விழும்படி எண்ணியிருந்த அடியேனைத் தன்னடிப் படுத்திக் கொள்ளற்பொருட்டல்லவோ? (எ - று) 23

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வீணருடன்
கிட்டேனவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலை [க்கு
தொட்டேன்சுகதுக்க மற்றுவிட்டேன் றொல்லைநான்மறை
மெட்டேனெனும்பர மென்னிடத்தேவந்திங் கெய்தியதே

(போ - ரை) மனமே; நான் உலகவாழ்க்கையை வெறுத்தேன், இருவினைகளைச் செய்துகொண்டு திரிகின்ற வீணர்களோடுசேரேன். அவர்கள் சொல்லும் சொற்களையும் கேளேன், என்றும் அழியாத உண்மை நிலையைச் சேர்ந்தேன், ஆகையால் சுகதுக்கங்களையும் நீக்கிக் கொண்டேன். (நான் இப்படி செய்தமையால்) வேதங்களாலும் அறியப்படாத பரமானது என்னிடத்தில் வந்து சேர்ந்து விட்டது. (எ - று) 24

அட்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தையைந்தும்
விட்டேறிப்போனவெளிதனிலேவியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்செம்மதிப் பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்ப மென்னைவிழுங்கி யிருக்கின்றதே.

(போ - ரை) எட்டுவகையான போகங்களையும், ஆறு தாரங்களையும் ஐந்தவத்தைகளையும் நடந்துபோன வெட்ட வெளியிலே சந்திரனது அமிர்தத்தை உண்டு மகிழ்ச்சியடைந்திருக்கும்படி ஒருபெரிய இன்பமானது என்னை



பட்டினத்தார் கழுமரம் பற்றச்செய்தல் அரசனை புனிதனாக்குதல்.

விழுங்கி மறைத்திருப்பதாகிய அதிசயம் ஒன்றைக் கண்டேன். ஆனால் அது இன்னதென்று தெரியவில்லை (எ-று)

எரியெனக்கென்னும்புழுவோவெனக்கெனுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கெனுந்தான்புசிக்க
நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே.

(போ - ரை) நெருப்பும், புழுவும், மண்ணும், பருந்தும், நரியும், அற்பநாயும், 'தாங்கள் உண்ணு நிமித்தம் எனக்காகும், எனக்காகும் என்று சொல்ல இருக்கின்ற இந்த நாற்றமடிக்கப்பட்ட உடம்பை நான் ரொம்பவும் அன்போடு வளர்த்தேன். இதனால் எனக்கு லாபம் என்னவோ: ஒன்றுமில்லை என்றபடி. (எ - று.) 26

அண்ணறன்வீதியரசிருப்பாகு மணிபடையோர்
நண்ணொருநாலொன்ப தாமவரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணெனபசிக்கு மடைப்பள்ளியான சுகமுமெல்லா
மெண்ணிலிகால மவமேவிடுத்தன மெண்ணரிதே.

(போ - ரை) சிவபெருமானுடைய வீதி அரசிருப்பாகும், அவனுக்குச் சேனாதிபதிகள் முப்பத்தாறு பேர்களாம், அவர்களுடைய ஏவலையும் பெறும் இந்தவூரானது பசிக்கு மடைப்பள்ளியுமாகவிருக்க, இதை எல்லாம்விட்டு அநேககாலங்களாக வீணாக விருக்கின்றோமே, இது நினைப்பதற்கும் அசங்கதமாயிருக்கின்றதே. (எ-று) 27

என்பெற்றதாயாரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார், பொன்பெற்றமாதரும் போவென்று சொல்லிப்புலம்பிவிட்டார், பொன்பெற்றமைந்தரும் பின்வலம்வந்து குடமுடைத்தா, ருன்பற்றொழிய வொருபற்று மில்லையுடையவனே.

(பொ - ரை) நாயினுங்கடைப்பட்ட என்னை அடிமையாக உடையவனே; என்னைப் பெற்றதாயோ, என்னைப் பிணமென்று சொல்லித் தள்ளிவிட்டாள், மனைவியோ, பின்னிருந்து போய்வாவென்று சொல்லி அழுதுவிட்டாள் பிள்ளைகளோ வென்றால், பின்னர் வலமாகச் சுற்றிவந்து குடமுடைத்தார்கள். ஆகையால், இனி உன்னுடைய சம்பந்தமேயொழிய வேறொரு சம்பந்தமுமில்லை, நீயே என்னை ஆட்கொண்டருளவேண்டும். (எ று.) 28

கறைபற்றபல்லுங் கரித்துணிபாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும் பொல்லாதவூணும்புறந்திண்ணை
தறையிற்கிடப்பு மிரந்துண்ணுமோடுஞ் சகமறியக் [யுங்
குறைவற்றசெல்வமென்றே கோலாமாமறை கூப்பிடுமே.

(பொ - ரை) விளக்காத பல்லையும், கரித்துணியையும், பொறுமை நீங்கிய மனத்தையும், கொடிய உணவையும், வெளித் திண்ணையையும், தரையிற்படுத் துறங்குவதையும், பிச்சையெடுத்துத் தின்னுதற் குரித்தான ஓட்டையுமே, அழியாத செல்வங்களென்று வேதங்கள் முறையிடா நின்றன. (எ - று) 29

எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியைமூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங் கக்கத்தில்வைப்பர் கருத்தில்வையார்
பட்டப்பகலை யிரவென்றுகூறிடும் பாதகரே.

(பொ-ரை) அஷ்டதிக்குகளிலும், பதினாறுகோணங்களிலும், எல்லாம் ஒரேபடித்தாய் இருந்து முளைத் துயர்ந்த தேஜோமயத்தை மூடர்களெல்லாம் கட்டிச்சுருட்டி கக்கத்தில் வைப்பாரே யொழிய தங்கடங்கள் மனத்தின் கண் வைத்துத் தியானிக்க மாட்டார்கள். (ஆகையால்

இவர்கள்) நல்ல பகற்காலத்தை இருட்டு என்று சொல்லுதற்குரிய பாதகர் போன்றவர்களாவார். (எ - று.) 30

வாய்நாறுமூழன் மயிர்சிக்குநாறிடு மையிடுங்கண்
பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெறுங்குழிவாய்
சீநாறும்யோனி யழனாறுமிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க் கோவிங்ஙனேமனம் பற்றியதே.

(போ - ரை) நாறுகின்ற வாயையும், மயிரையும், பீநாற்றம் வீசும் கண்களையும், பிணநாற்றம் வீசும் தேகத்தையும், சீநாற்றம் வீசும்பெரிய குழியையும் உடைய பெண்களுடையமயக்கத்திலே என்னுடையமனம் சேர்ந்துவிட்டதே. (எ - று.)

ஐயோ? இதற்கு நான் என்னசெய்வேன் என்பது குறிப்பு 31

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண் டுரைப்படியே
செருக்கித்தரிக்கத் திருநீருமுண்டு தெருகுப்பையிற்
றரிக்கக்கரித்துணி யாடையுமுண்டெந்தச் சாதியிலு
மிரக்கத்துணிந்துகொண்டேன்குறைவேதுமெக்கில்லையே.

(போ - ரை) மனமே! தியானஞ்செய்யப் பஞ்சாக்ஷரமிருக்கின்றது, வேதாகமப்படித் தரித்துக்கொள்ளத் திருநீறு இருக்கின்றது, அணிந்துகொள்வதற்கு தெருக்குப்பையில் கரித்துணி இருக்கின்றது, அன்றி, எந்தச்சாதியிலும்போய் ஏற்பதற்கும் துணிந்துவிட்டேன் இனி எனக்கு ஒரு குறைவுமில்லை. (எ - று.)

சிவபெருமான் சாதிசமயங்களைக் கடந்தவராகையால் அவனருள் வழிப்படுவோர்க்கும் அச்சாதி சமயப்பற்று இல்லை என்பார் "எந்தச் சாதியிலு மிரக்கத்துணிந்து கொண்டேன்" என்றார். 32

ஏதப்பட்டாயினி மேற்படும்பாட்டையி தென்றறிந்து
போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று புல்லறிவால்
வாதைப்படமாட்டாய்மட மானார்க்கலவி மயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமேயுனைப்போலில்லை பித்தருமே.

(போ - ரை.) ஓ மனமே; மிகுதியும் குற்றஞ்செய்தாய் பின்னர்பட விருக்கும் துன்பத்தை யாராய்ந்து நல்லவர்களிடத்திற் போய் அறிவைப் பெற்றாயில்லை. அஞ்ஞானத்தால் வருத்தப்பட்டாய், பெண்கள் மாய்கையில் அகப்பட்டு அறிவீனனானாய், (ஆகையால்) உன்னைப்போல் பித்தம் பிடித்தவர்களும் இரார். (எ - று) 33

சுரப்பற்றுவல்வினை சுற்றமுமற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர் கையிணக்கற்றுக் கவலையற்று
வரப்பற்றுநாதனை வாயாரவாழ்த்தி மனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோ பரமாபர மானந்தமே.

(போ -ரை) என்னுடைய தலைவனே, சுரத்தலும், இருவினைகளும், சாதியும், செய்கைகளும், வஞ்சகமும், பெண்கள் மாய்கையும், துன்பமும் நீங்கிச் சிவபெருமானைத் துதிசெய்து மனமடங்கும்படி இருப்பதல்லவோ மேலான இன்பமானது. (எ - று.)

அங்ஙனங் கைகூட்டி யாள்வோன் சிவபெருமானே என்பது குறிப்பு. 34

பேய்போற்றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்
நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத் [லா
தாய்போற்கருதித்தமர்போலனைவர்க்குந்தாழ்மைசொல்லி
சேய்போலிருப்பவர்கண்டீருண்மைஞானந்தெளிந்தவரே.

(போ - ரை) உலகத்தவர்களே, மெஞ்ஞானிகள் எப்படி யிருப்பார்களென்றால் பசாசுபோல் திரிந்து சவத்

தைப்போ லிருந்து பிச்சை சோற்றைப் புசித்து நரிபோ லலைந்து பெண்களை தாய்மார்போல் நினைத்து மற்றுமுள் ளவர்களைத் தங்கள் சாதியர்கள் போல் நினைத்துப் பிரிய மாக வார்த்தை சொல்லித் தாமொரு பிள்ளைகள் போல் இருப்பார்கள். 7

விடக்கேபருந்தின் விருந்தேமண்டல வீணனிட்ட
முடக்கேபுழுவந் துறையிடமேநல முற்றுயிலாச
சடக்கேகருவி தளர்ந்து விட்டார்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கேயுனைச்சுமந்தே னின்னினே துசுகமெனக்கே.

(போ - ரை) விடக்கே பருந்தினுக்கு விருந்தாக உள் வதே, பிரமனுல் படைக்கப்பட்ட முடக்கே, புழுக்கள் வாசஞ் செய்யும் இடமே நன்மை இல்லாத சடக்கே செத்த பிறகு பெற்றதாயும் தொடுவதற்கு அருவருக்கத் தக்க தேகமே, நான் இதுகாறும் உன்னைச் சுமந்தேனே உன்னால் எனக்கு என்னசுகம். (எ - று)

ஒன்றுமில்லை என்றபடி. 36

அழுதாற்பயனென்ன நொந்தார்பயனென்ன வாவதில்லை
தொழுதார்பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதார்பயனென்ன னன்மையுந்தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோ சலியாதிரென் னேழைநெஞ்சே.

(போ - ரை) என்னுடைய அறிவில்லாத மனமே ஒருவருக்கு நன்மையும், தீமையும், பிரமனுல் எழுதப் படாதபடி வந்து கூடுமோ? கூடாது. ஆகையால் அழு தாலும், வருந்தினுலும், தொழுதாலும், ஒருவர் சுடும் படி உன்னை வைத பழுதினுலும் ஒருபயனுமில்லை. (எ-று)

எல்லாம் விதிவசமாகையால் வருந்துவதிற் பய னில்லை என்பது கருத்து. 37

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகந்தைக்க
வேரீருமக்கவர் தாமேதருவ ரிணையடியே.

(போ-ரை) ஊரிலுள்ளவர்களே? உங்களுக்குஒன்று உபதேசிக்கின்றேன் கேளுங்கள். (அதுஎன்ன வென்றால்) நீங்கள் எப்படியாயினும் தேகத்தை விட்டுவிடப்போகிறீர்கள், ஆகையால் சமணர்களைக் கழுவி விடப்பட்ட திருநீற்றை அணிந்து, சுற்றத்தாரை நீக்கிச் சிவபெருமானைச் சரணாகதி யடையுங்கள். அப்படி செய்வீரானால்,அவரே மனமிரங்கித் தம்முடைய உபயசரணங்களைக் கொடுத்தடிமை கொள்வார்.

சமணைக் கழுவேற்றியவர்-சம்பந்தர். அவர் நீற்றைக் கொண்டு எற்றுவித்ததினால் அதின் மகிமைதோன்ற இங்ஙனம் கூறினர். 38

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லை மாமறைநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா
யாற்றிற்கிடந்துந் துறையறியாம லலைகின்றதே.

(போ - ரை.) ஓ மனமே! நீ திருநீற்றைத் தரிப்பதினால் ஒரு பிரயோசனமு மில்லை. அன்றி தீர்த்தமாடினும் ஒன்று மில்லை. (ஏனென்றால்) இச்சென்மத்தை நீக்கிச் சிவ சம்பந்தமான ஜென்மத்தை யடைய வகையைத் தெரிந்தா யில்லை, ஆகையால் (மறைகளில்) வேதங்களில் முடிவு செய்திருக்கிற எழுகோடி மந்திரங்களை யுணர்ந்தும் அவைகளின் வழிதெரியாமல் தவிக்கின்றனையே, இது, (ஒரு) வூருக்குப்போகும்) வழியிலே நின்றும் வழி

வோ? எதுவோ! என்று தவிக்கின்ற விதத்தவனையே!
இது வென்ன விபரீதம் (எ - று) 40

ஓங்காரமாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து
பாங்காய்முளைத்த பயனறிந்தாற்பதி னாலுலகு
நீங்காமனீங்கி நிறையாநிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க் கெட்டாக்கனிவந் தமர்ந்திடுமே.

(போ - ரை) யாதொரு பிரணவமாயிருந்து விளங்கும் ஒரு மந்திராக்ஷரப் பொருளில் ஒரு மூலவிதை வந்து பக்குவமாய் முளைத்திருக்கும் வகையைத் தெரிந்துகொண்டால், ஆங்காரத்தைப் பெறும் பேருக வைத்திருக்கும் உலகர்களுக்கு அறியப்படாமல் சர்வ வியாபகமாயிருக்கின்ற (ஓர் சிவம் என்னும்) பழமானது வந்து சேர்ந்துவிடும். (எ - று)

விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கயிலைப்
பதியார்துடைப்புநம் பாலணுகாது பரானந்தமே
கதியாகக்கொண்டுமற் றெல்லாந்துயிலிற் கனவெனநீ
மதியாதிருமனமே யிதுகாணன் மருந்துனக்கே.

(போ - ரை.) மனமே பராநந்தத்தையே நீ அடைதற்குரிய மோக்ஷமாகக் கொண்டு மற்றவைகளையெல்லாம் கனவிற் கண்ட காட்சியாக எண்ணி அவைகளை மதியாமல் இருப்பாயாக, அப்படியிருந்தால் பிரம விஷ்ணு, ருத்திரர்களால் செய்யப்படும் சிருஷ்டி, திதி, சங்காரங்கள் நம்மிடத்தில் வந்துசேரா. ஆகையால் இதுவே உனக்குநல்ல மருந்தாகும். (எ - று) 43

நாய்க்குண்டு தொண்டு நமக்குண்டுபிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திர பஞ்சாட்சரமதியாமல்வரும்

பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்றபிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன்றன்னருளுக்கங்கணுக்குதற்கே

(பொ - ரை) மனமே! நாய்களுக்கோ தொண்டிருக்கின்றது? நமக்கோ பிச்சை யிருக்கின்றது, வாய்க்கோ எமனை வெல்லுதற்குரிய மந்திர பஞ்சாக்ஷர மிருக்கின்றது, பேய்க்கோ திருநீறு இருக்கின்றது ஜென்மசாகரமான நோய்க்கோ எம்பெருமானுடைய திருவருளுக்கம் இருக்கின்றது, இப்படியிருப்பதினால் நமக்கென்னகுறை. 43

நேமங்கணிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்திர யோகமிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே.

(பொ - ரை) நியமம், நிட்டை, வேதம், ஆகமம், நீதிநெறி, ஓமம், தர்ப்பணம், சந்தியாவந்தனம், செபம், மந்திரம், யோகம், அர்ச்சனை நாமங்கள், சந்தனம், திருநீறு, இவைகளுடன் சாமங்கடோறும் இவர்கள் செய்யும் சிவபூசை பாவனை மாத்திரமே. (எ - று) 44

நானெத்தனைபுத்தி சொன்னாலுங் கேட்டிலைநன்னெஞ்சமே
யேனிப்படிக்கெட் டுழலுகின்றாயினி யேதுமிலா
வானத்தின்மீனுக்கு வன்றூண்டிலிட்ட வகையதுபோற்
போனத்தைமீள நினைக்கின்றனையென்ன புத்தியிதே.

(பொ - ரை) மனமே! நான் எவ்வளவு புத்தி சொன்னாலும் கேட்கின்றாயில்லை. ஏன் இப்படி திரிகின்றனை? ஆகாயத்திலுள்ள மீனுக்கு தூண்டில் போட்ட விதத்தைப் போல போனபொருளை மீட்டும் நினைக்கின்றனை, இது என்ன புத்தி. (எ - று) 45

அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப்
புன்செய்க்களைபறித்தேன் வளர்த்தேன்சிவபோகத்தையே

(போ - ரை) பஞ்சாக்ஷரமென்னுங் கோடரியினால் ஐம்புலன்களாகிய கட்டையை அடியோடு வெட்டிச் சீர்திருத்திச் சதாசிவம் என்கிற விதையைப்போட்டுக் களைகளைந்து சிவபோகமென்னும் பயிரை வளர்த்தேன். (ஆனால்) அப்போகத்தை நான் அநுபவிக்கும் திறம் வருமோ வாராதோ அறியேன். (எ - று) 46

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ளீயாருநானு ரெனப்பகர்வாரந்த நேரத்திலே
நோயாரும்வந்து குடிகொள்வரேகொண்ட நோயுமொரு
பாயாருநீயுமல்லாற் பின்னையேதுநட் பாமுடலே.

(போ - ரை) ஓ தேகமே! தாய், சுற்றத்தார், மனைவி இவர்கள் கைவிட்டு விடுகின்ற நாளில், நீயார் நான் ஆர், என்று சொல்லிக் கொள்ளுவார்கள் அந்தச்சமயத்தில் மரணநோயானது வந்து குடிகொள்ளும், அக்காலத்தில் அந்தநோயும், ஒருபாயும், நீயுமேயல்லாமல் ஒரு சிநேகர்கள் ஒருவருமில்லை. ஆகையால் சிவபெருமான் திருவடிகளை சதா துதி செய்வாய். (எ - று) 47

ஆயும்பொழுது மயிர்க்கால்கடோறு மருங்கிருமி
தோயுமலக்குட்டை யாகியகாயத்தைச் சுட்டுவிட்டாற்
பேயுநட்ன மிடுங்கடமா மென்று பேசுவதை
நீயுமறிந்திலையோ பொருட்டே நினைந்தனையே.

(போ - ரை.) விசாரிக்குங் காலத்தில் மயிர்க்கால்களின் வழியெல்லாம் கிருமிகள் நிறைந்திருக்கும் மலக்

குட்டையாகிய இந்தத்தேகத்தைச் சுட்டபிறகு பேய்கள் கூடி நடிக்கின்ற இடமாகுமென்று உலகத்தார் பேசுவதை ஓ மனமே! நீயறிந்திலைபோலும். ஏனெனில், இன்னும் பொருள்தேட நினைந்தாயாகையால் (எ - று) 48

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே

(போ - ரை) நான் படுகின்ற துன்பம் அணியும் ஆபரணம், பொன் பூமி, மங்கையர், காட்சி, சிவன் திருவடி இவைகளுக்கெல்லாம் என்னுடைய வயிறு வளர்க்கும் நிமித்தமேயாம் (எ - று) 49

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறைபாததீர்த்த மினிமுடிந்து
கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே.

(போ - ரை) என்னுடைய குருசுவாமி உபதேசித்த மொழியானது வெட்டாத சக்கரமும், பேசப்படாத மந்திரமும், வேறெவர்களாலும் எட்டப்படாத புஷ்பமும், இறைக்கப்படாத தீர்த்தமும், முடிபோட்டு கட்டி வைக்காத லிங்கமும் நினைக்காத மனமும் நினைப்பினுள் தட்டுப்படாத பூசையுமல்லவோ? (எ - று)

ஆனல், அந்தப்பூசையை செய்வதற்குப் பாத்திரனுவது என்றோ? என்பது கருத்து. 50

எருமுட்டைபிட்கி னுதிர்ந்திடுஞ் செல்லுக் தெவரமுவார்
கருமுட்டைபுக்குக் கழலகன்றீர்கன துக்கமதாய்ப்

பெருமுட்டுப்பட்டவர் போலழும்பேதையிர் பேத்துகிறீ
ரொருமுட்டும்வீட்டு மரணமமென்றைக்கு போதுமினே.

(பொ - ரை) உலகத்தவர்களே! எருமுட்டையைப் பிட்டால் உதிருகின்ற செல்லுகளுக்காக அழுகின்றவர்கள் ஒருவருமில்லை. ஜெனனத்தில் புகுந்து அவன் திருவடியை நீங்கினீர்கள் மிகுந்ததுக்கமுடன் குற்றத்தை யடைந்தவர்கள்போல் அழுகின்ற அறிவிலிகாள்! பிதத்துகிறீர் எப்படிப்பட்ட துன்பத்தையும் நீக்குகின்ற சிவபெருமானுடைய திருப்பெயர்களை சதா துதி செய்யுங்கள். (எ - று)

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ்செந்தீ
யையாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செலவெட்டவெறும்
பொய்யாய்பழங்கதையாய்க்கனவாய்மெல்லப்போனதுவே

(பொ - ரை) செவந்த திருமேனியையுடைய தலைவனே! மனைவியும், பிள்ளைகளும், வாழ்வும், வீடும், உன்னுடைய மாயாசத்தியின் உருவெளித் தோற்றமேயாகும், ஆனால், அவை, உலகத்தில் மெய்யென்று சொல்லும்படியிருந்து நாளேற நாளேற பொய்யாகிக் கனவிற் கண்ட காட்சிபோலாயின. (எ - று) 52

ஆயாய்பலகலை யாய்ந்திடுந்தூய வருந்தவர்பாற்
போயாகிலுமுண்மை யைத்தெரிந்தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின் றனைமனமேபென்ன பித்தனக்கே.

(பொ - ரை) மனமே! பலநூல்களையும் ஆராய்ச்சி செய்யமாட்டாய். அங்ஙனம் ஆராய்ச்சி செய்தவரிடத்தில் போயாகிலும் உண்மைநிலையை உணர்ந்து கொள்ளமாட்டாய், உலகத்தில் பெண்கள் மாயையில் சிக்கியழுகின்றனை

அநனால் பேய்போலவும் விழிக்கின்றனை இப்படிப் பட்ட டயித்தியம் உன்னைப் பிடிப்பதற்குக் காரணம் என்னை.

அடியாருறவுமரன் பூசைநேசமு மன்புமன்றிப்
படிமீதில்வேறு பயனுளதோ பங் கயன்வகுத்த
குடியானசுற்றமுந் தாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்திலரே.

(போ - ரை) பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட சுற்றத்தாரும், மனைவியும், வாழ்வும், குயவனால் செய்யப்பட்ட பாத்திரங்கள் தடியினால் அடிப்பட்டவைபோலாகும், ஆகையால், உலகத்தின்கண், அடியார்கள் நட்பும், சிவபூசையும் பக்தியும், அல்லாமல் வேறு பிரயோசனம் இருக்கின்றதா; இல்லை, (எ - று) 54

ஆங்காரப்பொக்கிஷங் கோபக்களஞ்சிய மாணவத்தா
னீங்காவரண்மனை பொய்வைத்த கூடம்விண் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவிலாசமித் தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம் பலிப்பதுவே.

(போ - ரை) ஆங்காரப் பொக்கிஷமாகவும், கோபக்களஞ்சியமாகவும், ஆணவம் நீங்காத அரண்மனையாகவும், பொய்யை நிறைத்துவைத்த கூடமாகவும் காமவிலாசமாகவுமுள்ள இத்தேகமானது கந்தலாகையால், நான் அத்தேகத்திலிருந்து உன்னைப்பணிந்து ஞானம் பலிக்கப்பெறுவது எப்படி. (எ - று) 55

ஒழியாப்பிறவி யெடுத்தேங்கியேங்கி யுழன்றநெஞ்சே
வழியாப்பதவிக்கவுட தங்கேட்டிய ஞதியனை
மழுமான்கரத்தனை மால்விடையானை மனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்தி விம்மியழுநன்மை வேண்டுமென்றே.

(பொ - ரை) நீங்காத ஜென்மத்தை யெடுத்து எங்கித் திரிகின்றமனமே: அழியாத பதவியை யடைவதற் கொரு மருந்துகேள். அது என்னவென்றால் அநாதியாயுள்ள வனை, மழு, மான், தரித்தவனை பெரிய ரிஷபவாகனனை மனத்தில் தியானித்து கண்களில் ஆநந்த பாஷ்பம் பொழிந்து விம்மி, நன்மை வேண்டுமென்று அழுவாயாக.

நாய்க்கொரு சூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொரு ஞானம் பிடிபடுமோபெருங் காஞ்சிரங்கா
யாக்குவரார தருந்துவரா ரதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச் செப்புமினே.

(பொ - ரை) உலகத்தவர்களே; நாயினுக்கு ஒருகர்ப்பமும், அதற்குத்தக்கமருத்தவமும் இருக்கின்றதா? பேய்க்கு ஞானம்பிடிக்குமோ எட்டிக்காயை ஆக்குபவர்கள் யார்: அதைத் தின்பவர்கள்யார்? அதுபோல இந்த உடம்பானது அக்கினிக்கு இரையாய் விடுவதல்லாமல் வேறு எதற்கு உதவுகின்றது. இதைச்சொல்லுங்கள். (எ - று)

கச்சிற்கிடக்குங் கனதனத்திற் சடைக்கண்கள் பட்டே
யிச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சே யிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடி யுண்ணாமுலைபங்கர் பாதத்திலே
தைச்சுக்கிடமனமே யொருகாலுந் தவறில்லையே.

(பொ - ரை) கச்சிட்டுக் கட்டியிருக்கின்ற முலைகளைப் பார்த்து ஆசைப்பட்டிருக்கின்ற மனமே: (அதை விட்டு) பார்வதாதேவியை இடது பாகத்தில் வைத்திருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளில் பொருந்தியிருப்பாயானால் உனக்கு ஒன்றும் கெடுதியில்லை (எ - று) 58

மானார்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங்
கோனுகியென்னைக் குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை

போனலும் பேறிருந் தாலுதற்பேறிது பொய்யன்றுகா
ணுனலுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே.

(போ - ரை) பெண்கள் மாய்கையை விட்டு நீங்கி வந்தேன், குருவும் என்னை ஆண்டுகொண்டருளினன், ஒரு தப்புமில்லை, இவையெல்லாம் மெய்யே பொய்யல்ல, எப்படியிருந்தாலும் இந்த உடம்போடு கூடியிருப்பது மாத்திரம் அவருக்குத் தக்கதேயாம். (எ - று) 59

சற்றுகிலுந்தனைத் தானறியாய்தன்னை யாய்ந்தவரை
யுற்றுகிலுமுரைக்கப்பொருந்தாயுனக் கானநிலை
பற்றுய்குளுவைப்பணியாய்பரத்தைதயர் பாலிற்சென்றேன்
பெற்றுய்மடநெஞ்சமே யுனைப்போலில்லை பித்தனுமே.

(போ - ரை) கொஞ்சமானலும் தன்னைத்தானறிய மாட்டாய் அப்படி யறிந்தவர்களையும் சேர்ந்து அவர்களிடத்தில் ஒன்றும் தெரிந்து கொள்ளமாட்டாய். நீ யடைய வேண்டிய உண்மைநிலையைப் பிடிக்க மாட்டாய். உன்னுடைய ஆசாரிய சாமியை நமஸ்காரஞ் செய்யமாட்டாய் பெண்களிடத்தில் போய் என்னசுகத்தை யடைந்தாய் ஒன்று மில்லை. ஆகையால் மனமே! பயித்தியர்களும் உன்னைப்போ லிருக்க மாட்டார்கள். (எ - று) 60

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தை யறப், புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே, யொளியிட்டதாளிரண் டுள்ளேயிருந்துவ துண்மையென்று, வெளியிட்டடைத்துவைத்தே னினிமேலொன்றும் வேண்டிலனே.

(போ - ரை), (இதுகாறும் நான் துதித்துவந்த) சிலா ரூபத்தையும் சாந்தையும், சேப்புச்சிலையையும், நான் இனி துதிசெய்யேன். (எனென்றல்) (என்னுடைய குருசுவாமி

உபதேசித்த) தேஜோமயமாகிய இரண்டு திருவடிகளையும் மனத்தினுள்ளே வைப்பதுவே உண்மையாமென்றுவெளிப் படுத்தி அவற்றை அடைத்து வைத்தேன் ஆகையால் நான் ஒன்றையும் விரும்பமாட்டேன். (எ - று)

என்னுடைய வியவகாரதிசையில் துதித்து வந்தேன் இப்பொழுது குரு உபதேசத்தால் ஞானங்கள்கூடவே இனிச்செய்யேன் என்பது கருத்து.

61

கல்லாலெறியுண்டுங் காலாலுதையுண்டுங் காளைகையில்
வில்லாலடியுண்டு முன்னாள்விடமுண்டு மேலளித்துப்
பல்லாற்புரமெரி யேகம்பவாணர் பதாம்புயத்தின்
சொல்லார்செவியினிற் கேளாதிருந்தென் றொல்வினையே.

(பொ - ரை) ஒருவன் கல்லாலெறிந்ததையும், ஒருவன் காலால் உதைத்ததையும், ஒருவன் வில்லால் அடித்ததையும் ஏற்றுக்கொண்டு, பூர்வத்தில் திருப்பாற்கடலிற் றோன்றிய ஆலகாலவிஷத்தைப்புசித்துத் திரிபுரத்தையும் எரித்தருளிய ஏகாம்பரக்கடவுளுடைய திருவடித்தாமரைகளை நமஸ்காரஞ்செய்யும்போது துதிசெய்யும் சொற்கள் செவியிற் கேளாததற்குக் காரணம் பூர்வவினையேயாகும்.

ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்குந்
திருநாளுந்தீர்த்தமும் வேறுளதோவத் திசைமுகனால்
வருநாளில்வந்திடு மந்தக்கண்ணாளன் வகுப்பொழியக்
குருநாதனிணைகண்டோர் பின்னையேதிக் குவலயத்தே.

(பொ - ரை) நான்குவகைச் சாதியாருக்கும், தேவர்களுக்கும் திருவிழாவும் தீர்த்தாமாடுதலும் வேறுமோ இல்லை ஏனென்றால், பிரமனால் வகுத்த நாளில் வருவது வரும் அவனால் தீர்மானித்த வகுப்பொழிந்தால் நம்முடைய குருசுவாமியால் வருவது வரும், இவ்விரண்டுந் தவிர இவ்வுலகத்தில் வேறு என்ன இருக்கின்றது. (எ-று)

## விருத்தம்.

பாரோநீரோ தீயோ வளியோ படர்வானோ
ஆரோநானென் றாய்வுறுகின்றே னறிவில்லேன்
பாரோநீரோ தீயோவளியோ படர்வானோ
ஆரோநானென் றாய்வுறுகின்ற வதுநீயே.

(பொ - ரை) அறிவில்லாதவனாகிய நான், பூமியோ? அப்போ! தேயுவோ; வாயுவோ! ஆகாயமோ? என்று ஆராய்கின்றேன், அப்படியாராய்கின்ற அதுவே நீயாயிருக்கின்றாய் (எ - று)

அங்ஙனம் எல்லாவற்றிலும் கலந்திருப்பது போலிருந்து என்னையும் அடிமைகொள்ள வேண்டும் என்பது குறிப்பு. (எ - று.) 64

நாப்பிளக்கப்பொய்யுரைத்து நன்னிதியந்தேடி
நலமொன்றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவருமேழைப் புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தோல் மரத்திலையிற் காலுழைத்துக்கொ
ஆப்பதனையசைத்துவிட்டகுரங்கதனைப்போல(ண்டீர்
வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே.

(பொ - ரை) பலவகையான பொய்வார்த்தைகளைப் பேசிச் செல்வத்தைச் சம்பாதித்துப் பெண்களைக்கூடிப் புற்றிலிருந்து வெளிப்படும் ஈசல்போலப் பிள்ளைகளைப் பெறுகின்றீர்களேயொழிய, அப்பிள்ளைகளைக் காப்பாற்றவும் வகையறிய மாட்டீர்கள், அவர்களைக் கைவிடவு மாட்டீர்கள். ஒரு மரப்பொந்தில் காலை நுழைத்துக் கொண்டவர்களானீர்கள், அப்பொழுது குரங்கானது வந்து அந்த

ஆப்பை அசைத்து அழுத்தி விட்டதுபோல அகப்பட்டுக் கொண்டீர், அதிலிருந்து வருந்தும்படி அகப்பட்டுக் கொண்டீர், இனியேனும் அவைகளைவிட்டுச் சிவபெருமானைத் துதிசெய்யக்கடவீர். (எ - று) 65

மத்தளை தயிருண்டானு மலர்மிசையவனுந்தேடிப்
பித்தளைகொண்டபோதும் வெளிப்படாப்பிரானேயிங்குச்
செய்த்தலைகூறவந்த சேந்தனைவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே.

(போ - ரை) விஷ்ணுவும், பிரமனும் தேடிக்காணுமல் மயங்கிநின்ற போதும் வெளிவராத பெருமானே. திருவெண்காட்டில் எழுந்தருளியிருக்கும் தலைவனே? சேந்தனுக்கு அரசன் இட்டுள்ள கைவிலங்கை நீக்கி அவனை எனக்கு முன்னே கொண்டு வந்து காட்டவேண்டும். ()

---

## தாயாருக்குத்

## தகநகிரியை செய்கையிற் பாடிய

## வெண்பா.

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புரத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

(போ - ரை) பத்துமாதமாகத் (தன்னுடைய) உடல் முழுதும் நோக்காடோடு (சுமந்திருந்து பத்தாமாதத்தில் என்னைப்பெற்று (அங்குள்ளவர்) ஆண்பிள்ளை யென்று சொன்னபோதே (முன்னிருந்தநோக்காடு நீங்கி) ஆசையோடு எடுத்து இரண்டு கைகளையும் முதுகில் வைத்துத்

தாங்கிக் கனகம்போன்றமுலைப்பால் கொடுத்து (என்னைக் காப்பாற்றிவிட்ட) தாயாரை, நான் இனிமேல் எந்தப் பிறப்பில் பார்ப்பேனோ? (எ - று) 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
வெரியத் தழன் மூட்டுவேன்.

(போ - ரை) முன்னர் கர்ப்பத்தை வேண்டித் தவஞ் செய்து அந்தத் தவங்காரணமாகக் கர்ப்பந்தங்க (அது தங்கிய) முந்நூறுநாட்களாகிய பத்துமாதம் வரைக்கும் சுமந்து, இரவும் பகலும் எந்நேரமும் சிவபெருமானை த துதிசெய்து, வயிறு சரியும்படி தாங்கிக் கொண்டிருந்து (அந்த நாட்கள் பூர்த்தியான பிறகு என்னைப்பெற்ற தாயாருக்கோ நான் எரியும்படி தீமூட்டுவேன்.

அருமையான தவங்களைச்செய்து முந்நூறு நாட்கள் கஷ்டப்பட்டு பெற்ற தாயாருக்கோ இப்பொழுது தீமூட்டும்படி ஆயிற்றே என்பது கருத்து. 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

(போ - ரை) சிறிய படுக்கையிலும், தொட்டிலிலும் மார்பின்மேலும், தோளின்மேலும், கட்டிலிலும், என்னைத்தூங்கப்பண்ணி என் மேல் ஆசையோடு காவலாக வைத்திருந்து பாதுகாத்துச் சிறப்புப் பாராட்டின தாயாருக்கோ? நான் விறகு வைத்துத் தீமூட்டுவேன்.

என்னைப் பலவகையாகச் சிறப்புச் செய்து காப்பாற்றிய தாயாருக்கே விறகிலிட்டுத் தீமூட்டும்படி ஆயிற்றே என்பது கருத்து. 3

நொந்து சுமந்து பெற்று நோவாமலேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலேகொண் டென்னை காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்.

(பொ - ரை) (என்னைப் பெரும்பொழுது) சரீரம் முழுதும் நோக்காடடைந்து சுமந்திருந்து பெற்றவுடன் நோகாதபடி என்னை எடுத்து முலைப்பால் கொடுத்து வளர்த்து, இரவும் பகலும் ஓயாமல் கையிலேயே எடுத்துவைத்திருந்து காப்பாற்றி விட்ட தாயாருக்கோ (அவள்) உடம்பில் தீயை மூட்டுவேன். (எ - று)

என்னைக் காப்பாற்றியே உடம்பிலேயே நான் தீயை மூட்டுவது மிகவும் வருத்தத்தைக் கொடுக்கின்றது என்பது கருத்து. 4

அரிசியோ நானிடுவே னுத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல—னுருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு.

(பொ - ரை) ருசியோடு கூடியதேனே? எனவும், அமிர்தமே? எனவும், மிகுந்த செல்வத்தை யுடைய பூமானே? எனவும், என்னை அழைத்துச்செல்வம் பாராட்டின என்னுடைய தாயினுடைய வாய்க்கு வரிசை செய்து பார்த்து (அதனால்) சந்தோஷத்தை யடையாமல் என்னால் இடப்படுவது அரிசி தானோ?

என்னைப் பலவகைப்பட்ட உபசார வார்த்தைகளால் அழைத்து முத்தமிட்ட வாய்க்கே அரிசியிடும்படி ஆயிற்றே என்பது கருத்து. (எ-று) 5

அள்ளியிடுவ தரிசியோ தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் — மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு

(பொ - ரை) என்னுடைய முகத்தின்மேல் தன்னுடைய முகத்தை மெதுவாக வைத்து முத்தமிட்டு, என் மகனே! என்று அழைத்த வாய்க்கு, நான் அள்ளிவைப்பது அரிசி தானோ (அல்லாமல்) தாயார் தலையின்மேல் (கொஞ்சமும்) கூசுதலில்லாமல் கொள்ளியை வைப்பேனோ (எ - று) 6

## விருத்தம்.

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையி
லன்னையிட்ட தீ யடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்கமூள்கவே.

(பொ - ரை) (சிவபெருமானால்) பூர்வத்தில் இடப்பட்ட நெருப்பு முப்புரத்திலாகும்! அதன் பிறகு அனுமானால் இடப்பட்ட நெருப்பு இலங்கையிலாகும். என் தாயார் எனக்கிட்ட நெருப்பு அடிவயிற்றிலாகும். (ஆகையால் மேலே சொன்ன இரண்டிலும் தீமூண்டெரிந்தது போல) இறந்து போன என் தாயாருக்கு என்னால் வைக்கப்பட்ட நெருப்பும் மூண்டெரியக் கடவது. (எ - று.) 7



பட்டினத்தார் தாயாரின் தகனகிரியைகளை முடித்தல்.

## வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியேனையகோ—வாகக்
குருவிபறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

(பொ - ரை) பக்ஷிதோஷம் வராதபடி காக்கு நிமித்தம் ஆகாயத்தில் குருவிமுதலிய பக்ஷிகள்பறவாதபடி அவைகளை ஒட்டி, என்னைச் சீராட்டிக் காப்பாற்றி எடுத்துப்பாராட்டும் கைகளானவை, (என்னால் வைக்கப்பட்ட கொள்ளித்) தீயில் வேகின்றனவே; அப்படி வெந்து சாம்பற்றாள் ஆகின்றனவே! ஐயோ! பாவியாகிய நான்பிறந்தது என் தாய்க்குக் கொள்ளிவைத்துக் கொளுத்துவதற்குத்தானோ? (எ - று.) 8

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ—சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்.

(பொ-ரை) திருவண்ணாமலையில் எழுந்தருயிருக்கின்ற நிர்மலனே! எக்காலத்திலும் உன்னுடைய திருவடிகளையே விரும்பித் தவஞ் செய்திருந்து என்னைப்பெற்றெடுத்த தாயானவள் வெந்துபோய்விட்டாளோ' (அல்லது) உன்னுடைய திருவடியில் வந்துசேர்ந்தாளோ! (குமாரனாகிய) என்னைமறந்தாளோ! ஒன்றுந்தெரியவில்லையே. (எ-று)

வீற்றிருந்தாளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்து நீறானாள்—பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென்றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம்.

(போ - ரை) என்னுடைய தாயானவள் சயனித்திருந்தாள்? (சற்றுச்சென்று பார்த்தபோது) தெருவில் நின்று கொண்டிருந்தாள்! இப்படியாக நேற்றையதினமெல்லாம் இருந்தாள் இன்றைய தினத்தில் வெந்து சாம்பலானாள். (ஆகையால்) பால்தெளிப்பதற்காக ஊரிலுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் நேற்று இருந்தாளே இன்றைக்குநீறானாள் என்று சொல்லுகின்றானே என்று விசனப்படாமல் வாருங்கள் (ஏனென்றால்) இவைகளெல்லாம் சிவன்செயலேயாகையால். (எ - று)

எல்லாஞ் சிவன்செயல் என்பதை?

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்"

என்று ஔவையார் சொல்லி யிருப்பதினா லறிக. 10

வெளிப்பட்டபின் பாடியது

---

## திருவிடைமதூர்.

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

(போ - ரை) என்னுடைய தலைவனே? நன்மையை நினையாதவராகிய திரிபுர வாசிகளின் முப்புரத்தையும் நெற்றிக்கண் நெருப்பால் எரித்த மருதப்பிரான் என்னும்

திருப்பெயரையுடையவனே? உன்னுடைய கோவிலுக்கு வந்து யாதாயினும் ஒருபொருளை மென்றுதின்று விடாய் கழிக்கும் பொருட்டுச்சலம் தேடுதலாகிய தொழில் எனக் கெனக்கென்று ஒழியும். (எ - று) 1

சிற்றம்பலமுஞ் சிவனுமருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண்.

(போ - ரை) சிதாகாசமும் (அதில் நடனஞ்செய்யும்) சிவபெருமானுஞ் சமீபத்திலிருக்கநாம் வெறும் வெளியைத் தேடினேம். (அல்லாமலும்) தினமும் என்னுடைய அறிவில்லாத மனமானது நான்பிறந்த இடத்தையே தேடுகின்றதே. என் கண்ணனது எனக்குப் பால் கறந்த இடத்தை விரும்புகின்றதே இது என்னமாய்கையோ அறியேன்.

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேரியிரு—நாடிநீ
யென்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனு
னுன்னை நினைந்தா லுதை.

(போ - ரை) இதழ்கள் மலர்ந்த புஷ்பமாலையைத் தரித்த ஒ பெண்ணே நீ என்னை விரும்பி நினைப்பாயானல் உன்னுடைய இடுப்பின்மேல் உதைப்பேன். நானும்உன்னை நினைத்தால் நீ என்னை உதை. ஏனென்றல், உன்னை இப்பொழுதுதேடி அலைந்தவர் போய்விட்டார் ஆகையால், இதை நீ நன்றாய்த் தெரிந்துகொண்டு இருப்பாய். (எ-று)

வாசற்படிகடந்து வாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்

பட்டிறந்த காலமெல்லாம் போதும்பரமேட்டி
சட்டிறந்த ஞானத்தைச் சொல்.

(போ - ரை) பெருமையிற் சிறந்த எம்பெருமானே! நான்வாசற்படியைத் தாண்டிக் கொண்டுவந்து இடாதபிச்சைக்கு இப்பொழுது ஆசைப்படுவதில்லை (அப்படி) அந்த பிச்சைக்கு ஆசைப்பட்டிருந்து கழிந்த காலமெல்லாம் போதும் இனி, பரமபுருஷனுகிய நீயே (இப்படிப்பட்டதென்று) குறித்துச் சொல்லப்படாதஞானோபதேசத்தை அறிவுறுத் தருளுவாய். (எ - று) 4

## திருவொற்றியூர்.

கண்டங்கரியாதங் கண்மூன் றுடையதா
மண்டலத்தைப்போலே வழகியதாங்—தொண்ட
ருடலுருகத்தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

(போ - ரை.) மிகுந்த சிறப்பினையுடைய திருவொற்றியூரின்கண் சமுத்திரத்தின் சமீபமாக யிருக்கும் ஒரு கரும்பானது கண்டங்கறுப்பானதாம்! கண்கள் மூன்றுடையதாம், ஆகாயத்தைப்போல் அழகினையுடையதாம் அடியார்களுடைய உடம்பானது உருகும்படி தித்திப்பதாம். (அப்படிப்பட்ட கரும்பை நான் இப்பொழுது தான் அடைந்தேன் என்பது குறிப்பு.)

கண்டங்கரியதாம் என்பது நீலகண்டத்தை யுடைமையை. கண் மூன்றுடையதாம் என்பது சோம, சூரிய, அக்கினி என்னும் மூவரையும் மூன்றுகண்களாக உடைமையை இது எந்தக்கரும்பு என்றால் சிவமென்னும் கரும்பு.

ஒடுவிழுந்துசிப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தையானறிந்து கொண்டேன்—கடுவருந்து

தேவாதிதேவன் றிருவொற்றி யூர்தெருவிற்
போவாரடியிற் பொடி.

(பொ - ரை) துவாரம் விழுந்து சீழ்வெளிப்படுகின்ற ஒன்பது துவாரத்தையுடைய தேகம் நீங்கும் பொருட்டாக அதற்கு இடப்படும்மருந்தை நான் றெரிந்துகொண்டேன். (அந்த மருந்து எது வென்றால்) ஆலகாலவிஷத்தை அமிர்தமாகச் சாப்பிட்ட தேவர்களுக்குந்தேவனாகிய சுவாமி எழுந்தருளியிருக்கும் திருவொற்றியூரில் தெருவிற் போகின்றவர்களுடைய கால்களினிடமாக இருந்து பறக்கின்ற தூசுகளாம் (எ - று) 6

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர்—பூவுலகி
லீதுசிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதும் திருவொற்றி யூர்.

(பொ - ரை) இந்த உலகத்தின்கண் இதுவே சிவலோகமாகுமென்று பெரியோர்களெல்லாம் எக்காலத்திலும் இடைவிடாமல் சொல்லுகின்ற திருவொற்றியூரில், கிணறு- குளங்களெல்லாம் புண்ணியதீர்த்தமாம் அங்குள்ள மணல்களெல்லாம் திருவெண்ணீராம் சோலைகளெல்லாம் கணநாதக் கூட்டங்களாம். (ஆகையால் அப்படிப்பட்ட சிவலோகத்தை நான் இப்பொழுதே அடைந்தேன் என்பது குறிப்பு.) (எ - று)

நச்சரவம் பூண்டானை நன்றாய்த்தொழுவதுவு
மிச்சையிலே தானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்து திரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

(போ - ரை) விஷத்தையுடைய பாம்புகளை ஆபரணமாகத் தரித்தவனை, (வேதாகமங்களிற் சொல்லியபடி) பூசிப்பதும், சிவசுதந்தரமாகஇருப்பதுவும், பிச்சையெடுத்துத் தின்பதுவும், பிறகுவந்து, திருக்கோயிலின் வாசற்படியில் தூங்குவதுவுமே சுகமாம். (எ - று)

ஆகையால் இந்தச் சுகத்திற்கு உலகத்திலுள்ளவர்களே நீங்களும் வாருங்கள் என்பது இரக்கவிளி (எ-று.)

இருக்குமிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்றேக
மிளைத்தாலும் போகே னினி.

(போ - ரை) கடவுளே! நான் இருக்கின்ற இடத்தைத் தேடிக்கொண்டு வந்து என்னுடைய பசிக்கு மிகுந்த பிரியத்துடனே சாப்பாடு கொண்டு வந்தாலே உண்பேன். (அப்படிக்கல்லாமல்) அவர்கள் என்னையே தங்களிடத்திற்கு வரும்படி எவ்வித உபசாரத்தால் அழைத்தாலும் நான்போகமாட்டேன். அப்படி உணவெடுக்காமையினால் என்னுடைய தேகமானது இளைத்துப்போய் விட்டாலும் நான்போகமாட்டேன். (எ - று) 9

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னேனதுவே சுகம்.

(போ - ரை) இந்தத்தேகத்தை உயிரானது விட்டுவிடப் போகிறது, அப்படி விட்டவுடனே (அவ்வுயிர் இறந்துபோய்விட்ட) உடம்பைச் சாதியார்களெல்லாங் கூடி (கூக்குறலிட்டு) சுட்டுவிடப் போகிறார் (இப்படி

மானிடப்பிறப்பாகத் தாய் வயற்றிற்பிறந்தும் ஒருபிரயோசனத்தையும்) அடையாமல் வீணாகப்போய் விடுவதற்குப் பிறந்தென்ன பலன், ஆகையால் உலகத்தவர்களே; நீங்கள் எவ்வளவு கஷ்டத்தை அநுபவித்தாலும், எப்பொழுதும் இடைவிடாமல் சிவபெருமானை அவனது புகழைச் சொல்லித் துதிசெய்யுங்கள் அவனை வாழ்த்துங்கள் இப்படி நீங்கள் செய்வதே சுகநிலையாகும், நான் சொல்லி விட்டேன் (எ - று) 10

ஆவியொடுகாய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

(போ - ரை.) பேதைமனமே! உலகத்தின்கண் உயிரும் உடம்பும் அழிந்தாலும் பாவியென்கிற பேர்மாத்திரம் எடுக்கவேண்டாம், அல்லாமலும், பொருந்திய சிறப்பினையுடைய விஸ்தாரமும், பெருமையும் வேண்டியதில்லை, வேறு எப்படியிருக்க வேண்டுமென்று கேட்பாயானால், செத்தவர்களைப்போலத் திரிந்துகொண்டு இருக்கக்கடவாய்.

## திருவாரூர்.

ஆரூ ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றாரூர்கடோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடுவீர்

(போ - ரை) நேராக மனத்தின்கண் உள்ள குறிப்பைத் தேடிப்பிடிக்காத ஊமைகளே! நீங்கள் திருவாரூரில் எழுந்தருளி யிருக்கும் வீதி விடங்கதபெருமான் இவ்

விடத்திலிருக்கவும்; (இவ்விடத்தில் அவனை அறிந்துகொள்ளாமல்) அந்தத் திருவாரூரில் திருவிழா நடக்கிறதென்று அந்த ஊர்முதல் பலவூர்களுக்கும் போய்த்திரிவீர்கள் ஆகையால் நீங்கள் விளக்கு இருக்கவும் நெருப்புத் தேடுகின்றவர்களுக்கு ஒப்பாவீர் (எ - று)

விளக்கிருக்கத் தீத்தேடுவீர் என்றது ஞானக்கண் இல்லை என்பதை விளக்குதற் பொருட்டேயாம் (எ-று)

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்க
ளெத்தனைபே ரிட்டழைக்க வேனென்றே—னித்த
மெனக்குக் களையாற்று யேகம்பா கம்பா
வுனக்குத் திருவிளை யாட்டோ.

(போ - ரை) (நான் முன்னே) ஜென்மங்கள் எடுத்த போது பிறந்தது எத்தனையூரோ? எத்தனைவீடோ? என்னைப் பெற்றவர்கள் எத்தனை தாய்மார்களோ: அந்தத்தாய்மார்களெல்லாம் என்னை எத்தனை ,எத்தனையோ பேர்கள் வைத்துக் கூப்பிடவும் அத்தனைக்கும் ஏன்? ஏன்? என்றேன். ஆகையால் காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! அப்படி அந்தச் சென்மங்களால் எனக்கு உண்டான இளைப்பை மாற்றுமல் இருக்கின்றனையே, இது உனக்கு ஒரு திருவிளையாட்டோ? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. (எ - று)

எனக்குக் களையாற்றாய் என்றது என்னுடைய ஜென்மத்தை நீக்கியாட்கொள்ள வேண்டும் என்பதாம். அப்படியாட்கொண்டால் என்னுடைய களைநீங்கிப் போய்விடும். (எ - று)



மண்ணுந் தணலாற வானும் புகையாற
வெண்ணரிய தாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்

கையாறவு மடியேன் காலாறவுங் கண்பா
ரையா திருவை யாறு.

(பொ - ரை) என் தந்தையே! திருவையாறு என்னும் க்ஷேத்திரத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பவனே! பிருதிவி பூதமானது (தன்னுடைய) அனல் அடங்கும்படியாகவும், ஆகாயபூதமானது புகையடங்கும் படியாகவும். (என்னைச் சநநங்கள் தோறும் பெற்றெடுத்த அநேக தாய்மார்கள் இளைப்பாறும்படியாகவும், (முன் சொன்ன பிருதிவியாலும் ஆகாயத்தாலும்) சிருஷ்டிசெய்யும் பிரமனுடைய கையாறும்படியாகவும் அடியேனாகிய என்னுடைய கால்கள் ஆறும் படியாகவும் திருநோக்கம் வைத்தருள்வாய். (எ - று)

இப்படியெல்லாம் சொன்னதினால் எனக்கு இதுவரைக்கும் வந்த ஜென்மங்களை நீக்கி என்னை நின்னடிக்கன்பனாக்கிக் கொள்ள வேண்டும் என்பதாம். 14

---

## பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பை நம்பி இருப்பையோ நெஞ்சமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச்—சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச் செத்துக் கொட்டக் கண்டு

(பொ - ரை) (எப்பொழுதும் என்னைக் கெடுத்துக் கொண்டே யிருக்கிற) மனமே! (ஒருவனுக்கு) மிகுந்த செல்வமும், வாசலோடு கூடிய வீடும் (இன்னும் பெண்டு பிள்ளை முதலாகச்சொல்லப்பட்ட எல்லாம்) இருக்கவும், (அவன் நித்திரையிற்கண்ட) சொர்ப்பனம்போல விக்கலெடுத்துப் பற்கள் கிட்டிக்கொண்டும், கண்கள் பஞ்சு

டைந்து சலத்தையும், கோழையையும் கக்கியும் சாக, (அவனுக்குப் பலவகையான வாத்தியங்கள்) அடிப்பதைப் பார்த்தும், (இப்படிப்பட்ட) இந்தச் சென்மத்தை (நிலையுள்ளதென்று) நம்பி யிருப்பார்களோ: பெரியோர் நம்ப மாட்டார். (எ - று)

ஆகையால் நீயும் இவ்வுலக வாழ்க்கையை விரும்ப வேண்டாம் என்பது கருத்து.

இப்பாட்டு மனத்திற்கு அறிவு புத்திசொல்லுதல்.

மேலுமிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக் [வுடல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப்பட்ட
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு

(பொ - ரை) மனமே; கால்களுக்கும் கைகளுக்கும் மெத்தைபோட்டுச் சுகத்திற்காக மற்றவர்களால் காலந்தோறும் குத்தப்பட்ட இந்த உடம்பை, (உயிர்போனபோது சுற்றத்தார்களெல்லாங்கூடி) கட்டை (வறட்டி) முதலியவைகளைப் போட்டுத் தீமூட்டிச் சுட்டு விடுவதைப் பார்த்தும், இன்னும் இவ்வுலக வாழ்க்கையையே விரும்பினையே யொழிய வெள்ளிய இருஷபவாகனருடைான சிவபெருமானுடைய காருணியத்தை உணர்ந்து அவனைச் சேர்ந்தாயில்லை. (எ - று)

இனியாயினும் இவ்வுலக வாழ்க்கையை விட்டுச் சிவபெருமானுடைய திருவடிக்குப் பாத்திரனுவாய் என்பது கருத்து

16

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க

டத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட்டிப் புட்டுக்
கத்திக் குத்தித் தின்னக்கண்டு.

(பொ - ரை) மனமே; இந்த வுடம்பை வலிமையை யுடைய கழுகுப் பக்ஷிகள் (ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு) கூக்குரலிட்டு குத்திக் குத்திப் பிட்டுத் தின்ன அதனைப் பார்த்திருந்தும் (அந்த ஒன்பது தொளையோடு கூடியதோற்பையாகிய உடம்பைப்) பாதுகாக்கு நிமித்தமே அதனிடத்தில் அன்புவைத்து ஒரு நாளைப் போல அலைந்து திரிந்தாயே; இதற்குத்தானோ நீ இவ்வுலகத்தில் பிறந்தது? (எ - று)

இந்தக்கழுகு ஒன்றுதானோ இந்த உடம்பைப் பிடுங்கித் தின்னுகின்றது வேறுநாய், நரி, பேய், நமன், நோய் இவைகளும் பிடுங்கித் தின்னுகின்றன என்பதைத் தெரிவிப்பதற்காகக் கழுகை மாத்திரம் சொன்னார்.

நாய் நரிகளும் இந்தத்தேகத்தை விரும்புகின்றன என்பதற்குத் திருஷ்டாந்தம்;

"நாய்நமதென நமதெனப்பிதா
தாயநம தெனநமன் தனதெனப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும்பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கையாரதே"

என்று பரஞ்சோதிமுனிவர் சொல்லியிருப்பதாலறிக. 17

இன்னம்பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ றென்றிருந்து வாழ்ந்தவரை—முன்ன
மெரிந்தகட்டைமீது லினைக்கோ வணத்தை
யுரிந்துநட்டிப் போட்டது கண்டு.

(பொ - ரை) மனமே! இவர்தாம் அரசர்கள் என்று கண்டோர் சொல்லும்படி (மிகுந்த செல்வத்துடன்) வாழ்ந்திருந்தவர்களையும், முன்னதாக தீமூட்டி எரிந்து கொண்டிருக்கும் கட்டையின்மேல் கோவணத்தையும் வைக்காமல் அவிழ்த்துக்கொண்டு உருட்டிப் போட்டுக் கொளுத்துவதைக் கண்டும், (இவ்வுலகத்தில் இன்னும் ஜென்மமெடுப்பதற்குச் சம்மதிப்பையோ?) (எ - று)

மனமே அரசர்களாக வாழ்ந்திருந்தவர்களும் செத்தார்களே யொழிய பிழைத்தவர்களில்லை ஆகையால் இந்தத்தேகம் இருக்கும் பொழுதே சிவபெருமானை அடையும்படியான தவத்தைச்செய் என்பது கருத்து. 18

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங்—கடைச்சங்க
மாம்போத தூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்.

(பொ - ரை) (நாம் பூமியில் தாய்வயிற்றிலிருந்து பிறந்தவுடன்) முதலில் ஒரு சங்கானது பாலைக்குடிப்பிக்கிறது? நமக்கு (விவாகபருவத்தில்) நடுவில் ஒருசங்கானது மனைவி என்கிற விலங்கைப் பூட்டுகிறது கடைசியில் ஒரு சங்கானது இறந்துபடும்போது ஊதுகின்றது? ஆகையால் நாம் உலகத்தில் பிறந்துவாழ்ந்த லக்ஷணம் அவ்வளவோ: இவ்வளவோ? அதைச் சொல்லக்கூடவில்லை. (எ - று)

நடுவில் ஒருசங்கு என்றது கலியாணஞ்செய்யுங்காலத்தில் மாங்கலியதாரணம் செய்யும்போது ஊதும் சங்கம்.

பொய்யை யொழிபாய் புலாலைவிடாய் காளத்தி
யையரேயென்று யறஞ்செய்யாய்—வெய்ய

சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.

(பொ - ரை) மனமே? நீ பொய் பேசுவதை நீக்க மாட்டாய்? ஒரு உயிரைக்கொன்று தின்னுவதை விட்மாட்டாய்: ஸ்ரீகாளத்தியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் காளத்தி யப்பரே என்று ஒரு காலத்திலும் வாயார வாழ்த்தமாட்டாய்; தருமஞ் செய்யாய், கொடிய கோபத்தை நீக்கமாட்டாய், பஞ்சாக்ஷர தியானமுஞ் செய்யமாட்டாய். ஆகையால் உனக்கு சிவசம்பந்தமான பெருமை என்ன இருக்கிறது, ஒன்றுமில்லை (எ - று.)

ஒரு காலத்திலாயினும் சிவனஞ்செழுத்தைத் தியானஞ்செய்யாத உனக்கு ஞானமார்க்கத்தா லடையும் சிவப்பேறு இல்லை என்பது கருத்து. 20

எருவாய்க் கிருவிரண்மே லேறுண் டிருக்குங்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடும் தாரைக்கா நீ.

(பொ - ரை) மலமானது இறங்கும் வழிக்கு இருவிரற்கடைமேலிருக்கும் கருப்பவழிக்கு நீ வியசனப்பட்டு அந்த நீரிறங்கும் வழிக்காகவே திருவாரூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் தேரானது எப்பொழுதும் போய்க்கொண்டேயிருக்கும் தெருவினிடமாக இறந்து பட்டிருக்கிறாய் (அந்தோ! அந்தக்குழியின் விருப்பத்தால் நன்மார்க்கத்தை யடைய வந்தவுயிரைத் துறந்துவிட்டாயே. இதுவோ உன்னுடைய மானிடப்பிறப்புக்கு அடுத்தசெய்கை.)

பெண்போகத்தை விரும்பிப் பெரும்போகத்தை யடையும் உயிரை நீங்கினையே, ஆகையால் இனி நீ எக் காலத்தில் கடைதேறுவாய் என்பது கருத்து. 21

மாதாவுடல்சலித்தாள் வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கார்.

(பொ - ரை) எனக்குத் தலைவனே; இருப்பையூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற சிவபெருமானே (என்னைச் சென்மந்தோறும் பெற்றெடுத்தமையால்) தாய்மார்கள் சரீரத்தளர்ச்சி யடைந்தார்கள்? தீவினையுடையவனாகி நான் (பிறந்து பிறந்து) கால்தளர்ந்தேன்; பிரமனோ (என்னைச் சிருஷ்டித்து சிருஷ்டித்துக்) கைதளர்ந்தான். ஆகையால் நீ இனி மேலாயினும் வேறொரு தாயின் வயிறாகிய வூரினிடமாக விருந்து பிறவாதபடி என்னைக்காத்து ரக்ஷிக்க வேண்டும். (எ - று)

சிவபெருமானே! நீ தாய் வயிற்றிற் பிறவாதவனாகையால் உன்னை நாடிய என்னையும் அப்படியே தாய் வயிற்றில் பிறவாதபடி காக்க வேண்டும் என்பது கருத்து. 22

அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியென் பாழ்வயிற்றைப் பற்றி
யிசிக்குதையா காரோணரே.

(பொ - ரை) யானை முதல் பிபிலிகாந்தமுள்ள எல்லா உயிர்களையும் மனமகிழ்ந்து காப்பாற்றுகின்ற தேவனே! திருக்காரோகணம் என்கிற க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! எனக்கு மிகவும் பசியாயிருக்

கிறதே (அந்தப் பசியானது) பாவியாகிய என்னுடைய வயிற்றைப் பற்றி யிழுத்து இசிவு என்கிற ரோகத்தை உண்டாக்குகின்றதே. இதற்கு நான் என்ன செய்வேன்.

பிபிலிகம் - எறும்பு. இசிவு என்கிற ரோகம்-ஆநாக ரோகம். 23

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல் பகலற்றிடத்தே
மேலைக் குடியிருப் போமே.

(போ - ரை) அநேக நாட்கள் சம்போகித்து (அதனால்) உண்டான இந்தச் சரீரங்களை யெல்லாம் மண்ணானது தின்று விடுகிற தல்லவோ! ஆம் (ஆகையால் நாம் அப்படி வீணே இறந்துபடாமல்) பிராணதாரமான காற்றை இரேசக, பூரக, கும்பங்களால் வசப்படுத்தி அந்த வாயுவின் மூலமாகவே போய் இராப்பகலற்ற மௌன வீட்டில் சதா குடியிருப்போம். (எ-று) 24

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீ—ரெச்சிறனை
யுய்த்திருத்து பார்த்தா லொருமை வெளிப்படுமின்
சித்த நிராமய மாமே.

(போ - ரை) (வெளியிடத்தில் தீண்டப்படாத ஒரு பொருளை) எச்சில்!! என்று சொல்லி நன்மை தீமைகளைப் பேசுதலை நீக்குக, ஏனென்றால்? எச்சிலான ஒரு பொருள் இருக்கும் வெறு வெளியை நீங்கள் உணரமாட்டீர் ஆகையால் (அப்படி அதை உணர்ந்துகொள்ள வேண்டுமானால்) அந்த எச்சிலிருக்கும் இடத்தை அதிக குறிப்பாக மௌந நிலையிலிருந்துக் கொண்டு பாராமல் பார்த்தால் அதனு

-டைய உண்மை வெளியாகும் அது வெளிப்பட்ட பின் சித்தமானது (அப்பொருளின் மயமான) வெறு வெளியாய் நிற்கும். (எ-று)

உலகத்தில் எச்சில் என்றுசொல்லப்படுகின்ற பொருள்களெல்லாம் எச்சில் அல்ல, பரம்பொருளே எச்சில். ஆகையால் அப்பொருள் உங்களுக்குக்கைகூடும்படி முயற்
சியுங்கள் என்பது கருத்து. 25

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

(பொ - ரை) ஓ மனமே! எமனானவன் வந்து உயிரைக்கொண்டு போவதற்கு முன்னே: கண்கள் பஞ்சடைவதற்கு முன்னே? பாலைக்குடிக்கும்படியான வாயானது திறவாதபடிபோகாமுன்னே! உடம்பின்மேல் சுற்றத்தார்களெல்லாங் கூடி விழுந்து அழுவதற்கு முன்னமே; ஊரார்களெல்லாங்கூடி சுட்டுவிடுவதற்கு முன்னமே? நீ திருக்குற்றாலம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் துதி செய்யக்கடவாய். (எ - று)

மனமே? வீணே இறந்து விட்டால் மறுபடியும் இச்சென்மம் வருமோ? எச்சென்மம் வருமோ? தெரியவில்லை; ஆகையால் உனக்கு எமவாதை வந்தடையாத முன்னமே சிவபெருமானைத் துதிசெய்யக்கடவை என்பது கருத்து.

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்

பொய்யடா பேசும் புவியின் மடமாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்

(பொ - ரை) தினந்தோறும் எத்தனை பேர்களாலே நடப்பட்டகுழியையும், எத்தனைபேர்களாலோ தொடப்பட்ட மூலையையும், எத்தனை பேர்களாலோ பிடித்திழுக்கப்பட்ட இதழையுமுடைய பொய்பேசுந் தொழிலில் திறமுள்ள இவ்வுலகப்பெண்களை விரும்பி அவர்களுக்குப் பின்செல்லும் பேதமையை விட்டு பிழைப்பாயாக (எ-று)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்க் கழுகு
தம்மதென்று தானிருக்குந் தான்

(பொ - ரை) மனமே! பெரிதாகிய வயிற்றை நம்முடையதென்று நாம் நினைத்திருக்க, நாய், நரி, பேய், கழுகுமுதலிய வைகளெல்லாம் தம்முடையதென்று நினைத்திருக்கும் ஆகையால், நம்முடைய தேகமானது இருப்பது பொய்யாம் இறந்துபடுவது மெய்யாம். என்று நன்றாயந்தரிந்து நீ யாவருக்குங் கெடுதியைச்செய்ய நினைக்க வேண்டாம். (எ - று)

தேகம் நிலையில்லாததாகையால் அதை நம்பி ஒருவருக்கும் கெடுதிசெய்ய நினைக்கவேண்டாம் என்பது கருத்து. 28

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தை பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்
காதிவிளையாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

(போ - ரை) தாதியானவள் தலைமேல் நீர்க்குடம் வைத்து வேறு ஒன்றையும் மனத்தில் எண்ணாமல் விளையாடிக்கொண்டு கைவீசி வந்தாலும் மனம்மாத்திரம் நீர்க்குடத்தின் பேரிலேயே இருப்பதுபோல் எந்த வேலையைச் செய்தாலும், எப்படிப்பட்ட அவஸ்தைகளை அடைந்தாலும் சீவன் முத்தர்களுடைய மனமானது மௌன நெறியின்கண்ணே பதிந்திருக்கும். (எ - று)

ஜீவன் முத்தர்கள் சதா நிஷ்டையில் இருப்பார்கள் என்பது கருத்து. 29

மாலைப் பொழுதின்று மஞ்சளரைத்தே குளித்து
வேலை மினுக்கிட்டு விழித்திருந்து சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானா லென்செய்வாள் பின்.

(போ - ரை) ஒருத்தி சாயங்கால வேளையில் நல்ல மஞ்சளை அரைத்துப் பூசிக் குளித்துத் தூங்காமல் கூடி சுகித்திருந்து கர்ப்பத்தை யடைந்து பெரும் பிள்ளையைப் பெற்று வளர்த்துப் பெயரிட்டாள். அப்படி அவள் பெற்ற பிள்ளை பித்தனானால் பிறகு என்ன செய்வாள்

இச்செயயுள் தான் பித்தானதையும் தன் தாய்ப் பட்ட துக்கத்தையும் வெளிப்படை யாக்குகின்றது. 30

## விருத்தம்.

வான்றேடுமறையேயோ மறைதேடும் பொருளேபோ
லூன்றேடுமுயிரேயோ வுயிர்தேடுமுணர்வேயோ
தான்றேடநான்றேடச் சகமெலாந் தனைத்தேட
நான்றேடிநான்காண நானோரோ நானேரோ,

(பொ - ரை) உலகத்தார்களெல்லாம் தேடப்பட்டு நின்ற ஒரு பொருளானது என்னைத்தேட நானும்அதைத் தேடிக் கண்டு பிடித்தேன் பிடித்த பிறகு நானென்கிற ஒரு தன்மையானது என்னிடத்தில் இல்லாமற் போகப் பண்ணி விட்டது. அப்படிச் செய்த அந்தப் பொருளானது தேவர்களால் தேடப்படும் வேதப் பொருளோ! அவ்வேதங்களால் தேடப்படும் மேலான பொருளோ! உடம்பாற் றேடப்படும் உயிரோ அவ்வுயிராற் றேடப் படும் அறிவோ? ஒன்றும் அறிகிலேன் (ஈதென்ன ஆச்சரியம்) (எ - று)

**பட்டினத்துப் பிள்ளையார் பாடல்**

**மூலமும் - பொழிப்புரையும்**

**முற்றுப் பெற்றது.**

---

# அஷ்ட திக்கு ஆரூடம்.

## பஞ்சபக்ஷி சக்கரத்துடன் ரூபா. 1.

இதில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் முதலிய 8 - திக்குகளையும் வருகுந் திக்கறிந்து, சென்றகாலம், நிகழ்காலம், எதிர் காலம் மூன்றுகாலபலனையும் தெரிந்து சொல்லலாம் இன் னும் பஞ்சபட்சி ஆரூடம், ஆஞ்சநேய ஆரூடம், ஜெய முனிவர் ஆரூடம், வால்மீகர் ஆரூடம் ஆக 5 - ஆரூடம் சேர்ந்திருக்கிறது. இந்த ஆரூட சாஸ்திரத்தை யாரொரு வற் கையாண்டு வருகிறார்களோ அவர்களை ஆரூட சாஸ் திரக்காரர்களென்று பலருமதிப்பார்கள். ஆரூடமும் கேட்பார்கள்.

விலாசம்:—பி. எஸ்- டி. எம். அண்டு ஸன்:
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

# ஸ்ரீராமர்வனவாசம்.

## இதன் விலை ரூபா 1

ஸ்ரீராமபிரானது கதையை வால்மீகமுனிவர்சுலோகமாகவும், கம்பர் விருத்தப்பாக்களாவும், சீர்காழி - அருணாசலக் கவிராயர் நாடகமாகவும், சிலர் வண்ணமாகவும், ஏலப்பாட்டாகவும் திருப்புகழாகவும் பாடியிருக்கின்றனர். இவைகளிருந்தும் நல்லதங்காள் கதை, அல்லியரசாணிகதை, பவளக்கொடிகதைமுதலிவைகளைப் போல் அம்மானை இசையில் பாடி முத்துபபோன்றஎழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பி யிருக்கிற படியால் இந்த அம்மானை இசையில் வாசிப்பவர்களுக்கு வாசிக்க வாசிக்க பிரம்மானந்தத்தைக் கொடுக்கும்.

உயிர் மெய் எழுத்து

மூலிகை ஜா்லரத்தினம்

# மூலிகைஜாலரஹஸியம்

## சக்கரத்துடன் 1-2-இரண்டு பாகமும்.

விலை அணா 8.

இதில் ஆடும் மூலிகை அறுபத்தி நாலிற்கும், வசியம் - மோகனம் - தம்பனம் - உச்சாடனம் - வித்வேஷனம் - ஆக்ருஷணம் மாரணம் முதலிய அஷ்டமாசித்து மூலிகைகளின் விபரமும், அதனை உபயோகிக்கும்விதமும், அதன் பிரயோஜனமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கி இருக்கிறது.

விலாசம்:—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்.
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்து பிள்ளையாருடைய

# உடற்கூற்று வண்ணம்.

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தானதனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது ஒருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து

(பொ - ரை) ஒரு இளம்பெண்ணும், ஒரு வாலிபனும் சுகத்தைக் கொடுக்கின்ற புணர்ச்சியிற் கூடப், புத்தி கலங்கி வெளிப்பட்ட இந்திரியமானது அந்தப் பெண்ணின் இரத்தா சயத்தில் கலந்து;

பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்துதிரண்டு பதுமவரும்பு கம்டமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

(பொ - ரை) (அந்த இந்திரியமும், இரத்தமும் சேர்ந்து) ஒரு பனித்துளியினும் பாதியளவாகி (அந்த ஆசயத்திலிருந்து புறப்பட்டு) அந்தப் பெண்ணின் கருப்பா சயத்தில் புகுந்து அவ்விடத்திலிருந்து திரண்டு தாமரை மொக்

கின் பொருட்டைப்போல் கண்களும், உடம்பும், வாயும், காதும், கால்களும், கைகளும், என்று:

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்று
நிறைந்துமடந்தை யதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—

(பொ - ரை.) சொல்லப்பட்ட ரூபங்களோடு கூடி உயிரானது விருத்தி யடைவதற்குத் தகுந்த பத்துமாதமும் சென்றவுடன் அந்தப் பெண்ணின் வயிற்றை விட்டு பூமியில் விழ, அப்பெண்ணைச் சேர்ந்தவர்கள் யோகவார நட்சத்திரங்களை விசாரித்தறிந்து?

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்பட வுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—

(பொ - ரை) அப்பெண் வீட்டார் அணையாடையி லிட்டுத் துயிற்ற மெல்லத் தரையில் வந்து கவிழ்ந்து தவழ்ந்து தன் தாயின் முலைப்பாலுண்டு ஒவ்வோரறிவாக விருத்தி யடையப் பெற்று வளர்ந்தும்:

ஒளிநகையூற லிதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—

(பொ - ரை) பலபெண்களும் கூடி முத்தங் கொடுக்கும் பொருட்டு அழைக்கத் தவழ்ந்துவந்து மடியிலிருந்து கொண்டு குதலைச் சொற்களிற் சிலபேசி, வாவா போபோ என்கிற பேர்களைச் சொல்லவும்.

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களோடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து

தேடியபாலரோ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே.

(பொ - ரை) வஸ்திரமும், இரத்தினங்களாற் செய்யப்பட்ட கயிறுகளும்இடுப்பிலிருந்து அசையும்படி போஜனஞ் செய்பவர்களுடனும், யாதாமொரு பொருளைத் தின்கிறவர்களுடனும் கூடி யிருந்து அவைகளைத் தின்று, தெருவினிடமாகச் சென்று மண்ணிலிருந்து விளையாடி அம்மண்ணை உடம்பிற் பூசிக்கொண்டும், தன்னைத் தேடி வரும் பிள்ளைகளுடன் ஓடியும் நடந்தும், செய்கின்றவிளையாட்டை அஞ்சு வயதில் விளையாடியும். 1/4

உயர்தருஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—

(பொ - ரை) பின்னர் நல்ல ஞானசிரியனையடைந்து குருவுபதேசம் பெற்றுத் தமிழ்ச்சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்து இவன் வளர்கின்ற சந்திரனாவானென்று யாவரும் சொல்லும்படி (யிருந்து) பதினாறுவது வயதையும் வரப்பெற்று?

மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர்தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க—

(பொ - ரை.) தன்தலைக் குடுமியை நன்றாகச் சிக்கறுத்துக் கோதி முடிந்து ஆறு கால்களையுடைய வண்டுகள் மொய்க்காநின்ற நல்ல புஷ்பமாலைகளைத் தரித்து, இரத்தினங்களாலும், பொன்னாலும் செய்யப்பட்டு விளங்காநின்ற ஆபரணங்களைத் தரித்து மாகதர்போகதர் என்னும் டம்பர்களெல்லாம் கூடிவணங்கும்படியாய்ப் (போக(

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டு
மருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

(போ - ரை) இவனைக்கண்ட மோகப் பெண்களெல்லாம் இவனே மன்மதனுவானென்று மயங்கி ஒன்ருகச் சேர்ந்து தங்கள் கண்களால் சாடை காட்டி மயிலைப்போல் அவர்கள் போகின்றதைப் பார்த்து?

மனதுபொருமலவர்பிறகோடி மங்கல செங்கல
சந்திகழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

(போ - ரை) மனம் தாளாதவராகி, அந்தப்பெண்களுக்குப் பிரகே ஓடிப்போய் அவர்களுடைய அழகிய ஸ்தனங்கள் தம்முடைய புஜங்களில் பொருந்தும்படி மயங்கி, அதரபானஞ் செய்து, மாம்பழம் முதலிய பொருள்களை அவர்களுக்குக் கொடுத்து;

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

(போ - ரை) முதற் பொருளாகவும், மிகுதியாகவு மிருந்த திரவியங்களை யெல்லாம் தீயமார்க்கத்தில் செலவிட்டு மதனலீலா வியசனம் இதுவேயாகு மென்பதற்கு (அறிகுறியாக) வாலிப லக்ஷணமானது மாறுபட்டு?

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—

(பொ - ரை) ஆயுளின் வண்மையும், இளம்பிராயமும் நீங்கி, வலிமையுடைய பற்கள் விழுந்து இரண்டு கண்களும் யிருள் சூழ்ந்து, வயது முதிர்ச்சி யடைந்து, நரை, திரைகள் வந்து கடையில் வருவதாகிய வாதரோக மீடிப்பை யடைந்து செவந்தகைபினிடமாகஒருதடியைப்பிடித்து, ½

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதிமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

(பொ - ரை) வருவது போவதாகிய, ஒருகிழக்கூன் குரங்கைப்போலக் குந்திக்குந்தி நடந்து அறிவழிந்து. காதுகேளாமல் எந்நேரமும் இடைவிடாமல் பேசிக்கொண்டிருந்து:

துயில்வருதுநேர மிருமல்பொருதுதொண்டையுநெஞ்சு
முலர்ந்துவறண்டு துகிலுமிழந் சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு—

(பொ - ரை) தூங்குங்காலத்தில் வரும் இருமலைச் சகிக்கமுடியாமையால் தொண்டையும்; மார்பும வறண்டு உலர்ந்து, யிடுப்பில் வஸ்திரத்தைப் போக்கி சுணைகெட்டு, பெண்சாதி, பிள்ளைகளெல்லாம் வியசனத்தை யடைந்திருக்கும்படியாக!

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து—

(பொ - ரை) இக்கலியுகத்தின்கண் யிவருடைய யிலட்சணத்தைப் பாருங்கள் என்று சொல்லிப் பேசிக்கொள்பவர்களுக்குத் துக்கம் அதிகரிக்கும்படியாகத் திடிரென்று

மலமும், சலமும் யிழிந்து கால்வழியாகவும், மேல்வழி யாகவும், ஓடி,

தெளிவுமிராம னுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதனநொந்து—

(போ - ரை) மனத்தில் தெளிவில்லாமல் பேச்சுத் தடுமாறி, மனமும், சிந்தையும் கெட்டுத் தன்னுடைய திடச்சித்தம் போய் மிகவும் அலைந்து ஆராய்ந்து நல்ல துணையாவது யின்னும் எது என்று மனம் வருந்தி!

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமு
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினி வாழ்வுநி லாதினிநின்ற—

(போ - ரை) ஆனல் வேதங்களுக்குரிய பிரமன் எழுதியபடி கண்டமும் வந்து விட்டது என்று தெளிந்து, இனிமேல் வேறு கண்டமும் இருக்கின்றதா? வேறுதொந்தமும் இருக்கின்றதா? (இல்லை ஆகையால்) இவ்வுலக வாழ்க்கையானது நிற்கமாட்டாது. அப்படி இந்த வாழ்க்கையானது நிலையாயிருந்த;

கடன்முறைபேசு மெனவுறைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேரமே.

(போ - ரை) முறைமைச் சற்றுச் சொல்லுங்கள் பார்ப்போமென்று சொல்லுகின்ற நாவானது உறங்கி விழுந்துவிடக் கை சாடைகாட்டி, வாயில் விடும் கஞ்சியானது யிப்படியும் அப்படியும் ஒழுகும் படியான நிலையில்

வந்து மற்றைய கருவி கரணாதிகளெல்லாம் போய் பூதமும், நான்கு சுவாசமுமேயிருந்து மனம் தடுமாற்றத்தையடைகின்ற காலத்தில்?

வளர்பிறைபோல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்ச மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

(பொ - ரை) மூன்றாம்பிறைபோன்ற பற்களும், மயிரும், சடையும் சிறுகுடுமியும் விளங்க, யிருண்டமனதையும், யிருண்ட வடிவத்தையும் பெற்ற யமதூதர்களானோர் பெரிய மலைபோல வந்து,

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—

(பொ - ரை) வலைவீசி உயிரைக் கொண்டுபோகவே தன்னுடைய பிள்ளைகள் வந்து குனிந்து நொந்து அழவும் பெண்சாதி மடியில் விழுந்து புலம்பவும் ஆய்விட்டனர். யித்தன்மையான யிவர் காலகதியை உணர்ந்து,

பழையவர்காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று—

(பொ - ரை) அயலார்கள் கண்டு யிவர் வயதிற் பெரியரென்று சீக்கிரத்தில் வந்து பந்தர் முதலியவை யிடச்செய்து, வாத்தியங்களை ஒலிக்கும்படி செய்துக்கொண்டு போகலாமா வென்று விசாரியுங்கள் என்று சொல்லி,

பலரையுமேவி முதியவாதாமி ருந்தசவங்கழு
வுஞ்சிலரென்று பணிதுகிலொருங்கல களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை—

(போ - ரை) பலபேர்களை அநுப்பி விசாரித்து பெரியோர் சிலரை விட்டுப் பிணத்தைக்குளிப்பாட்டச் செய்து வஸ்திராபரணங்கள் முதலிய வைகளால் பாவத்தையே செய்து நாற்றம் வீசாநின்ற யிந்த உடம்பை அலங்கரித்து,

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்
குனிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—

(போ - ரை) முறைப்படி எடுக்கச் சொல்லப் பிள்ளைகளெல்லாம் குனிந்து சுமந்து எடுத்துக்கொண்டு சீக்கிரம் சென்று சுடுகாட்டைச் சேர்ந்து இதுதானா மானிடவாழ்வு என்று வியசனப்பட்டு,

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்து
முறிந்து நிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
ஓர்பிடி நீறுமி லாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே.

(போ - ரை) வருட்டியடுக்கி விறகிட்டுமூடி, நெருப்புக் குச்சியினால் கொள்ளிவைக்க வெந்து முறிந்து விழுந்து கொழுப்புக்களெல்லாம் உருகி எலும்புகளெல்லாம் கறுத்துத் தியடங்கியபின் ஒரு பிடியளவு சாம்பலாகவும் இருக்கப்பெறாத இந்த உடம்பை நிலையுள்ளதென்று நம்பியிருக்கின்ற அடியேனை சிவபெருமானே! இனி யாட்கொண்டருளவேண்டும். (எ - று) 1

## உடற்கூற்று வண்ணம்

மூலமும் - பொழிப்புரையும்.

முற்றுப் பெற்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

# அருட்புலம்பல்

மூலமும் - பொழிப்புரையும்

## முதல்வன் முறையீடு.

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(போ - ரை) சன்னிவனம் என்று சொல்லப்படு கின்ற மதுரையில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானே! ()

தடாதகைப் பிராட்டியார் கன்னிகையா யிருந்து அரசாண்டமையால் "கன்னி" எனவும், கடம்பக் காடா யிருந்தமையால் "வனம்" எனவும் வழங்குவதை- ஒன்ருகச் சேர்த்துக் "கன்னிவனம்" என்று மதுரையைக் கூறினர், இதனை,

"அத்திருமானகரின்பேர் சிவனகரங்கடம்பவன
மமர்ந்தோர் சீவன்
முத்திபுரங்கன்னிபுரந் திருவாலவாய்மதுரை
முடியா ஞானம்
புத்திதருபூவுலகிற் சிவலோகஞ்சமட்டிவிச்சா
புரந்தென் கூடல்
பத்திதருந்துவாதசாந்தத் தலமென்றேதுவிஞற்
பகர்வர் நல்லோர்," எனத் திருவிளையாடற் புராணத் தலவிசேடத்தினும்,

"வரைசெய்பூண்முலைத் தடாதகைமடவரற்பிரட்டி
விரைசெய்தார்முடிவேய்ந்துதண்குடை மறவேந்தன்
கரைசெய்நூல்வழிகோல் செலக்கன்னியாம்பருவத்

தரசு செயதலாற் கன்னிநாடாயதந்நாடு, "எனத் திருவவதாரப் படலத்திலும் புகன்றிருப்பதினு லறிக.

மூலமறியேன் முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர் நாடநடக்குதடா

(பொ - ரை) நான் இவ்வுலகத்தின் கண் அடைந்த துன்பங்களே என்னை நாடியிருக்கக் காலஞ் செல்கின்ற படியால் (நான் மோக்ஷத்தை யடையும்படியான வழியாகிய) ஆதியையும், அவ்வாதியானது) முடிவு பெறுகின்ற அந்தத்தையும் தெரிந்தே னில்லை. (எ-று)

மூலம் - ஆதி. முடிவு - அந்தம்.

ஆதியும், அந்தமும் அதுவாகவே யிருந்து விளங்கும் பரம் பொருளை அறிந்தே னில்லை. ஆகையால் நான் முத்திப்பேறடைவது எங்ஙனம் என்பது கருத்து. இதனை

"ஆதிபந்தங்காட்டாத முதல்" என்பதினுலறிக. 1

அறியாமையாமலத்தா லறிவுமுதற்கெட்டானடா
பிரியாவினைப்பயனுற் பித்துப்பிடித்தனடா.

(பொ - ரை) அஞ்ஞானத்திற்குக் காரணமா யிருக்கின்ற ஆணவமென்னும் மூலமலத்தினுல் அறிவாகிய ஞானத்தை யிழந்தேன் (அல்லாமலும்) என்னை விட்டு நீங்காத இருவினைகளினுல் பயித்தியம் பிடித்தவனுக ஆய்விட்டேன்! ஈதென்ன விபரீதமோ அறியேன்.

அறியாமையாமலம் என்றது உயிர்க்குச் சகசமாய் எப்பொழுதும் இருந்துகொண்டே யிருக்கும் குணவமல

மாகும். அது மரத்தில் பட்டைபோலும், செம்பிற் களிம்பு போலும் நெல்லில் உமிபோலும் மிகவும் நெருக்கமா யிருக்கும் அந்த ஆணவம் காரணமாகவே வினைகள் உண்டாவன வாகலான், "அறியாமையா மலத்தால்" என்று முன்னேசொல்லி அதன்பின்னரே "பிரியா வினைப்பயனுல்" என்றுசொல்லி யருளினர்.

இருவினை என்றது - நல்வினை, தீவினைகள். இவையே புண்ணியம் பாவம் என்று சொல்லப்படும்.

தனுவாதியநான்குந் தானய்மயங்கினண்டா
மனுவாதிசத்தி வலையிலகப்பட்டனடா.

(போ - ரை) நான் வேதங்களில் சொல்லப் பட்டு வாராநின்ற ஆதிசத்தியாகியமாயையின் வலையில் அகப்பட்டிருப்பதால் தநு, கரணம், புவனம், போகம் என்னும் நான்கையுமே நானென்னும் ஒரு பொருளான உயிரென்றெண்ணி மயக்க முற்றிருக்கின்றேன். (ஆகையால் அந்த மயக்கம் எக்காலத்தில் நீங்குமோ? அறியேன்)

இவ்விடத்தில் தநு என்றது தேகம், கரணம் என்றது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை. புவனம் - இருநூற்றிருபத்து நான்கு புவனங்கள். போகம் - சுகம். ஆதிசத்தியென்றது - மாயா சத்தி. 3

மாமாயையென்னும் வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந் தாதுகலங்கிறண்டா,

(போ - ரை) நானே மகாமாயையென்று சொல்லப் படுகின்ற காட்டில் அலைந்துதிரிகின்றேன். ஆகையால் உலகத்தின்கண் கலக்கமுற்றிருக்கிறேன். இப்படியிருப்பதால் கன்னிவனத்தில் எழுந்தருளியுள்ள நீயே அக்கலக்கத்தை நீக்கி யருளல்வேண்டும். (எ - று)

உலக மாய்கைகளில் மகாமாயை யென்பதும் ஒன்று ஆகையால் இவ்விடத்தில் பட்டினத்தாரும் அதைமாமாயை என்று கூறினர். இப்படியே கந்தரநுபூதிகாரரும் "மகமாயை களைந்திட வல்ல பிரான்முகமாறு - மொழிந்தி லனே" என்றார். 4

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ - ரை) கன்னிவனம் என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

மண்ணாசைபட்டேனை மண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசை பெண்ணாசை போகேனேயென்குதே.

(பொ - ரை) நான் பூமியின்மேல் ஆசைவைத்ததினால் அந்த மண்ணே என்மேல் ஆசைவைத்து என்னைத் தின்று விட்டது. (இதுவுமல்லாமல்) திரவியத்தின் மேல்வைத்த ஆசையும், பெண்கள் மேல் வைத்த ஆசையும் போகமாட்டேன் என்கின்றன (ஆகையால் அந்தஆசைகளை யொழிக்க வழிதெரியாத எனக்கு நீயேவழி காட்டவேண்டும்.)

இப்படியே தாயுமானவரும்,

"பொன்னைமாதரை பூமியைநாடிடேன்
என்னைநாடிய வென்னுயிர்நாதனே
உன்னைநாடுவ னுன்னருட்டுவெளி
தன்னைநாடுவன் தன்னந்தனியனே" என்றும்,

இதுவுமல்லாமல் ஆசையால் வருங்கெடுதிகளை

"ஆசையெனும் பெருங்காற்றூடிலவம்
பஞ்செனவுமன தலையுங்கால
மோசம்வருமிதனாலே கற்றதுங்கேட்டதுந்
தூர்ந்து முத்திக்கான
நேசமுநல்வாசமும் போய்ப்புலனாயிற்

கொடுமைபற்றி நிற்பரந்தோ
தேசிபழுத்தருள்பழுத்த பராபரமே
நிராசையின்றேற்

றெய்வமுண்டோ” என்றும்சொல்லியிருக்கின்றமை யான்றிக. 5

மக்கள்சுற்றத்தாசை மறக்கேனேயென்குதே
திக்கரசரமாசைபது தீரேனேயென்குதே.

(பொ - ரை) பிள்ளைகள்மேல் வைத்திருக்கும் ஆசையும், சாதியார்கள் மேல்வைத்திருக்கும் ஆசையும் மறக்கேன் என்கின்றனவே. அரசனாகவேண்டும் என்கிறஆசை ஒழியமாட்டேன் என்கிறதே? (இதற்கு நான் என்னசெய்வேன்) (எ - று.)

இப்படியே மக்கள் சுற்றததாசையை அறவே விட வேண்டுமென்கிற கருத்தை வைத்து வைராக்கிய சதககாரரும்.

“ தாளையேதரமறிகிலா தெமக்கெளிதரு
சிவப்பிரகாசற்
காளியாமெனத்திரிந்த வன்பணிபுரிந்
தரியவீட்டைகில்லாய்
கேளையோமனையாதிய வளர்றினிற்
கிடந்துழைக்கின்றனைநெஞ்சே
நாளையோலையுந்தூதரும் வரிலிவர்துணைகொலோ
நவில்வாயே” என்றுகூறினர்.

ஆசைக்கு ஒரு அளவுசொல்லக் கூடாமையால் அரசனாக வேண்டுகின்ற ஆசைஒழியாதென்று தாயுமானவரும்.

"ஆசைக்கொரளவில்லை யகிலமெல்லாங்கட்டி
யாளினுங்கடன் மீதிலே
ஆணைசெலவே ரினைவர்" என்று சொல்லியிருக்
கின்றனர். 6

வித்தைகற்குமாசையது விட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசை சிதையேனேயென்குதே.

(பொ - ரை) எனக்குக் கல்வியை நன்ருய்க் கற்க வேண்டுமென்கிற ஆசை என்னைவிட்டு நீங்கமாட்டேன் என்கிறது: சகலசித்துக்களையும் அடைய விரும்பும் ஆசை கெடமாட்டேன் என்கிறது. (ஆகையால்) நான் என்ன செய்வேன். (எ - று)

கல்விக்களவில்லை யாகையால் கற்கக்கற்க அவர் அதி கரிக்கின்ற படியால் "வித்தைகற்குமாசை விட்டொழியே னென்குதே" என்ருர். எப்படியிருந்தாலும் அவாவானது மிகவும் கெடுதியை விளைக்கின்றதாகையால் அலத அறுக் கவே வேண்டும் என்னும் கருத்தை உள்ளடக்கி,

அவாவென்ப தெல்லா வுயிர்க்குமெஞ்ஞான்றும்
தவாப்பிறப்பீனும் வித்து" என்று குறளாசிரியர் கூறியிருக்கின்றனர்.

மந்திரத்திலாசை மறக்கேனேயென்குதே
சுந்தரத்திலாசை துறக்கேனேயென்குதே.

(பொ - ரை) நான் மந்திரங்களைக் கற்கும்படியாக வைத்த ஆசையானது மறக்கமாட்டேனென்கிறதே (இது வன்றி நல்ல வஸ்திராபரணங்கள்பூண்டு அழகாக இருக்க வேண்டும் என்கிற எண்ணமானது என்னைவிட்டு ஒழி யேன் என்கிறது)(ஆகையால் இவைகளுக்கு என்ஞல் செய் யத்தகுந்தது ஒன்றுமில்லை) (எ - று.)

மந்திரம் கற்பவன் அம்மந்திரத்தால் ஒருவிநோதம் பலிக்கப் பெற்றால் மறுபடியும் அவன் மனமானது வேறு மந்திரங்களைக் கற்க ஆசைப்படுகின்றதாகையால் "மந்திரத்திலாசை மறக்கேனே யென்குதே" என்றார். 8

கட்டுவர்க்கத்தாசை கழலேனேயென்குதே
செட்டுதனிலாசை சிதையேனேயென்குதே.

(பொ - ரை) என்னை நெருங்கி யிருக்கின்ற சுற்றத்தார்கள் மேல் வைத்திருக்கும் ஆசையானது நீங்கமாட்டேன் என்கிறது. (அல்லாமல்) சிநேகர்களுடன் கூடி விநோதமாய்ப் பாடும் சங்கீத சாஹித்தியங்கள் மேல் வைத்த ஆசையும் கெட்டுப் போகமாட்டேன் என்கிறது. ஆகையால் இவைகளை நீங்கும்படியான ஒருவழியை எனக்கு எப்பொழுது அருளிச்செய்வாயோ?) (எ - று.)

தான் செல்வமுடையவரா யிருப்பதால் அவரிடத்தில் அவர் ஜாதியார் மிகவும் நெருங்கியவர்களாக விருக்கின்றார் என்பதுதோன்ற "கட்டுவர்க்கத்தாசை என்றார். ஆனாலும் செல்வம்போய்விட்ட பிறகு அவரைப்பிரிந்து பலவகையான இடையூறுகளை அவருக்கே செய்தலினால் அவர்கள் ஜாதியார்களல்லர் என்பது தெரியவருகிறது. ஆனால் எப்படிப் பட்டவர்கள் ஜாதியார். எப்படிப் பட்டவர்கள் ஜாதியார்களல்லர் என்றால் ஒருகுளத்தில் நீர் இருக்கும்போது அதிலிருந்தேசெழித்து அதில் நீர் வற்றிய போது அதிலிருந்தே உலரும் கொட்டிப்பூண்டையும். அல்லிக்கொடியையும் நெய்தற் கொடியையும்போல பணமுள்ளபோது அவர்களுடன் கூடிச்சந்தோஷித்தும், தரித்திரம் வந்தபோது அவர்களுடனிருந்து வருத்தப்பட்டும் அவர்களைப்பிரியா திருப்பவர்களே சாதியாராவார். ஒரு

குளத்தில் நீர் இருக்கும்போது அதிலுள்ள மீன்முதலிய சிறு ஜெந்துக்களைப் பிடித்துத்தின்னும் பொருட்டு அக் குளக்கரையில் காத்திருந்து சமயம் வந்தபோது அந்த ஜெந்துக்களைத் தின்றும், அதில் நீர்வற்றியபோது அக் குளத்திற்குச் சமீபத்திலும் வாராத பட்சிகளைப்போல ஒருவனிடத்தில் பணமிருக்கும்போது அவனுடன் கூடி என்மாமன், என் அண்ணன், என்தமக்கை, என்தங்கை என்றுசொல்லி உண்டு சந்தோஷித்தும் அப்பணம்போய்த் தரித்திரமான காலத்தில் அவர்களைவிட்டுப் பிரிந்துகேட்கிறவர்களுக்கு அவர்யாரோ என்று சொல்லியிகழ்ந்தும் திரிகின்றவர்கள் ஜாதியாராகார். இதனையே ஔவையாரும், தாம்சொல்லியருளிய நீதிவாக்கியத்தில்

"அற்றகுளத்தி லறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித்தீர் வாருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியுமாம்பலு நெய்தலும்போலவே [னர்.
யொட்டியுறு வாருறவு" என்றுசொல்லியிருக்கின்ற
மாற்றுஞ்சலவை மறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னுந் தூரனேயென்குதே.

(போ - ரை) (உடுத்தவஸ்திரம் அழுக்கானல்) அதை மாற்றி வேறு சலவைசெய்த வஸ்திரத்தைத்தரிக்க வேண்டுமென்கிற எண்ணமானது ஒழியவில்லையே. என்வயிறுனது இன்னும் மூடப்படவில்லையே. இதற்குநான் என்னசெய்வேன்.

நன்மார்க்க யோகசாதனத்தை யடைந்தவர்களுக்கு இது அழுக்கென்றும் இதுசலவையென்றும் இல்லை. எனக்கோ இன்னும் அந்த எண்ணம் இருக்கின்றது ஆகையால்

நான் இன்னும் அம்மார்க்கத்தை யடைந்தவ னல்லன் என்பார் "மாற்றுஞ் சலவை" என்றார் இதனை.

"அழுக்குமெய் கொடுன்றிருவடி யடைந்தோன்" என்று பெரியோர்கள் சொல்லியிருத்தலின் அறிக.

சோற்றுக்குழி யென்றது வயிறு. அவ்வயிற்றினால் படுந்துன்பம் கொஞ்சமல்ல. ஆகையால் ' சோற்றுக்குழியு மின்னந்தூரேனே யென்குதே" என்றார். இதனை, இவ்வாசிரியரே "சாணும் வளர்க்க வடியேன் படும்பாடு சற்றல்லவே, என்றும் கூறினார்

ஔவையாரோ வென்றால் தாம்பாடியருளிய நீதிநூலில்

"ஒருநாளுணவை யொழியென்றாலொழியா
யிருநாளைக்கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோவறியா யிடும்பைகூரென் வயிறே
உன்னோடுவாழ்தலரிது, என்று கூறினார். 10

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ - ரை) கன்னிவனம் என்றுசொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

ஐந்துபுலனு மடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந் தேறேனேயென்குதே.

(பொ - ரை) சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்களும் தாம்செய்யும் கேட்டைகளினின்று நீங்கமாட்டேனென்கின்றன. மனமானது மயங்கி வியவகாரம் பண்ணுவதிலிருந்தும் தெளிவடைய மாட்டேன் என்கிறது. (ஆகையால்) இவற்றையெல்லாம் ஒருவழிப்படுத்த முன்னின்றருளல் வேண்டும். (எ - று)

"சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" என்று முன்னோர்கள் சொல்லி யிருக்கின்றதாலும், அநுபவத்திலும் அது ஒத்திருப்பதாலும் இப்பட்டினத்தடிகளும் "சிந்தை தவிக்கிறதும் தேறேனே யென்குதே" என்றார். 11

காமக்குரோதங் கடக்கேனே யென்குதே
நாமேயரசென்று நாடோறுமெண்ணுதே.

(பொ - ரை) காமம் குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என்னும் ஆகாயபூதத்தின் குணங்கள் நீக்கிப்போகோம் என்று சொல்லுகின்றன. தினந்தோறும் நாமே அரசர்களாவோமென்று இறுமாப்படைகின்றது (அந்தோ) என்மனத்திற்கு இப்படிப்பட்ட விபரீதம் உண்டானதற்குக் காரணம் என்னவோ அறியேன். (எ - று)

காமத்தையும், குரோதத்தையும் மாத்திரம் சொல்லி யிருந்தாலும் இவைகளுடன் அவைகளும் இருக்கும் சம்பந்தத்தால் மற்றைய நான்கும் எழுதப்பட்டன இது.

"ஒருமொழியொழி தன்னினங் கொளற் குரித்தே" என்னும் நன்னூர் சூத்திர விதியாலாம். 12

அச்சமாங்கார மடங்கேனே யென்குதே
கைச்சுமின்னுமானங் கழலேனே யென்குதே.

(பொ - ரை.) ஒருபொருளையாகுலும், ஒருமனிதரையாகுலும் கண்டால் அஞ்சும் செய்கையும், அகங்காரமும், மானமும் என்னைவிட்டு நீங்கமாட்டோம் என்று (பலமுறையும்) என்னை வற்புறுத்துகின்றனவே. (இதற்கு நான் என்னசெய்வேன்.) (எ - று.)

அச்சம் நீங்கினோர் சன்மார்க்க ஞானத்தை யடைந்தவர்களாகையால் அவ்வச்சத்தை நீங்கப்பெறாத எனக்கு அந்த ஞானம் எப்படி கைகூடும் என்பார் "அச்சமடங்கேனே யென்குதே" என்றார் இதனை.

"அஞ்சுவதியா தொன்றுமில்லை" யஞ்சவருவதுமில்லை என்னும் பெரியோர் வாக்கானறிக.

ஆங்காரஞ்செய்யும் கெடுதிகளுக்கு அளவுசொல்லக் கூடாமையால் அதுவும் ஒழியவில்லையே யென்றார்.

ஆங்காரஞ் செய்யும்கெடுதிகளை,

"ஆங்காரமானகுலவேட வெம்பேய்பாழ்த்த
வாணவத்தினும் வலிதுகாண்
அறிவினை மயக்கிடு நடுவறியவொட்டாதி
யாதொன்று தொடினுமதுவாய்த்
தாங்காதுமொழிபேசு மரிகரப்பிரமாதி
தன்னொடுசமானமென்னும்
தடையற்றதேரிலஞ் சுருவாணிபோலவே
தன்னிலசையாநிற்கும்
ஈங்காரெனக்குநிக ரென்னப்பிரதாபித்தி
ராவணாகாரமாகி
யிதயவெளியெங்கணுந் தன்னரசுநாடுசெய்
திருக்குமிதனொடெந்நேரமும்
வாங்காநிலதடிமை போராடமுடியுமோ
மௌனோபதேச குருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்

மரபில் வருமௌன குருவே "என்னும் தாயுமானவர் திருவாக்கானறிக.

நீர்க்குமிழியாமுடலை நித்தியமாமெண்ணுதே
ஆர்க்குமுயராசை யழியேனேயென்குதே

(போ - ரை) சலத்தில் தோன்றும் முட்டையைப் போல் கொஞ்ச நேரமும் நிலையுள்ளதாயிராத இந்த உடம்பை என்மனமானது என்றும் அழியாததாக நினைக்கின்றது, அல்லாமல்) எல்லார்க்கும் விருத்தி யடைந்து கொண்டே வருகின்ற ஆசையானது நீங்கமாட்டேன் என்கிறது. (இப்படி யிருப்பதால் நான் கடைத்தேருவதில்லை யென்று எனக்கே வெளியாகின்றது) (எ - று)

தேகம் நிலையில்லாததென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயமே எப்படி யென்றால், மாலை தன் தொழிலி லிருந்து வந்த ஒருவன் தன் தோழர்களோடுவார்த்தையாடிக் கொண்டிருந்து சிலநேரமும் சென்று போசித்துத் துயின்றுன், காலையில் இறந்தான் என்றுபலர் சொல்லக் கேட்டிருக்கிறோம் ஆகையால் இது பற்றியே இப்பட்டினத்தடிகளும் "நீர்க்குமிழி யாமுடல்" என்றார்.

ஆனல், நீரில் உண்டாகும் குமிழியானது அந்தநீரில் சிலநேரம் இருந்தே மறைகின்றது, இந்தத் தேகமோ அவ்வளவும் நிற்கமாட்டாது. ஆகையினலே "குமரகுருபர சுவாமிகளும் தாம் அருளியநீதி நூலில் இந்தத்தேகத்தை நீரில் எழுதுகின்ற எழுத்துக்கு ஒப்பிட்டுக்கூறினர்.

அந்தச்செய்யுளாமாறு:

"நீரிற்குமிழியிளமை நிறைசெல்வம்
நீரிற்சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும்யாக்கை நமரங்காளென்னே
வழுத்தாததெம்பிரான்மன்று" என்பதாகும்.

இதுவன்றி "வருகணத்துநின்றிடுமோ" என்றும்.

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்ப ரென்றெண் ணவோ நிடமில்லை" என்றும் ஆன்றோர்கள் சொல்லி யிருக் கின்றனர். 14

கண்ணுக்குக்கண்ணெதிரே கட்டையில்வேகக்கண்டும்
எண்ணுந்திரமா யிருப்போமென்றெண்ணுதே.

(பொ - ரை) என்னுடைய மனமானது ஒரு தேகமா னது தன்னிடத்திலிருந்து வாசஞ்செய்து கொண்டிருந்த உயிர் வெளிப்பட்டுப் போகச் சுற்றத்தார்கள் கூடிச் சுட லைக்குக் கொண்டுபோய் எரிக்க எரிவதைக் கண்களால் நேராகப் பார்த்துக்கொண்டே யிருந்தும் இதையோர் நிலையுள்ளதாக நினைக்கின்றதே. (அந்தோ! இந்த மனத் திற்கு என்னகெட்டகாலமோ அறியேன்) (எ - று)

இத்தேகம் நிலையாதென்பதை நேராகக் காட்சிப்பிர மாணமாகப் பார்த்தும் இன்னும் மயக்கத்தினின்றும் நீங் காதே மனத்தை எனக்கு ஒற்றுமையாக வைத்திருக்கிற நாள்வரைக்கும் பரமசிவத் தோடிரண்டறக் கலத்தலாகிய அத்துவித ஞானத்தையும், அந்த ஞானத்தால் அடையும் பேற்றையும் நான் அடையப்போகிறதில்லை யென்பார் இப் படி சொன்னர். 15

அநித்தியத்தைநித்தியமென் ருதரவாயெண்ணுதே
தனித்திருக்கேனென்குதே தனைமறக்கேனென்குதே.

(பொ - ரை) அழிந்துபோகும் பொதுத்தன்மையைப் பெற்றுள்ள எல்லாப் பொருள்களையும் அழியாத பொருள் களாக நினைக்கின்றதே இதுபோக, தனியே யாயினும் இருப்போ மென்றாலோ அப்படியும் இருக்கமாட்டேன் என்கிறதே. இதுபோனாற்போக நான் என்னும் அகங் காரத்தைவிட்டிரு என்றாலோ அங்ஙனமும் விடமாட்

டேன் என்கிறதே. (இனிநான்போகும் வழியாதோ அறி யேன்) (எ - று)

தனித்திருத்தலாவது - யாரோடுங் கூடாமல் தனித் திருப்பதன்று. கருவி, கரணாதிகளோடு கூடாமல் சிவசமா தியிலிருப்ப தாகும். இதை நோக்கியே ஆன்றோரும், "தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது சாமி நீயறியாததோ" என்றார். 16

நரகக்குழியுமின்னு நான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்கு லுனைக்கெடுப்பேனென்குதே

(போ - ரை) நரகவாசலானது (நான் செய்தபாவங் களி னிமித்தம்) இன்னும் உன்னை வருத்தாமல் விடமாட் டேன் என்கிறது. (அந்த வாசலுக்குச் செலுத்தும்படி யான) சர்ப்பத்தின் படத்தைப் போன்ற பெண்குறியா னது உன்னைக் கெடுக்காமல் விடமாட்டேன் என்கிறது. ()

எனக்குப் பெண்கள் மேல்வைத்த விருப்பம் நீங்க வில்லை யாகையால் நரகவாசல் என்னைவிழுங்கத் தடை யில்லை யென்பார். "நரகக் குழியுமின்னு நான்புசிப்பே னென்குதே" என்றார்.

உரகப்படத்தல்குல் என்றது பெண்கள்குறி. 17

குரும்பைமுலையுங் குடிகெடுப்பேனென்குதே
அரும்புவிழியுமெந்த னாவியுண்பேனென்குதே

(போ - ரை) தெங்கின் இளம் பிஞ்சைப்போன்ற முலை களானவை உன்னுடைய குடியைக் கெடுப்பேன் என்கின் றன. மலர்ந்த கண்கள் என்னுடைய உயிரைத் தின்றுவிடு வேன் என்கின்றன.

ஸ்தனபாரங்கள் விம்மிப் பரந்திருப்பதால் அதினு டைய இறுமாப்பைப்பார்த்துக் "குடிகெடுப்பேனென் குதே" என்றார். 18

மாதருருக்கொண்டு மறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங் கரக்காயுருகிறண்டா.

(போ - ரை.) எமனானவன் பெண்கள் ரூபங்கொண்டு வந்தும் அவனுடைய கபட எண்ணத்தையே நினைக்கின்ற னனே. ஆகையால் இப்படியெல்லாம் இருக்கின்றமையால் யாதொரு ஆதரவுமில்லாமல் இவ்வுலகத்தின் கண்ணே யிருந்து நெருப்பைக்கண்ட அரக்கைப்போல் உருகுகின் றேனே. (இதற்கோர் துணையுமில்லையோ.) (எ - று)

பெண்களால் உண்டாகும் பலவகைத் துன்பங்களும் எமவாதைக்கதிகமாக விருத்தலால் எமனே பெண்களாக மாறியதாகக் கூறினர். இவ்வாறே "பெண்களைப்படைத் தெமனையேன் படைத்தாய் என்னும் வாக்கியம் உலகத் தில் வழங்கி வருவதாலறிக. 19

கந்தனையீன்றருளுங் கன்னிவனநாதா
எந்தவிதத்தினு னேறிப்படருவண்டா.

(போ - ரை) (ஆறு உருவங்களும் ஒன்றாகக் கூடிய காரணத்தால் வந்த) கந்தன் என்னும் திருப்பெயரையு டைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த கன்னிவனம்என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானே! நான்மேலே சொன்ன விதங்களாகப் பரித விக்கின்றமையால் வேறு எந்தவகையினுல் சிவபீடத்தி லேறி அவ்விடத்தில் சமாதிகூடி உன்னடியிற் சேர்ந்திருப் பேனே? எனக்குத் தெரியவில்லை ஆகையால் நீயேஎனக்கு அதை முன்னின்று கடாட்சித் தருளல்வேண்டும். (எ-று)

கந்தன் என்னும்பேர் ஸ்ரீசுப்பரமணியனுக்கு வந்த வரலாறு :—

பூர்வம் சூரபன்மன் செய்ததுன்பத்தைத் தேவர்கள் சகியாதவர்களாகிச் சிவபெருமானிடத்தில் முறையிட அவர்தமது பஞ்ச முகங்களோடு, அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுகங்களாக எழுந்தருள அவ்வாறு முகங்களிலிருக்கும் ஆறுநெற்றிக் கண்களிலிருந்தும் ஆறுதீப்பொறி வெளிப்பட்டு உலகத்தைத்தகிக்கச் சிவபெருமான் பார்த்து, அப்பொறிகளை வரச்செய்து அங்கிருந்த அக்கினிபகவானை நோக்கி "நீ இப்பொறிகளைச் சுமந்து கொண்டுபோய் சரவணப்பொய்கையில் விட்டுவா" என்று உத்தரவுபண்ண, அவ்வாறே சுமந்து கொண்டு போகும் போது அந்த அக்கினியை அக்கினிபகவான் சகியாதவராகித் தாம் வழியிற்கண்ட கங்கையினிடமாக விட்டனர். அக்கங்கை சரவணப் பொய்கையில் சேர்க்க, அங்கு கிர்த்திகைப் பெண்கள்பால் கொடுக்க ஆறுபிள்ளைகளாக வளர்ந்து கொண்டிருந்தன. பிறகு சிவபெருமான் பார்வதாதேவியோடு அவ்விடத்திற்குப்போய் பார்வதியைப்பார்த்து "ஓ பெண்ணே! அவ்வாறு பிள்ளைகளையும் ஒன்ருக்கிக் கொண்டுவா" என, அவ்வாறே பார்வதியானவள் செய்து ஆறுமுகம் பன்னிரண்டு கரமும், இரண்டுகால்களுமாகக் கொண்டுவந்தனள். அப்பொழுது சிவபெருமான் அப்பிள்ளைக்குப் பேர்வைத்தலாகிய நாமகரணத்தைப் பார்வதிக்குச் சொல்லுகின்றனர். என்னவென்ருல், பார்வதி! இந்தக்குழந்தையை முன்னர் கங்கை சுமந்ததால் காங்கேயன் என்றும், சரவணப் பொய்கையில் வளர்ந்ததால் சரவணபவன் என்றும், கிரத்திகைப்பெண்கள் பால்கொடுத்ததால் கார்த்திகேயன் என்றும் அவனுடைய ஆறு வுருவங்களை

யும் நீ ஒன்ருகச் செய்ததால் கந்தன் என்றும் பேரிடலா யிற்று, என்று சொல்லத் தேவர்கள் இடையூற்றை நீக்கும் படி அக்குழந்தைக்கு உத்தரவுபண்ண அவ்வாறே அக் குழந்தை சூரனையும் அவன் வம்சத்தாரையும் கொன்று தேவர்களைக்காத்து ரக்ஷித்தது. இதுகாந்தபுராண விருத் தாந்தம். இப்படி அருமையாகப் பார்வதி தேவியாலேயே ஒன்று சேர்க்கப்பட்ட நிமித்தத்தால்வைக்கப்பட்ட பேரா கையால் "கந்தனையீன்ற" என்று அருமையாக இப்பட் டினத்தடிகளும் அதையே யெடுத்துக் கூறினர். 20

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ - ரை) கன்னிவனம் என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

புல்லாகிப்பூண்டாய்ப் புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க் கழிந்தநாள்போதாதோ.

(பொ - ரை) (நான் இதுவரைக்கும் எடுத்த பிறப்பு கள் அநேகமாயிருக்குமாதலால் அப்பிறப்புகளில் புல்லா கவும், பூண்டாகவும் பிறந்து உலர்ந்து வருத்தப்பட்ட காலம் போதாதா? அவை நீங்கிய பின் கல்லாகவும்; மர மாகவும் பிறந்து பலதுன்பங்களையும் அனுபவித்தகாலம் போதாதா? போதும், (ஆகையால் என்தலைவனே! இன் னும் ஒரு தாய்வயிற்றினிடமாக வாராதபடி என்னைக் காத்து ரக்ஷிப்பது உனது கடமை.) (எ - று.)

கிரியாய்க்கீடமாய்க் கெட்டநாள்போதாதோ
நீரியாயூர்வனவாய் நின்றநாள்போதாதோ.

(பொ - ரை) கிரிப்பிள்ளையாகவும், புழுவாகவும், நீரில் வாழும் ஜெந்துக்களாகவும்; ஊரும் ஜெந்துககளாகவும் பிறந்து பிறந்து இறந்து இறந்து வருத்தப்பட்ட காலம்

போதாதா? போதும், (ஆகையால் இனி உன்திருவடிகளை யடையும்படி திருவருள் பாலிக்க வேண்டும்.) (எ - று.)

மேலேசொன்ன ஒவ்வோர் பிறப்பையும் எடுத்து இருக்கும் போது தான்படும் துன்பங்களைப் பார்க்கிலும் இறக்கும் போது படும் துன்பம்மிகவும் பெரிதாகையால் இப்பட்டினத்தடிகளும் அத்துன்பத்தை நினைந்து நினைந்து இப்படி வருந்துகின்றார் இதுபற்றியே நமது மாணிக்க வாசகரும்,

'யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதினுக் கென்கடவேன், வானேயும்பெறில் வேண்டேன் மண்ணாள்வரன் மதித்துமிரேன்.

தேனேயு மலர்க்கொன்றைச்சிவனே" என்று தாய் பாடிய திரு வாசகத்தில் சொல்லியிருக்கின்றனர். 22

பூதமொடுதேதருமாய்ப் போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய் வீழ்ந்தநாள்போதாதோ.

(போ - ரை) பூதசம்பந்த மான பிறப்புக்களையும் தேவர்பிறப்பினையும், இராக்ஷதப் பிறப்பினையும் எடுத்தெடுத்து இதுவரைக்கும் பட்டபாடுகள் போதாதோ? போதும் (ஆனல், இனி என்னை அப்பிறவியினின்றும் நீக்கியருளல் வேண்டும்) (எ-று.)

இராக்ஷதர்கள் மிகவும் அற்பபுத்தியை யுடையவர்களாகையால் அவர்களுக்குக் கொஞ்சம் உயர்ந்தநிலைகிடைக்குமானல் தங்களுக்கு உயர்ந்தவர்களான தேவர்களையெல்லாம் துன்பப்படுத்துவது அவர்களுக்குச் சுபாவமாகையால் "வேதனை செய்தானவராய்" என்றார்.

உலகத்தின்கண் உயிர் எடுக்க வேண்டிய பிறப்புகளுக்கு அளவில்லை யாகையால் அவற்றில் சிலவற்றை எடுத்து வெளிப்படையாகச் சொல்லி அவற்றிலெல்லாம் பிறந்து பிறந்து இளைத்தேனே. இன்னும் அப்படி பிறப்பது எனக்கு ஒழிவில்லையே என்று வருந்துகின்றார். 23

அன்னைவயிற்றி லழிந்தநாள்போதாதோ
மன்னவனாய்வாழ்ந்து மரித்தநாள்போதாதோ.

(போ-ரை) (மேல்சொன்னவைக ளெல்லாம் போகப் பின்) தாயின் கருப்பத்தில் பத்துமாதம் தங்கி அப்பத்து மாதங்களிலும் நான் பட்டதுன்பம் போதாதோ? அம் மாதங்களில் பத்தாம்மாதம் பட்ட துன்பம் மிகவும் பெரி தாயிற்றே. அப்படியே இத்துன்பத்தை யநுபவித்து ஒரு அரசனாகப்பிறந்து ராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து பின்னர் இறந்து பட்டதும் போதாதா? அந்தோ! போதும்!! போதும் (இனியேனும் பிறவிக்கடலி னின்றும் கரையேற்றக் குருமூர்த்தமகா எழுந்தருளி வாராயோ?) (எ - று.)

தாய்வயிற்றில் பத்துமாதங்களும் படுந்துன்பங்களை:

"ஊனமில்யோனியி னுள்வினை பிழைத்து
மானிடப்பிறவியின் மாதாவுதரத்
தீனமில்கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித்தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதிவிளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம்பிழைத்து
மீரிருதிங்களிற் பேரிருள்பிழைத்து
மஞ்சுதிங்களில் முஞ்சுதல் பிழைத்து
மாறுதிங்களி னூறலர்பிழைத்து
மேழுதிங்களிற் றாழ்புவிபிழைத்து

மெட்டுத்திங்களின் கட்டமும்பிழைத்து
மொன்பதில்வருதரு துன்பமும்பிழைத்துந்
தக்கதசமதி தாயொடுதான்படுந்

துக்கசாகரத் துயிரிடைப்பிழைத்தும்" என்று ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந் திருக்கின்றனர். 24

தாயாகித்தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச் சென்றநாள்போதாதோ.

(போ - ரை) ஒருவனுக்குத் தாயாகவும், ஒருவனுக்குப் பெண்சாதியாகவும், ஒருவனுக்கு பிள்ளையாகவும், ஒருத்திக்குப் புருஷனாகவும் பிறந்து பிறந்து இறந்து இறந்து வருத்தப்பட்ட காலம் போதாதா (இன்னும் அப்படியே பிறக்கவருமோ? வாராதோ? அறியேன்.) ()

இதுவரைக்கும் எடுத்துக்கழிந்த ஜென்மங்களில் ஒன்றில் ஆணாகவும், ஒன்றில் பெண்ணாகவும், ஒன்றில் வேறு ரூபங்களாகவும் பிறப்பது சுபாவ மாகையால் நான் எத்தனைப் பிறப்பில் ஒருவனுக்குத் தாயாய்ப்பிறந்தேனோ? எத்தனைப் பிறப்பில் மனவியாகப் பிறந்தேனோ? எத்தனைப் பிறப்பில் பிள்ளையாகப் பிறந்தேனோ? எத்தனைப் பிறப்பில் ஒருத்திக்குப் புருஷனாகப்பிறந்தேனோ? தெரியாது ஆனால் இப்பிறவியிலேயோ ஆணாய்ப் பிறந்திருக்கின்றேன். இப்பிறப்பே மோக்ஷத்தை யடைவதற்குத் தகுந்த பிறப்பாகும். ஆகையால் எனக்கு உன் திருவடிகளைக் கொடுத்தருளல்வேண்டும் என்பதாம். 25

நோயுண்ணமெலிந்து நொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப் பிறந்தநாள்போதாதோ.

(போ - ரை) இதுவரைக்கும் எடுத்துள்ள அநேக ஜென்மங்களிலும் நோயானது என்தேகத்தைத்தொடர,

அதினால் நான் நொந்து வருத்தப் பட்டகாலம்போதாதா தங்களைத் தாங்களே அடித்துக்கொன்று தின்னும் பேய்ச் சென்மம் எடுத்துக் கழிந்தகாலமும் போதாதா? (இனி இவைகளை நீக்கி என்னை ஆட்கொள்ளலாகாதா? (எ - று)

தேகமானது தாயின் கருவில் பதியும்போதே பிணியுந் தொடர்கின்றது. அப்படிதொடர்ந்த பிணியோ கொடிய ஹிம்சையைச் செய்கின்றது. இப்படி செய்வதினால் உயிர்வருத்தத்தை யடைகின்றது; அதன் பிறகே தேகம் மூப்படைகின்றது. ஆகையினாலே, முன்னோர்கள் முன்னர் பிணியையெடுத்து, "பிணிமூப்புச் சாக்காடு" என்றார்.

பேய்கள் தங்களுக்குத்தாங்களே சண்டையிட்டு ஒன்றையொன்று பிடுங்கித் தின்னும் சுபாவ முடையவையாகையால் "பேயுண்ணப் பேயாய்" என்றார். 26

ஊனவடல்கூன்குருடாய் யுற்றநாள்போதாதோ
ஈனப்பொசிப்பி லிளைத்தநாள் போதாதோ.

(போ - ரை) மிகவும் அழிவதைத்தனக்குச் சுபாவமாகப் பெற்றுள்ள இந்தச்சரீரமானது (முன்னர் எடுத்துக்கழிந்த ஜென்மங்களில் கூனாகவும், குருடாகவும் தாய் வயிற்றிலிருந்து வெளிப்பட்டுத் திரிந்தகாலம் போதாதா? உண்ணும்படியான சாப்பாட்டுக் காகப் பணந் தேடித் திரிந்து அதினால் என்சரீர மானது இளைத்த காலம் போதாதா (இனியேனும்) அவைகளை நீக்கி யாட்கொள்ளலாகாதா? (எ - று)

ஒவ்வொரு பிறப்பிலும், கூனையும், குருடையும் நீக்கிப் பிறப்பதரிதாகையால் நான் அப்படிப்பட்ட விதமாக

எத்தனை பிறப்பு பிறந்தேனோ? என்பார் "ஊனவுடல் கூன்குருடாயுற்ற நாள் போதாதா" என்றார். 27

கூன்குருடு முதலியவற்றை, நீக்கிப்பிறப்பது அரிது என்பதை.

"அரிது அரிது விரிதிரைப்பாரினில்
மானிடமாகப் பிறப்பதரிது
மானிடமாகப் பிறந்திடுங்காலையில்
கூனுங்குருடுஞ் செவிடுமூமையும்

பேடுநீக்கிப் பிறப்பதரிது" என்று ஔவையார் சொல்லியிருக்கின்றனர்.

நான் வயிற்றின் நிமித்தமே யுழைத்து இளைத்தேனே யொழிய கணப்போதாயினும் சிவபெருமானைத்துதிசெய்து அதினால் இளைத்தேனில்லை, ஆகையால் இப்படிப்பட்ட எனக்கு அவனருள் கிடைப்பதெப்படியென்றார். "ஈனப் பொசிப்பி லிளைத்தநாள் போதாதோ" என்றார். 27

பட்டகளையும் பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டனென்று கேளாதும்போதாதோ.

(போ - ரை) நான் ஜென்மாந்தரங்களில் அடைந்த களையும், வருத்தமும் போதாதா? கெட்டு விட்டதென்னவோ கெட்டுவிட்டேன் இனி நன்மையை யடையப்போகிறதில்லை என்று பிறர்சொல்லும் நன் மார்க்கங்களைக் கேளாத காலம்போதாதா? (எ - று)

"மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்;, என்பதைக் கடைப்பிடித்துப் பெரியோர் சொல்லவந்த நற்புத்தியைக் கேளாமையாலல்லவோ இப்படி துன்ப மடையும் படி

யாயிற்றென்பார், "கெட்டநாள்செட்டனென்று கேளா தும் போதாதோ?" என்றார்.

நில்லாமைக்கேயழுது நின்றநாள்போதாதோ
எல்லாருமென்பார மெடுத்தநாள்போதாதோ.

(போ - ரை) என் தேகமானது நிலையாமையைக் குறித்து நான் அழுதழுது இருந்தகாலம்போதாதா? நான் பல தாய்மார் வயிற்றினிடமாக இருக்கும் போது அவர் கள் என்னுடைய பளுவைத் தாங்கியிருந்து வருத்தப் பட்டகாலம் போதாதா? (இனியேனும்) அவைகளை நீக்கி யாண்டருள்வது உனது கடமையல்லவா? (எ - று)

"எல்லாரு மென்பார மெடுத்தநாள்" என்றது இப் பட்டினத்தடிகள் பலதாய்மார் கருப்பத்தி லிருக்கும் போது அவர்கள் இவரைத்தாங்கி யிருந்தது. இதனால் என் பிறப்பு இன்னும் எப்பொழுது ஒழியும் என்னும் வினு வெளிப்படுகின்றது. 29

காமன்கணையாற் கடைபட்டல்போதாதோ
ஏமன்கரத்தா லிடியுண்டல்போதாதோ.

(போ - ரை) நான்பிறந்த ஜெந்மங்களில் மன்மதனு டைய ஐந்து பாணங்களி னாலும் துன்பப் பட்டது போதாதா? அந்தந்தச் சென்மங்களில் எமவாதைப் பட் டது போதாதா? (எ - று)

மன்மதன் ஐந்துபாணங்கள் ஆவன; தாமரை, மாம்பூ அசோகு முல்லை, நீலோற்பலம் என்னும் இவை. ஆனால் இவைகள் புஷ்ப பாணங்களானாலும் செய்யுங் கொடு மையோ பெரிது என்பார். "காமன்கணையாற் கடைப்பட் டல் போதாதா?" என்றார்.

இப்பாணங்களின் கொடுமைகளை

"நினைக்குமரவிந்த நீள்பசலைமாம்பூ
அனைத்துயரங்காட்டு மசோகு—வனத்திலுறு
முல்லைகிடைகாட்டு மாதேமுழுநீலம்
கொல்லைமதனம்பின் குணம்" என்று சொல்லியிருக்கின்றதினாலறிக. 30

நான்முகன்பட்டோலை நறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமி தேக்குண்டல்போதாதோ.

(பொ - ரை) பிரமதேவனால் எழுதப்பட்டுள்ள விதியோலையின்படி பட்டபாடு போதாதா? வண்டுகள் மொய்க்கும்படி தேனைத் தன்னிடத்தில் பெற்றுள்ள துளசிமாலையைத் தரித்திராநின்ற விஷ்ணுவினது சக்ராயுதத்தால் வருந்தியது போதாதா? (எ - று)

பிரமன் நான்குதிசைகளும் நான்கு முகங்களோடு கூடியிருப்பவனாகையால் அப்படைப்புக் காலத்தில் நான் அடைந்த துன்பத்துக்கு அளவில்லையென்பார். "நான்முகன்பட்டோலை நறுக்குண்டல் போதாதோ" எனவும், திதிகர்த்தா விஷ்ணுவாகையால் அவன் திதிக்குங்காலத்தில் தான் அடைந்த துன்பங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாமையினால் "தேன்துளபத் தானேமி தேக்குண்டல் போதாதோ" எனவுங் கூறினார். 31

உருத்திரனார்சங்காரத் தூர்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலை வாவென்றழைத்தையிலை.

(பொ - ரை) அந்தந்தச் ஜெந்மங்களின் கடையில் யாதொரு உருத்திர மூர்த்தியென்பவரால் செய்யப்பட்டு வராநின்ற சங்காரத்தில் நெருங்கி அடியுண்டகாலம் போதாதா? (சிவபெருமானே இப்படியெல்லாம் நான்

அநுபவித்து வராநின்ற) வருத்தத்தைத் தெரிந்தாயில்லை. அப்படி தெரிந்துகொண்டும் அடியேன்மேல் கிருபைவைத்து வாவென்று கூப்பிட்டு உன் திருவடிகளின்கீழ் சதா இருக்கும்படி ஆஞ்ஞாபித்தாயில்லை (ஆகையால் இனி நான் எப்படி பிழைப்பேன்.) (எ-று)

ஜென்மாந்திரங்களில் நீக்கும் இறப்பே சங்காரமும். அச்சங்காரஞ்செய்வோன் உருத்திரனுமாகையால் 'உருத்திரனர் சங்காரத் துற்றநாள்போதாதோ" என்றார். 32

(கன்னிவனநாதா சன்னிவனநாதா)

(பொ - ரை) கன்னிவனம் என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்!

பிறப்பைத்தவிர்த்தையில்லை பின்னுகக்கொண்டையில்லை
இறப்பைத்தவிர்த்தையில்லை பென்னென்றுகேட்டையில்லை.

(பொ - ரை) எனக்குத் தொன்று தொட்டு வந்து கொண்டேயிருக்கும் பிறவிகளை நீக்கிப் பின்னர் ஆட்கொண்டாயோ வென்றால் இல்லை (இது ஒழிய) சாக்காடு என்னும் துன்பத்தையாயினும் நீக்கினையென்றாலோ அதுவும் செய்தாயில்லை. என்னடிமையானவனே! ஏன் இப்படி வருந்துகின்றாய் என்று கேளாத நீயோ இவைகளையெல்லாம் நீக்கி என்னை அடிமைகொள்ளப் போகின்றாய்? இல்லை. (எ - று.)

"பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தார்.

இறைவனடி சேராதார்" என்று திருவள்ளுவர் திருவாய் மலர்ந்திருப்பதினால் உன்னுடைய திருவருளைப் பெற்றவனாக நினைத்திருக்கின்ற என்னுடைய பிறப்பிறப்புக்களை நீக்கவேண்டியவன் நீயேயென்றெண்ணி உனைப் லதர

மும் வேண்டவும் நீ அவைகளை நீக்காதிருப்பது எனக்கு இன்னும் பரிபாககாலம் வாராததினாலேயோ அறியேன் என்பது கருத்து. 33

பாசமெரித்தயிலை பரதவிப்பைத்தீர்த்தயிலை
பூசியநீற்றைப் புனையென்றளித்தையிலை.

(போ - ரை) (என்னுடைய ஆணவமலசம்பந்தமான) பாசத்தை உன்னுடைய ஞானக்கினியால் எரித்தாயில்லை (அப்பாசத்தா லுண்டான) துன்பத்தையேனும் நீக்கினையில்லை அன்பர்களால் பூசப்படுகின்ற திருநீற்றையேனும் கொடுத்து, ஓ அடியவனே! நீயும்தரித்துக்கொள் என்று திருவாய் மலர்ந்தாயில்லை. (இப்படி நான் கடைத்தேறுவதற்கான ஒரு உபகாரத்தை நீசெய்யாதபோது நான் எப்படி பிழைப்பேன்.) (எ - று)

நீ இப்படி ஒருபகாரத்தையும் செய்யாமலிருப்பதால் எனக்குப் பரிபாககாலம் வரவில்லையென்பது தோன்ற நான் மிகவும் வருந்துகின்றேன் என்பது கருத்து. 34

அடிமையென்றுசொன்னயிலை யக்குமணிதந்தையிலை
விடுமுலகம்போக்கியுன்றன் வேடமளித்தயிலை.

(போ - ரை) என்னை உனக்கு அடியவனென்று சொல்லி யாவருக்கும் தெரியும்படி வெளிப்படுத்தினையில்லை சிவசாதனங்களுள் ஒன்றாகிய உருத்திராக்ஷ மாலையை நீ அணிந்து கொள்ளுவா யென்று அநுக்கிரகித்தாயில்லை. (பெரியோர்களால் விடப்படுகின்ற உலகவாழ்க்கையை நீக்கி உன் திருவேடத்தை மேற்கொள்வதாகிய துறவைத் தைத்தந்தாயில்லை. ஆகையால் உன்னால் ஒருவழியையும் காட்டப் பெறாத நான் கடைத்தேறுவது எப்படி? (எ-று)

உருத்திராக்ஷம் உருத்திரன் கண்களினின்றும் உண்டானமையால் அம்மணிக்கு அப்பெயரிடலாயிற்று. இது காரணப்பெயர் அக்ஷம் - கண் - இதனைத்தமிழில் அக்ரம் என்பர்.

உலகவாழ்க்கையை விட்டோர் துறவிகள் ஆகையால் உன்றன் வேடம் என்றதற்கு துறவறம் என்று எழுதப்பட்டது. 35

உன்னிலழைத்தையிலை யொன்றாகிக்கொண்டயிலை
நின்னடியார்கூட்டத்தி னியலழைத்துவைத்தையிலை

(பொ - ரை.) என்னை, உன்னோடு சேரும்படி அழைத்து அத்துவிதத்தினுண்மை நிலைபாகச்செய்து கொண்டாயில்லை (அது உயர்ந்தபடி யாகையால் அது தகாதென்று நினைத்தாயானாலும்) உன்னுடைய திருத்தொண்டர் கூட்டத்திலானாலும் என்னை அழைத்துச் சேர்த்துவைப்பாயென்றாலோ: அப்படியும் செய்தாயில்லை. (இப்படியிருப்பதால் கடையில் நான் போகும்விதம் எப்படியோ அறியேன்,) (எ - று.)

ஒன்றாக்கிக் கொள்ளுதல் சிவத்தோரடிரண்டறக் கலக்கச்செய்து கொள்ளுதல் இதுவே அத்துவிதநிலை.

அடியார் கூட்டத்தில் சேர்ந்திருப்பதும் ஒரு சாதனமாகையால் அதையாயினும் எனக்கு அருள்செய்யல் வேண்டும் என்பார். "நின்னடியார் கூட்டத்தி னியலைத் துவைத்தையிலை" என்றார். 36

ஒங்குபரத்து ளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியா னெமக்கென்றுரைத்தையிலை.

(பொ - ரை) எக்காலத்தும் குறைதலில்லாமல் விருத்தியடையா நின்றமேலாய் பரம்பொருளிடத்தில் ஒன்றாகச்

சேர்ந்துயிருக்கின்ற மெய்யடியார்களுக்கு இவன் ஒரு அடியவனுவான். அவர்களுக்கு அடியவனுயிருப்பதால் எனக்கும் அடியவனுவானென்று (உலகத்தார் அறியும்படி ஒரு வார்த்தை) சொன்னுயில்லை (அப்படி சொல்லுவாயானுல் நான் அன்றேபரகதி யடைந்தவனுனேன். (எ-று.)

பரம் - பரம்பொருள். அதுவேசிவம் ஒளித்தல் - இரண்டறக் கலத்தல். இதுவே மோக்ஷமிலே. 37

நாமந்தரித்தையிலே நாவெழுழியமின்றையிலே
சேமவருளிலெனைச் சிந்தித்தழைத்தையிலே.

(போ - ரை) (இவனுமோர் சிவபத்தனுவான் என்கிற) பேரை எனக்குச் சூட்டினுயில்லை. நான் என்னும் அகங்காரத்தை என்னைவிட்டு நீங்கச்செய்து நீவந்து என் மனதிற் குடிகொண்டாயில்லை. (இப்படி நீயேவந்திருக்கப் பிரியமில்லா விட்டாலும் என்னையானுலும் உன்னுடைய களஞ்சியமான திருவருளில் அழைத்து நீயிவ்விடத்திலிருப்பாய் என்று வைத்தாயில்லை) (இப்படி ஒன்றுஞ் செய்யாமலிருந்தால் வேறு யார் என்னை ஈடேற்றுவல்லவர்.) ()

சிவனருளானது என்றும் குறையாததாகையால் களஞ்சியமென்று எழுதப்பட்டது. திருவருளை யநுபவிக்குந்தோறும் அது தெவிட்டுதலில்லையென்பார். 'சேமவருள், என்றும், இவனுடைய பரிபாக காலமானது இவ்வளவில்தான் இருக்கக்கூடும் என்றுபார்த்து அவ்வளவில் திருத்திவையென்பார், 'சிந்தித்து, என்றும் கூறினுர். (38)

முத்தியளித்தையிலே மோனங்கொடுத்தையிலே
சித்தியளித்தையிலே சீராட்டிக்கொண்டையிலே.

(போ - ரை) எனக்கு மோக்ஷத்தைக் கொடுத்தாயில்லை, (அம்மோக்ஷத்திற்குச் சாதனமான மௌனத்தை

யும் கொடுத்தாயில்லை) இவ்விரண்டும் கைகூடும்படியான சித்தியையும் கொடுத்தாயில்லை, என்மேல் அன்புவைத்துச் சீராட்டல் செய்து என்னை அடிமையாகவும் கொண்டாயில்லை. (எ - று.)

நீயே என்னை இப்படி அவமதித்து விட்டால் உன்னை விடவேறு எந்தத் தெய்வத்தை அடைந்து நான் அவைகளைப் பெற்றுக் கொள்வேன், இல்லை என்றபடி, 39

தப்பைத்தவிர்த்தையிலை தானுக்கிக்கொண்டயிலை
அவிப்பரியத்தீயாமென் ஞசைத்தவிர்த்தையிலை.

(போ - ரை) நான்படும் பரிதவிப்பை நீக்கினுயில்லை உன்னை உன்னுடைக்கியஞ் செய்து கொண்டாயில்லை, (இதுபோக) என்றும் கெடுப்பதற் கருமையான நெருப்பாகிய என்னுடைய ஆசையையும் நீக்கினுயில்லை, ஆகையால் நான் உப்படி உஜ்ஜீவிப்பேன், (எ - று.)

தான் பேரின்பத்தை அடைவதற்காக முயற்சிசெய்வதில் அநேகத்துன்பங்கள் தன்னைவந்து சேர்கின்றனவாகையால், 'தவிப்பைத் தவிர்த்தையிலை, என்றும், ஆசையானது ,உள்ளிருந் தெரித்துக் கொண்டே யிருப்பதால், அதினை, 'அவிப்பரிய தீயாமாசை, என்றார். 40

நின்றநிலையி னிறுத்திபெனைவைத்தை யிலை
துன்றுங்கரணமொடு தொச்சுழியப்பார்த்தையிலை.

(போ - ரை) (பெரியோர்களெல்லாம் சதாவிருந்து உன்னுடைய திருவருட்போனத்தை யுண்டிருக்கும்) மௌனநிலையில் நீயும் இருப்பாயென்று சொல்லி என்னை அவ்விடத்தில் நிறுத்தி வைத்தாயில்லை, (அங்ஙனம் செயயாமற் போனுலும் போக) என்னை நெருங்கி (எனக்குப் பலகாலும் துன்பத்தை விளைந்துக்கொண்டேயிருக்கும்) அந்தக்

கரணங்களை யொடுக்கித் தூலதேகத்தையும் நீங்கினாயில்லை இங்ஙனம் நீ சும்மா விருப்பதைப் பார்க்குமிடத்து என க்கு இன்னும் பரிபாககாலம் வரவில்லையாகத் தோன்று கின்றது. (எ - று.)

நின்றநிலை-என்றது மௌனநிலை, அல்லாமல் நீ யிருக் கின்ற இடம் என்பதும் பொருந்தும் 41

கட்டவுலகக்காட்சிக் கட்டொழியப்பார்த்தையிலை
நிட்டையிலேநில்லென்று நீநிறுத்திக்கொண்டையிலை.

(போ - ரை) (என்றும் அழியாததாக யாவராலும் நினைக்கப்பட்டிருக்கும் உலகமாய்கையின் பந்தத்தினின் றும் என்னை நீக்கினாயில்லை) அன்றி, சதாநிஷ்டாபரனா யிருப்பாயாக என்று திருவாய் மலர்ந்து அந்த நிஷ்டை யின் கண்ணாயினும் நிறுத்திவைத்தா யென்றாலோ, அது வும் செய்தாயில்லை, (இனி என்னைக்காப்பாற்று வோர் யாவர்.)

உலகமாய்கையை நீக்குவது ஒருதரமும், நிஷ்டை யில் நிறுத்துவது ஒருதரமுமாகச்செய்வதுஏற்றுக்கு, அப் படி வேண்டாம் முதலில் நிஷ்டையிலேயே நிறுத்துவா யானால் உலகமாய்கையானது தானாய் நீங்கிவிடுமென்பார்.

'சட்டநீ நிறுத்திக்கொண்டையிலை, என்றார்.

நிஷ்டையாவது இரேசக, பூரக, கும்பங்கள் செய்வ தாகிய பிராணாயாமத்தால் கைகூடப் பெறும் யோகமாகு மென்று சிலர் நினைக்கின்றனர். அப்படியன்று, தேகப் பற்றுவிட்டு மனத்தை யொடுக்கிச்சாக்கிராதீதம் என்கிற இடத்தில் வேறோர் பகுப்பையும் எண்ணாமல் சிவபெரு மான் திருவடிகளைச் சிந்தித்திருப்பதேயாகும். இதனை.

"நிஷ்டையாவது நெட்டுயிர்ப்பறவுடனிமிர்ந்துவாய் விழுமுடிப், பட்டவாயினீர் வறண்டிடவடதிசை பார்த்துறைந்திடும்யோகோ, சட்டகத்தினைப் பிரித்துளப்பதைப்பறச் சாக்கிராதீதத்தே, சுட்டிறந்து நின்றிளசை நாயகன் கழல் சூழ்ந்திடுஞ் செயலன்றோ"

என்று சிவஞானமுனிவர் சொல்லியிருக்கின்றதினுலறிக. 42

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ - ரை) கன்னிவனம் என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

கடைக்கணருள் தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக் கிட்டிவரப்பாரேடா.

(பொ - ரை.) மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளே என்னை எக்காலமும் கெடுத்துக்கொண்டே வராநின்ற மும்மலங்களையும் நீக்கி உன்னை நெருங்கிவரும்படி உன்னுடைய திருவருட்கிருபாகடைநோக்கல் கொஞ்சம் பார்த்தருளல் வேண்டும், (எ - று)

அப்படி செய்யாது விடுவாயானுல் நான்பிழைப்பேன் என்பது குறிப்பு.

காதல்தணியேனே கண்டுமகிழேனே
சாதலதவிரேனே சங்கடந்தான்தீரேனே.

(பொ - ரை) (கடவுளே! நீ) என்னிடத்தில் கிருபாநோக்கம் வைப்பாயானுல், நான் என்னுடைய ஆசையை ஒழிக்கமாட்டேனே? உன்னை தரிசித்து ஆநந்திக்க மாட்டேனே? இறப்புத் துன்பத்தினின்றும் நீங்க மாட்டேனே? அதினுல் உண்டாகும் சங்கடங்களையும் நீக்கிக்கொள்ள மாட்டேனே? (எ - று)

ஆகையால் நீ எனக்கு அப்படியே கிருபாநோக்கம் தந்தருளல் வேண்டும் என்பது குறிப்பு.

உன்னைத் துதியேனே வூர்நாடிவாரேனே
பொன்னடியைப்பாரேனே பூரித்துநில்லேனே.

(போ - ரை) எக்காலத்தும் உன்னைமறக்காமல் துதி செய்ய மாட்டேனே? நீ எழுந்தருளியிருக்கும் ஊர்கள் தோறும் வரமாட்டேனே அப்படி அவ்வூர்களில் வந்து உன்னுடைய திருவடிகளைத் தரிசிக்க மாட்டேனு, அப்படி அத்திருவடிகளைத் தரிசித்ததினுல் ஆநந்தபரவசனுய் நிற்க மாட்டேனு? (எ - று.)

இப்படி யெல்லாம் நடக்க வேண்டினேனுகையால் எனக்கு நீ எவ்விதத்திலும் திருவருள் பாலிக்க வேண்டும் யென்பது குறிப்பு. (எ - று)

ஓங்காரப்பொற்சிலம்பி னுல்லாசம்பாரேனே
பாங்கான தண்டை பலபணியும்பாரேனே.

(போ - ரை) (மேலேசொன்னவிதமாக உன்னுடைய திருவடிகளைத் தரிசிக்கும் போது) அத்திருவடிகளினின் றும் விளங்காநின்ற ஓங்காரரூபமாகி அழகிய சிலம்பினது விநோதக் காட்சியையும், பரிபக்குவமான சதங்கையும், இன்னும் வேறு ஆபரணங்களையும் தரிசிக்க மாட்டேனு?

ஓங்காரமானது நாதமாத்திரையாய் நிற்பதாகையாலும், காலில் தரிக்கும் சிலம்பும் நாதத்தைக் கொடுப்பதாகையாலும் அவ்வோங்காரத்தைச் சிலம்பாகக்கூறினுர்.

வீரகண்டாமணியின் வெற்றிதனைப்பாரேனே
சூரர்கண்டுபோற்றுமந்தச் சுந்தரத்தைப்பாரேனே

(போ - ரை) (இன்னும்) வீரகண்டாமணியைத் தரித்துள்ள ஜெயத்தையும், மகாபுஜபலபராக்கிரமம் பெற்றுள்ள சூரர்களால் சதாதுதிக்கப்படுகின்ற உன்னுடைய அழகையும் நான் தரிசிக்கமாட்டேனோ? (எ-று)

ஆனால் அப்படி தரிசிப்பதற்கு இடையூறாக இருப்பது உன்னுடைய திருவருள் கிடைக்காமையாலேயாம் என்பது குறிப்பு. 47

இடையில்புலித்தோ லிருந்தகலம்பாரேனோ
விடையிலெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனோ.

(போ - ரை.) (இன்னும்) என்னுடைய இடுப்பின்கண் தரித்திருக்கும் புலித்தோலாகிய வஸ்திரத்தின் அழகையும், இருஷபவாகனத்தின்மேல் எழுந்தருளும் பராக்கிரமத்தையும் தரிசிக்கமாட்டேனோ (தரிசிப்பேன், ஆனால் உன்னுடைய திருவருள் எப்படியோ? நான் அறியேன்) ()

சிவபெருமான் புலித்தோல் தரித்தது தாராகாவனத்து ரிஷிகளால் நிகழ்ந்தமைவிடையிலெழுந்தருளும் என்றது ரிஷபவாகனசேவை. 48

ஆனையுரிபோர்த்த வழகுதனைப்பாரேனோ
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனோ.

(போ - ரை) (இன்னும்) யானையின் தோலைப் போர்வையிட்டிருக்கின்ற அழகையும், மானை இடதுகரத்தில் தாங்கியிருக்கின்ற அழகையும் நான் தரிசிக்கமாட்டேனு!

ஆனைபோல் ஆர்ப்பரித்து வாராநின்ற உயிர்களின் ஆணவத்தை நீக்குங்குறியாக ஆனைத்தோலைப் போர்த்தும் மானிடர்களை ஆளும்பொருட்டே மானிட ரூபந்தாங்கி குருவாகவருவோம் என்பதற்கு அறிகுறியாக மானை இடதுகரத்தில் தாங்கியும் எழுந்தருளி யிருக்கின்றபடியால்,

அப்படிப்பட்ட கோலத்தை நான் சேவிக்க வேண்டியது அவசியம் ஆனல் என்னுடைய பரிபாகம் எப்படி யிருக்கின்றதோ? என்பது புதைப்பொருள். 49

மாண்டார்தலைப்பூண்ட மார்பழகைப்பாரேனே
ஆண்டார்நமக்கென் றறைந்துதிரியேனே.

(பொ - ரை.) இன்னும் (சர்வ சங்கார காலத்தில்) இறந்துபட்ட (தேவர்களது) தலைகளை யெல்லாம் மாலையாகக் கொண்டணிந்துள்ள மார்பின் அழகைப் பார்க்கமாட்டேனே (அல்லாமல்) யாதொரு சிவ பெருமானே நம்மை யெல்லாம் அடிமைகொண்டு ஆண்டருளுந்தயாபரரென்று உலகத்தார்க்குச் சொல்லித்திரியமாட்டேனே? (எ-று)

இறந்துபட்ட தேவர்கள் என்று எழுதியது பிரம, விட்டுணுக்களை, தலைபூண்ட என்றது-சர்வசங்கார காலத்தில் அப்பிரம, விட்டுணுக்களும் இறக்க, அவர்களைமீண்டு அவ்வத்தொழில்களுக்கு நியமிக்குங் காலத்தில் நாங்களே கடவுளாவோம் என்று இறுமாப்படைவார்களாகையால், அவ்விறுமாப் படையாதபடி அவர்களுக்குக் காட்டும் பொருட்டு அவர்கள் தலைகளை மாலையாய்ப்பூண்டார் என்பதாம் இது ஸ்காந்தபுராண விருத்தாந்தம். 50

கண்டங்கறுத்துநின்ற காரணத்தைப்பாரேனே
தொண்டர்குழிவிநின்ற தோற்றமதைப்பாரேனே.

(பொ - ரை) ஓ சுவாமி! இன்னும் உன்னுடைய கண்டமானது கருப்பாக விருப்பதால் தோன்றும் அழகையும் (அவ்வழகைக்காணும்) பொருட்டே, அல்லது (வேறு எதற்காகவோ) அடியார்களெல்லாம் கூட்டங் கூட்டமாகக் கூடியிருக்கின்ற காட்சியையும் நான்தரிசிக்கமாட்டேனே)

கண்டங்கறுத்து நின்றது-நீலகண்டகோலம். இது திருப்பாற் கடலில் உண்டான ஆலகாலவிஷத்தை அமுது செய்து நிறுத்தித் தேவர்கள் இறுமாப்படையாதபடி
வைத்த குறியாகும். 51

அருள்பழுத்தமாமதியா மாநநத்தைப்பாரேனோ (னோ
திருநயனச் சடையொளிருஞ் செழுங்கொழுமைப் பாரே

(போ - ரை) இன்னும் திருவருட் (பழமானது) பழுத்துள்ளசந்திரனைப்போன்றமுகத்தின் அழகையும், உனது திருவருட்கடைக்கிருபா நோக்கத்தின் கொழுமைபொருந்திய அழகையும் தரிசிக்கமாட்டேனோ? (எ-று.)

பழுத்த என்றதினால் அருள் என்றதற்குப் பழம் என்று பொருள் எழுதப்பட்டது.

செங்குமிளின்றுண்டம்வளர் சிங்காரம்பாரேனோ
அங்கனியைவென்ற வதரத்தைபாரேனோ.

(போ - ரை) (இன்னும்) செவந்த குமிழம் பூவைப் போன்ற மூக்கினிடத்தில் விளங்கிக் கொண்டிருக்கும் அழகையும், அழகியகொவ்வைக்கனிக்கும் அதிகமான செம்மைநிறத்தோடு கூடிய வாயிதழ்களின் அழகையும் தரிசிக்கமாட்டேனோ (எ - று.)

அங்ஙனம் தரிசிக்காவிட்டால் நான் கடைத்தேறுவதில்லை யென்பது எனக்கு நன்றாய்த்தெரிந்த விஷயமாகையால் தரிசிக்காமல் விடமாட்டேன் என்பது குறிப்பு.

முல்லைநிலவெறிக்கு மூரலொளிபாரேனோ
அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனோ.

(போ - ரை) (இன்னும்) முல்லைப்பூவைப் போலவும், சந்திரனொளியைப்போலவும் வெண்மையைவீசாநின்ற பல்

வரிசையின் அழகையும், கறுத்த புருவங்களின் அழகையும் தரிசிக்கமாட்டேனே (எ - று.)

நீ என்னைச் சும்மாவிட்டாலும் நான் தரிசிக்காமல் விடமாட்டேன் என்பது குறிப்பு. 54

மகரங்கிடந்தொளிரும் வண்மைதனைப்பாரேனே
சிகரமுடியழகுஞ் செஞ்சடையும்பாரேனே.

(போ - ரை) (இன்னும்) மகரமீனைப் போலிருந்து விளங்கா நின்ற வண்மையையுடையகாதுகளின் அழகையும், சிரசின் கண்ணிருந்து விளங்கும் முடியின் அழகையும், செவந்த சடாபாரத்தின் அழகையும் தரிசிக்கமாட்டேனே, (எ - று.)

மகரம் சுறுமீன், அதைப் பெண்கள் காதுக் கொப்பிடுவதற்கே பெரும்பாலும் இலக்கியமுண்டு. ஆகையால், மகரம்கிடந் தொளிரும் என்றதற்கு சுறுமீன் வடிவாகச் செய்யப்பட்டுள்ள மகரகுண்டலங்கள் இருந்து விளங்கா நின்ற காதுகள் எனப்பொருள் கொள்ளலு மொன்று. ஆனல் முன்னர் பிழைபடப் பொருள்கூறுவானேன் என்று வினவினல்:

"சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர

முத்தியான முதல்" என்று ஆன்றோர் சொல்லியிருக்கின்ற படியால் அச்சத்தியாய் விளங்குபவனும் இவனேயாவான், ஆகையால் பெண்கள் காதுகளுக்குச் சொல்லும் உவமானப்பொருளான மகரத்தையே இவன் காதுகளுக்குங் கற்பிக்கரியாய மிருந்ததென்றறிக. 55

கங்கையொடுதிங்கணின்ற காட்சிதனைப்பாரேனே
பொங்கரவைத்தான்சடையில் பூண்டவிதம்பாரேனே

(பொ - ரை) (இன்னும்) கங்காதேவியும், சந்திரனும் இருந்து விளங்கா நின்ற மிக்க அழகையும், உக்கிரத்தை யுடைய சர்ப்பங்களைச் சடாபாரத்தின்கண் தரித்திருக்கும் அழகையும் தரிசிக்கமாட்டேனோ தரிசிப்பேன். (எ - று)

ஆனால் உன்னைப்பின்பற்றி வருவேனானால் நீயணிந் திருக்கும் பாம்பானது என்னைக்கடித்து விட்டால் நான் என்ன செய்வேன் என்று அஞ்சுகின்றேன் என்பது ஒரு வியப்புப்பொருள். 56

சரக்கொன்றைபூத்த சடைக்காட்டைப்பாரேனோ
எருக்கறுகூமத்தையணி யேகாந்தம்பாரேனோ.

(பொ - ரை) சரக்கொன்றை மலர்கள் பூத்திருப்ப தால் விளங்கா நின்ற கற்றையாகிய சடாபாரக்காட்டின் அழகையும், எருக்கம்பூ அறுகம்புல், ஊமத்தைப்பூ இவை களை அணிந்திராநின்ற தனிக்கோலத்தின் அழகையும் தரி சிக்கமாட்டேனோ? (எ - று)

சிவபெருமான் தமது சடையில் கொன்றை மாலை யைத் தரித்திருப்பதினாலும், அச்சடை மிகுதியா யிருப் பதினாலும், அச்சடையைக்காடாகவும், அக்காட்டில் சரக் கொன்றை மரங்களை மிகுதியும் நெருங்கிப் புஷ்பித்திருப் பதாகவும் உவமித்துக் கூறினார்; 57

கொக்கிறகுசூடிநின்ற கொண்டாட்டம்பாரேனோ
அக்கினியையேந்திநின்ற வானந்தம்பாரேனோ

(பொ - ரை) (இன்னும்) கொக்கின் இறகுகளைத்தரித் துக் கொண்டிராநின்ற அழகையும், வலதுகரத்தில் மழு வைத்தாங்கிக் கொண்டிராநின்ற அழகையும் தரிசிக்க மாட்டேனோ (எ - று)

நான் இவ்வுலகத்தின்கண் பிறந்ததே உன்னைத் துதிக்கும் பொருட்டும் உன்னுடைய கோலத்தை தரிசிக்கும் பொருட்டுமாகையால் நான் வீணேகாலத்தைச் செல்லவிட மாட்டேன் என்பது குறிப்பு,

தூக்கியகாலுந் துடியடியும்பாரேனே
தாக்குமுயலகன்மேற் றாண்டவத்தைப்பாரேனே

(பொ - ரை.) (இன்னும்) உனது குஞ்சித பாதத்தையும். அப்பாதத்தால் நடிப்பும் நடிப்புக்குத் தக்கவிதமாக அடிபடும் உடுக்கையின் அடியையும், முயலகன் மேல் நாலூன்றி நடிக்கும் நடனத்தையும் நான் தரிசிக்கமாட்டேனே (எ - று.)

உலகத்தில் உனது திருவடிகளை அடியு நிமித்தமே பலவகையாகத் துதிசெய்வதாகையால் அத்திருவடிகளால் செய்யும் நடனத்தையே நான் அவசியம் தரிசிப்பேன் என்பது குறிப்பு, 59

வீசுகரமும் விகசிதமும்பார்ரேனே
ஆசையளிக்கு மபயகரம்பாரேனே

(பொ - ரை) நீ வீசிக் கொண்டிராநின்ற கையையும், நின்மலர்ச்சியையும், பிராணிகளுக்கு உன்மேல் அன்பைக் கொடுத்து வராநின்ற அபயாஸ்தத்தையும் நான் தரிசிக்கமாட்டேனே (எ - று)

நினது இரண்டுகரங்களும் உயிர்கள் நன்மையையடையும்படியான காரியத்தையே செய்து கொண்டு வருகின்றன வாகையால் நான் அவைகளைத் தரிசிப்பேன் என்பது குறிப்பு. 60

அரிபிரமர்போற்ற வமரர்சயசயெனப்
பெரியம்மைபாகம்வளர் பேரழகைப்பாரேனே

(பொ - ரை) விஷ்ணுவும், பிரமனும் துதிசெய்யவும், தேவர்களெல்லாம் ஜய ஜய! என்றுவாழ்த்து கூறவும், உமாதேவியானவள் இடப்பாகத்தில் இருக்கும்படி நீ எழுந்தருளியுள்ள மிக்க அழகைத் தரிசிக்கமாட்டேனு.

சிவன் பார்வதா தேவியோடும் எழுந்தருளியுள்ள கோலமானது சர்வசத்தியையும் உடையதாகையால் அது பிரம, விஷ்ணுக்கள் போற்றத்தகுந்த தென்பார், 'அரிபிரமர்போற்ற' என்றார். 61

சுந்தரநீற்றின் சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனைத் தயவுசெய்தல்பாரேனோ

(பொ - ரை) உன்னுடைய அழகுபொருந்திய விபூதியின் விநோதத்தையும், சந்திரனைச் சடாபாரத்தில் வைத்துள்ளதாகிய சந்திரசேகர மூர்த்தியென்று சொல்லப்படுகின்ற கோலத்தோடு எழுந்தருளிவந்து (உலகத்தார்க்கு) அருள்செய்யும் திறத்தையும் தரிசிக்க மாட்டேனு,

"சுந்தரமாவதுநீறு" என்று ஆன்றோர்கள் சொல்லியிருப்பதால் 'சுந்தரநீற்றின் சொகுசுதனை, என்றார்,

சந்திரசேகர மூர்த்தம் சாந்தமுள்ள தாகையால் 'தயவு செய்தல் பாரேனோ, என்றார், 62

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ - ரை) கன்னிவனம் என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

கெட்டநாள்கெட்டாலுங் கிருபையினிப்பாரேடா
பட்டநாள்பட்டாலும் பதமெனக்குக்கிட்டாதோ

(பொ - ரை) நான் அப்பாத்தை படையும்படியாகப் பாடுபட்டகாலம் போனாலும் போக, (ஆனால்) அந்த

மேலான பரம் பொருளானது எனக்குக் கிடைக்காதா, கிடைக்கும் ஆகையால் அது கிடைக்காமற் போனகால மெல்லாம் போகட்டும் இனியானாலும் உனது திருவருட் கிருபாகடாட்ச வீட்சண்யத்தைக் கொஞ்சம் வைப்பா யாக (எ-று.)

வீணே போனநாள் போக இனியேனும் எனக்குத் திருவருள் பாலிக்கவேண்டும் என்பது கருத்து. 63

நற்பருவமாக்குமந்த நாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்ற வேதாந்தங்கிட்டாதோ

(போ - ரை.) நல்லபரிபாக மடையும்படியான கால மானது எனக்கு வாராதா, அந்தப் பரிபாககாலமும் ஒழிந்து பட்டுப்பின்னர் அடையா நின்ற தனியேயிருப்ப தாகிய ஏகாந்த ஞானமானதும் எனக்குவராதா (எ - று.)

"ஏகாந்த மேலான ஞான வின்ப நிஷ்டையர்கோடி" என்று தாயுமானவர் திருவாய்மலர்ந் திருப்பதினால் இப் பட்டினத் தடிகளும் அதையே விரும்பி 'ஏகாந்தம் கிட் டாதோ' என்றார். 64

வாக்கிறந்துநின்ற மவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுத்திகிட்டாதோ

(போ - ரை) வசனம் ஒழிந்து (சிவசமாதியில்) நிற்ப தாகிய மேலான ஞானமானது எனக்குவராதா, எப்பொ ருளின்மேலும் பற்றுதலில்லாத தற்புத்தியும் எனக்கு வராதா (எ - று.)

"வாக்கிறந்த பூரணம்" என்று முன்னோர்கள் சொல்லி யிருப்பதினால், வாயின்தொழில் அற்றவிடமே

மௌனமாகையால் 'வாக்கிறந்து நின்ற மௌனமது கிட்டாதோ' என்றார். 65

வெந்துயரைத்தீர்க்குமந்த வெட்டவெளிகிட்டாதோ
சிந்தையையுந்தீர்க்குமந்தத் தேறலதுகிட்டாதோ

(பொ - ரை) கொடிய துன்பங்களை யெல்லாம் நீக்குகின்ற வெறும் வெளியானது எனக்குவாராதா, என்னுடைய எண்ணங்களை முடித்து வாராநின்ற தேவாநந்தத் தேனானது எனக்குவாராதா.

சிந்தையிறந்து நின்றவிடமே தேன்போ லினிப்பதாகையால் சிந்தையையும் தீர்க்குமந்தத் தேறலது கிட்டாதோ, என்றார். 66

ஆனவடியார்க் கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னை யுணர்த்துவித்தல்கிட்டாதோ

(பொ - ரை) உன்னுடைய திருத் தொண்டுக்குரிய அடியவர்களுக்கு அடியவனாக என்னையும் கொள்ளும்படியானவகை எனக்கு வாராதா, குற்றம்வாராதபடி எனக்கு திருவாய் மலரும் உபதேசமானது வாராதா. (எ-று.)

என்னை உன்னடியவர்க் கடிமையாக்க வேண்டும், எனக்குமோக்ஷ நிலையை யுபதேசிக்க வேண்டும் என்பது கருத்து. 67

என்னென்றுசொல்லுவண்டா வென்குருவேகேளடா
பின்னையெனக்குநீ யல்லாற்பிறிதில்லையே

(பொ - ரை) என்னுடைய குருசுவாமி! நீயல்லாமல் எனக்கு நெருங்கிய துணையாவர் வேறொருவரில்லை யாகையால் நான் இன்னும் எப்படி சொல்லி வருந்துவேன்.

நீயே எனக்கு உயர்ந்த துணையானவனாகையால் நான் உன்னிடத்தில் சொல்லி வருத்தப்படாமல் வேறு எவரிடத்தில் சொல்லி வருந்துவேன் என்பது கருத்து, ()

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

(போ - ரை) கன்னிவனம் என்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

அன்னவிசாரமது வற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிசாரந் தொலைந்தவிடங்கிட்டாதோ.

(போ - ரை) பெரியோர்கள் சோற்றுத்துன்பத்தையொழிந்து நின்றவிடம் எதுவோ? பொன்னாசை நீங்கி நின்ற இடம் எதுவோ அந்த இடமானது எனக்கு வாராதா. (எ-று.)

அன்னத்தால் அடையும் துன்பத்தையும் சொர்னம் தேடுததால் அடையும் துன்பத்தையும் நீக்கி நின்ற இடமே மோக்ஷமாகையால் அந்த இடத்தையே எனக்குப் பாலித்தருளல் வேண்டும் என்பது கருத்து. 69

உலகவிசார மொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழுவின்மின்னார் வசியாதுங்கிட்டாதோ.

(போ - ரை.) மண்ணாசை நீங்கிநின்ற இடம் எதுவோ ஆணவமல சம்பந்தமான பெண்கள் ஆசையானது நீங்கி நின்ற இடம் எதுவோ அந்த இடமானது எனக்கு வாராதா? (எ-று.)

மண்ணாசை, பெண்ணாசைகளை நீங்கி நின்ற இடமே மோக்ஷமாகும். ஆகையால் அவ்விடத்தையே எனக்குத் தந்தருளல் வேண்டும் என்பது கருத்து. 70

ஒப்புவமைபற்றோ டொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத் தெளிந்தவிடங்கிட்டாதோ

(பொ - ரை) சமானம், திருஷ்டாந்தம், பந்தம் ஆகிய இவைகள் நீங்கி நின்ற இடம் எதுவோ? வாயினால் சொல்லுதற் கருமையான தெளிந்த இடம் எதுவோ அவ்விடமானது எனக்குக் கைகூடாதா?

அவ்விடம் கைகூடும்படி எனக்கு அருள்செய்வோன் நீயே யாவாய் என்பது கருத்து. 71

வாக்குமனாதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவேநின் றாளிணைக்கேயான்போற்றி.

(பொ-ரை) வாக்குக்கும், மனத்திற்கும், அதீதப்பட்டு விளங்காநின்ற இடத்தின்கண் போகும்படி என்னை உபதேசமார்க்கமாகச் செலுத்தவந்த திருவருட்குருவே! உன்னுடைய இரண்டு திருவடிகளுக்கே நான் (பலகாலும்) துதிசெய்கின்றேன். (எ - று.)

'அவாங்மனோ கோசர' னாகலின் 'வாக்குமனாதீத' 'வகோசரம்' என்றார். 72

பட்டினத்தார் முதல்வன் முறையீடு
முற்றுப் பெற்றது.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

மகளே முன்னிலையாகத் திருவாய்மலர்ந்த

# அருட்புலம்பல்.

ஐங்கரனைத்தெண்டனிட்டே னருளடையவேண்டுமென்று
தங்காமல்வந்தொருவன் றற்சொரூபங்காட்டியெனைக்

(பொ - ரை.) நான் திருவருளை யடையவிரும்பி ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளை நமஸ்காரம்செய்தேன், அப்படி நான் செய்ததினால் தடையில்லாமல் ஒருவர் வந்து தன்னுடைய சொரூபத்தைக்காட்டி அடியேனாகிய என்னை: (எ - று.) 1

கொள்ளைப்பிறப்பறுக்கக் கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி

(பொ - ரை) ஓபெண்ணே! தொன்றுதொட்டுத்தொடர்ந்துவந்துகொண் டிராநின்ற மிகுந்த ஜென்மத்தை அறவேகளையும்படி மேலேசொன்ன அவன், ஞானசாரியனாகவும், வஞ்சகத்தையுடைய புலன்களை யொடுக்கும்படி காரணகுருவாகவும், திருவருட்டேகங்கொண்டு எழுந்தருளிவந்தான். (எ - று.)

ஆ! ஆ!! ஈதென்ன பெருங்கருணைத் திறமோநான் அறியேன் என்பது குறிப்பு.

புலன்களாவன,—சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்பன. 2

ஆதாரமோராறு வைம்பத்தோரக்ஷரமும்
ஆதானகோட்டையெல்லாஞ் சுட்டான்றுரிசறவே

(பொ - ரை) ஓபெண்ணே! ஆறுதாரங்களையும், அவ்வாராதாரங்களில் நிலைத்துள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களையும், அவ்வாதாரகோணங்களைச் சுற்றியிடப்படும் வளயங்களாகிய கோட்டைகளையும் குற்றம் நீங்கும்படி அறவோ வொழித்தான். (எ - று)

ஆதாரம் ஆறு என்றது-மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன. இவைகளுக்கு முக்கோணம், நாற்கோணம், பிறைக்கோணம், முக்கோணம், அறுகோணம், வட்டம் என்னும் சக்கரங்களும், அச்சக்கரங்களுக்குமுறையே நான்கு, ஆறு பத்து, பன்னிரண்டு, பதினாறு, மூன்று என்கிற இதழ்களும் இருக்கின்றன. அவ்விதழ்களில் ஒவ்வோரிதழுக்கும் ஒவ்வொரு எழுத்துகளிருக்கின்றன. அவையே ஐம்பத்தோரட்சரமாகும். 3

மெத்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந் தலைகெட்டுவந்ததடி

(பொ - ரை) ஓபெண்ணே! (அவன் அப்படிசெய்ததினால்) மிகுந்ததுன்பங்களைக் கொடுத்துக்கொண்டு வாராநின்ற எல்லாத் தத்துவங்களும் தமது சேஷ்டைகளினின்றும் நீங்கிப்போயின. (எ - று)

ஆகையால் இனி எனக்குத் திருவருள் கிடைப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை என்பது குறிப்பு 4

என்னோடுடன்பிறந்தா ரெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியே தரித்திருக்கமாட்டேண்டி

(போ - ரை) ஓபெண்ணே! என்னுடன் துணையாகப் பிறந்து என்னை எக்காலத்திலும் பிரியாது நெருங்கியிருந்தவர்களெல்லாம் இப்பொழுது இறந்துவிட்டார்கள். இப்படியிருப்பதினால் நான்மாத்திரம் தனியே யிருக்கமாட்டேன் (எ - று)

என்னோடுடன்பிறந்தார் என்றது மேலேசொன்ன தத்துவங்கள் என்றபடி. 5

எல்லாரும்பட்டகள மென்றுதொலையுமடி
சொல்லியழுதாற் றுயரமெனக்காறுமடி

(போ - ரை) ஓபெண்ணே! மேலேசொன்ன அவர்களெல்லாம் இறந்துபட்ட சுடுகளமானது என்று இல்லாமற்போகுமோ? இது எனக்கு மிகவும் வியசனமாயிருக்கிறது. நான் அவைகளை எடுத்து வாயினாற் பலமுறையும் சொல்லி அழுதாலே எனக்கு அத்துக்கம் நீங்கும். அப்படி நான் செய்யாவிட்டால் அதுநீங்காது. (எ-று)

எல்லாரும்பட்டகளமென்று தொலையும் என்றது இறப்பிறப்புக்கள் எப்பொழுது ஒழியும் என்றது. 6

மண்முதலாமைம்பூத மாண்டுவிழக்கண்டேண்டி
விண்முதலாமைம்பொறிகள் வெந்துவிழக்கண்டேண்டி

(போ - ரை) ஓபெண்ணே! பிருதிவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்படுகின்ற ஐம்பூதங்களும், அவற்றின் தொழில்களும் அறவே ஒழியவும், சத்தம் முதல் ஐம்பொறிகள் அறவே வெந்துமாளவும் நான் பிரத்தியக்ஷமாகக் கண்டேன். (எ - று.)

பூதங்களின் சேஷ்டையும், பொறிகளின் சேஷ்டையும் ஒழிந்துபோயினவாகையால். இப்படி கூறினர். 7

நீக்காப்புலன்களைந்து நீறுகவெந்ததடி
வாக்காதியைவரையு மாண்டுவிழக்கண்டேண்டி

(போ - ரை) ஓபெண்ணே! எந்தக்காலத்திலும் நீங்கக் கூடாத ஐம்புலன்களும், வாக்குமுதலாகச் சொல்லப் பட்ட கன்மேந்திரியங்களும் ஒழிய நான்பார்த்தேனல் லவா? (எ - று.)

இவைகள் எல்லாம் ஒவ்வொன்றாக இறந்துபடுவதினால் இனி எனக்கு ஒரு குறைவுமில்லை என்றபடி.

வாக்காதி என்றது வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம என்பன. 8

மனக்கரணமத்தனையும் வகைவகையேபட்டழிய
இன்னங்கரணத்தோடே யெரிந்துவிழக்கண்டேண்டி

(போ - ரை) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் வகைவகையாக ஒழியவும், அவைகளை யடுத்து நின்று வியவகாரஞ்செய்து கொண்டிருந்த திரிகரணங்களும் ஒழிய நான் பார்த்தேனல்லவா. (எ - று)

வகைவகையாக என்றது ஒன்றின்பின் ஒன்றாய்ப்போவது.

ஆத்துமதத்துவங்கள் அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோ போதமிழந்தாளே

(போ - ரை) மேலே சொல்லிமுடிந்த இருபத்து நான்காகிய ஆத்தும தத்துவங்களெல்லாம் அடுக்கடுக்காகப் போயினமையால் போதத்திற்கும் அப்புறப்பட்டு

நின்றுவிளங்காநின்ற சிவபெருமானை எப்படி துதிசெய்வதோ நான் அறியேன். (எ - று.)

போதங்கடந்த பெருமானைத் தத்துவங்களெல்லாம் ஒழியநின்ற நான் எப்படி போற்றுவேன் என்பது கருத்து.

வித்தியாதத்துவங்கள் வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தையைந்தினையுஞ் சுட்டான்றுரிசறவே

(போ - ரை) வித்தியா தத்துவங்களையும். சுத்தவித்தியா தத்துவங்களையும். குற்றமறும்படி தகித்துவிட்டானுகையால் அந்ததத்துவங்களெல்லாம் வெந்து நீருய்ப் போனமையை நான்கண்டேன் (எ - று) 11

மூன்றுவகைக்கிளையு முப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக் கருவேரறுத்தாண்டி

(போ - ரை) மூன்று வகையாய்நின்று விளங்கிக் கொண்டிருக்கும் கிளைகளையும், ஆக முப்பத்தாறு தத்துவங்களையும் அறவே நீக்கிப் பிறப்பென்கிற வேரைக்கல்லி எறிந்து விட்டான். (எ - று)

என்னுடைய ஞானசிரியர் இப்படி எனக்குப் பெருங் கருணை செய்தமைக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன் என்பது குறிப்பு. 12

குருவாகிவந்தானே குலமறுக்கவந்தானே
உருவாகிவந்தானே வுருவழிக்கவந்தானே

(போ - ரை) எனக்கு ஞானசிரியனாய் எழுந்தருளி வந்தானே, அல்லது என்னுடைய குலப்பற்றை நீக்கவந்தானே, அல்லது அவனே கருவி, கரணாதிகளோடு கூடிய ரூபந்தாங்கி வந்தானே! அல்லது எனக்குள்ள தூலகாயத்தை நீக்கியருளும்படி வந்தானே, (எ - று.)

சிவபெருமான் எனக்குக் குருவாக வந்திருப்பாளு ணல் உடல் பொருள், ஆவிகளைத் தாமே கொள்ளல்வேண் டும் அப்படிகொண்டா னில்லை. பந்தத்தையும் நீக்கின னில்லை, தூலத்தைநீக்கிச் சூக்ஷுமத்தையும் தந்தானில்லை. ஆகையால் பரிபாககாலம் வரவில்லையென்று வருந்துகின் றேன் என்பது குறிப்பு. 13

கேடுவருமென்றறியேன் கெடுமதிகண்டோற்றாமல்
பாடுவருமென்றறியேன் பதியாண்டிருந்தேண்டி

(போ - ரை) எனக்குக் கெடும்புத்தியானது கண் ணுக்குத் தோன்றாமையால் கெடுதிவருமென்பதை நான் உணர்ந்தேனில்லை. நான் நல்லதேசத்தை ராஜரீகஞ் செய் திருந்தபடியால் எனக்குத் துன்பமானது வந்துசேரு மென்றும் அறிந்தேனில்லை. (எ - று)

'கெடுமதி கண்ணுக்குத்தோற்றாது, என்று உலகத் தில் சொல்வதுபோல நான் அரசனாக ராஜபரிபாலனஞ் செய்திருந்தபடியால் எனக்குப்பின் வருந்துன்பங்கள் தெரியாமற்போயின என்பதாம். 14

எல்லாரும்பட்டகள மின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும் பொறியிலியைக்கண்டேண்டி

(போ - ரை) உலகத்திலுள்ள ஆன்மகோடிக ளெல் லாம் இறந்துபட்ட இடமாயுள்ளது இதுவாகுமென்று உணர்ந்தேனில்லை. ஆனல் நம்முடைய தீமைகளையெல் லாம் அறவேயொழித்து மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக என்று முள்ள ஒருவனைமாத்திரம் நான் தரிசனம்செய் தேன். (எ - று)

எல்லாரும் பட்டகளம் என்றதற்குமுன்சொன்னமுப் பத்தாறு தத்துவங்களும் இறந்த இடம் எனலுமொன்று.

உட்கோட்டைக்குள்ளிருந்தா ரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைகுள்ளிருந்தா ரறுபதுபேர்பட்டார்கள்

(போ - ரை) ஆன்மதத்துவத்துக் குட்பட்ட தொகையானமுப்பத்தாறு தத்துவங்களும் தம்முடைய சேஷ்டைகளினின்றும் விலகி ஒடுங்கிப்போயின. ஆனாலும் மேலே சொன்ன அக்கோட்டைக்குள்ளே ஒவ்வொரு தத்துவத்துக்கும் சம்பந்தப்பட்டிருந்த அறுபது புறத்தத்துவங்களும் அறவே ஒடுங்கிப்போயின (எ - று.)

ஈண்டு கொட்டை என்றது தேகத்தை இவ்வறுபது தத்துவங்களையும் புறத்தத்துவங்கள் என்றதினால் முன்னே சொன்ன மூப்பத்தாறும் அகத்தத்துவங்களாம் என்பதற்கு ஐயம் என்னை என்பதாம். 16

ஒக்கமடிந்ததடி யூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாங் கரிக்கோட்டையாச்சுதடி

(போ - ரை) மேற்சொன்ன தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒன்றுசேரமடிந்தபடியால் அந்ததத்துவங்களின் சம்பந்தியாயிருந்த இந்தத்தேகமாகிய கற்கோட்டையானது கரியாற் செய்யப்பட்ட கொட்டையாய்முடிந்தது. (எ - று.)

தத்துவங்களெல்லாம் அறவே யொழியவே தேகமுமில்லாது நீத்துவிடுமென்பார் இப்படியாகச் சொன்னார்.

தொண்ணூற்றறுவரையுஞ் சுட்டான்றரிசறவே
கண்ணீறுபட்டதடி கருவேரறுத்தறுத்தாண்டி

(போ - ரை.) இப்படியாக என்னுடைய குருசுவாமியானவன் மேற்சொன்ன தத்துவங்களை யெல்லாம் த்த தமது தொழில்களிற் பிரவேசிக்க வொட்டாமல் நிறுத்தவே அவைகளிருந்த் இடமானது சாம்பலாய்விட்டது,

அது அப்படியாகவே அவனே வெளிவந்து தன்னுடைய கிருபையினுல் யிறப்பைநீக்கிக் கருணையையும் தந்தான்.

தத்துவங்களின் சேஷ்டைகள் ஒழிந்தவிடமே மோக்ஷமென்று சொல்லியபடி பிறப்புநீங்கியதாகையால் இப்பட்டினத்தடிகள் இங்ஙனம் கூறினுர். 17

ஓங்காரங்கெட்டதடி வுள்ளதெல்லாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடி யடியோடறுத்தாண்டி.

(பொ - ரை) யாதொரு பிரணவ ரூபமாயுள்ள பொருளும், அப்பிரணவரூபத்தின்கண் விளக்கமுற்றிருந்தவைகளும் கெடுதியையடைந்தன, ஆகையால் அகங்காரமும் நீங்கிப்போயின. ஆ! இப்படி இவையெல்லாம் போவதற்குக் காரணமென்னையென்று பார்த்தாலே என்னுடைய குருசுவாமியின் திருவருட்செய்கையென்று விளங்கிற்று.

அது விளங்கவே மோக்ஷம் கைகூடுமென்று நம்பியிருந்தேன் என்பது குறிப்பு. 19

தரையாங்குடிலைமுதல் தட்டுருவவெந்தடி
இரையுமனத்திடும்பை யெல்லாமறுத்தாண்டி

(பொ - ரை) என்னுடைய ஆசாரிய மூர்த்தியானவர் வியவகாரத்தில் சென்றுகொண்டேயிருக்கும் மனத்தின் துன்பத்தையெல்லாம் நீக்கினுர். அவர் அப்படி செய்ததினுல் தரையாகிய குடிலைமுதலிய சத்திகளெல்லாமும் அறவே ஒழிந்தன. (எ - று.)

என்னுடைய குருமூர்த்தியானவர் இங்ஙனம் செய்தமைக்குக் காரணம் தனது திருவருட்கிருபையேயாம் என்பது குறிப்பு. 20

முன்னைவினையெல்லா முழுதுமறுத்தாண்டி
தன்னையறியவே தானொருத்தியானேனண்டி

(போ - ரை) நான் பூர்வத்திலேயே செய்து இப்பொழுது அநுபவித்து வாராநின்ற நல்வினை தீவினைகள் இரண்டையும் என்னுடைய குருசுவாமியானவர் முன்னின்று ஒழித்து விட்டபடியால் என்னை நான் அறிந்துகொண்டேன். அப்படி என்னை நான் அறியவே நான் ஒருத்தியே அங்கிருந்தேனே யொழிய வேறொருவரும் என்னுடன் இல்லை (எ - று.)

இருவினைகளும் நீங்கியவிடமே மலபரிபாக காலமாகையால் அகங்காரமும் போய்விடுகின்றது. அதுபோகவே தன்னைத்தானறியத்திறம் உண்டாகின்றது. அது உண்டாகவே தான் தனியேயிருக்கும் அவசரம் உண்டாகின்றது, ஆகையால் இப்பட்டினத்தடிகளும் இப்படி கூறினார். 21

என்னையேநானறிய விருவினையுமிடழித்துத்
தன்னையறியத் தலமெனக்குச்சொன்னாண்டி.

(போ - ரை) இருவினைகளையும் அறவே யொழித்து என்னுடைய சுபாவமான தன்மையை நானே அறிந்துகொண்டபின் ஓரிடத்தை எனக்குத் திருவருட்பாலித்து அவ்விடத்தில் எழுந்தருளியுள்ள பரம் பொருளையும் உணர்ந்து கொள்ளும்படி என்னுடைய ஆச்சாரியரானவர் திருவாய்மலர்ந்து உபதேசித்தார். (எ-று.) 22

தன்னையறிந்தேண்டி தனிக்குமரியானேனண்டி
தன்னந்தனியே தனியிருக்கும்பக்குவமோ

(போ - ரை) அங்ஙனம் சொன்னவிடத்தில் பார்த்து அப்பரம்பொருளை உணர்ந்து கொண்டேன் அப்படி

யுணர்ந்தபின் என்னுடைய அறியாமையாகிய பருவம் போய் அறியும் பக்குவத்தை யடைந்தேன். அங்ஙன மடைந்த நான் தனியாயிருப்பதற்குப் பரிபாகத்தை யடைந்தவனானேனில்லை. (எ - று) 23

வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானேனண்டி
காட்டுக்கெறிந்தநிலா கனவாச்சேகண்டதெல்லாம்.

(பொ - ரை) நான் அடைந்த அந்த இடமாகிய வீட்டில் வேறொருவரும் இல்லை. ஆகையால்நானும் அவ்விடத்தின் குணத்தை அடைந்தவனாய் வெறும் வெளியானேன். இது எப்படியிருக்கிற தென்றால் காட்டின்கண் சந்திரிகையை வீசுகின்ற நிலவின்பயனையும் நித்திரையின் கண் காணும் கனவின்பயனையும் ஒப்பாக விருக்கின்றது.

நகையாரோகண்டவர்கள் நாட்டுக்குப்பாட்டலவோ
பகையாரோகண்டவர்கள் பார்த்தாருக்கேச்சலவோ.

(பொ - ரை) நான் இப்படியாகித் தீர்ந்ததைப் பார்த்தவர்கள் சிரிப்பார்களே. அல்லாமல் உலகத்தார்க்குப் பாட்டாக முடியுமல்லவா? இன்னும் பார்த்தபேரெல்லாம் விரோதியார்களா! சமீபமாக வந்து பார்த்தவர்களுக்கெல்லாம் பகைக்கத் தக்கதா யிருக்கிற தல்லவா (எ-று)

இப்படியெல்லாம் என்னென்ன அவமதிப்பு உனக்கு வந்தாலும் நான் அவ்விடத்தினின்றும் வருதலில்லை என்பது குறிப்பு 25

இந்நிலைமைகண்டாண்டி யெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தாண்டி கற்பைக்குலைத்தாண்டி

(பொ - ரை) நான் வருதலில்லை என்று ஒரேயுறுதியாய் அவ்விடத்திற்றானே யிருக்கும் நிலைமையையுணர்ந்து

கொண்டான். அப்படி யுணர்ந்து கொண்டபின் எனக்கும் வியாபகனாய் நின்றான். அப்படி யிருந்து என்னைத் தன்னுள் மறைத்து என்னுடைய கன்னித் தன்மையைக் கெடுத்துக் கற்புநிலையையும் கெடுத்தான்? (ஆனால் ஈதென்ன விஷயமோ அறியேன்) (எ - று.)

கன்னியழித்துக் கற்பைக்குலைத்தான் என்றது சீவனைச்சிவன் தன்னடிப் படுத்திக்கொள்ளும் நிலைமை. 26

கற்புகுலைத்தமையுங் கருவேரறுத்தமையும்
பொற்புகுலைத்தமையும் போதமிழந்தமையும்

(போ - ரை) என்னுடைய கற்பினை யழித்ததும் பிறப்பை யறுத்ததும், அழகைக்கெடுத்ததும் இவற்றால் என்னுடைய அறிவை நான் போக்கடித்துக் கொண்டதும் தவிர. (எ - று.)

சிவபெருமான் தலைவனும் சீவன் தலைவியுமாகையால் அச்சீவனைச் சிவன் தன்வயப்படுத்துங்காலத்தில் சீவபோதம் போய்ச்சிவபோதமாவது சுபாவமாமென்று முன்னோர்கள் சொல்லி யிருப்பதினால் இவரும் இங்ஙனம் கூறினார்.

என்னவினைவருமோ வின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம் பலித்ததடிசோர்வறே

(போ - ரை.) எனக்கு இன்னும் என்னென்ன வினைகள்வந்து சம்பவிக்குமோ அதை அறிந்தேனில்லை. ஆனால் (என்னுடைய ஆசாரிய மூர்த்தியானவர் எனக்குத்) திருவாய்மலர்ந்த சொற்களெல்லாம் தவறாமல் பலித்துவிட்டன. (எ று.)

இப்படி யானமையால் ஒருவினையும் வந்து என்னை வருத்தாது என்று நினைந்தாலும் அப்படியே சதாநினைந்

திருக்கும்படியான திடம்இன்னும் வரவில்லையே என்பது குறிப்பு 28

கங்குல்பகலற்றிடத்தே காட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டி பார்த்தானைப்பார்த்திருந்தேன்

(பொ - ரை) இரவென்பதும், பகலென்பதும் இல்லாமல் என்றும் ஒரே தன்மையாயிருந்து விளங்கும் சிதாகாயமென்னும் ஒரு அருமையான இடத்தை எனக்கு என்னுடைய குருசுவாமியானவன் உபதேச மார்க்கமாகக் காட்டினன். பின்னர் நான் அவ்விடம்சென்றேன். சென்றபின் என்னுடைய குற்றங்கள் யாவும் நசிக்கச்செய்துவிட்டேன். அக்குற்றங்களாகிய மலங்கள் நீங்கவே அவ்விடத்தினின்றும் ஒருவன் என்னைக் கொஞ்சம் கண்திறந்து பார்த்தான். நானும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். (எ - று)

இப்படி ஒன்றன்பின் ஒன்ருக நடந்த பல அதிசயங்களையும் நடத்திக் காட்டியவன் என்னுடைய ஞானசிரியனுகையால் அவனுக்கு என்னுற் செய்யக்கூடிய பிரதியுபகாரம் என்னவிருக்கின்றது ஒன்றுமில்லை என்பதுகுறிப்பு.

'பார்த்தானைப் பார்த்திருந்தேன்' என்றது "வெற்றுடம்பாயினர் விண்ணுளோரெலாம்" என்னும் நளன்கதைச் செய்யுளடிக்குக்கர்ண பரம்பரையாகக் கேட்டுவரும் விஷயம் போன்றதென்றறிக, 29

சாதியிற்கூட்டுவரோ சாத்திரத்திற்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லா மூள்ளபடியாச்சுதடி

(பொ - ரை) என்னை இவ்விதமாக ஒருவன் செய்துவிட்டபடியால் என் சுற்றத்தார்களெல்லாம் என்னைச் சாதியில் சேர்த்துக் கொள்வார்களா. இப் பலவகையான

விதங்களெல்லாம் சாத்திரங்களிற் சொல்லி யிருக்கின்றனவோ, (ஆனல், அச்சாத்திரங்களை நான் உணராமற் போனபோதிலும்) என்னுடைய குருசுவாமி உபதேசிக்க நான் தெரிந்துகொண்டவை யெல்லாம் சரியாகவே முடிந்தன (எ - று)

இங்ஙனம் எல்லாம் சரியாகவே முடியவே எனக்குப் பெருங்கருணைத் திறத்தைக் கடாட்சித்த ஞானசிரியரை நினைந்து வியப்புறுகின்றேன் என்பது ஓர் அரும்பொருளாம். 30

என்னகுற்றஞ்செய்தேனே எல்லாருங்காணமல்
அன்னைசுற்றமெல்லா மறியாரோவம்புவியில்

(போ - ரை) என்னுடைய சாதியார்களெல்லாம் காணதபடி இருக்க நான் என்னகுற்றங்கள் செய்தேனே, ஆனாலும் நான் குற்றம் செய்ததும், செய்யாததும் என்னுடைய தாய்முதலாகச் சொல்லப்பட்ட சுற்றத்தார்களெல்லாம் இவ்வுலகத்தின்கண் தெரிந்துகொள்ளாரோ, தெரிந்து கொள்வார். (எ - று) 31

கொன்றாரைதின்றேனே தின்றாரைகொன்றேனே
எண்ணதெல்லாமென்னு மிச்சைமறந்தேனே

(போ - ரை) செந்மாந்தரங்களில் நான் என்னைக் கொன்றவர்களைத்தின்றேனே, அல்லது வேறோர் பிராணிகளைக்கொன்று தின்றவர்களை நான் கொன்றேனே, எண்ணாத காரியங்களை யெல்லாம் எண்ணி எண்ணித் துதிக்கின்ற விருப்பத்தை விட்டேனே, எதுவும் தெரியவில்லை.

சாதியிற்கூட்டுவரோ சமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி

(பொ - ரை) இவன் இப்படிப்பட்ட பாவத்தை செய்தவனுவானென்று சிவசம்பந்தமான சாதியார் தங்கள் சாதியில் என்னைச்சேர்த்துக் கொள்வார்களா, அல்லது சைவசமயத்தார் என்னை நினைத்தாயினும் பார்ப்பாரகளா, நான் இப்படி அவர்களையெல்லாம்வஞ்சித்து என்னுடைய குருசுவாமிசொன்ன உருதிமொழிப்படி வாழ்ந்திருந்தது மேலேசொன்னவர்க ளெல்லாம் என்னைப்பலவகையாகப் பேச இடமாய் முடிந்தது. (எ - று.) 33

கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குக்காமமடி
உண்டகர்களுண்டதெலா மூணல்லா துண்பர்களோ

(பொ - ரை) நான் பார்த்தவர்களுக்கெல்லாம் பெண்ணல்லவோ, அப்பெண்ணைக் காணுதவர்களுக்குக் காமம் அதிகமல்லவா, தின்றவர்கள் தின்றதெல்லாம் தின்னும் பொருள்களேயன்றி வேறுண்டோ. (எ - று)

பெண்கள் போகத்தை அநுபவியாதவர்களுக்கு அக் காமமிகுதியும் உண்டாவதாகையால் காணுர்க்கு காமமடி என்ருர். 34

கொண்டார்கள்கொண்டதெல்லாங் கொள்ளாதார் கொள்ளுவரோ, விண்டவர்கள்கண்டவரோ கண்டவர்கள் விண்டவரோ.

(பொ - ரை.) அநுபவித்துக் கொண்டவர்கள் பெற்ற பொருள்களை யெல்லாம் அநுபவித்துக் கொள்ளாதார் கொள்ளுந் திறமுடையவராவரோ, அப்பொருளை விட்டவர்கள் கண்டவர்களாவரோ, கண்டவர்கள் விட்டவர்கள் ஆவரோ, (எ - று.)

'கண்டவர்விண்டிலர் விண்டவர்கண்டிலர்' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றதினல் அக்கருத்தை

நோக்கியே இப்பட்டினத்தடிகளாரும் இப்படியாக 'விண்டவர்கள் கண்டவரோ கண்டவர்கள் விண்டவரோ' என்றார். 35

பண்டாயநான்மறைகள் பாடும்பரிசலவோ [தோ
தொண்டாயதொண்டருளந் தோற்றியொடுங்கும

(பொ - ரை) அப்பரம் பொருளானது தொன்றுதொட்டுச் சிவபெருமானால் சொல்லப்பட்டு வாராநின்ற நான்கு வேதங்களாலும் துதிசெய்யப்பட்டதல்லவோ, அடிமைப்பட்டுள்ள அடியார்கள் மனத்தையே கோயிலாகக்கொண்டு அதினிடத்திலேயே தோன்றி யொடுங்குவதல்லவோ. (எ - று.)

வேதங்களால் புகழப்பட்டவனாகையால் "பண்டாயநான்மரைகள் பாடும்பரிசலவோ" என்றும், அடியார்கள் மனத்தி லெழுந்தருளியிருப்பதே தனக்குத் தொழிலாக உடையவனாகையால் தொண்டாய தொண்டருளந் தோற்றியொடுங்குமதோ, என்றார். 36

ஓதவரிதோ வொருவருணர்வரிதோ
வேதமறவெங்கும் விளங்கும்பெருமையன்காண்

(பொ - ரை) அப்பொருளானது சொல்லுதற் கருமையானதோ. ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளுதற் கருமையானதோ, வித்தியாசமில்லாமல் எங்கும் ஒரே தன்மையனாய் விள்ங்கிக்கொண்டிருக்கும் பெருமையையுடையவனுவான் ஆகையால். (எ - று)

சிவபெருமான் சர்வ வியாபகனாகையால் எவ்விடத்திலும் யாவராலும் காணக்கூடியவனா யிருக்கின்றானென்பார், "ஓதவரிதோ வொருவருணர்வரிதோ" என்றார். 37

வாக்குமனமுங் கடந்தமனேலயன்காண்
நோக்கவரியன் காணுண்ணரியனுண்ணியன்காண்

(பொ - ரை) வாக்குக்கும், மனத்துக்கும் அதீதப் பட்டு விளங்கியும் அம்மனத்திலேயே லயப்பட்டு நிற்பவனுவான். ஆனல் அம்மனம் ஒடுங்காதவர்களால் காணுதற் கருமையானவன். நுட்பமாயறியும் அறிவுடையார்களிடத்தில் அவர்களுடைய அறிவுக்கும் எட்டாமல் நுட்பமா யிருக்கப்பட்டவ னுவான். (எ - று.)

இப்படிப்பட்ட தன்மையை யுடையவனை நான் காணுது விடுவதில்லை யென்பது குறிப்பு. 38

சொல்லுக்கடங்கான்காண் சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்தகனலொளிபோ னின்றவன்காண்.

(பொ - ரை) அச்சிவ பெருமானுனவன் சொல்லிறந்து நின்ற விளங்குவோனுகையால் நான்சொல்லும் இப் பாமாலைக்குள் அடங்கமாட்டான் ஏனென்ருல் கல்லுளிருந்தும் அக்கினியின் சோதிபோல் ஒளிப்பவனுகையால். (எ - று.)

சிலாரூபத்திலும் சோதிமயனுய் நிற்கின்ருனென்பார் 'கல்லுளிருந்த கனலொளி போன்றவன்காண்' என்ருர். ()

சூட்டிறந்தபாழதனிற் சுகித்திருக்கசொன்னவன்காண்
எட்டிலெழுத்தோ எழுதினவன் கைப்பிழையோ.

(பொ - ரை) அச்சிவ பெருமானுனவன் இது இப் படிப்பட்ட தாகு மென்றுசொல்லி அதற்கோர் பேரிட்டுச் சுட்டிக்காட்டுதற்குச்கூடாத வெட்டவெளியில் நீ சுகமா யிருக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந்து என்னை அவ் விடத்திலே யிருக்கச்செய்தவனுவான். ஆனல் அவன்

சொன்ன உபதேச வாக்கானது ஏட்டிலெழுதியிருந்த எழுத்தோ, அல்லது அவன் தவறி எழுதிய பிழைபாடோ அறியேன். 40

சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதென வடையவிழுங்கினண்டி

(போ - ரை) ஆனாலும் அவ்வெம் பெருமானானவன் என்னைச்சும்மா விருக்கும்படி செய்தான், அவன் எப்படி செய்தானோ அதின் உண்மையை நான் அறிந்தேனில்லை. ஆனால் அந்தச் சும்மா வென்னும் சொல்லுக்கு பொருள் விசாரித்து இதுதான் பொருளாமென் றறிந்து அப்பொருளை யடையவே அவனே வெளிவந்து என்னை விழுங்கி தானாக்கிக் கொண்டனன்.

இப்படி பரமமணியனாகிய சிவபெருமான் செய்ய நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ என்பது குறிப்பு.

பார்த்தவிடமெல்லாம் பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்த கொள்கையறியேண்டி.

(போ - ரை.) இம்மாதிரியாக சிவபெருமா னானவன் என்னை விழுங்கியபின் நான் பார்த்த இடங்களெல்லாம் பரம்பொருளாகவே கண்டேன். அப்படி கண்டதினால் என்னைக்கோத்து அறவே விழுக்கியிருந்த அவனுடைய மன எண்ணத்தை நான் அறிந்தவனல்லன். (எ - று)

ஆனால் எனக்கு நன்மைசெய்தானேயொழியத் தீமை செய்தானில்லை என்பது குறிப்பு. 42

மஞ்சனமாட்டி மலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானே னின்றனிலைகாணேண்டி.

(பொ - ரை.) எந்தலைவனாகிய சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாட்டி நல்ல புஷ்பங்கள் பறித்து மாலை கோத்து அவருடைய திருவடிகளுக் கணியாமல் மனமானது வெறும்பாழானேன் பிறகு பார்த்தால் நான் இருந்த நிலையைக் கண்டேனில்லை. ஈதென்ன அதிசயமோ அறியேன். (எ - று.) 43

பாடிப்படித்திருந்தும் பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாம லுருக்கெட்டுவிட்டேண்டி

(பொ - ரை) சொன்மாலைகள் சூட்டியும், சாஸ்திரங்களைக்கற்றிருந்தும், பலவகையான புஷ்பங்களாலாகிய மாலையை யணியாமலும், அவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள்தோறும் ஓடி ஓடித்திரிந்து அவனைச் சேவியாமலும் வீணே கெட்டுவிட்டேன். இனி என்னைக் காப்பாற்றுவோர் இவர்தாம் என்பதை அறிந்தேனில்லை (எ - று.)

"குடங்கை நீரும்பச்சிலையு மிடுவார்க்கிமையாக் குஞ்சரமும் படங்கொள்பாயும் தருவாய்மதுரைப் பரமேட்டீ" என்று, பரஞ்சோதி முனிவர் சொல்லி யிருக்கின்றதினால் அக்கருத்தை நோக்கியே இவரும் 'பன்மலர்கள் சாத்தாமல்' என்றார். 44

மாணிக்கத்துள்ளொளிபோல் மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார் பேசாப்பெருமையன்காண்

(பொ - ரை) யாதொரு மாணிக்கத்திலிருந்து பிரகாசித்தும் அம் மாணிக்கத்தி னின்றும் வேறு பிரிக்கக்கூடாத ஒளியைப்போல ஆன்மாக்களிடத்தில் கலந்தேயிருந்தான், ஆனால் அவனை இருக்கும்வழிகண்டு பணிந்து நமஸ்காரஞ்செய்யும் அடியார்களை மௌனிகளாக்கித் திருவருள் பாலிப்பான். (எ - று)

சிவபெருமான் மௌன ஞானிகளுக்கே பெரும்பாலும் வெளிவந்து மோக்ஷமளிப்பவனாகையால். 'பேணித் தொழு மடியார் பேசாப்பெருமையன்காண்' என்றார். 45

அன்றுமுதலின்றளவு மரியாப்பருவமதில்
என்றும்பொதுவா யிருந்தநிராமயன்காண்

(போ - ரை) ஆதிகாலந்தொடங்கி நாளது வரைக்கு என்னால் அறியப்படாத பருவகாலத்தில் எக்காலத்தும் பொதுவாக இருந்துகொண்டேவந்த நிராமயனாவான்.

அவனை இடைவிடாது கைப்பற்றினவர்க்கே தாய் போல் கருணைசெய்வான். ஆகையால் எனக்குப்பருவகாலம் போதாதென்று நினைக்கின்றேன் என்பது குறிப்பு.

சித்தவிகாரத்தாலே சின்மயனைக்காணமல்
புத்திகலங்கிப் புகுந்தேன்பொறிவழியே

(போ - ரை) என்னுடைய மனோபீஷ்டப்படிபோய் நான்கெடுநிலை யடைந்ததினல் சின்மயனாகிய சிவபெருமானைக்கண்டு களிக்காமல் புத்தியானதுகலங்கி ஐம்பொறிகளின் வழியேபோம் அவைகளிடும் வூழியங்களுக்குள்ளானேன். (எ - று)

இப்படி பொறிவழியே போய்த்திரியும் எனக்குப் புகும்வழியெப்படி திறக்கும் என்பதாம், 47

பத்தியறியாமற் பாழிற்கவிந்தேனடி
ஒத்தவிடநித்திரையென் றொத்துமிருந்தேனடி

(போ - ரை) சிவபத்தி, அடியார்பத்தி என்பனவைகள் சிறிதுமில்லாமல் வீணனகாரியங்களில் பிரவேசித்திருந்தேன் அன்றி எந்தயிடம் சௌக்கியமாயிருக்கின்றதோ அங்கேயே நித்திரையும்செய்து காலங்கழித்தேன்.

இப்படி வீணே திரிந்து காலத்தைப் போக்கினேனே யொழிய அவனது திருவருள் விலாசத்தில் கலந்தேனில்லை ஆகையால் நான் பிழைப்பது எப்படி என்பதாம். 48

செத்தாரைபொத்தேண்டி சிந்தைதெளிந்தேண்டி
மற்றொருமில்லையடி மறுமாற்றங்காணேண்டி

(போ - ரை) (சிவபெருமானனவன் என்னை ஓரிடத்தில் நிறுத்திய அக்காலத்தில்) எனக்குக்கருவிகாரணாதிகளின் சேஷ்டைகள் அறவே யொழிந்திருந்தனவாகையால் நான் அக்காலத்தில் இறந்துபட்டவர்களைப் போலிருந்தேன். உடனே எனக்கோர் மனத்தெளிவும் உண்டாயிற்று. அவ்விடம்பார்த்தபோது ஒருவரும் அங்கு இல்லை எதிர்பேச்சுங் கிடையாது. (எ - று)

ஆனல் இதுவே மௌனநிலையை யடைதற்குறிய இடமாகும் என்று உணர்ந்து கொண்டேன் என்பது குறிப்பு.

கல்வியல்லகேள்வியல்ல கைகாட்டுங்காரனங்காண்
எல்லையளவற்றதடி யெங்குநிறைந்ததடி.

(போ - ரை) (அந்த இடத்தின் பெருமையை விசாரிக்குங் காலத்தில்) மிகுந்த கல்வியாலும், கேள்விகளாலும் அறியத்தக்க இடமல்ல என்னுடைய குருசுவாமியானவன் தமது கையினல் குறியாகக் காட்டப்பட்டதேயாம். அப்படிகையிற் காட்டப்பட்டதா யிருந்தாலும், ஒரு அளவு சொல்லக்கூடாமல் எங்கு நிறைந்ததாகும். ()

கைகாட்டுங் காரணம் என்றது சின்முத்திரோபதேசத்தால் அறியப்படுவது என்பது 50

வாசாமகோசரத்தை மருவியிடங்கொண்டாண்டி
ஆசுசமில்லாண்டி யறிவுக்கறிவாண்டி.

(போ - ரை) வாக்குக்கும், மனத்துக்கும் அப்புறப் பட்டு விளங்கா நின்ற மேற்சொன்ன இடத்தையே அச் சிவபெருமானானவன் தானெழுந் தருளி யிருக்கத்தக்க விடமாகப் பெற்றிருக்கின்றான் ஆனால் அவனுக்கு அசூச மென்பது கொஞ்சமுமில்லை. ஏனென்றால் எல்லார் அறிவுக்கும் அறிவாக விருந்து விளங்கிக் கொண்டிருக்கின்றானாகையால். (எ - று.)

உயர்ந்தவர், இழிந்தவர் என்னும் பகுப்பில்லாமல் எவர்களிடத்திலும் வியாபகமா யிருக்கின்றானாகையால் அவனை, 'ஆசூசமில்லான்' என்றார். 51

பத்துத்திசைக்கு மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்கு மிடைவிடாதேகமடி.

(போ - ரை.) பத்துத்திசைகளிலும் அடங்கியிராமல் அதீதப்பட்டு விளங்கா நின்றவனும் வேறு எந்தத்திசைக்கும் மற்றும் எல்லாவிடங்களிலும் குறையாமல் ஏகமயனா யிருப்பவனுமாக விருக்கின்றான்.

அவன் இப்படி எங்கும் நிறைந்திருப்பதினால் நாம் அவனை வழிபட்டுய்வது மிகவும் எளிதென்க. 52

தித்திக்கவூறுமடி சித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட் பதித்தபரஞ்சோதியடி.

(போ - ரை.) இப்படிப்பட்ட தன்மையுடைய சிவ பெருமானை யாவரொருவர் தங்கள் சித்தத்தில் சதா பதித்து வைத்திருக்கின்றார்களோ அவர்களுக்கு ஊறி யூறித் தித்திப்பவனாகவும், அவனைக் குறித்து அன்பு செலுத்துவோர்க்கு அவ்வன்பாகிய கடலிற் பதிந்துள்ள பெரிய சோதிமயனாகவும் இருப்பான். (எ - று)

இப்படி அன்புக்கெளியவனு யிருப்பதினுல் அவனை உலகத்தில் யாவரும் வணங்கி மோக்ஷசாதனத்தைக் கை கூடப்பெறுதல் அவசியம். ஆனுல் அவரவர்கள் பரிபாக காலம் எப்படியோ அறியோம் என்பது குறிப்பு. 53

உள்ளுணர்வாய்நின்றவர்த முணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளதிலே யேறிக்குறையாண்டி

(போ - ரை) ஒவ்வொருவர் மனத்தின் கண்ணும், உள்ளறிவாய் நின்று விளங்கியும், அவர்களுடைய அறிவுக்கு அறியப்படாதவனும், எள்ளளவானுலும் அவனுடைய அளவில் குறையாத பரிபூரணனுமாய் இருப்பான்.

இவனை வழிபட்டுய்வதே நாம் எடுத்துள்ள இப்பிறவிக்குப் பெரும் பேறுகும் என்றபடி. 54

தூருந்தலையுமிலான் ரேற்றமொடுக்கமிலான்
ஆருமறியாம லகண்டமாய்நின்ருண்டி

(போ - ரை) ஆதியந்த மில்லாதவனும், பிறப்பிறப்புகளில்லாதவனும், எவர்களாலும், அறியப்படாதவனும் அகண்டமாய் (கண்டித்துச் சொல்லப்படாதவனுப்) நிற்பவனுமாவான். (எ - று.)

அவனுடைய தன்மையிப்படி யிருப்பதினுல் அவனை யடையாமல் வீணேகாலம் கழிப்பதில் என்னபிரயோசனம் என்பது குறிப்பு.

எத்தனையோவண்டத் திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலும் அணுவுங்குறையாண்டி

(போ - ரை) சர்வ அண்டங்களிலிருக்கும் சர்வஜனங்களுங் அவனுடைய திருவருட்போனகத்தைப் பலகால்

உண்ணவும் குறையாமல் என்றும் ஒரே தன்மையா யிருப்ப ஞவான் (எ - று)

'பெரியபரிபூரணம் குறையுமோ' என்று தாயுமான வர் சொல்லியிருக்கின்ற வண்ணம் இப்பட்டினத்தாரும் சொல்லி முறையிடுவதின் அருமை என்னுற்சொல்லுந் தர மல்ல என்பது எம்முடைய கருத்து. 56

வாக்குமனமும் வடிவுமிலான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான் பொருவரியபூரணன்காண்

(பொ - ரை) யாதொரு சிவபெருமானுடைய தன் மையை விசாரிக்குங்கால் அவன், வாக்கும், மனமும், ரூப மும், ஆகிய இவைகளெல்லாம் இருக்கப்பெருத மேலான பொருளாவனும், இறப்பும் பிறப்பும் இல்லாதவனும், ஒப்புசொல்லுதற்குக் கூடாதவனுமாவான்.

ஆகையால் அப்படிப்பட்ட கடவுளைப்பாவனுமூர்த்த மாக வணங்குவதிலும் மானதமூர்த்தமாக வணங்குவது சிரேஷ்ட மென்பது வெளிவருகின்றது, 57

காட்சிக்கெளியான்காண் கண்டாலுங்காணுன்காண்
மாட்சிமனம்வைத்தாற்கு மாணிக்கத்துள்ளொளிகாண்

(பொ - ரை) அவனை உள்ளபடியே விசாரித்தறிய விருப்பமுள்ளவர்கள் காணுதற்கு எளியவனும் அவர்கள் அவனைக்கண்ட போதிலும் அவர்களாற் கண்டதாகச் சொல்லப்படாதவனும், ஞானத்திலே சதாமனம் வைத் துள்ள பெரியோர்களுக்கெல்லாம் இரத்தினத்தி னுள்ளி ருக்கும் சோதிபோன்றவனுமாவன். (எ - று)

இப்படிப்பட்ட கடவுளை அறியவிரும்பினுல் ஞான மார்க்கத்தாலன்றி வேறுமார்க்கங்களால் முடியாதென் பது திண்ணம். 58

வாழ்த்தியவனை வழிபட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியன்காண் சொல்லிறந்தசோதியன்காண்

(பொ - ரை) அந்தக்கடவுளானவன் சொல்லைக்கடந்து விளங்காநின்ற தேஜோமயனாகையால், உலகத்திலுள்ள ஜனங்கள் அவனை வாழ்த்துதல்செய்து வந்தனைவழிபாடுகள் செய்தாலும் அவர்களால் அறியப்படான். (எ - று.)

ஞானமே சோதிமயமாகையாலும் அச்சிவபெருமானும் தேஜோமயனாகையாலும் அவனை அறியவேண்டியது அந்த ஞானத்தா லல்லாமல் வேறு சரியா, கிரியா, மார்க்கங்களாகிய வந்தனை வழிபாடுகளால் அறியக்கூடாதென்பார், 'வாழ்த்தியவனை வழிபட்டால் மன்னுயிர்கள் தோற்றவரியான்காண்,' என்றார். 59

ஐயமறுத்தவனை யாராய்வாருண்டானல்
வையகத்தேவந்து மலர்பாதம்வைத்திடுவான்

(பொ - ரை) (எனக்கும்) இன்னுமுள்ள அடியார்களுக்கு முண்டான சந்தேகவிபரீதங்களை அறவேயொழித்து எங்களையெல்லாம் யடிமையாகக்கொண்டுள்ள சிவபெருமானை ஆராய்ந்தறிய வல்லவர் யாவர் இருக்கின்றனர். அப்படியாவராயினும் இருப்பாரானல் அச்சிவபெருமானே உலகத்தின்கண் குருமூர்த்தமாய் வந்து அவர்களுக்குத் திருவடி தீக்ஷைசெய்து அடிமை கொள்வான் (எ - று.)

அடியார்களின் தீவிரதர்பக்குவத்தை நோக்கிச் சிவபெருமானே குருமூர்த்தமாய் எழுந்தருளிவந்து அருளிச்செய் திருக்கின்றனர். என்பதை நாம் சர்ணபரம்பரையாகக் கேட்டும் பலநூல்கள் வழியாகக்கற்றும் இருக்

கின்றோ மல்லவா? அதுபோலவே இப்பட்டினத்தடிகளும் இவ்விடத்தில் கூறினார். 60

அணுவுக்குமேருவுக்கு மகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றஞானக் கரும்பின்றெளிவான்காண்

(போ - ரை.) சிறிய பொருள்களிடத்தும், பெரிய பொருள்களிடத்தும் உள்ளும் வெளியிலுமாக இருக்கின்றவனும், பரிபாகம் வந்தவர்க்குக் கரும்பின் தெளிவான சாற்றைப்போல் இனிப்பவனுமாவான்.

இப்படியாவோன் யார் என்றால் நம்முடைய சிவபெருமான் என்பது குறிப்பு. 61

எந்நாளுமிந்நாளு மிப்படியாயப்படியாய்ச் [காண்
சொன்னாலுங்கேளான்காண்சோத்திரத்திற்கொள்ளான்

(போ - ரை.) முன்னர் சென்றகாலங்களிலும், இக்காலத்திலும், இப்படி அப்படி யென்று பலவகையான நியாயங்களை யெடுத்துச் சொன்னாலும் காதுகொடுத்துக் கேட்கமாட்டான். ஏனென்றால் ஞானிகள் முறையிடுவதையே கேட்கின்றவனாகையால் மற்றவர்கள் முறைஅவன் காதிற்புகாது. (எ - று.) 62

ஆத்தாளுக்காத்தாளா மப்பனுக்குமப்பனுமாம்
கோத்தாற்குக்கோத்தநிலை கொண்டகுணக்கடல்காண்

(போ - ரை) (இப்படி யெல்லாம் சொல்லப் பட்டு வாராநின்ற சிவபெருமானவன்) தாய்க்குத் தாயாகவும் தகப்பனுக்குத் தகப்பனாகவும், சுற்றத்தார்க்குச் சுற்றத்தாராகவும் இருந்து திரிந்து விளையாடல் செய்துகொண்டு வாராநின்ற ஞானசமுத்திரமாவான், (எ - று)

குணக்கடல் என்றது - ஞானசமுத்திரம் என்று எழுதப்பட்டது இவனுடைய அருளானது மொள்ளமொள்ளக் குறையாததாகையால். 63

இப்போபுதிதோடி யெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போ தருளறிவுந்தந்தாண்டி

(போ-ரை.) அந்தப்பரம்பொருளாயுள்ளவன் இன்றுதான் உண்டானபுதியவனோ, அநாதியே யுள்ளவனாகையால், உயிர்களுக்கு அப்போதைக்கப்போது அறிவுறுத்தி நிற்கின்ற திருவருள் ஞானசொரூபனுமாவானன்றோ? ஓ தோழி! இதை நீ உணராய்போலும்!

ஈண்டு சிவபெருமானை அஃறிணையாகக் கூறியதுசாதி, சமயம் ஆண், பெண், என்பன இல்லாதவனாகையால், இந்நியாயம் பற்றியே யாமும் உயிர்திணையாகப் பொருள் எழுதினோம். 64

பற்றற்றார்பற்றாகப் பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி

(போ - ரை ) என் தலைவனான சிவபெருமானானவன் யாரொருவர் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை அறவேயொழித்தார்களோ, அவர்களையே பற்றியிருந்தான். ஆனாலும் என்னுடைய குற்றங்களையும் நீக்கி என்னோடுங் கலந்திருந்து எனக்குப் பேரின்ப வீட்டையுங் கொடுத்துரக்ஷித்தான் ) (எ - று.) 65

வெட்டவெளியிலெனை மேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்

(போ - ரை.) அந்தக் கருணாநிதியானவன் சிதாகாயமாகிய இடத்தில் என்னோடுகூடி யிருந்தான், அப்படி

யிருந்ததை அங்குள்ளவர்களெல்லாம் பார்த்திருந்தார்கள். (எ - று.)

அங்குள்ளவர்கள் பார்த்திருந்ததை நான் அவனோடும், அவன் என்னோடும் கலந்திருந்ததினால் நான் பார்த்தேனில்லை. ஆனாலும் அவன் என்னைவிட்டுச் சிறிதுநீங்கும் அவசரத்தில் நான் கண்டேன் என்பது அநுபவசித்தாந்தம், 66

வாழ்வானவாழ்வெனக்கு வந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேனடி சற்றுங்குறையாமல்.

(போ - ரை) இப்படிப் பட்ட நல்ல வாழ்வானது எனக்குக்கிடைத்தது. ஆனால் அந்த வாழ்க்கையிலேயேயிருந்து நான் வாழாமலும் எம்பெருமானுடைய திருவடிகளை நமஸ்காரஞ் செய்யாமலும் நின்றபடியால் நான் இழிந்தவனாய் விட்டேன். (எ - று.)

ஆனாலும் அந்தச் சிவபெருமானானவன் என்னைக் கைவிடமாட்டான் என்பது குறிப்பு. 67

பொய்யானவாழ்வெனக்குப் போதுமெனக்காணேண்டி
மெய்யானவாழ்வெனக்கு வெறும்பாழாய்விட்டதடி

(போ - ரை.) உலகவாழ்க்கையான பொய்வாழ்வில் இதுவரைக்கும் இருந்து அநுபவித்தசுகம் போதுமானதென்கிற திருப்தியெனக்கு வரவில்லை அப்படியிருந்தும் என்னுடைய குருசுவாமியின் அருளால் மெய்வாழ்வான மோக்ஷவாழ்வானது எனக்கு வெட்டவெளியாய் முடிந்ததல்லவா? (எ - று.)

ஆ! ஆ!! என்னுடைய ஞானசிரியருடைய சீவகாருணியத்தை நான் என்னென்று எடுத்துச்சொல்வேன். 68

கன்னியழித்தவனைக் கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநாதறியே னீதென்னமாயமடி.

(பொ - ரை.) நான் என்னுடைய கன்னிப்பருவத்தைக் கெடுத்த பெருமானைக் கண்குளிரத் தரிசித்தேன். அப்படி அவனைக் கண்டபிறகு நான் என்னும் அகங்கார வாசனையோடு கூடிய என்னுடைய தன்மையானது போயின விடத்தை நான் அறிந்தேனில்லை இதுவென்ன ஆச்சரியமோ? எனக்குத் தெரியவில்லை. (எ - று.)

"சிவன் செயலாலே யாதும் வருமெனத்தேரேன்" என்று ஆன்றோர்கள் சொல்லியிருக்கின்றதினால் எல்லாம் சிவன் செயலாகவே முடிகின்றதே யொழிய வேறில்லை என்பது குறிப்பு. 69

சொல்லாலேசொல்லுதற்குச் சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்து மிப்போதறியார்கள்.

(பொ - ரை) (அந்தக்குருசுவாமி யானவர் எனக்குக் கடாட்சித்த அருள்நிலையில் நானிருந்து அதையநுபவிக்குங் காலத்தில் அத்திருவருளின் திறத்தை இப்படிப்பட்டதா மென்று எடுத்துச்) சொல்லுவதற்கு வாய்வரவில்லை. ஆனாலும் அவ்வருள் எல்லாராலும் காணப்பட்டதேயாகும். இப்பொழுது பந்தத்திலிருப்பதால் கண்டதாக நினைக்கும் அறிவுதோன்றவில்லை. (எ - று.)

"சொல்லிறந்ததுவெளி" என்று முன்னோர்கள் சொல்லி யிருக்கின்றதினால் சொல்லாற் சொல்லப் படுவதல்ல வென்பார். "சொல்லாலே சொல்லுதற்குச் சொல்ல வாயில்லையடி" என்றார். 70

கண்மாயமிட்டாண்டி கருத்துமிழந்தேண்டி
புண்மாயமிட்டவனை யுருவழியக்கண்டேண்டி.

(போ - ரை) என்னை அவன் தன்னுடைய கண்களால் ஒருவகையான சாடைகாட்டினன். அச்சாடையை நான் கண்டபோதே என்னுடைய சுபாவ அறிவைநான் இகழ்ந்தேன். ஆனாலும் இப்படி உள்மார்க்கமாக மாயஞ் செய்தவனை யாவனென்று அவ்விடத்தில் பார்த்தபோது அவன் நாமரூபங்களில்லாமல் வெளிவந்தான். நம்மை இப்படி செய்தவன் இவனேயாவானென்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். (எ - று.) 71

என்னசொல்லப்போரேனே னிந்தவதிசயத்தை
கன்னியிளங்கமுகு காய்த்ததடிகண்ணார,

(போ - ரை.) அப்படி அவனைப்பார்த்துக் கொண்டிருக்கும்போதே அங்கோர் அழியாத சிறியபாக்கு மரமானது குலைவிட்டுக் காய்த்ததும் கண்டேன், ஆ! அவன் இப்படிசெய்த ஆச்சரியத்தின் பெருமையை நான் என்னவென்று சொல்லுவேன். (எ - று.)

கன்னி இளங்கமுகு காய்த்தது என்றது சிவஞேடிரண்டறக் கலக்கும் அவசரத்தில் தோன்றும் ஒரு திருவருளாகும். 72

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாம் சவ்வாதுமணக்குதடி.

(போ - ரை) அந்தப்பரம் பொருளை யடைவதற்குப் போகும் இடர்வழிக ளெல்லாம் அருள் தன்மையான இடங்களாகவே இருக்கின்றன அந்தந்த இடங்களில் சற்றிருந்து பார்த்தாலோ சவ்வாதுவின் மணத்தைத்தந்து நிற்கின்றன, (எ - று) 73

இந்தமணமெங்கு மியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதத் தருட்கடலில்மூழ்கினண்டி.

(பொ - ரை.) இந்த இடங்களில் உண்டாகும் மணமானது என்றும் அழியாது ஒரேதன்மையனு யிருக்கின்ற சிவமணமே யாகுமென்றறிந்து நான் அடைதற்குப் போவதான சுகாதீதத் தன்மையை வாய்ந்த திருவருட்கடலில் போய் மூழ்கினேன். (எ - று.)

சிவமணம்வீசும்கடல் அருட்கடலாகையாலும் அக்கடலில் பெரியோர்கள் மூழ்குவது சுபாவமாகையாலும் தானும் மூழ்கினதாகக் கூறினர். 74

இரும்பிறுறைநீர்போல வெனைவிழுங்கிக்கொண்டான்டி
அரும்பிலுறைவாசனைபோ லன்றேயிருந்தாண்டி.

(பொ - ரை.) நெருப்பிற் காய்ச்சிய இரும்பினிடமாகச் சலத்தைக் கொட்டினல் அச்சலத்தை அந்த இரும்பானது தன்வயப்படுத்திக் கொள்வதுபோல என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டு, பூவிலுண்டானவாசனை அப்பூவினின்றும் பிரியாதவாறுபோல என்னேடு கலந்தும் இருந்தான். (எ - று.)

இரும்புண்ட நீரைப்போல் திரும்பா முத்தியளித்துப் பூவின் மணம்போல் கலப்பதே பேரின்பமாகையால் அங்ஙனமே என்னைச் செய்து கொண்டான் என்பார் இங்ஙனம் கூறினர். 75

அக்கினிகற்பூரத்தை யறவிழுங்கிக்கொண்டாப்போல்
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி.

(பொ - ரை.) தீநெருப்பானது கர்ப்பூரத்தைக் காட்டிய மாத்திரத்தில் அக்கர்ப்பூரத்தை யறவே விழுங்கியெரித்து விடுவதுபோல என்னையும் ஒருவரறியாதபடி உள்ளேயே தன்வயப்படுத்திக் கொண்டு என்னுடனும் கலந்திருந்தான். (எ - று.)

ஆனல் இதுவெல்லாம் திருவருட்டன்மையின் மிக்க குணம் என்றது வெளிவருகின்றது என்றபடி. 76

கடல்நீருமாறும்போற் கலந்துகரைகாணேண்டி
உடலுமுயிரும்போ லுட்கலந்துநின்றுண்டி.

(போ - ரை.) சமுத்திரத்தின் சலமும், ஆற்றின்சலமும் ஒன்றுகச் சேர்ந்தால் அவ்விரண்டையும் பிரித்து இது கடனீரென்றும், இது ஆற்றுனீரென்றும், கரைகாட்டிச் சொல்லாதவாறு போலவும், உடம்பும், உயிரும் போலவும் கலந்து என்னைத்தன்வயப்படுத்திக் கொண்டிருக்கின்றுன் (எ - று.)

இதுவே அத்துவித நிலைமையாகுமென்று பெரியோர் சொல்லுவார். 77

பொன்னுமுறைமாற்றும்போற் பொருவரியபூரணன்காண்
மன்னுமனுபூதியடி மாணிக்கதுள்ளொளிபோல்

(போ - ரை) பொன்னையும் பொன்னின் மாற்றையும் போல, இதுவேறு இதுவேறு என்று பிரித்துச் சொல்லுதற்குக் கூடாமல் எங்கும் வியாபகனு யிருக்கின்றுன். ஆனல் மாணிக்கத்திலிருந்தும் வீசுகின்ற ஒளிபோல் உயிர்களில் கலந்திருப்பான், சிவாநுபூதி மான்களாலே அறியப்படுவான். (எ - று)

பொன்னும், அதன் உறைமாற்றும் ஒன்றுதலால் வேறுவேறு பிரித்துச்சொல்லாததுபோல இவனும் சீவனினின்றும் வேறுபிரித்துச்சொல்லாதபடி கலந்திருக்கின்றுனென்பார் இப்படி கூறினுர்.

கங்குகரையில்லாண்டி கரைகாணுக்கப்பலடி
எங்குமளவில்லாண்டி யேகமாய்நின்றுண்டி

(பொ - ரை) ஒரு அளவு சொல்லக்கூடாதவனாகவும், இப்படிப் பட்டவனென்று அளந்து சொல்லக்கூடாதவனும், எங்கும் நிறைந்துள்ளவனும், தனி வஸ்துவாயிருப்பவனுமாவன், (அவன் யாவனென்றால் நம்முடைய சிவபெருமான்) (எ - று.)

என்னுணையென்னுணை யென்னுணையேகமிரண்
டென்னுமற்சும்மா விருவென்று—சொன்னான்
திருஞானசம்பந்தன் சீகாழிநாடான்
அருளாளன் ஞானவினோதன்.

என்று ஆன்றோர் சொல்லியிருக்கின்றகருத்தை இங்ஙனம் இப்பட்டினத்தடிகளும் வெளிப் படையாக்கிக் கூறினார்.

தீவகம்போலென்னைச் சேர்ந்தபரசின்மயன்காண்
பாவமொன்றில்லாண்டி பார்த்திடமெல்லாம்பரங்காண்

(பொ - ரை) தீபத்தின் ஒளியைப்போல் என்னிடத்தில் சதாகலந்திருந்த சின்மயனும், பாவனை யொன்றினும் அறியப்படாதவனும், பார்த்த எல்லா விடங்களிலும் வெளிப்பட்டு விளங்காநின்ற பரம்பொருளுமாவான்.

இப்படிப்பட்ட தன்மையை யுடையவன் யாவனோ என்று ஐயப்படுவோர்கள் நன்மையெல்லாம் ஆட்கொண்டு தன்னடிப்படுத்து நிமித்தம் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள ஆதிமூர்த்தி யென்றறிக. 80

உள்ளார்க்குமுள்ளாண்டி யூருமில்லான்பேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி

(பொ - ரை) எக்காலத்திலும் அவனை நாடியிருக்கின்ற விடத்தில் தானும் கலந்திருப்பான். ஆனல் அவனுக்கு

ஒரு ஊரென்பதும், ஒருபேரென்பதும் இல்லை. இப்படியிருந்தாலும் நம்மை கெடுக்கும்பொருட்டு வஞ்சகத்தைச் செய்துக்கொண்டு வாராநின்ற ஐம்புலன்களையும் அடக்கியாளும்படி காரணகுருவாய் வந்தவன். (எ - று) 81

ஈண்டு இச்செய்யுள் குருமூர்த்தியின் பெருமையை விளக்கிற்று.

அப்பிறப்புக்கெல்லாம் அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தா னிவனுகுமெய்ப்பொருள்காண்

(போ - ரை) முன்னேபிறந்து கழிந்த அந்தச் சென்மங்களி லெல்லாம் என்னை அடிமைகொண்டு ஆண்டவன், இப்பிறப்பிலும் அப்படியே செய்யு நிமித்தம் எனக்கோர் ஆசாரிய சுவாமியாக எழுந்தருளி வந்தான் (எ - று)

இவனுடைய பெருங்கருணைத் திறத்திற்குக் கைம்மாறென்னை என்பது குறிப்பு. 82

நீரொளிபோலெங்கு நிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும் பரந்தபராபரன்காண்

(போ - ரை) நீரின்வெளிச்சம்போல எவ்விடத்திலும் நிறைந்துள்ள நோயற்றவனும், பூமியின்பிரகாசம்போல எவ்விடத்திலும் பரவியிருக்கின்ற பராபரனுமாவன் நம்முடைய சிவபெருமான். (எ - று) 83

நூலாலுணர்வரிய நுண்மையினு நுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற் பரந்தபரிபூரணன்காண்

(போ - ரை) சாஸ்திரங்களில் சொல்லிய வழிப்படியே அறிதற்கு அருமையானவனும், மிகவும் நுண்ணிய அநுபவ சித்தமுள்ளார்க்கே அறியப்படுபவனும், பாலிற்சர்க்

கரை கலந்தவிதம்போல் எங்கும்பரவியி யிருப்பவனு மாவான். (எ - று.) 84

உளக்கண்ணுக்கல்லா தூண்கண்ணுலோருமதோ
விளக்குச்சுடரொளிபோல் மேவியிருந்தாண்டி

(போ - ரை) எம்பெருமானுகிய சிவபெருமானுனவன் விளக்கின் வெளிச்சம்போல் எங்கும் வியாபித்திருப்பவனுகையால், அச் சிவபெருமானுனவன் அக்கண்ணுகிய ஞானக்கண்ணுல் காணப்படுவானேயல்லாமல் வெளிக்கண்ணுகிய ஊனக்கண்களால் காணப்படமாட்டான். (எ-று.)

கல்லுளிருந்த கனலொலிபோற்காரணமாய்
புல்லியிருந்தும் பொருவரியபூரணன்காண்

(போ - ரை) கல்லுளிருந்தும் அடியார்கள் குறை கூறிய காலத்தில் அக்கினியின் ஒளியைப்போன்ற காரண வஸ்துவாய்ப் புல்லினிடமிருந்தும் சொல்லுதற்கரிய வியாபகனுவான். (எ - று.) 86

பொற்பூவும்வாசனைபோற் போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும்வாசனைபோற் காணுக்கயவருக்கு

(போ - ரை) எம்பெருமானுனவன் ஞானமுதிக்கப் பெற்றவர்களுக்கு அழகிய பூவின்வாசனைபோலும், அந்த ஞானமுதிக்கப்பெருத கீழ்மக்களுக்குக் கல்லாற்செய்யப் பட்ட பூவின்வாசனைபோலும் இருப்பான்: (எ - று) 87

மைக்குழம்புமுத்தும்போல் மருவிமறவாதவர்க்குக்
கைக்குட்கனியாகுங் கருவறுத்தகாரணர்க்குப்

(போ - ரை) தன்னைமறவாதவர்களுக்கு மைக்குழம்பையும், முத்தினையும்போலும், பிறப்பைநீக்கிய புண்ணி

யர்களுக்கு கையிற்சிக்கிய பழத்தைப்போலவும் இருப்பான் எம்முடைய தலைவனாவான். (எ - று.)

பளிங்கிற்பவளமடி பற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சியைவெள்ளியென்பார் கிட்டாதார்கிட்டுவரோ.

(போ - ரை) யாதொருபற்றையும் தம்பால் இருக்கப் பெறுமல் அறவே நீக்கிக்கொண்டவர்களுக்கு பளிங்கில் விளங்கா நின்ற பவளம் போலவும் சிப்பியைப்பார்த்து அது சிப்பியோ வெள்ளியோ என்று ஐயமுறுகார்போல் ஐயமுற்று அவனையடையப் பெறுதவர்களுக்கு சிவபெருமானுனவர் கிட்டுவரோ? ஒருகாலும் கிட்டார். (எ - று.)

எட்டுக்கடங்காண்டி யெழுத்திற்பிறவாண்டி
நாட்டினரிகளெல்லா நற்புரவிசெய்தாண்டி

(போ - ரை ) இங்ஙனம் சொல்லிக்கொண்டு வாரா நின்ற சிவபெருமானுனவன் எட்டுக் கடங்காதவனும், எழுத்துக்களால் அறியப் படாதவனும், காட்டின்கணிருந்த நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி நாட்டில் நடத்தினவனுமாவான். (எ - று) 90

பஞ்சப்பிரளயத்து மிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்று னயனத்தழல்விழியான்

(போ - ரை) ஐந்துவகையான பிரளயகாலத்திலும் தான் அழியாமல் அப்பிரளயத்தைக் கடந்திருப்பான். அவன் யாரோவென்றால், காளகண்டத்தையுடையவனும், நெற்றிக்கண்ணை யுடையவனுமான சிவபெருமானுவான் ?

என்றும் அழியாமல் ஒரே படித்தாயிருப்பவன் சிவபெருமானுகையால் நாமும் அவனையே வழிபட்டுய்தல் அவசியம் என்பது குறிப்பு. 91

அகங்காக்கும்புறங்காக்கும் அளவிலாவண்டமுதல்
செகங்காக்கும்காணுத் திசைபத்துங்காக்குமடி

(பொ - ரை) சிவபெருமானுனவன், அகத்திலுள்ள பொருள்களையும், புறத்திலுள்ள பொருள்களையும், மிகுந்த வண்டங்கள் முதலான உலகங்களையும், பத்துத்திசைகளையும் கலவாமற்கலந்து நின்று காவல்செய்வான். (எ - று.)

பேசாப்பிரமமடி பேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபசாசங்கள் அணுகாதபேரொளிகாண்

(பொ - ரை) மௌன ஞானத்தோர்களால் அறியப்படுவனும், தேஜோமயனும், ஆசையாகிய பிசாசுகள் வந்து சேறப்பெருத பெரிய ஒளிமயனுமாவான் (எ - று)

தேசமிறந்தவன்காண் திசையிறந்ததென்கடல்காண்
ஊசிமுனையூன்ற வில்லாவுறுபொருள்காண்

(பொ - ரை) தேசமும், திசையும், இல்லாதவனும் தென்சமுத்திரம் போன்றவன், ஊசிமுனையும் குத்துதற்கிடமில்லாமல் எங்கும் வியாபகனுமா யிருப்பவனுவான்.

சிப்பியில்முத்தொளிகாண் சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோ லமர்ந்தவரும்பொருள்காண்

(பொ - ரை) சிப்பியிலிருந் துண்டாகின்ற முத்தின் ஒளிபோல் பவனும் சின்மயத்தைக்காணும் அறிவில்லாதவர்களுக்கு நீரின் ஒளிபோலிருக்கின்ற அருமையான வஸ்துவானவனுமாவான். (எ - று)

இவனை அறிவதே பேரின்மாக்ஷிமையென்பது கருத்து.

ஆலாவிருட்சமடி யளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள்வீசும் பூடுருவுமெய்ப்பொருள்காண்

(போ - ரை) பெரிய ஆலமரம்போலவும், அதின் கிளைகள் போலவும் தழைந்து ஆகாயமெங்கும் நிறைந்து விளங்காநின்ற அருமையான உன்மனப் பொருளாவான் நம்முடைய இறைவன். (எ - று) 96

வங்கிஷமெல்லாங்கடந்து வருமாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும் ஆய்ந்தவரும்பொருள்காண்

(போ - ரை.) சாதிகளையெல்லாம் கடந்து மேலாய் விளங்கிவாராநின்ற மலர்போலும் திருவடிகளை யுடையவனும், பெரியோர்களால் அம்ச அம்சங்களாக ஆராயப் படுபவனுமாவான் (எ - று)

அப்படிப்பட்டவனைநாம் கண்குளிரத் தரிசிக்கவேண்டும் என்பது குறிப்பு. 87

நாமநட்டமானதடிந விலவிடமில்லையடி
காமனைக்கண்ணலெரிக்கக் நல்விழித்தகாரணன்காண்

(போ - ரை) புதிய நடனஞ்செய்தவனும், சொல்ல இடமில்லாதவனும், மன்மதனை நெற்றிக்கண்ணால் தகித்தருளியகாரணனுமாவான்.

காமனை எரித்தது காந்தபுராண விருத்தாந்தம், 98

கொட்டாதசேம்பொனடி குளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடி யீப்புகாத்தேனமுதம்

(போ - ரை) தட்டாலல் அடிக்கப்படாத செம்பொன் போன்றவனும், குளித்து எடுக்கப்படாத முத்துப் போன்றவனும் எட்டப்படாமல் உயர்ந்திருக்கின்ற கொம்புத்தேன்போல் ருசிப்பவனுமாவான்.

காணிப்பொன்னணியுடன் கல்லுரைமாத்தின்னதென்
ஆணியுடன்கூட்டி யடங்கலிட்டுக்கொண்டாண்டி [றே

(பொ - ரை) காணிகளைப் பெறுதற்குச்சமைந்துள்ள நல்லபொன்னை உறைகல்லில் மாற்றிட்டபோது அவ்வுரையும் அவ்வுரையிட்ட பொன்னும் ஒன்றுயவாறுபோலச் சிவபெருமானுனவன் என்னையும் அவனடி வழிப்பட்டவர்களையும் ஒன்றுக்கிக்கொண்டனன். (எ - று.)

இவன் செய்ததே பாதத்துவ நிலையின் உண்மை என்பது குறிப்பு. 100

அளவிறந்தவண்டத்தா ரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும் பேசாப்பிரமமடி

(பொ - ரை) அளவு சொல்லக்கூடாத எல்லா அண்ட சராசரங்களிலுள்ளவர்களெல்லாம் அநுபவித்தாலும், கொஞ்சமானுலும், பேசாதபிரமமாவான். (எ - று.)

அப்படிப்பட்ட பிரபத்தை அடைவோரும் அந்நிலையையே யடைவார்கள் என்பது குறிப்பு. 101

கன்னெஞ்சினுள்ளே கழுநீலம்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளே இணையடிகள்வைத்தாண்டி.

(பொ - ரை) என்னுடைய கல்லைப்போன்ற மனத்தின்கண் கழுநீலமரமானது பூத்தாப்போல் தன்னுடை இரண்டு திருவடிகளையும் மலர்த்தினுன். (எ - று.)

இச்செய்யுளானது "மலர்மிசையேகினுன் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்"

என்னுங் குறளடியின் கருத்தை விளக்குகின்றது, 102

வேதப்புறவியடி விரைந்தோடியும்மறியார்
காதற்று ஞானமடி காண்பார்கருத்துடையோர்.

(போ - ரை.) வேதமாகிய குதிரையின்மேல் ஆரோகணிப்பவனும் யாவராலும் விரைந்தோடியும் காணப்படாதவனும், மௌனஞானப் பொருளாயுள்ளவனும், தன்னைக்காணும் அறிவுடையார்களுடைய கருத்தின்கண் குடியிருப்பவனுமாவான். (எ - று.)

ஆனால், அவனை அறிவது ஞானிகளுக்கே எளிது என்பது குறிப்பு. 103

பாசவினையைப் படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடி நில்லென்றுசொன்னாண்டி.

(போ - ரை) என்னுடைய பாசமானது நீங்கிப்போம்படி கிருபா நோக்கம்வைத்தும், அவனுடைய நன்மைக்கொடுத்தும், என்னைத் தன்னடியின்கண் இருக்கும்படியாகவும் உபதேசித்து நின்றான். (எ - று.)

இவன் யாரோவென்றால் என்னுடைய குருசுவாமியாகிய சிவபெருமான் என்பதுவிடை. 104

ஓசையொடுங்குமிட மோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும் பிரமமிதுவென்றாண்டி.

(போ - ரை) நாதமானது ஒடுங்குகின்ற இடமான சிதாகாசத்தி லிருப்பவனும், பிரணவத்தின்கண் தேஜோமயனாயிருப்பவனும் மௌனியாயிருக்கும் பிரமமுமாவான் என்னுடைய மலத்தைப்போக்கி மலரடியைக் கொடுக்கும் பெருமான். (எ - று.) 105

சின்மயநன்னோக்காற் சிற்சுரூபங்காட்டியெனை
தன்மயமாயாக்கியே தானவனாய்நின்றாண்டி.

(போ - ரை) தனதுசின்மயமாகிய திருவருட்பார்வையினால் (அதாவது கிருபாநோக்கத்தால்) தன்னுடைய

ஞானசொரூபத்தைக் காட்டி என்னைத்தன்மயமாக்கித் தானும் அவனாகவே யிருந்தான். (எ - று)

இப்படி இவன்செய்ய என்ன புண்ணியஞ் செய்தேனோ? என்பது ஐயம். 106

தானென்னைப்பார்த்தாண்டி தன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டி நவிலவிடமில்லையடி

(பொ - ரை) அச்சிவ பெருமானானவன் என்னைத் தன்னுடைய கிருபா நோக்கத்தால் பார்த்ததுவே யொழிய நான் என்ன சொல்லுவேன், பின்னர்தானே நின்றானேயொழிய வேறாக என்னை ஒருபொருளென்று சொல்ல இடமில்லாமற்போயிற்று. (எ - று.) 107

இன்றிருந்துநாளைக் கிறக்கிறபேரெல்லோரும்
என்றுபரிபூரணத்தி லினிதிருக்கச்சொன்னாண்டி.

(பொ - ரை.) இன்றைக்கு உயிருடன் கூடியிருந்து நாளைக்கு உயிர் விடுகின்ற ஜீவர்களையெல்லாமும் எக்காலத்தும் அழியாத பூரண இன்பத்தின்கண் செவ்வையாக இருக்கும்படி குருமூர்த்தமா யெழுந்தருளி உபதேசித்தான். (எ - று)

ஆனால், உயிர்கள் அப்படிசெய்யாத குற்றத்திற்கு அவன் என்ன செய்வான் என்பது நீதி. 108

பார்க்கிலெளிதலவோ பற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்ட வவதனிதனில்வந்தாண்டி.

(பொ - ரை.) அன்பர்கள் பார்ப்பதற்கு எளிதானவனும் யாதொருபற்றையும் அறவேவிட்டவர்களால் பற்றப்படுவனும், எல்லா அன்பர்களுக்கும் தான் எழுந்தரு

ளியிருக்கும் இடத்தை உபதேசித்தற் பொருட்டே குரு மூர்த்தமாக எழுந்தருளிவந்தவனுமாவான். (எ - று.)

இதினல் குருமூர்த்தமா யெழுந்தருளி வந்தவனும் சிவபெருமானே யாவான் என்பதாம். 109

இத்தனைகாலமடி யிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடி யிரும்பினுறைநீரானேன்

(போ - ரை) என் குருசுவாமி யானவன் எனக்கு வெளிவந்து மௌனோபதேசஞ் செய்தபிறகு இதுவரைக்கும் அநேக ஜென்மங்களில் பலவகைப்பட்ட பிறவியாகப் பிறந்தும், இறந்தும் வீணாகப்பட்ட பாடெல்லாம் போய் விட்டன, ஆனல், நானே இரும்பினல் குடிக்கப் பட்ட நீரானேன் (எ - று.)

இரும்பினுறை நீரானேன் என்றது அத்துவித நிலை இந்நிலை அநுபவிகளாலே உணரத்தகும் என்றபடி. 110

எக்காலம்பட்டதடி யிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாம் அழுந்தினேனாரகில்.

(போ - ரை.) நான் பூர்வத்தில் எடுத்த அநேகசென்மங்களி லெல்லாம் பிறந்தும் இறந்தும் வீணாக நாள் கழித்து நரகத்துக்கு ஆளானேன். (எ - று)

ஆயினும் இப்பொழுது என்னுடைய ஆசாரியசுவாமியின் கிருபையால் நல்லமார்க்கத்தை யடைந்திருக்கின்றேன் என்பது கருத்து, 111

காலங்கழிந்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவு நாமநட்டமாச்சுதடி

(போ - ரை.) என்னுடைய கெட்டகால மெல்லாம் போய்விட்ட படியால் கர்மமெல்லாமும் போய்விட்டன,

இனி நான்குவகையாகப் பிறப்பதற்கேதுவான பிறவிகளும் போய்விட்டன. (எ - று)

ஆனல் இவையெல்லாம் என்னுடைய குருசுவாமியின் அருளேயாகும் என்பதாம். 112

முப்பாழுக்கப்பால் முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண் எனைவிழுங்கிக்கொண்டான்காண்

(பொ - ரை.) மூன்று பாழ்களுக்கும் அப்பாற்பட்ட வெறும்பாழான முதற்பாழனை சிவபெருமானனவன் இத்தனைகால மில்லாமல் இப்பொழுதே வெளிவந்து) என்னை அறவே விழுங்கித் தன்வயப்படுத்திக் கொண்டான். (எ - று.)

இப்படி அவன் என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டதினல் அவனுக்கு என்னலாபம் இருக்கின்றது என்பது ஒரு வியப்புப்பொருள்.

பாலின்கணெய்யிருந்தாற் போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய் தறவிழுங்கிக்கொண்டாண்டி

(பொ - ரை) பாலினிடத்தில் நெய்யானது மறைந்திருப்பதுபோலே சிவபெருமானனவன் நான் அறியாதபடி என்னிடத்தின் கண்ணேயிருந்து என்னையும் தன் வயப்படுத்திக்கொண்டான். (எ - று.)

ஆனல் இது என்னுடைய மலபரிபாககாலத்தினல் வினைந்ததென்றே எனக்குத்தெரிய வருகின்றது என்பது குறிப்பு. 114

தெத்தபடமானேண்டி தீயிரும்பிநீரானேன்
ஒத்தவிடநித்திரையென் றேதுமுணர்வறிந்தேன்

(போ - ரை) நான் அவனோடு ஐக்கியப்பட்டு விட்ட படியால் இரும்பினால் உண்ணப்பட்ட ஜலத்தின் தன்மையை யடைந்தவனானேன். ஆகையால் இப்பொழுதே அடுத்த விடத்தில் நித்திரையென்று சொல்லுவதையும் உணர்ந்துகொண்டேன். (எ - று.)

ஆனாலும் என்செயலால் ஒன்றுமில்லை எல்லாம் சிவன் செயலேயாம் என்பது கருத்து. 115

ஒப்புவமையுமற் றேதவரி தாயபொருள்
இப்பூவினிற்குருவே யென்னவந்தோன்றாள்வாழி

(போ - ரை) தனக்கோர் ஒப்பானபொருளும், திருஷ்டாந்தப்படுத்தும் பொருளும் இல்லாமல் சொல்லுதற் கருமையான பொருளாயுள்ள சிவபெருமானே இந்த வுலகத்தில் என்பொருட்டு ஆசிரியனாக எழுந்தருளி வந்தான். ஆகையால் அவனுடைய இரண்டு திருவடிகளுக்கும் நமஸ்காரம். (எ - று)

அவனன்றி வேறோர் தெய்வம் எனக்குத் துணையில்லையாகையால் அவனுடைய திருவடிகளையே வணங்கினேன் என்பார் இங்ஙனம் கூறினார். 116

ஒப்பாரிசொல்லிடினு மூவமைபிழைத்திடினு
முப்பாழுங்கற்றுணர்ந்தோர் முன்னோர்பொருத்தருளே

(போ - ரை) ஓ பெரியோர்களே! நீங்கள் பெண்கள் சொல்லி யழுவதைப்போல நானும் சொல்லியழுதாலும், அப்படி யழுவதைச் சொல்லிநின்ற இந்த நூலில் திருஷ்டாந்தங்கள் பிழைபட் டிருந்தாலும் எல்லா வற்றையும் பொறுத்தருள்வது உமதுகடமை. (எ - று)

இது அவையடைக்கத்தை யுணர்த்துகின்றது. 117

இந்த மகடூஉ முன்னிலையாகச் சொல்லப்பட்ட தாகையால் பெரும்பாலும் பெண்ணே என்றும் தோழி என்றும் எழுதவேண்டியது அவசியம், நாம் சில விடத்திற்கே அப்படி எழுதியிருப்பதால் இதைப் படிக்கும் பெரியவர்களெல்லாம் அதைத் தனித்தனியே வருவித்துப் படிக்கவும்.

அருட்புலம்பல்

முற்றுப் பெற்றது.

---

## பட்டினத்துப் பிள்ளையார்

# இறந்தகாலத்திரங்கல்.

---

இது இச் சென்மத்தில் சென்ற நாட்களினும் போயின ஜென்மங்களிலும் தாம்செய்து கெட்டுப்போன விஷயங்களைச் சொல்லுகின்றது.

வார்த்தைத்திரமில்லா மனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச் சதிரிழந்துகெட்டேனே

(பொ - ரை.) வாக்குத்திட மில்லாத அற்பத்தன்மையுடைய மனுஷர்களுக்காக, நான் அறிந்து கொண்டவைகளாகிய இழிந்த சொல்லோடு கூடியசாஸ்திரங்களைச் சொல்லி, அதினால் என்னுடைய சாமார்த்தியங்களெல்லாம் வீணேபோக்கி நானும் கெடுதியை யடைந்தேன். (1)

ஆனாலும் என்னுடைய ஆசாரிய சுவாமிகள் இருக்கின்றவரைக்கும் எனக்கு என்னகுறை யிருக்கின்றது என்பது குறிப்பு. 1

மெத்தமெத்தச்செல்வாக்கில் வேறுமருளடுத்துத்
தத்தித்தலைகீழாய்த் தானடந்துங்கெட்டேனே.

(போ - ரை) மிகுந்த செல்வாக்கிலிருந்து அதினல் மாயாசம்பந்த பட்டவனுகித் தலைகீழாய்த்தடுமாறிக் கர்வத்தையடைந்து இதுவரைக்கும் கெடுதியை யடைந்தேன். (எ - று.)

ஆனாலும் என்னுடைய குருசுவாமியானவர் இதையெல்லாம் மனதிற் கொள்ளாமல் என்னை ஆட்கொள்வாராக, என்பதாம். 2

வழக்கத்தலங்களினு மண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற் பதியிழந்துகெட்டேனே.

(போ - ரை) நான் வசித்து வழக்கப் பட்டிருந்த மண்மேலும், பெண்கள் மேலும், பொன்னின்மேலும் ஆசைப்பட்டு இது வரைக்கும் இருந்தமையால் அப்பழக்கம் நீங்காமற் போய்விட்டது அப்படியாயினமையால் நான் அடைதற்குரியதா யிருந்த பதிப்பொருளினிடம் சேராமல் வீணேகெட்டேன். (எ - று.) 3

ஆணிபொருந்து மரும்பூமியத்தனையும்
காணிநமதென்று கனம்பேசிக்கெட்டேனே.

(போ - ரை) பலம் பொருந்திய அருமையான பூமிகளைப் பார்த்து இந்தக்காணி எனது, இந்தக்காணி எனது என்று கௌரவமானவார்த்தையாடி அதினல் மமகாரவாசனை யுடையவனாய்க் கெட்டேன்.

ஆசாரமில்லா வரசருடன்கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்துகெட்டேனே.

(பொ - ரை.) நீதிமார்க்கங்களா லடையும் ஆசாரம் என்பது கொஞ்சமு மிருக்கப்பெறாத இராஜாக்களுடன் சேர்ந்து பாசாங்கான வார்த்தைகளைப்பேசி அதினால் என்னுடைய தலைவனை யடைதற்குக் கூடாமல் வீணே காலத்தைக் கழித்து விட்டேன். (எ - று.) 5

குருமார்க்கமில்லாக் குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே.

(பொ - ரை.) நல்ல ஆசிரியனை வழிபட்டு அவனருளின் வழிநடந்து உபதேசம் பெறாத குருட்டுமனிதர்களுடன் சிநேகஞ்செய்து அதினால் ஜநநசாகரத்தில் அகப்பட்டு மனம் வருந்தி வீணே தவிக்கின்றேன். (எ - று) 6

ஆலமருந்து மரன்பெருமையெண்ணாமல்
பாலாபெண்டீர்மெய்யென்றுபதியிழந்துகெட்டேனே

(பொ - ரை ) திருப்பாற்கடலிற் றோன்றிய் விஷத்தை யுண்ட சிவபெருமானுடைய கீர்த்தியைக் கொஞ்சமும் சிந்திக்காமல், பிள்ளைகள், பெண்கள், ஆகிய இவர்களையே மெய்யானவர்களென்று நினைத்து வீணேகாலம் கழித்தேன். (எ - று)

ஆனால் கிவப்பேற்றை யடையாமல் இதுவரைக்கும் காலஞ் சென்றதைப்போல இனிச்செல்ல விடமாட்டேன் என்பது குறிப்பு. 7

பிணவாசமுற்ற பெருங்காயமெய்யென்று
பணவாசையாலே பதியிழந்துகெட்டேனே.

(பொ - ரை) மிகுந்த முடை நாற்றம் வீசாநின்ற பெரிய இந்த உடம்பை என்றும் அழியாததாக நினைத்

துப் பணந்தேடிச் சேகரித்து வைப்பதின்மேல் அவாக் கொண்டு திரிந்து காலத்தை வீணேகழித்தேன். (எ - று.)

ஆனல், அப்படி இறந்தகால மெல்லாம் பரிபாக காலக் குறைவினை உணர்த்துகின்றது என்பது குறிப்பு. 8

கண்டபுலவர் கனக்கவே தான்புகழ
உண்டவுடம்பெல்லா முப்பரித்துக்கெட்டேனே.

(போ - ரை) என்னைப்பார்த்துப் பாடவரும் வித்து வான்க ளெல்லாம் மிகவுங் புகழ்ந்து பாடும்படியாக. செவ்வையாய்ப் புசித்துவளர்த்து வைத்த உடம்பை மிகவும் போஷித்தே வீணுகக் கெட்டேன்.

இது தான் தேகத்தின் மேல் மிகவும் வாஞ்சை வைத் திருந்தனர் என்பதைக் குறிக்கின்றது.

வித்வான்கள் பணம் கொடுப்பவர்களைப் பலவகை யாகப் புகழ்ந்து பாடுவது சுபாவமா யிருப்பதினல் இவ ரும், "கண்டபுலவர் கனக்கவே தான் புகழ" என்முர். 9

எண்ணிறந்தசென்ம மெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற் பதியிழந்துகெட்டேனே.

(போ - ரை) நான் இதுவரைக்கும் எடுத்த ஜென்மங் களுக்கு அளவேயிராது, ஆகையால் அந்தந்தச் சென்மங் களிலெல்லாஞ் சிவபூசையைக் கிரமப்படி செய்து அதி ஞல் கிடைக்கும் இலாபத்தைபடைந்து சிவப்பேற்றில் வாழாமல் வீணே காலங்கழித்தேன். (எ - று.( 10

சிற்றெறும்புசற்றுந் தீண்டப்பொருவுடம்பை
உற்றுருக்கவுஞ்சுடவு மொப்பித்துமாண்டேனே

(போ - ரை.) நான் எடுத்துள்ள அனேக ஜென்மங் களிலும் சிறிய எறும்பினுலும் தீண்டப்பெருத இந்த

உடம்பைச் சுற்றத்தார்கள் நெருங்கி வருத்தப்படுத்தவும், சுடவும், அவர்களுக்கு ஒப்புவித்து நான் வீணே சென்றேன் (எ - று)

இந்தத்தேகமே மோக்ஷத்தையடைய எளியதாகையால் அதை நான் பலஜன்மங்களிலும் விட்டுவிட்டுக் கெட்டேன் என்பது குறிப்பு. 11

தன்னுடம்புதானே தனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாம லின்பமென்றுமாண்டேனே

(பொ - ரை) தன்னுடைய தேகமே தனக்கு விரோதத்தை விளைக்கும் என்று எண்ணும் அறிவில்லாமல் அத்தேகமே இன்பத்தைத் தருவதாவென்று நினைத்து நான் அநேக நாட்களை வீணாகக் கழித்து விட்டேன் (எ - று.)

அப்படிநான் என்னுடைய வாழ்நாட்களை யெல்லாம் வீணாகக் கழித்து விட்டதையும் பாராமல் என்னுடைய குருசுவாமி. எழுந் தருளிவந்து எனக்கு உபதேசித்த பெருங்கருணைத் திறத்தை நான் என்ன வென்று சொல்லுவேன், என்பது குறிப்பு. 12

தோலெலும்புமாங்கிஷமுந் தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புசுற்றமென்று வீருப்பாய்மாண்டேனே.

(பொ - ரை.) தோல், எலும்பு; மாமிசம், சோறு, இவற்றால் விருத்தியடைந்து வாராநின்ற தேகமும், சுற்றமும், ஆகிய இவைகளோ மெய்யென்றுநம்பி மற்றவற்றின் மேல் மிகுதியும் வெறுப்பாயிருந்து என்னுடைய காலத்தையெல்லாம் வீணய்க்கழித்து விட்டேன். (எ - று.)

போக்குவரத்தும் பொருள்வரத்துங்காணுமல்
வாக்கழிவுசொல்லி மனமறுக்கிகெட்டேனே.

(போ - ரை) இறப்பையும், பிறப்பையும் நீக்கும் வழியையும் மெய்ப்பொருளானது வந்து கூடும்வழியையும் எண்ணியெண்ணிப் பாராமல் வீண்வார்த்தைப்பேசி மனமானது மயக்கத்தை யடைந்து அதினால் வீண்காலம் கழித்தேன். (எ - று.)

அப்படிபிறந்தபட்ட காலமெல்லாம் பரிபாகக்குறைவானதென்று எனக்கு இப்பொழுதே நன்றாய் விளங்குகின்றது. ஆனாலும் என்னுடைய குருசுவாமியானவன் என்னைக் கைவிடமாட்டான் என்பது குறிப்பு. 14

இறந்தகாலத்திரங்கல்

முற்றிற்று.

---

## பட்டினத்துப் பிள்ளையார்

# நெஞ்சோடு புலம்பல்.

இஃது தான்மானத்தோடு தன்னுடைய குறைகளைச் சொல்லித் துதிக்கின்றதைச் சொல்லுகின்றது,

மண்காட்டிப்பொன்காட்டி மாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங் கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போ லலைந்தனையேநெஞ்சமே.

(போ - ரை) ஓமனமே! மண்ணையும், பொன்னையும், பெண்ணையும் காட்டித் திருச்செங்காட்டில் நடிக்கின்ற சிவபெருமானைத் துதிசெய்யாமல், கண்களை மருட்டிக் காட்டி மயக்குகின்ற வேசிகளுடைய கண்களாகியவலையில்

அகப்பட்டு கடைத்தெருவில் அலைந்து திரிகின்ற நாயைப் போல் நீ மிகவும் அலைந்தாய். (எ - று.)

நீ அப்படி அலைந்து திரிந்துகொண்டே யிருப்பாயானால் சிவபெருமானுடைய திருவருளைப் பெறமாட்டாய் அவ்வலைதலை விட்டு ஓரிடத்தில் அமைதியா யிருப்பாயானால் அவனருளை யடைவாய், ஆகையால் இதை நன்கு யோசித்துப்பார்த்து அவனருள் வழிப்படும் மார்க்கத்தைச் சீக்கிரத்தி லடையக்கடவாய் என்பது குறிப்பு. 1

புட்பாசனவணையிற் பொற்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணி யோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தி யியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்ற முயங்கிலையேநெஞ்சமே.

(போ - ரை) ஓமனமே! புஷ்பங்களால் பரப்பப்பட்டு விளங்காநின்ற ஆசனத்தின்மேலும், அழகியபட்டு மெத்தையின்மேலும் இருந்து மிகுதியும் வரித்துக் கொண்டிருந்த ஆபரணங்களோடு பாயிற் கிடத்திவைக்க இயமனவன் உயிரைக் கவர்ந்துகொண்டு போவதற்கு முன்னமே முப்பாழ்த் தன்மையான பொருளைத் துதிசெய்யாமல் வீணே விட்டனையே. (எ - று)

நீ இப்படி அப்பொருளைப் பற்றாமல் விட்டபடியால் கதியை எப்படி பெறுவாய் என்பதாம். 2

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பானின் றடுமதைப்போற்றாமல்
இப்பாழாம்வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன்றீயாம
துப்பாழாய்வந்தவினை சூழ்ந்தனையேநெஞ்சே [ல்

(போ - ரை) மனமே! மூன்றுபாழும் பாழாகி அவைகளுக்கு அதீதப்பட்டதான முதற்பாழும் வெறும்பாழாகி அந்தவெறும் பாழுக்கும் அப்பாற்பட்டிருந்து நடனஞ் செய்கின்ற அந்தப் பரம்பொருளைத் துதிசெய்யாமல், இந்தக்கேட்டைத் தராநின்ற வாழ்க்கையை நம்பிப் பிச்சையெடுத்தவர்களுக்கு ஒருபொருளையும் தானம் செய்யாமல் இந்தப் பாழாகவந்து அடைந்த இருவினைகளிற் சூழ்ந்திருக்கின்றனை. (எ - று.)

ஆ! ஈதென்ன விபரீதமோ அறியேன் என்பது குறிப்பு. 3

அன்னம்பகிர்ந்திடுங் கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ் சிவனருளைப்போற்றுமல்
பொன்னுமனையுமெழிற் பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாக வெண்ணினையேநெஞ்சமே

(போ - ரை) மனமே! அன்னத்தைப்பாகித்து இவ்விடத்தில் அலைந்துதிரியும் தரித்திரர்களுக்குக் கொடுத்து உதவிசெய்பத் தகுந்த இந்தமானிடதேகம் எடுத்தும் சிவபெருமானுடையதிருவடிகளைத் துதிசெய்யாமல் பொன்னையும், வீட்டையும், அழகிய பெண்களையும் வாழ்க்கையையும், மிகவுஞ் சதமுடையவைகளாக நினைத்தாய், (எ - று.)

நீ அவைகளை அழியாத துணைப் பொருள்களாக நினைப்பதினால் உனக்கென்னபலன் என்பது கருத்து. 4

முற்றொடர்பிற்செய்த முறைமையால் வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றேமென் றெண்ணுதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாம லரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற் கண்மறந்துவிட்டனையே.

(போ - ரை) ஒ பாழாகிய மனமே! முன்சென்மத்தில் செய்த நல்வினையால் கிடைத்த இந்தச் செல்வத்தை இப்

பொழுதே பெற்றதாக நினைத்துத் தரித்திரர்களுக்குக் கொடாமலும், சிவபூசை செய்யாமலும், புலவர்களுக்குக் கொடாமலும் அதுவந்தவழியை மறந்துவிட்டாய். (எ-று)

அப்படி மறந்து விடுவாயானல் நீ சிவப்பேற்றை அடைவது எப்படி? என்பது கருத்து 5

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்கா தனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன் கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே.

(போ - ரை.) மனமே! மாணிக்கம், முத்து, வயிரம், ஆகிய இவைகளை யமைத்துச்செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து பொன்னாற்செய்யப்பட்ட சிம்மாசனத்தி லிருந்தாலும், எமனனவன் நம்முடைய தேகத்தைக்காட்டிக் கையைப்பிடித்தால் மேலேசொன்ன காணியும், பொன்னும், கூடவருவதைப் பார்க்கவில்லையே? (எ - று.)

நாம் தேகத்தைவிட்டுப் புறப்பட்டு வெளியே போம்போது இந்தப்பொன் 'பெண்' பூமி முதலியயாவும் நம்முடன் கூடவருகின்றனவா? இல்லை ஆகையால் நீ ஏன் அவைகளைத் துணையுள்ளவைகளாக நினைக்கின்ருய் என்பதாம். 6

கற்கட்டுமோதிரநற் கடுக்கனரைஞாண்பூண்டு
திக்கெட்டும்போற்ற திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர் பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே

(போ - ரை) ஓ மனமே! இரத்தினங்களிட்டுக் கட்டப் பட்டிருக்கும் மோதிரங்கள், நல்லகடுக்கன், அரைஞாண் ஆகிய இவைகளைத் தரித்து, அஷ்டதிசைகளிலுள்ள

ஜெனங்களெல்லாந் துதிசெய்யும்படியாக வாழ்ந்திருந்தாலும் எமனானவன் பல்லை ஒன்றோடொன்று கிட்டிக்கொள்ளும்படிசெய்து உயிரைப் பந்துபோல் கையிலெடுத்து விளையாடுகின்ற காலத்தில் மேலேசொன்ன ஆபரணங்களெல்லாம் நம்முடன் கூடவரப் பார்த்திருக்கின்றோமா? இல்லையே அப்படியிருக்க நீ ஏன் இன்னும் அவைகளின் விருப்பம் வைத்திருக்கின்றாய். (எ - று) 7

முன்னநீசெய்ததவ மும்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும் பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச் சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற் காட்சியற்றாய்நெஞ்சமே.

(போ - ரை) மனமே! முன்சழிந்த ஜென்மங்களில் நீ செய்திரா நின்ற பூஜாபலமே மூன்று ஜென்மங்கள் வரைக்கும் உன்னைத் தொடர்ந்து உன்னுடன் கூடவருமேயொழியத் திரவியங்களும், ஆபரணங்களும், பெண்களும் கூடவரா, இப்படியிருப்பது உனக்குத் தெரிந்தும் அவைகளையே சதமாக நம்பி ஞானசிரியனை விடாது நமஸ்காரஞ் செய்யும் தொழிலைமறந்தாய் நீ இங்ஙனம் செய்தமையால் கண்ணில்லாக் குருடன்போல் பார்வை யில்லாதவனானாய். (எ-று.)

மனமே! கூடவரப்படாத திரவியங்கள் முதலாகச் சொல்லப்பட்ட பொருள்கள்மேல் வைத்திருக்கும் ஆசையைவிட்டுச் சிவபெருமானிடத்தில் சதா ஆசை வைக்கக் கடவை. அப்படி வைப்பாயானால் அவன் உன்னைக்கூடிய சீக்கிரத்தில் ஜெநநசமுத்திரத்தி லிருந்துப் மோக்ஷ மென்கிற கரையிலேற்றுவான் என்பது கருத்து 8

பையரவம்பூண்ட பரமர்திருப்பொற்றளைத்
தூய்யமலர்பரித்துத் தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங் காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிருமாந்து விட்டளையேநெஞ்சமே.

(போ - ரை) மனமே! படம்பொருந்திய சர்ப்பாபரணத்தைத் தரித்திரா நின்ற சிவபெருமானுடைய அழகிய திருவடிகளைச் சதா நமஸ்காரஞ் செய்யாமல் பரிசுத்தமான மலர்கள்கொய்து சாத்தி அத்திருவடிகளை வணங்காமலும் பெண்கள் தமது கைகளில் அணிந்துள்ளவளையலையும், காலில் அணியும் பாடகத்தையும் பார்த்து இவைகளே உண்மையா மென்றும் அழியாம லிருக்கப்பட்ட பொருள்களென்று நினைத்து கர்வப்பட்டு விட்டாய்.(எ-று)

உனக்கு இப்படிப்பட்ட கர்வம் இருக்கின்ற வரைக்கும் சிவசாதனமாயுள்ள பொருள் கைகூடாது என்பது குறிப்பு. 9

மாதுக்கொருபாகம் வைத்தவரன்பொற்றளைப்
போதுக்கொருபோதும் போற்றிவருந்தாமல்
மாதுக்குத்தேடியிந்த மண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீ யெண்ணினையேநெஞ்சமே.

(போ - ரை) மனமே! தமது வாமபாகத்தில் பார்வதாதேவியை இருக்கச் செய்து எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளை வேளைக்கு ஒருதரமானுலும் துதிசெய்து அதினல் வருத்தமடைவதை விட்டுவாதுஇடும் பொருட்டுத் தேடிச் சிலதிரவியத்தைச் சம்பாதித்து இந்தப் பூமியின்கண் புதைத்து வீணே யிறந்து படும்படியாகவே நீ நினைத்தாய். (எ - று.)

நீ அப்படி நினைத்துச் சில அப்பிரயோசனமான காரியங்களை செய்து வருவதினால் நீ என்னபலனை அடைவாய். ஒன்று மில்லை என்றபடி. 10

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்கு நினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தானைச் சிந்தைசெய்வாய்நெஞ்சமே.

(பொ - ரை) மனமே! பஞ்சசத்திகளின் திருவருளைத் துதி செய்து சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களாகிய ஐம் புலன்களையும் நீக்கிக் கொள்ளும்படி உனக்கு நானோர் புத்திசொல்லுகிறேன். (அது என்ன வென்றால்) வஞ்ச கத்தை நீக்கி மனத்தின்கண் வேறுவேறு எண்ணங்களை வைக்காமல் செவந்த திருவடிகளைச் சதா துதி செய்வதே யாம். (எ - று)

நான் சொன்னபடியே நீ சிவபெருமானுடைய திரு வடிகளைத் துதிசெய்வையானால் என்றும் அழியாத சிவ கதியை யடைவாய் என்பதாம். 11

அற்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைபோற்றித் தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன் உடமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற் றவளைபோலானேனே.

(பொ - ரை) (மனமே! உன்னால் நானும்) மிகவும் ஆச்சரியமாக இந்த வுடம்பிலிருந்தும் உயிரானது வெளிப் பட்டுப்போகு முன்னரே, நல்ல ஞானாசிரியனைத் துதி செய்து அதினால் நல்ல தவத்தை அடைந்து தவசியாய் வாழ்ந்திராமல் இடையில் உண்டாகின்ற செவந்த பொன் னையும், அதினாலாகும் ஆபரணங்களையும், பெரியவாழ்வை

யும், நிலையுள்ளவைகளாக நம்பியிருந்ததினால் பாம்பின் வாயிற்பட்டிறந்த தவளைபோன்றவனாய் விட்டேன். (எ-று)

நான் பொன், பெண், பூமி, முதலியவைகள் மேல் அவாவைத்துச் சிவபெருமான் திருவடியை மறந்தேனாகை யால் எமனுக்கு இரையாவதற்கு யாதொரு சந்தேகமு மில்லை என்றபடி. 12

உற்றாரார்பெற்றோரா ருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும்போதுதவுவரோ
கற்றாமவிழ்ந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றாகிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(போ - ரை) மனமே! உன்னுடைய சுற்றத்தாரும், பெற்றவர்களும் உடன் பிறந்தவர்களும், பிள்ளைகளும், மற்றுமுள்ளவர்களும் இருந்தாலும் என்னலாபம். ஒன்று மில்லை, ஏனென்றால் உயிரானது இறக்குந் தருவாயில் மேலே சொல்லப் பட்டவர்களெல்லாம் உதவார்களாகை யால் இப்படி யிருப்பதை நீயறிந்தும் தாய்ப்பசுவைக் காணாமல் கன்றானது இளகிமனம் வருந்துவது போல் வருந்தி சிற்றின்பத்திற் சேர்ந்தனையே? ஈதென்னகெடு தியோ? அறியேன். (எ - று) 13

வீடிருக்கத்தாயிருக்க வேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப் பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கண்ணிருக்க வைத்தபொருளிருக்க
கூடிருக்கநீபோன கோலமென்னகோலமே

(போ - ரை) என்னுடைய உயிரோ! வீடானது இருக்கவும், பெற்றதாயார் இருக்கவும் விருப்பத்தோடு வேண்டப் படுகின்ற பெண்சாதி யிருக்கவும், பெருமை யொடு பக்கத்திலிருக்கவும், உணவுகள் இருக்கவும், பிள்

ளைகள் இருக்கவும், மாடுகன்று இவைகளிருக்கவும் வைத்திருக்கின்ற திரவியங்களிருக்கவும், நீ வாழ்ந்து கொண்டிருந்த கூண்டாகிய தேகம் இருக்கவும், நீ வெளியே போய்விட்ட மாய்கை என்னமாய்கையோ? தெரியவில்லை. (எ-று)

மேற்சொன்ன பொருள்களெல்லாம் உனதாயிருக்க இவைகளை யெல்லாம் விட்டுவிட்டு நீ தேகத்தினின்றும் வெளிப்பட்டுப் போய்விட்ட ஆச்சரியத்தை நான் என்னவென்று சொல்லுவேன் என்பது கருத்து. 14

சந்தனமுங்குங்குமமுஞ் சாந்தும்பரிமளமும்
விந்தைகளாய்ப்பூசிமிகு வேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்ற கன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனுயென் றென்றிலையேநெஞ்சமே.

(போ - ரை) மனமே! சந்தனம், குங்குமப்பூ, சாந்து வாசனைத் திரவியங்கள் ஆகிய இவைகளை விநோதமாகப் பூசிமிக வேடிக்கையாக வாசனையோடுகூடிய புஷ்பத்தைத் தரிக்காநின்ற பெண்களும் இருக்கவும் (அந்த உயிரானது எந்தவகையாகத் தேகத்தை விட்டுப் போயிற் றென்று அதற்கு மிகவும் நெருங்கியிருக்கின்ற) நீ எண்ணிப் பார்க்கவில்லையே. (எ - று.)

நம்முடைய தேகத்தின் சுபாவம் இப்படியிருப்பதால் நீ அதை யுணர்ந்தும் சிவப்பேற்றிற்கு ஆளாகாமல் வீணேகாலம் கழிக்கின்ருய் இது உனக்கு என்ன அறியாமையோ அறியேன் என்றபடி. 15

காற்றத்துருத்தி கடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடலத்தை யுண்டென்றிருமாந்து
பார்த்திரங்கியன்னம் பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போல வளாவினையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! காற்றையடைத்து வைத்திரா நின்ற துருத்தியும், கொடியவினையினளவாகவந்த ஊற்றையான சடலமுமாகிய இந்தத்தேகத்தை நிலையுள்ளதாக நினைத்து அதினால் கர்வத்தை யடைந்து பிச்சையெடுப்பவர்களைப்பார்த்து மனமிரங்கி அன்னதானஞ் செய்யாமல் ஆற்று வெள்ளத்தைப்போல் பரவித்தவிக்கின்றனையே. ஈதென்ன விபரீதம்? (எ - று) 16

நீர்க்குமிழிவாழ்வைநம்பி நிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவாயன்னம் பசித்தோர்க்களியாமல்
போக்குளெமதூதன் பிடித்திழுக்கும்போது
ஆர்ப்படுவரென்று யறிந்திலையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே! நீரிற்றோன்றும் குமிழியைப் போல் இருக்கின்ற இவ்வாழ்வைநம்பி இதுவே நிச்சயமானதென்று நினைத்துப் பாக்களவு கூடப்பசித்து வந்தவர்களுக்கு அன்னங் கொடாமையால் தங்கள் உயிரை எமதூதர்கள் பிடித்திழுக்கும் அந்தக்காலத்தில் ஆர்ப்பரித்துத் துன்பப்படுவார்கள் என்பதை நீ அறிந்திலைபோலும்.

இப்படி யிருப்பதால் நீ கூடிய சீக்கிரத்தில் தருமஞ் செய்து நற்கதியை யடைதல் வேண்டும். என்பது கருத்து.

சின்னஞ்சிறுநுதலாள் செய்தபலவினையான்
முன்னந்தமார்பில் முளைத்தசிலந்திவிம்மி
வன்னந்தளதளப்ப மயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ண வறிந்திலையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! நீ சிறுத்த நெற்றியையுடைய பெண்ணானவள் செய்த பலவினைகளால் அப்பெண்களது மார்பில் கிளைத்துப் பரவி விம்மியெழுந்த தனபாரத்திற்கு மயக்க முற்றவனாகி மாயாவலைக்குட் பட்டு பசித்தோர்க்கு

அன்னத்தைப் பாகித்திட்டுநீயும் உண்பதற்கு அறிந்தாயில்லை. (எ - று.)

ஆகையால் நீ சிவனடியைச்சேரும் திருவருட்பாலிப்பை யடையாதவனனாய் என்பது கருத்து. 18

ஓட்டைத்துருத்தியை யுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்த ரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்து வெளியையொளியாலழைத்துக் .
காட்டும்பொருளிதென்று கருதிலையேநெஞ்சமே.

(போ - ரை ) மனமே! ஓட்டையாகிய துருத்தியும், உடையும்தன்மையையுடைய புழுவாசஞ் செய்யும் கூண்டுமாகிய இந்த உடம்பை ஆட்டுகின்ற சிவனென்னும் சித்தப்புருஷனுடைய திருவருளை நினைந்து நினைந்து மிகவும் துதிசெய்து ஆருதாரவீட்டைப் பிராணுபாமமாகிய திறவுகோலால் திறந்து அவ்விடத்திலுள்ள வெளியை (அதாவது வசிதாகாயத்தை) தேஜோமயத்தால் அழைத்துக் காண்பிக்கும், பொருளாயுள்ளது இதுதானென்று அப்பொருளைச் சிந்தித்தாயில்லை. (எ - று)

நீ அப்பொருளைச் சிந்திப்பாயானல் நல்ல சிவகதியை யடைவாய் என்பது கருத்து. 19

ஊண்பொதிந்தகாய முளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீ சற்குருவைப்போற்ருமல்
கான்பரந்தவெள்ளங் கரைபுரளக்கண்டேகி
மீன்வரந்தாற்போலே விசாரமுற்ருய்நெஞ்சமே.

(போ - ரை) மனமே! சதைநெருங்கிய காயமும் நெருங்கியபழுத் தங்கியிருக்கும் கூண்டாகவுமுள்ள இந்த்தேகத்தை நீ சுமந்தாயே யல்லாமல் ஞானசிரியனைத் துதிசெய்தாயில்லை; ஆகையால் காட்டில்பரவிவருகின்ற

வெள்ளமானது கரையைத்தள்ளிவெளிப்பட்டுவர அதைப் பார்த்து மீன்பறந்து போய்விட்டது போல் நீ துன்பத் தையடைந்தாய். (எ - று) 20

உடக்கையொருத்தி யுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்று சார்ந்தங்கிருமாந்தே
உடக்கைதகர்ந்தே யுயிரையமன்கொள்கையிலே
யடக்கமாய்வைத்தபொரு ளங்குவரமாட்டாதே.

(போ - ரை) மனமே! ஞானசத்தியால் உயிரை அடைத்து வைக்கப்பட்ட இந்தத்தேகத்தை நிலையுள்ள தென்று நினைத்துக் கர்வப்பட்டு இருக்கின்றாய் அந்தத் தேகமானது விழ அதிலிருக்கும் உயிரை எமனானவன் கொண்டுபோகும்போது நீ அடக்கமாய் ஒருவருக்கும் தெரியாதபடி சேர்த்துவைத்த திரவியமானது உன்னோடு கூடவரமாட்டுமோ? வாராது. (எ - று.)

ஆகையால் இதையுணர்ந்து பொருளாசையைவிட்டுச் சிவகதியை யடைவாய் என்பது கருத்து. 21

தித்திக்குந்தேனைத் தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தான் முப்பாழைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தியமன் பாசத்தாற்கட்டுவண்ணம்
சுற்றியிருக்கும்வினை சூழ்ந்தனையேநெஞ்சமே.

(போ - ரை) ஓ மனமே! தித்திக்காநின்ற தேன்போல் ருசிப்பதும் தெவிட்டாத தெளிந்த அமிர்தம் போல்வதும் மோக்ஷ மளிப்பதற்கு முதன்மையான பொருளானதும், முப்பாழானதுமான பரம்பொருளைத் துதிசெய்யாமல், இயமனானவன் வலிவாகப் பிடித்துப் பாசக்கயிற்றாற் கட்டும்படியாக உன்னைச்சுற்றிச் சுற்றிவந்து கொண்டே யிருக்கும் இருவினைகளிற் கூடினையே? (எ - று.)

நீ வினைச்சம்பந்தப் பட்டிருக்கும் வரைக்கும் சிவ பெருமானுடைய திருவடியை யடையாய் என்பது கருத்து. 22

அஞ்செழுத்தாஎட்டெழுத்தா ஐம்பத்தோரட்சரமாய்
பிஞ்செழுத்தாய்நின்ற பெருமானைப்போற்றாமல்
வஞ்சகமாயுற்றமுலை மாதர்வலைக்குள்ளாகி
பஞ்சரித்துத்தேடிப் பாழுக்கிறைத்தோமே.

(பொ - ரை) மனமே, நாம் பஞ்சாட்சர ரூபமாகவும் அஷ்டாட்சர ரூபமாகவும், அவைகளின் குருந்தான ஓரெழுத்தின் ரூபமாகவும் உள்ளயாதொரு சிவபெருமானைத் துதிசெய்யாமல், வஞ்சகத்தைச் செய்யாநின்ற முலைகளையுடைய பெண்கள் மாய்கையில் சிக்கி அவர்களுக்குக் கொடுப்பதற்காகப் பணந் தேடுவதிலே வீணாக நாள்களை கழித்தோம்? (எ - று.)

ஆ, ஈதென்ன விபரீதமோ? அறியோம். 23

அக்கறுகுகொன்றைதும்பை யம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல்
மக்கள்பெண்டீர்சுற்றமுடன் வாழ்வைமிகநம்பியன்பாய்
எக்காலமுமுண்டென் றெண்ணினையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே, உருத்திராக்ஷ மாலையையும், அறுகம்புல்லையும் கொன்றைப்பூ மாலையையும், தும்பைப் பூமாலையையும், சந்திரனையும் தமது சடாபாரத்தின்கண் தரித்திராநின்ற சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளைத் துதிசெய்து வணங்காமல், பிள்ளைகள், பெண்கள், சாதியார் வாழ்வு ஆகிய இவைகளை மிகவும் நிலையுள்ளவைகளாக எக்காலமு மிருப்பனவாகுமென்று நம்பிக்கையாக நினைத்திருந்தா யல்லவா? (எ - று.)

இதுவோர் மடைமையான அறிவு என்பதற்கு யாதொருதடையு மில்லை என்றபடி. 24

ஆண்டகுருவி னருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாய வீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதுநல்லார் பொய்மாய்கைக்குள்ளாகி
தூண்டிலகப்பட்டுத் துடிகெண்டையானேனே.

(பொ - ரை) மனமே, உன்னால் நான் என்னை அடிமையாகக் கொண்ட ஞானாசிரியனுடைய திருவருளை மிகுதியும் போற்றுதல் செய்து கயிலாய சம்பந்த மான மோக்ஷத்தையடைய முயற்சி செய்யாமல் பெண்கள் மாய்கையிலகப்பட்டுத் தூண்டின்முள்ளில் அகப்பட்டுத் துடிக்கின்ற கெண்டைமீன் போன்றவனுய் விட்டேன் (எ-று)

ஏணிப்பழுவா மிருளையறுத்தாள்முற்றும்
பேணித்தொழுங்கயிலை பேறுபெறமாட்டாமல்
காணிவரும்பொருளாய்க் கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போ லாகினனேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, நான் என்னுடைய அஞ்ஞானமாகிய இருட்டை யொழித்துத் தானே குருமூர்த்தமாயெழுந்தருளிவந்து அடிமை கொள்ளும்படி சிவபெருமானுடைய திருவடிகளைத் துதிசெய்து கயிலாயத்தை யடையும்படியான சிவப்பேற்றைப் பெறுமல் பலவகையான தீயமார்க்கங்களிற் சென்று வேரற்றமரம்போலானேன். ()

கோத்துப்பிரகாசங் கொண்டுருகிபண்டமெல்லாம்
காத்தபடியே கயிலாயஞ்சேராமல்
வேற்றுருவப்பட்டுயேன் வெள்ளப்போதுள்ளுருகி
ஏற்றுங்கழுவி லிருந்தபிணமானேனே.

(போ - ரை) மனமே, நான் என்னை அறவே விழுங்கித் தன்வயப் படுத்திக்கொண்டு எல்லா அண்டங்களிலும் பரவியிருக்கும் சிவபெருமானுடைய கயிலாய வாழ்விற் சேராமல் வேறு ரூபத்தைப் பெற்று வெள்ளத்தைப்போல் மனமானது உருகி ஏற்றப்படுகின்ற கழுவினிடத்திலிருந்த பிணமாக ஆய்விட்டேன். (எ - று.) 27

நிலைவிட்டுடலையுயிர் நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற் றின்னுனைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற் றட்டழிந்தாய்நெஞ்சமே.

(போ - ரை) ஓ மனமே, நீ உன்னுடைய தேகத்தினின்றும் உயிரானது வெளிப்பட்டுப் போகா முன்னமே கண்ணப்ப நாயனுருடைய எச்சிலைத் தின்றவனுன சிவபெருமானைச் சேராமல், வலைபிற்சிக்கிய மான்போல் வருந்திப் பின்முன்னுகவும் முன்பின்னுகவும் மாறிக்கிடக்கின்ற சாஸ்திரங்கள் போல தடுமாறிக் கெட்டனை. (எ - று) 28

முடிக்குமயிர்பொல்லா முழிக்குரம்பை மின்னரின்
இடைக்குநடைக்குமிதங்கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லைவனத் தையனேநாயனையேன்
விடக்கையிழந்த மிருகமதுவானேனே.

(போ - ரை) தில்லைவனத்தில் எழுந்தருளியுள்ள தலைவனே, நாய்க்கு ஒப்பானவனுன நான் பெண்களுடைய இடுப்புக்கும், நடைக்கும், நல்லவார்த்தைகளை உவமானமாகச் சொல்லி கூண்டைவிட்ட மிருகத்தின் தன்மையையடைந்தேன். (எ - று.) 29

பூவாணர்போற்றும் புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதம்போற்றிச் சிவலோகஞ்சேராமல்

தாவாரந்தோறுந் தலைபுகுந்தநாய்போல
ஆகாதநெஞ்சமே யலைந்துதிரிந்தாயே.

(பொ - ரை.) யாவருக்கும் ஆகாத மனமே, பூமியில் வாழ்பவர்களால் போற்றப்பட்டுப் புகழ்கின்ற மதுரையில் எழுந்தருளி யிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளது சிறந்த திருவடிகளைத்துதி செய்து அதின் மகிமையால் சிவலோகத்தை யடையாமல் தாவாரங்களெல்லாம் புகுந்து புகுந்துவரும் நாயைப்போல் அலைந்து திரிந்தாய். (எ - று) ()

பத்தெட்டாயிரைந்தாய்ப் பதின்மூன்றிரண்டொன்றாய்
ஒத்திட்டுநின்றதோ ரோவியத்தைப்போற்றாமல்
தெத்திட்டுநின்ற திரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சே விடவுமறியாயே.

(பொ - ரை) மனமே, ஆறுதார சோபானத்தைபுடையதான ஒரு சித்திரப் பதுமைபோன்ற பரம்பொருளைத் துதி செய்யாமல் வழிப்பட்டு நின்ற திரிகண்ணிக் குட்பட்டு விட்டு இட்டாய், ஆனால் அதை விட்டுவிடவும் தெரிந்தாயில்லை. (எ - று.) 31

அஞ்சுமுருவாகி யைமூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்த விளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற் பற்றிப்பிடியாமல் [னே
நஞ்சுண்டகெண்டையைப்போல் நானலைந்துகெட்டே

(பொ - ரை.) பஞ்சவிதமும், பதினைந்து விதமும், எட்டுவிதமும் ஆகிய இவைகளையும் தாண்டியிருந்த விளக்கின் ஒளியைப்போற்றுதல் செய்யாமல், பஞ்சிலிட்ட நெருப்பைப்போலும், விஷத்தைத்தின்ற கெண்டைமீனைப் போலவும் அலைந்து கெட்டேன். (எ - று.)

ஊனமுடனே யுடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்து மண்ணுலகில்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்க ளாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம் போய்பிழைத்தோமில்லையே.

(போ - ரை) மனமே, நாம் குற்றத்துடன் உடையும் இக்கூண்டைச் சுமந்து இறந்து படாமல் பஞ்சபாண்டவர்கள் தாம் அரசாட்சி செய்து கொண்டிருந்த தேசத்தை விட்டு வெளிதேசத்திற்குப் போய் பிழைத்தது போல் நாமும் போய்ப் பிழைத்தோமில்லை (எ - று.) 33

ஊறையிறைக்கின்ற வுப்பிருந்தபாண்டத்தை
நாறுமல்நாறி நழுவும்புழுக்கூட்டை
வீறும்புரத்தை விரும்புகின்றதெப்படியென்
றுறுதநாட்டி லகன்றிருந்தேனில்லையே.

(போ - ரை) மனமே, நான் இந்தப்பலவகையாலும் அருவருக்கத் தக்கதான தேகத்தை நம்புவது எப்படி யென்று அதைவிட்டு நீங்கியிருந்தேனில்லையே? (எ - று.)

நான் இப்படி யிருப்பதால் கடைத்தேறும் வழி யில்லை என்பது குறிப்பு. 34

அரியவரிதேடி யறியாவொருமுதலை
பரிவுடனேபோற்றும் பரஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பிக் காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே.

(போ - ரை) மனமே, நான் அருமையானவரான விஷ்ணுவானவர் தேடித்தம்மால் அறியப்படாதவரான ஒப்பற்றபொருளை, யாவராலு பட்சத்துடன் துதிசெய்யப் படுவரான பரஞ்சுடரைத் துதிசெய்யாமல் இந்தப்பெரிய

இவ்வாழ்க்கையை நம்பிக் காமத்தில் அமிழ்ந்திச் சிங்கத்தின் வாயிற்சிக்கிய யானையைப்போலானேன். (எ - று.)

தந்திரத்தையுன்னி தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னி மயங்கித்தடுமாறி
விருந்துருகிநாதமா மேலொளியைக்காணமல்
அந்தரத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே.

(பொ - ரை) மனமே, நான் தந்திரமார்க்கங்களை நினைத்துத் தவத்தைச் செய்யாமலும், மந்திரத்தை நினைத்து மயங்கித்தடுமாறியும், விந்துவுக்கும், நாதத்துக்கும் மேற்பட்டு விளங்கா நின்ற தேஜோமயத்தைத் தரிசிக்காமல், ஆகாயத்தில் கொம்பைவிட்டெறிந்து பிடிக்கும் குருடனைப்போ லாய்விட்டேன் (எ - று) 36

விலையாகிப்பாணனுக்கு வீறடிமைபட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சிற் றின்றானைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோ லாணவத்தினாலழுங்கி
யுலைவாய்மெழுகதுபோ லுருகினையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, நீ பாணபத்திரனுக்கு அடிமையாளாக வந்தவனும், கண்ணப்பனுடைய எச்சிலைத் தின்றவனுமாகிய சிவபெருமானைத் துதிசெய்யாமல் சமுத்திரத்தில் பட்ட சிறு துரும்பைப்போல் அகங்காரத்தினால் அழுந்தி அக்கினியிற்பட்ட மெழுகுபோலும் உருகினையே.

## நெஞ்சோடுபுலம்பல்.

### முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்.

அருளிச்செய்த

# பூரணமாலை.

—::::—

மூலத்துதித்தெழுந்த முக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப்போற்றாமல் மதிமறந்தேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே! மூலாதாரமாகிய இடத்தில் உதித்தெழுந்திராநின்ற முக்கோணமானரூபம் பெற்றுள்ள சக்கரத்திலிருக்கும் வாலாம்பிகையைத் துதிசெய்யாமல் புத்தி கெட்டேன். (எ - று) 1

உந்திக்கமலத் துதித்துநின்றபிர்மாவைச்
சந்தித்துக்காணாமற் றட்டழிந்தேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, உந்தியாகிய கமலத்தின் கீழ் தோன்றியிராநின்ற பிரமாவைக் கண்டு தரிசிக்காமல் தடுமாறினேன். (எ - று.) 2

நாவிக்கமல நடுநெடுமால்காணாமல்
ஆவிகெட்டியானு மறிவழிந்தேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நாபியின் நடுவண் இருக்கும் விஷ்ணுவைக்கண்டு தரிசிக்காமல் உயிரிழந்து நானும் புத்திக்கேட்டை யடைந்தேன் (எ - று.)

உருத்திரனையிருதயத்தி லுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங்கலங்கினேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, இருதயஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கின்ற உருத்திரமூர்த்தியை

உண்மையாகத் தரிசிக்காமல் நானும் என்னுடைய புத்தி கெட்டு மயங்கினேன். (எ - று) 4

விசுத்திமயேசுரனை விழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சம் பதறினேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, யாதொரு கண்டஸ்தானமாகிய விசுத்தி என்கிற இடத்தில் எழுந்தருளியிருக்கும் மஹேஸ்வர மூர்த்தியை என்னுடைய ஞானக் கண்ணைக் கொண்டு தரிசிக்காமல் பசியால் வருந்தி மனம் பதைத்தேன் (எ - று) 5

நெற்றிவிழியுடைய நிர்மலசதாசிவத்தை
புத்தியுடன்பாராமற் பொறியழிந்தேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, யாதொரு லலாடஸ்தானத்தில் எழுந்தருளி யிருக்கும் இயல்பாகவே பாசமென்பதில்லாத சதாசிவமூர்த்தியை நல்ல ஞான அறிவோடு போய்த் தரிசிக்காமல் புத்தி கெட்டேன்.

நாதவிந்துதன்னை நயமுடனேபாராமல்
போதமயங்கிப் பொறியழிந்தேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, இவைகளுக்கு மேற்பட்டிரா நின்ற நாத தத்துவத்தையும், விந்து தத்துவத்தையும், நல்ல மனத்துடன் போய்த் தரிசிக்காமல் என்னுடைய அறிவானது மயக்கமுற்று முக்கியவிடமாகிய அறிவின் கேட்டை யடைந்தேன். (எ - று.) 7

உச்சிவெளியை யுறுதியுடன்பாராமல்
அச்சமுடனுனு மறிவழிந்தேன் பூரணமே

(போ-ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, யாதொரு பிரமாந்திர சம்பந்தமான உச்சியின்கண் இருக்கும்ஆகாய

வெளியைப் போய் மனப் பூர்த்தியாகத் தரிக்காமல் அச்சத்தை யுடையவனாகி நானும் அறிவு கெட்டேன். (எ-று)

மூக்குமுனையை முழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானு மறிவழிந்தேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, மூக்கின் நுனையைக் கண்களை மிகவும் திறவாமலும், மிகவும் மூடாமலும் நடுத்தரமாகத் திறந்திருந்து பார்த்து அதினால் அடையத்தக்க லாபத்தை அடையாமல் என்னுடைய தேகம் வருந்த அறிவையும் அழியப் பெற்றேன். (எ-று)

இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந் தயங்கினேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, இடைகலை, பிங்கலைகளினுடைய சுபாவலக்ஷங்களைத் தெரிந்து கொள்ள மாட்டாமல் தடைப்பட்டு நானும் வருத்தப்பட்டேன். (எ - று) 10

ஊனுக்குணின்றுலாவினதைக்காணாமல்
நானென்றிருந்து நலமழிந்தேன்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நீ என்னுடைய தேகத்திலிருந்து எனக்குத் தெரியாதபடி உலாவிக் கொண்டிருப்பதை நான் அறிந்து கொள்ளாமல் எல்லா நானேயாவேன் என்றெண்ணி யிருந்து அதினால் ஞான மார்க்கத்தைக் கைவிட்டேன். (எ - று) 11

மெய்வாழ்வைநம்பி விரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேன்பூரணமே

(போ - ரை.) எங்கும் நிறைந்த வஸ்துவே, மெய் வாழ்க்கையாகிய ஞான வாழ்வை நம்பி யிருந்து சதா அதிலே வாழாமல் பொய் வாழ்வாகிய இவ்வுலக வாழ்க்

கையை நம்பி அதினால் மிகவும் விபசனத்தை யடைந்தேன் (எ-று.) 12

பெண்டுபிள்ளை தந்தைதாய பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென்றுநம்பி யுடலழிந்தேன்பூரணமே

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, மனைவி, பிள்ளைகள், தாய் தகப்பன், ஜென்மம், சாதியார், ஆகிய இவர்களெல்லாம் எக்காலத்தும் அழியாதிருப்பவர்களென்று எண்ணி நம்பி யிருந்து அதினால் என் தேகத்தை அழியப் பெற்றேன் (எ - று.)

இவர்களை நம்பித் தேகத்தைப் போஷித்துக் கெட்டேனே யொழிய ஞானத்தை அடைந்தேனில்லை என்பதாம். 13

தண்டிகைப்பல்லாக்குடனே சகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பி யுணர்வழிந்தேன் பூரணமே

(போ-ரை.) எங்கும் நிறைந்த வஸ்துவே, தண்டிகை, பல்லக்கு, மற்றுமுள்ள சம்பத்துகள் ஆகிய இவைகளெல்லாமல் அழியாதிருப்பவையா மென்றெண்ணி புத்திகெட்டேன். (எ - று) 14

இந்தவுடலுயிரை யெப்போதுந்தான்சதமாய்ப்
பந்தமுற்றுநானும் பதமழிந்தேன்பூரணமே

(போ - ரை.) எங்கும் நிறைந்த வஸ்துவே, இந்த உடம்பின் கண் இருக்கும் உயிரை எப்பொழுதும் இதிலேயே யிருக்கு மென்று சதமாக நினைத்துப் பந்தப்பட்டவனாகி நானும் அடைதற்குரிய சிவபதத்தை இழந்துவிட்டேன். (எ - று) 15

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப் பொறியழிந்தேன்பூரணமே

(போ-ரை.) எங்கும் நிறைந்த வஸ்துவே, அழகிய பிரபஞ்ச மாய்கையில் விழுந்து அறிவு கெட்டு மதியும் கெட்டுப் பெற்றேன். (எ-று)

நான் இங்ஙனம் ஆய்விட்டமையால் நீயேகாப்பாற்ற வேண்டும் என்பது குறிப்பு 16

சரிதைகிரியாயோகந் தாஞ்ஞானம்பாராமல்
பரிதிகண்டமதியதுபோற் பயனழிந்தேன்பூரணமே.

(போ-ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, சரியை, கிரியை, யோகம் ஞானங்களாகிய இந்த நான்குவகைச் சாதனங்கள் ஒன்றேனும் சாதிக்காமல் சூரியனைக் கண்ட சந்திரன்போல் அறிவு மழுங்கினேன். (எ-று.) 17

மண்பெண்பொன்னாசை மயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற் கலங்கினேன்பூரணமே

(போ-ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, என்கிற மாய்கையில் விழுந்து கண்ணில்லாத மாட்டைப்போல் கதறினேன். ()

தனிமுதலைப்பார்த்துத் தனித்திருந்துவாழாமல்
அனியாயமாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன்பூரணமே

(போ-ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, ஒப்பற்ற முதற் பொருளாயுள்ள சிவபெருமானைத் தரிசித்துக் கொண்டு தனியே யிருந்து வாழாமல் அநியாயமாய்இந்த உலகத்தில் பிறந்து அலைந்து திரிந்தேன். (எ-று) 19

ஈராறுதன்கலைக்கு ளிருந்துகூத்தாடினதை
ஆராய்ந்துபாராம லறிவழிந்தேன்பூரணமே!

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, பன்னிரண்டு கலைக்குட்பட்டிருந்து திருநடனஞ் செய்தசிறப்பை விசாரித்தறிந்து பாராமல் மதிகெட்டேன். (எ - று.)

இது குருமூர்த்தியின்பால் விசாரிக்க வேண்டியதாகையால் அப்படிப்பட்ட குரு எனக்குக் கிடைக்க வில்லை என்பது குறிப்பு. 20

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, சரமாருதலாகிய வாசி மார்க்கத்தில் பழகி அதின்மூலமாக உன்னைத் தரிசித்துத் துதிசெய்யாமல் காசிப்பதிவரைக்கும்போய் கால் அலுத்துக் கெட்டேன் (எ - று) 21

கருவிகடொண்ணூற்றாறிற் கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராம லீடழிந்தேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, தொண்ணூற்றாறு தத்துவங்களிலும் கலந்து நீவிளையாடிக்கொண்டிருந்ததை என்னுடைய இரண்டுகண்களாலும் பாராமல் ஈடழிந்துபோய்விட்டேன். (எ - று) 22

உடலுக்குள்நீநின் றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, என்னுடைய தேகத்திலே நீயிருந்து உலாவினதை நான்தெரிந்து கொள்ளாமல், காடு, மலை, இவைகளிலெல்லாம் திரிந்து காலலுக்கப்பெற்றேன். (எ - று)

இப்படி நான் திரிந்தது எனக்கு அறிவில்லாமையேயாம் என்பதாம். 23

எத்தேசகாலமுநா மிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான்பாராம லுருவழிந்தேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, எந்தத் தேசத்திலும் எந்தக்காலத்திலும் நாம் சாவாதிருப்போமென்று நினைத்து அதினால் உன்னைக்கண்டு தரிசிக்காமல் என்னுடைய சுயரூபத்தைப் போக்கடித்துக்கொண்டேன்

எத்தனை தாய்தந்தை யிவர்களிடத்தேயிருந்து
பித்தனுயானும் பிறந்திறந்தேன்பூரணமே

(போ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, எத்தனை தாய்தந்தைகளிடத்திலிருந்து பிறந்து உன்னையறியும் அறிவுவாராமையால் பித்தனுகி மீண்டும் இறந்திருக்கின்றேன்.

ஐயோ, ஈதென்ன கொடுமை, இப்படியும் எனக்கு வருமா? என்பது குறிப்பு 25

பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேயானுமென்றன்
பொற்றுணைத்தாள்தந்து புகலருள்வாய்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, என்னுடைய தாயானவள் என்னைப் பலமுறையும் பெற்றுப் பெற்று வருத்தப்பட்டாள். நானே பிறந்து பிறந்து வருத்தப்பட்டேன் ஆகையால் இனியேனும் எனக்கு உன்னுடைய அழகிய திருவடிகளைக் கடாட்சித்துத் திருவருள் பாலிக்கவேண்டும். (எ - று.) 26

உற்றாரழுதலுத்தா ருறன்முறைபார்சுட்டலுத்தார்
பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, என்னுடைய சாதியார் அழுதழுது ஓய்ந்தார்கள் கொஞ்சம் தூரபாத்தியத்தை யுடையவர்களோ என்னைக் கொளுத்திக்

கொளுத்தி வருந்தினர்கள் என்னுடைய தாயாரோ என்னைப் பெற்றுபெற்று வருந்தினள். நானோ வென்றால், பிறந்து பிறந்து வருந்தினேன். (எ-று.)

இனியேனும் அப்பிறவியை நீக்கி யாண்டருளல்வேண்டும் என்பது குறிப்பு. 27

பிரமன்படைத்தலுற்றான் பிறந்திறந்துநாநலுத்தேன்
உரமுடையவக்கினிதா லுண்டலுத்தான்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, பிரமதேவனோ என்னைச் சிருஷ்டித்து வருந்தினன். நானோபிறந்தும் இறந்தும் வருந்தினேன் பலமுடைய அக்கினி பகவானோ வென்றால், என்னைச் சநநங்கடோறும் உண்டு உண்டு வருந்தினன். (எ - று) 28

எண்பத்துநான்கு நூறுயிரஞ்செனனமுஞ்செனித்து
புண்பட்டுநானும் புலம்பினேன்பூரணமே

(பொ-ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவ, நான் எண்பத்துநான்கு நூறுயிரம் ஜென்மங்களிலும் ஒன்று ஒன்றுகப் பிறந்து மனம் வருந்தி துக்கப்பட்டேன் (எ -று.)

என்னையறியாம லெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாம லுடலிழந்தேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நான் அறியாதபடி எனக்குள்ளாகவே நீ எழுந்தருளியிருக்க, நான் உன்னையறியாமையால் என்னுடைய தேகத்தை யிழந்துவிட்டேன். (எ - று.) 30

கருவாயுருவாய்க் கலந்துலகெலாநீயாய்
அருவாகிநின்ற தறிகிலேன்பூரணமே.

(பொ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, கருவாகியும், ரூபமாகியும், உலகமெல்லாமும் கலந்தும் எவ்விடத்திலும் நீயேயாய் அருவாக நின்றிருந்ததை நான் அறிந்தேனில்லை. (எ - று)

நீ சர்வவியாபகனாயிருத்தலை நான் அறிந்தேனானால் உன்னை என்றும் கைவிடமாட்டேன் என்பது குறிப்பு. 31

செம்பொற்கமலத் திருவடியைப்போற்றாமல்
பம்பைகொட்டவாடும் பசாசானேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, செவந்த பொன் போன்ற தாமரைமலருக் கொப்பான உனது திருவடிகளைத் துதிசெய்யாமல், பம்பையென்னும் ஒருவகையான வாத்தியத்தையடிக்க ஆடுகின்ற பசாசின் தன்மையையுடையவனானேன், (எ-று.) 32

எனக்குள்ளேநீயிருக்க வுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீர வரமருள்வாய்பூரணமே.

(பொ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ எனக்குள்ளிருக்கவும் நான் உனக்குள்ளிருக்கவும் எனக்கு வரங் கொடுத்தருளல் வேண்டும். 33

எழுவகைத்தோற்றத் திருந்துவிளையாடினதைப்
பழுதறவேபாராமற் பயனழிந்தேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ எழுவகையான பிறப்புகளிலும் தெரியாதபடி இருந்து திருவிளையாடல் செய்து வருவதை நான் குற்றமற்றுப் பார்த்துத் தரிசிக்காமையால் ஒரு பிரயோசனத்தையும் அடையாமல் வீணாள் கழித்தேன். (எ - று.) 34

சாதிபேதங்கள் தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்று மயங்கினேன் பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்த வஸ்துவே, சாதிகளின் வித்தியாசங்கள் இவையாமென்று அறிந்துகொள்ளாமல் பூர்வ மாயாபழக்கத்தினால் மதிமயங்கியிருந்தேன்.

குலமொன்றாய்நீபடைத்த குறியையறியாமல்யான்
மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ எல்லாக் குலங்களையும் ஒன்றாகவேநிர்மாணித்திருக்கும் அருட்குறிப்பைத் தெரிந்துகொள்ளாமல் நான் மலசம்பந்தப்பட்ட பாண்டத்தினுள்ளிருந்துமயக்கத்தை யடைந்தேன் (எ-று)

அண்டபிண்டமெல்லா மணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின் குறிப்பறியேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, அண்டத்திலும் பிண்டத்திலும், அணுவுக்கணுவாக விருந்து திருக்கோலங்கொண் டெழுந்தருளியிருக்கும் குறியினை நான் அறிந்தேனில்லை. (எ - று) 37

சகஸ்திரத்தின்மேலிருக்குஞ் சற்குருவைப்போற்றும
லகத்தினுடவாணுவத்தா லறிவழிந்தேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, ஆயிரத்தெட்டுதளத்தின் மேல் எழுந்தருளியிராநின்ற ஞானசிரியனைத் துதிசெய்யாமல் என்மனத்தின்கண் குடிகொண்டிருக்கும் அகங்காரத்தினால் நான் அறிவழிந்தேன் (எ -று.)

ஆணவம் எல்லாவற்றிலும் பலமுடையதாகையால் இங்ஙனம் கூறினார். 38

ஐந்துபொறியை யடக்கியுனைப்போற்றாமல்
நைந்துருகிநெஞ்ச நடுங்கினேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நான் ஐம் பொறிகளையும், தத்தமது விஷயங்களிற் போகாதபடி யடக்கி உன்னைத் துதிசெய்யாமல் நைந்து மனமிளகி நடுக் கமுற்றேன். (எ-று.) 39

என்னைத்திருக்கூத்தா லிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியா துடலழிந்தேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ என்னை உன்னுடைய திருவருட்கூத்தினல் இவ்விதமாக ஆட்டி ஞய். நீயே நின்று இப்படி யாட்டுவதை நான் அறிந்து கொள்ளாமல் வீணேகெட்டேன். (எ - று.) 40

நரம்புதசைதோலெலும்பு நாற்றத்துக்குள்ளிருந்து
வரம்பறியமாட்டாமல் மயங்கினேன்பூரணமே

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நரம்பு, தசை, தோல், எலும்பு இவைகளாலாகிய தேகத்திற்குள் ளாக நானிருந்துகொண்டு உன்னுடைய அளவை நான் அறிந்து கொள்ளமாட்டாமல் மயங்கினேன். (எ - று.)

நீ சொல்லுக் கடங்காதவ ஞகையால் உன்னுடைய அளவை அறிந்து கொள்ள என்னுற் கூடாமற்போயிற்று என்பது கருத்து. 41

சிலந்தியுடைநூல்போற் சீவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல் நலமழிந்தேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, சிலந்திப் பூச்சியின்கண் நூலிருப்பது போலவே நீ ஜீவஜெந்துக் குள்ளிருந்து ஆட்டுகின்றவிசேஷத்தை நான்பார்த்தறிந்து கொள்ளாமல் வீணே என்னுடைய காலத்தைக் கழித் தேன்? (எ - று.) 42

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவான தறிகிலேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, குருவாகியும், பரம்பொருளாகியும், குடிலாசத்தியாயும், நாதமாயும், விந்துவாயும், அரூபமாயும், ரூபமாயும், நீ திருக்கோலங்கொண்டருளி யுள்ளதை நான் அறிந்தேனில்லை.

ஒளியாய்க்கதிர்மதியா யுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேன்பூரணமே

(பொ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, ஒளியாகியும், சூரியனாகியும், சந்திரனாகியும், இருட்டாகியும், அக்கினியாகியும், வெளியாகியும், நீ திருக்கோலங்கொண்ட பெருமையை நான் அறிந்தேனில்லை. (எ - று)

நான் அவைகளை அறிந்திருப்பேனானால் உன்னை என்றும் கைவிடமாட்டேன் என்பது குறிப்பு. 44

இடையாகிப்பிங்கலையா பெழுந்தசுழிமுனையாய்
உடலுயிராம்நீயிருந்த வுளவறியேன்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, இடைகலையாகியும், பிங்கலையாகியும், சுழிமுனையாகியும், உடலின்கண் உயிராகியும் நீஎழுந்தருளியிருந்த இரகசியத்தை நான் அறிந்தேனில்லை. (எ - று.) 45

மூலவித்தாய்நின்று முளைத்துடல்தோறும்மிருந்து
காலனென்னவழிக்குங் கணக்கறியேன்பூரணமே

(பொ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீயே எல்லாவற்றிற்கும் மூலாதாரப் பொருளாய் எவ்விடத்திலும் பரவியிருந்து கடையில் சங்காரத்தையும் செய்யா நின்ற கணக்காகிய ஒரு திருவிளையாடலை நான் அறிந்தேனில்லை.

உள்ளும்புறம்புமா யுடலுக்குள்நீயிருந்த
தெள்ளளவுநானறியா திருந்தேனேபூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, அகமும் புறமும் பிரியாதபடி நீ என்னுடைய சரீரத்திற்குள் எழுந்தருளியிருந்த இரகசியத்தை நான் எள்ளளவாலும் தெரிந்துகொண்டேனில்லை. (எ - று) 47

நான் இப்படி வீணேகாலம் கழிப்பதினால் பெற வேண்டிய பேற்றை இழந்தவனானேன் என்பது குறிப்பு.

தாயாகித்தந்தையாய் தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, தாயாகியும் தந்தையாகியும் தம்மவர்களாகியும், கிளைஞர்களாகியும் சுற்றத்தார்களாகியும், வருவோன் நீயேயாவாய் என்னும் உண்மைநிலையை நான் அறிந்தேனில்லை. (எ - று.) 48

விலங்குபுள்ளூர்வனசரம் விண்ணவர்நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையில் நின்றகுறிப்பறியேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நீயே. விலங்கு, பட்சி ஊரும் ஜெந்துக்கள், சரஜெந்துக்கள், தேவர்கள், நீர்வாழ் ஜெந்துக்கள், மனுஜாதிகள் ஆகிய எழுவகைப் பிறப்புகளிலும் கலந்திருந்த இரகசியத்தை நான் அறிந்தேனில்லை. (எ - று.) 49

ஆணாகிப்பெண்ணா யலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்ற வகையறியேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீயே ஆணுருவமாகவும் பெண்ணுருவ மாகவும், இவ்விரண்டு மல்லாத அலியுருவமாகவும், வேறு உருவங்களாகவும்

பெருமையோடு கூடிநின்ற விதத்தை நான் அறிந்தேனில்லை. (எ - று.) 50

வாலையாய்ப்பக்குவமாய் வளர்ந்துகிழந்தானுகும்
பாலையாய்நின்ற பயனறியேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, இளம்பிராயமாகவும், பரி பக்குவகாலமாகவும், பின்பு வளர்ந்து கிழப்பருவமாகவும் ஆகி நிற்கின்ற தன்மையை அறிந்தேனில்லை. (எ - று.)

இவைகளை யெல்லாம் நான் அறியாமையால் முத்திப் பேற்றையும் அறிவதில்லை. என்பது குறிப்பு. 51

பொய்யாய்ப்புவியாய்ப் புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன்பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, பொய்யாகவும், பூமியாகவும் யாவராலும் புகழப்படாநின்ற சமுத்திரமாகவும், மெய்ப்பொருளாகவும் எங்கும் பரவி யிருக்கின்ற பெருமையை அறிந்தேனில்லை. (எ - று.)

இது சிவபெருமானுடைய சர்வவியாபகத்தைக் காட்டுகின்றது. 52

பூவாய்மணமாகிப் பொன்னுகிமாற்றுகி
நாவாய்ச்சொல்லான நயமறியேன்பூரணமே.

(போ - ரை ) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ பூவாகியும் பூவிலுள்ள வாசனையாகியும், பொன்னுகியும், பொன்னின் மாற்றுகியும், நாவாகியும், நாவிலுள்ளசொல்லாகியும் வியாபித்திருக்கின்ற உளவைத் தெரிந்து கொண்டேனில்லை. (எ - று.) 53

முதலாய்நடுவாகி முப்பொருளாய்மூன்றுலகா
யிதமாகின்ற வியலறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ ஆதியாகவும், நடுவாகவும், அந்தமாகவும், திரிமூர்த்திகளாகவும், மூன்று உலகங்களாகவும், நன்மையாகவும் வியாபித்திருக்கின்ற இலட்சணத்தை நான் அறிந்தேனில்லை (எ - று)

அவைகளை நான் அறிந்திருந்தால் எந்த விதத்திலாலும் உன்திருவடிகளைப்பற்றி இரந்திருப்பேன் என்பது குறிப்பு. 54

ஊனுபுடலுயிரா யுண்ணிறைந்தகண்ணொளியாய்த்
தேனுய்ருசியான திறமறியேன் பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ ஊனாகவும் அவ்வூரினிலுள்ள உயிராகவும், உள்ளே நிறைந்திருக்கின்ற கண்ணின் ஒளியாகவும், தேன்போன்ற ருசியானதாகவு மிருக்கின்ற திருவருட்டிறத்தை அறிந்தேனில்லை.

வித்தாய்மரமாய் விளைந்தகனியாய்ப்பூவாய்ச்
சித்தாகின்ற திறமறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும்நிறைந்தவஸ்துவே, நீ மூலமாகவும் மூலத்தால் முளைக்கப்பட்டமரமாகவும், அதிலுண்டாகும் பழமாகவும், பூவாகவும், ஞானமாகவும் இருக்கின்ற சக்தியை நான் அறிந்தேனில்லை (எ - று) 56

ஐவகையும்பெற்றுலக வண்டபகிரண்டமெல்லாந்
தெய்வமெனநின்ற திறமறியேன் பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ பஞ்சவிதகோலத்தையும் பெற்று உலகத்திலும் அண்டபகிரண்டங்களிலும் நீயே தெய்வமென்றுசொல்லித் துதிக்கும்படி

சர்வவியாபகம் பூண்ட நிலையை நான் தெரிந்துகொண்டே னில்லை, (எ - று.) 57

மனமாய்க்கனவாகி மாய்கையுள்ளிருந்து
நினைவாகின்ற நிலையறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ மனமாகியும், கனவாகியும், மாயமாக உள்ளேயிருந்து நினைக்கும் நினைவையும், இருக்கின்ற உண்மைநிலையை நான் அறியேன். (எ - று.) 58

சத்திசிவமிரண்டாய்த் தான்முடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ முதலில் சத்தி வேறு சிவம் வேறாக யிருந்து முடிவில் இரண்டும் ஒன்றாய் விடுகின்ற விநோதத்தை நான் அறிந்தேனில்லை.

பொறியாய்ப்புலனாகிப் பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளவறியேன் பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ ஐம் பொறிகளாகவும் ஐம்புலன்களாகவும், பேதப்பட்ட பஞ்ச பூதங்களின் பிரிவாகவும், ஞானமயமாகவும் நின்ற அளவை நான் தெரிந்துகொள்ளவில்லை (எ - று) 60

வானிற்கதிர்மதியாய் வளர்ந்துபின்னொன்றானதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்த வுயிர்ப்பறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ ஆகாயத்திலுள்ள சூரியசந்திரர்களாகவும், வளர்ந்து பிறகுஒன்றாய் விட்டதுபோல தேகத்துக்குள் பிராணனாகவிருந்த தன்மையை நான் அறியவில்லை. (எ - று.) 61

பொய்யும்புலையுமிகப் பொருந்திவீண்பேசலன்றி
ஐயோவுனைவுரைக்க வறிகிலேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நானோ, பொய்யும், புலையும், மிகவும் அடைந்து வீண்வார்த்தை பாடுகின்றதைத் தெரிந்தேனே யொழிய, உன்னைத் துதி செய்யுமார்க்கத்தை அறிந்தேனில்லை (எ - று) 62

நிரந்தரமாயெங்கு நின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னப் பதமறியேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே; எப்பொழுதும் எவ்விடத்திலும் ஒரேதன்மையாயிருந்து விளையாடினதைக்கண்டு இதுவே பரமாகுமென்று சொல்லும்படியான பதத்தையும் அறிந்தேனில்லை. (எ - று)

நான் இப்படியிருப்பதால் கடைத்தேறுவது எப்படியோ? என்பது குறிப்பு. 63

கொல்வாய்பிறப்பாய் கூடவிருந்தேசகிப்பாய்
செவ்வாய்பிறர்க்குட் செயலறியேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீயே இறப்பினையும், பிறப்பினையும் செய்து அவ்வுயிர்களோடு கூடியிருந்து இன்பத்தையும் அநுபவிப்பாய், அன்றி உயிர்க்குயிராக ஒவ்வோர் ஆன்மாக்களுள்ளும் கலந்திருப்பாய் நீ. இப்படியெல்லாம் இருப்பதை நான் அறிந்தேனில்லை. (எ-று)

வாரிதியாய் வையமெல்லா மன்னுமண்டபிண்டமெல்லாஞ்
சாரதியாய்நின்ற தலமறியேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ சமுத்திரமாக உலகமெல்லாமும், அண்டபிண்டங்களெல்லாம், சாரதியாய் வியாபித்திருக்கின்ற தலவிசேடத்தை நான் அறியவில்லை. (எ - று) 65

வித்தாய்மரமாய் வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்த தரமறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, விதையாகவும், மரமாகவும், வெளியாகவும், ஒளியாகவும் சத்தாகவும் நீ பரவியிருக்கின்ற குணத்தை நான் அஞ்ஞானவறிவுடைமையால் தெரிந்துகொள்ளவில்லை. (எ - று.) 66

தத்துவத்தைப் பார்த்துமிகத் தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான் பாராமலுய்வாரோ பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, தத்துவமார்க்கங்களை யாராய்ந்தறிந்து பின்னர் தன்னைத்தானறிந்துத் தன்பின்னர் அப்படியறிந்த பசுவறிவைக்கொண்டு உன்னையறியத்தக்க பதியறிவைப் பெற்று உன்னையாராய்ந்து பாராதார் பிழைப்பார்களோ? பிழையார். (எ-று)

ஒன்றுயுயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்றுமறியார்க ளேழைகள்தாம் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, உயிர்களோடு ஒன்றுபட்டு அவ்வுடம்புகளிலெல்லாம் நீ எப்போதும் கலந்திருந்தும் அதை அறிவிலிகளெல்லாம் உணர்ந்தாரில்லை (எ - று)

ஆகையால் அவர்கள்எப்படிருபாபாலிப்பை அடைவார்கள் என்பது குறிப்பு 68

நேற்றென்றுநாளையென்று நினைப்புமறப்பாய்ப்படைத்து
மாற்றமாய்நின்ற வளமறியேன் பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நேற்றென்றும், நாளைக்கென்றும், நினைப்பும், மறப்புமாய் எல்லாப் பிணிகளையும் உண்டாக்கி எவைகளிலும் தாக்காது தாக்கிநின்ற வளப்பத்தை நான் அறியேன் (எ - று) 69

மனம்புத்திசித்தி மகிழறிவாங்காரமதாய்
நினைவாந்தலமான நிலையறியேன்பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, நான் மனம் புத்திசித்தம் அகங்காரம் ஆகிய இவைகள் நினைத்தற்கிடமான உண்மை நிலையை அறிந்தேனில்லை. (எ - று.) 70

உருப்பேதமின்றி யுயர்ந்தசத்த பேதமதாய்க்
குருப்பேதமாய்வந்த குணமறியேன் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, ரூபவிகற்பங்களில்லாமல் சத்தமொன்றே பேதமாகவும் அன்றி நிற பேதமாகவும் எழுந்தருளி வந்தகுணத்தை நான் அறியேன். (எ - று)

அப்படி அறியாமையால் சிவப்பேற்றை அடைவதில்லை என்பது குறிப்பு 71

சட்டசமயபேதங்கள் தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென் றுறைத்தனையேபூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, அறுவகைச் சமயங்களை ஏற்படுத்தி பின்னரும் அவ்வாறு சமயங்களிலும் ஒரு உட்சமயமு மிருக்கின்றதென்று குருமூர்த்தமாயெழுந்தருளிவந்து திருவாய் மலர்ந்தருளினையே, அது மிகவும் காருண்ணியமேயாம். (எ - று) 72

முப்பத்திரண்டுருப்பாய் முனைந்துபடைத்துள்ளிருந்த
செப்படிவித்தை திறமறியேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, முப்பத்திரண்டு அவயவங்களோடு மேற்பட்டுச் சிருஷ்டித்து நீ உள்ளே யெழுந்தருளி யிருந்த செப்படி வித்தையின் சக்தியை நான் தெரிந்து கொள்ளாதவனானேன். (எ-று-)73

என்னதான் கற்றாலென் னெப்பொருளும் பெற்றாலே
உன்னையறியா தாருய்வரோ பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, எவ்வளவு அதிகமாக வித்தைகளைக்கற்றிருந்தாலும், எந்தப்பொருள்களைப் பெற்றிருந்தாலும் அவர்கள் என்ன லாபத்தை அடைவார்கள்? ஒன்று மில்லை. ஏனென்றால் உன்னை உணர்ந்து கொள்ளாதார் பிழைக்கமாட்டார்களாகையால். (எ - று) 74

சுற்றறிவோமென்பார் காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்தங்களுக்குப் பிறப்பறுமோபூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நாங்கள் எல்லாவித்தைகளையும் கற்றுத் தெரிந்து கொள்வோ வென்று சொல்லுவார்கள். பின்னர் விசாரிக்கு மிடத்தில் தெரிந்து கொள்ளார்கள். அன்றியும் உன்னுடைய திருவடிகளைப் பெற்றும் அறியார்கள் ஆகையால் இவர்களுக்குப் பிறவித்துன்பம் நீங்குமோ? நீங்காது. (எ-று) 75

வானென்பாரண்டமென்பார் வாய்ஞ்ஞானமேபேசித்
தானென்பார்வீணர் தனையறியார் பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நீ இருக்குமிடத்தைச் சிலர் ஆகாய மென்பார்கள். சிலர் அண்டமென்பார்கள்: சிலர்வாயால் ஞானம்பேசித் தாங்களே நீ என்பார்கள் இவர்களெல்லாம் வீணர்களாகையால் தங்களைத்தாங்களே அறியாதவர்களாவார். (எ-று) 76

ஆதியென்பா ரந்தமென்பா ரதற்குண்டுவாயிருந்த
சோதியென்பார்நாதத் தொழிலறியார்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, முதலென்பாரும், கடையென்பாரும், பலவிடங்களிலும், விளங்கிக் கொண்டிரானின்ற தேஜோமய மென்பாரும். சிலர்வீணு

கப் பேசுகின்றனரே யொழிய அந்த நாதரூபமாயிருக்கின்ற சிவபெருமானுடைய தொழிலை உணரார். (எ-று)

மூச்சென்பாருள்ளமென்பார் மோகமெனுமோட்சமென்
பேச்சென்பாருன்னுடைய பேரரியார்பூரணமே. [பார்

(போ - ளை) எங்கும் நிறைந்த வஸ்துவே, உன்னைச் சிலர் மூச்சென்றும், சிலர்மௌன மென்று சொல்லுகின்ற மோட்ச மென்றும், சிலர் பேச்சென்றும், சொல்லுவார்கள். அவர்கள் இப்படி பலவகையாயாகச் சொல்லிக் கொண் டிருப்பார்களே யொழிய உன்னுடைய திருப்பேரை அறியமாட்டார்கள். (எ-று) 78

பரமென்பார் பானுவென்பார் பாழ்வெளியாய்நின்ற
வரவென்பாருன்றன் வழியரியார் பூரணமே

(போ - ளை) எங்கும் நிறைந்த வஸ்துவே, சிலர் உன்னைப் பரமென்றும், சிலர் பானுவென்றும், சிலர் பால் போல் வெளியாய் நின்றவர மென்றும் சொல்லுவார்களே யொழிய உன்னுடைய மார்க்கங்களை யறியமாட்டார்கள் (எ று) 79

எத்தனைபேரோ வெடுத்தெடுத்துத் தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றுன தரிகிலேன்பூரணமே

(போ - ளை) எங்கும் நிறைந்தவஸ்துவே, உன்னுடைய திருவருள் விலாசத்தை எத்தனைபேரோ எடுத்தெடுத்து பலவகையாகச் சொன்னார்கள் அத்தனைபேர் சொன்னதிலும் ஒன்றும் பொருந்தவில்லை ஆகையால் நான் உன்னை அறியேன் (எ - று) 80

நகாரமகாரமென்பார் நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பார் வகையறியார்பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, சிலர் நகார மென்றும், மகாரமென்றும், நடுவில் சிகாரமென்றும் வகாரமென்றும், யகாரமென்றும், பலவகையாகப் பஞ்சாட்சரத்தின் தன்மையை பேசுவார்களே யொழிய அவ்வட்சரங்களை யமைத்து உச்சரிக்கும் வகையை யறியமாட்டார்கள் (எ-று) 81

மகத்துவமாய்க்காம மயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தரியமாட்டாமற் பயனழிந்தேன்பூரணமே.

(போ - ரை.) எங்கும் நிறைந்த வஸ்துவே. மிகவும் இறுமாப்படைந்து பெண்கள் மயக்கத்திற்சிக்கி உன்னைப் பகுத்துணர மாட்டாமல் நான் அடைதற்கிருந்த பயனைப் போக்கடித்துக் கொண்டேன் (எ-று.) 82

உண்மைப்பொருளை யுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திருந்தேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, மெய்ப் பொருளை விரும்பிப்பார்த்திராமல் பெண்கள் மயக்கத்திற் சிக்கியிருந்து பிறந்து இறந்து துன்பப்பட்டேன். (எ-று.)

வாயாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான் போற்றுமல்
காயமெடுத்து கலங்கினேன் பூரணமே

(போ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, வாய்நிறைய உன்னை வாழ்த்துதல் செய்து; துதிசெய்யாமல் இந்தத் தேகத்தை யெடுத்துக் கலக்க முற்றேன். (எ - று.) 84

சந்திரனைமேகமது தான்மறைத்த வாரதுபோற்
புந்தமுறயானுமுனைப் பார்க்கிலேன்பூரணமே.

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, சந்திரனை மேகமானது மறைப்பதுபோல என்னைப் பந்தம் வந்து மறைக்க நானும் உன்னைப் பார்க்காதவனானேன். (எ-று)

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றங் கலைந்தேநான்பூரணமே

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, செவந்த தாமரை மலர்போன்ற திருவடிகளைத் துதிசெய்யாமல் யாதொரு பற்றுதலுமில்லாமல் நான் அலைந்தேன் ()

நீர்மேற்குமிழிபோல் நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான் றட்டழிந்தேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, சலத்தில் தோன்றும் நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இந்த உடம்பை நிலையுள்ளதாக நினைத்துக்கெட்டேன். (எ-று) 87

நெஞ்சமுருகி நினைந்துனைத்தான் போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்க வகையறியேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, மனமுருகி நினைத்து உன்னைத்துதிசெய்து மிக்க வஞ்சகத்தை நீக்கிக் கொள்ளும்படியான வழியைத் தெரிந்து கொண்டே னில்லை (எ - று) 88

எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்திருந்த
துள்ளமறியா துருகினேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நீ எள்ளுக் குள் எண்ணெயிருப்பதுபோல எவ்விடத்திலும் நிறைந்தி ருந்ததை நான் அறியாமல் மனமுருகினேன். (எ - று) 89

மாயாபிரபஞ்ச மயக்கத்திலே விழுந்தே
யோயாச்சனன மொழித்திலேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நான் என் றும் ஒழியாத பிரபஞ்ச மயக்கத்தில் விழுந்து நீங்காத ஜெனநத்தை நீக்கிக்கொண்டேனில்லை (எ - று) 90

பூசையுடன்புவன போகமெனும் போக்கியத்தால்
ஆசையுற்றேநானு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, பூசை, உலகவாஞ்சை இவைகளில் விருப்பம் வைத்து நான் என்னுடைய அறிவினையழியப் பெற்றேன். (எ - று) 91

படைத்துமழித்திடுவாய் பார்க்கிற் பிரமாவெழுத்தை
தொடைத்துச்சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, சகல உயிர்களையும் படைத்துப் பின்னர் அழித்திடுவாய். இன்னும் பார்க்கில் பிரமனால் எழுதப்பட்டுள்ள பிரமலபியையும் கெடுத்து அழியாத சிரஞ்சீவி யாக்குவாய். (எ - று) 92

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தைநானறியத் தகுமோதான் பூரணமே

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, மந்திரமாகவும், சாஸ்திரங்களாகவும் நான்கு வேதங்களாகவும், நீ எழுந்தருளியிருந்த தந்திரத்தை நான் அறியுந் தன்மையுடையவனோ? இல்லை (எ - று) 93

அல்லாய்ப்பகலா யனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்த தொடர்பறியேன்பூரணமே

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, இரவாகவும் பகலாகவும், எல்லாக் காலங்களென்றும், சொல்லாகவும் வகுத்திருக்கின்ற மாயா விநோதத்தை நான் அறிந்தேனில்லை (எ - று) 94

நரகஞ்சுவர்க்கமென நண்ணுமிரண்டுண்டாயும்
அரகராவென்ப தறிகிலேன் பூரணமே

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, உலகத்திலிடமாக நரகமென்றும், சொர்க்கமென்றும், இரண்டு

வகுப்பு அவரவர்களுக்குத் தக்கவாறு இருக்கின்றனவென் பதை அறிந்தும், அரகராவென்று சொல்லுஞ் சொல்லை நான் ஒருதரமுஞ்சொல்லியறியேன் (எ - று) 94

பாவபுண்ணியமென்னும் பகுப்பாய் படைத்தழித்திங்
காவலையுண்டாக்கிவைத்த வருளறியேன் பூரணமே

(பொ-ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, பாவமென் றும் புண்ணியமென்றும், இரண்டு வகுப்பை யுண்டாக்கி அவைகளுக்கீடாக உண்டாக்கிப் பின்னர் அழித்து இவ் வுலகத்தின்கண் மிகுந்த ஆசை யுண்டாக்கிவைத்த திருவ ருட்டன்மையை நான் அறிந்தேனில்லை. (எ -று.) 96

சாந்தமென்றுங்கோபமென்றுஞ் சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும் படைத்தனையேபூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, சாந்த மென்றும் கோபமென்றும், சாதிபேதங்களென்றும், பந்த மென்றும், மோட்சமென்றும் படைத்தனையே. (எ - று.)

நீ இப்படி படைத்திருந்தும் எனக்கு நற்புத்தி வர வில்லை என்பது குறிப்பு. 97

பாசமுடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
நேசமுடனீபொருளாய் நின்றனையேபூரணமே.

(பொ - ரை) எங்கும்நிறைந்தவஸ்துவே, பாசமானது தேகமாகவும், பசுவானது உயிராகவும் பதியானது நீயாக வும் இருக்கின்றனையே (எ - று) 98

ஏதிலடியா ரிரங்கியிகத்தில்வந்துன்
பாதமதில்தாழப் பரிந்தருள்வாய்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, குற்றமற்ற அடியார்களால் வணங்கப்படு கின்றஉனது திருவடிகளில் நான்வணங்கும்படி கிருபை செய்யவேண்டும். (எ - று.) 99

நானேநீநீயேநா னுமிரண்டுமொன்றானல்
தேனின்ருசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நானே நீயாகவும் நீயே நானாகவும் ஆகவென்றும் தன்மைவந்தால் நீதேனின் ருசிபோலத் தெவிட்டல்வேண்டும்

முடிவிலொரு சூனியத்தை முடித்துநின்று பாராமல்
அடியிலொருசூனியத்தி லலேந்தேனேபூரணமே.

(பொ - ரை.) எங்கும் நிறைந்தவஸ்துவே, முடிவின் கண் ஒரு சூனியமாக, முடிகின்ற ஒப்பற்றபொருளை அவ்விடத்தினின்று தெரிசிக்காமல் வெறும் இடத்திலிருந்து நான் அலேந்தேன். (எ - று.) 101

பூரணமாலேதனைப் புத்தியுடனேதினர்க்குத்
தாரணியில்ஞானந் தழைப்பிப்பாய்பூரணமே.

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நான் இந்தப் பூரணமாலே என்னும் நூலே நல்ல அறிவுடன் சொல்லும்பொருட்டு இந்த வுலகத்தில் எனக்கு நல்ல அறிவைத் தந்தருளல் வேண்டும். (எ - று.) 102

## பட்டினத்துப்பிள்ளேயார் பூரணமாலே.

முற்றுப் பெற்றது.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

# நெஞ்சொடு மகிழ்தல்.

அன்றுமுதலின்றளவு மாக்கையொடுசூட்சியுமாய்
நின்றநிலையறிய நேசமுற்றாய்நெஞ்சமே.

(போ - ரை.) மனமே. அக்காலந் தொடங்கி இது வரைக்கும் தேகமும், சூட்சியுமாக இருந்த என்னுடைய உண்மை நிலையை நீ யறியும்படி விருப்பம் வைத்தாய். ()

அங்கங்குணர்வா யறிவாகியேநிரம்பி
எங்கெங்குமானதிலே யேகரித்தாய்நெஞ்சமே.

(போ - ரை) மனமே, அந்தந்த இடங்களிலும் அறிவுமயமாகவே யிருந்து எவ்விடத்திலும் சஞ்சரித்திருக்கிறாய். (எ - று)

நீ அப்படிசெய்தும் சிவபெருமானை அறியவில்லையே ஈதென்னபரிபாகக்குறைவே என்பது குறிப்பு. 2

அலையாதபேரின்ப வானந்தவெள்ளத்தில்
நிலையாயுருவிறந்து நின்றனையேநெஞ்சமே.

(போ - ரை.) மனமே, என்றும் கெடாத பேரின்பமான வெள்ளத்தில் நிலையாயிருந்து ரூபநாமங்களற்றனை.

உனக்கு இந்தப்பேறு கிடைத்தது மிகவும் அருமை என்பது கருத்து. 3

பாராமற்பதையாமற் பருகாமல்யாதொன்றும்
ஓராதுணர்வுடனே யொன்றிஜீனயேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே, நீயாதொரு பொருளையும் பாராமலும் அதை பார்த்துப்பின்வருந்தாமலும், அதைத் தின்று அநுபவியாமலும் யாதொரு பொருளையும் நினையாமலும், உணர்ச்சியுடன் சிவசம்பந்தப் பட்டனை. (எ-று)

ஆனல், நீ இவ்வளவு மேம்பாடடைந்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது என்பது குறிப்பு. 4

களவிறந்துகொலையிறந்துகாண்பனவுங்காட்சியும்போ
யளவிறந்துநின்றதிலே யன்புற்றாய்நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே, நீ களவு, கொலை காட்சி இவைகளைச்சுபாவ மாகவே நீங்கியுள்ள பரம்பொருளிடத்தில் ஆசையைவைத்தாய். 5

பேச்சிறந்துசுட்டிறந்து பின்னிறந்தமுன்னிறந்து
நீச்சிறந்துநின்றதிலே நேசமுற்றாய்நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே, பேச்சும் குறித்துக் காட்டுதலும், பின்னென்பதும், முன்னென்பதும், இல்லாமல் எல்லாவற்றிற்கும் அதீதப் பட்டு விளங்காநின்ற பொருளினிடத்தில் நீ அன்புவைத்தாய். (எ - று.)

நீ அங்ஙனஞ் செய்ததினல் நான் உய்வதற்கு யாதொரு தடையு மில்லை என்பது குறிப்பு. 6

விண்ணிறந்துமண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறந்துநின்றதிலே யேகரித்தாய்நெஞ்சமே.

(பொ - ரை) மனமே, ஆகாயம், பூமி, வெளி, ஒளி, எண் இவைகளை எக்காலமும் கடந்து விளங்காநின்ற

யாதொரு பரம் பொருளிடத்திலே நீமனம்வைத்து ஒன்றுபட்டனை. (எ - று) 7

பார்த்தவிடமெங்கும் பரமெனவேயுட்புறம்புங்
கோத்தபடியுண்மையெனக் கொண்டனையேநெஞ்சமே.

(போ - ரை) மனமே, நீ பார்த்தவிடங்களெல்லாம் பரம்பொருள்மயமான சிதாகாயமாகவே கொண்டு, அது உள்ளும் வெளியும் ஒரேதன்மையாகும். இதுவே உண்மை நிலையுமாமென்று அதையே பெற்றுக்கொண்டாய். (எ-று)

ஊரிறந்து வொளியிறந்து வெளியிறந்து
சீரிறந்துநின்றதிலே சேர்ந்தனையேநெஞ்சமே.

(போ - ரை.) ஊர், பேர், ஒளி, வெளி, சிறப்பு, இவைகளைச் சுபாவ மாகவே நீங்கி யெங்கும் நிறைந்திருக்கின்ற மெய்ப்பொருளில் கலந்தனையே. (எ-று) 9

ஆண்பெண்ணலியென்றழைக்கவரிதாய்நிறைந்து
காண்பவரிதாய்விடங் கண்ணுற்றாய்நெஞ்சமே.

(போ - ரை.) மனமே, ஆணென்றும், பெண்ணென்றும், அலியென்றும், சொல்லி அழைப்பதற் கருமையான தாயும், காணுதற்கருமையான தாயும் இருக்கிற இடத்தில் நீ கண்ணோக்கம் வைத்தாய். (எ - று.) 10

ஆங்காரமச்ச மகற்றியறிவினொடு
தூங்காமற்றூங்கிச் சுகம்பெற்றாய்நெஞ்சமே.

(போ - ரை) மனமே, நீயோ அகங்காரத்தையும், அச்சத்தையும், அறவே நீக்கி ஞானத்துடன் தூங்காமற் றூங்குவதாகிய சமாதியின் கணிருந்து சுகத்தையடைந்தாய். (எ - று) 11

ஆதியாய்நின்ற வகண்டபரிபூரணத்தைச்
சாதியாநின்றவிடஞ் சார்வுற்றாய்நெஞ்சமே.

(பொ - ரை) மனமே, எல்லாப் பொருள்களுக்கும் முதன்மையான எங்கும் நிறைந்த வஸ்துவைச் சாதித்துப் பேறடையாநின்ற இடத்தில் நீ சேர்ந்தாய். (எ - று) 12

விருப்புவெறுப்பில்லாத வெட்டவெளியதனில்
இருப்பேசுகமென் றிருந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, விருப்பும், வெறுப்பும் அறவே யொழிந்திரா நின்ற வெறும்பாழான சிதாகாசத்தில் சதா இருப்பதுவே இன்பமாகு மென்று அவ்விடத்திலிருந் தனை. (எ - று) 13

ஆருமுறாப்பேறண்டத் தப்புறத்துமிப்புறத்தும்
நீருமுப்புமென்ன நிலைபெற்றாய்நெஞ்சமே.

(பொ - ரை) மனமே, யாவரும் இராத அண்டங் களின் இரண்டு பக்கங்களிலும் நீரையும் உப்பையும் போலக் கலந்திருந்தாய் (எ - று.)

இதுவே அத்துவித நிலையாம் என்றபடி. 14

உடனாகவேயிருந்து முணரவரியானோடு
கடனீருமாறும்போற் கலந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, நீ உன்னுடன் கூடவே உன் னால் காணப்படாதிருந்த சிவபெருமானுடன் கடனீரும் ஆற்றினீரும் போலக் கலந்து விட்டாய். (எ - று)

ஆ! உனக்கு இப்படிப்பட்ட காரியம் வந்தது மிகவும் வந்தது மிகவும் விசித்திரமே யாம் என்பது குறிப்பு. 15

நெடியகத்தைப்போக்கி நின்றசமக்கறுத்துப்
படிகத்துக்கும்பம்போற் பற்றினையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, நீ மிக்க அகங்காரத்தையும், மற்றுமுள்ள சேட்டைகளையும் ஒழித்துப்படிகத்தால்செய்யப்பட்ட குடத்தைப் போலாய் சிவத்தை உறுதியாய்ப் பிடித்தாய். (எ - று.) 16

மேலாகியெங்கும் விளங்கும்பரம்பொருளிற்
பாலூருமென்சுவைபோற் பற்றினையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே. நீ எவ்விடத்திலும் ஓங்கியுயர்ந்து வியாபித்திருக்கின்ற சிவனிடத்தில் பாலின்கண்ருசிபோற் சேர்ந்தாய். (எ - று))

நீரோடுதண்ணுலிவிண்டு நீரானவாறேபோல்
ஊரோடுபேரில்லானோ டொன்றினையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, குளிர்ந்தசலக் கட்டியானது அங்கங் குடைந்து தண்ணீராகவே மாறியது போல, யாதொரு வூரும்பேரும், இல்லாத பரம்பொருளுடன் சம்பந்தப்பட்டாய். (எ - று.) 18

இப்பிறப்பைப்பாழ்ப்படுத்தி யிருந்தபடியேயிருக்கச்
செப்பவரிதாய்விடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை) மனமே, நீ இந்தச் சென்மத்தையொழித்து சும்மா விருக்கும்படி சொல்லுதற் கருமையான மௌன இடத்தைச் சேர்ந்தாய். (எ - று.) 19

மேலாம்பதங்களெல்லாம் விட்டுவிட்டாராய்ந்து
நாலாம்பதத்தி னடந்தனையேநெஞ்சமே

(பொ - ரை) மனமே! நீ சர்வ பதவிகளையு மாராய்ந் தாராய்ந்து அவைகளைவிட்டு நாலாவது பதமாகிய துரிய பதத்தில் சேர்ந்தாய்

ஆகையால் இனி உனக்கு என்ன குறைவிருக்கின்றது என்பதாம். 20

கடங்கடோறுங் கதிரவனூடாடி
யடங்குமிடந்தானறிந் தன்புற்றாய்நெஞ்சமே

(போ - ரை) மனமே! ஒவ்வொரு தேகத்திலும் சூரியனுடன் கூடவிருந்து ஆடல் செய்து முடிவான இடத்தில் சேர்ந்து ஆசை வைத்தாய். (எ - று.) 21

கற்றவனாய்க்கேட்டவனாய்க் காணாய்க்காண்பவனாய்
உற்றவனாய்நின்றதிலே யொன்றுபட்டாய்நெஞ்சமே.

(போ - ரை) மனமே! நீ கற்றவனாகவும், கேட்டவனாகவும், காணாதவனாகவும், காண்பவனாகவும், சேர்ந்தவனாகவும், இருந்த ஒருபொருளில் கலந்தவனானாய். (எ - று.) 22

நாலுவரைக்கரண நல்குபுலனைந்துமொன்றாய்ச்
சீலமுற்றுநின்றதிலே சேர்ந்தனையேநெஞ்சமே

(போ - ரை) மனமே! நீ நான்குவகையான அந்தக்கரணங்களும் ஐம்புலன்களும் ஒடுங்கிநின்றவிடத்தில் சதா சேர்ந்திருந்தாய் (எ - று.)

ஆகையால் இனி உனக்கு ஒப்பானவர்கள் ஒருவருமில்லை என்பது குறிப்பு. 23

விட்டிடமுந்தொட்டிடமும் விண்ணிடமுமண்ணிடமுங்
கட்டுமொருதன்மையெனக் கண்ணுற்றாய்நெஞ்சமே

(போ - ரை) மனமே! நீ விட்டஇடம், தொட்டஇடம் தேவலோகம், பூலோகம், ஆகிய இவைகளையெல்லாம் ஒன்றாகவே பார்த்தாய் (எ - று.) 24

எந்தெந்தநாளு மிருந்தபடியேயிருக்க
அந்தச்சுகாதீத மாக்கினையேநெஞ்சமே.

(போ - ரை) மனமே! நீ எந்நாளும் ஒரே தன்மையாக இருக்கும்படி மேலான இன்பமயமா யமர்ந்தாய்.

இனி உன்னால் நானும் பரகதியடைவேன் என்பது குறிப்பு. 25

வாக்கிறந்துநின்ற மனோகோசரந்தனிலே
தாக்கறவேநின்றதிலே தலைசெய்தாய்நெஞ்சமே

(போ - ரை) மனமே! நீ வாக்கற்ற இடத்தின்கண் இருந்துயாதொருபற்றுதலுமில்லாமல் உயர்ச்சியையடைந்தாய். (எ - று) 26

எத்தேசமுநிறைந்தே யெக்காலமுஞ்சிறந்து
சித்தாயசித்தினிடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே

(போ - ரை) மனமே! நீ எந்தத் தேசத்திலும், எந்தக் காலத்திலும், நீங்காமல்ஞானமயமாய் வியாபித்திருக்கின்ற சித்துப்பொருளினிடத்தில் கலந்துவிட்டனை (எ-று.) 27

தாழாதேநீளாதே தன்மயமதாய்நிறைந்து
வாழாதேவாழ மருவினையேநெஞ்சமே

(போ - ரை) மனமே! குறையாமலும் வளராமலும், என்றும் ஒரே தன்மையாகவே யிருந்து வாழாமல் வாழ்தற்குரிய விடத்தே சேர்ந்தாய். (எ - று)

இனி உனக்கு ஒரு அச்சமுமில்லை என்பது குறிப்பு.

உள்ளும்புறம்பு முவட்டாதவானந்தக்
கள்ளருந்திநின்றதிலே கண்ணுற்றாய்நெஞ்சமே

(போ - ரை) மனமே! நீ அகமும் புறமும் அழியாமருக்கும் சுகத்தேனை உண்டு அத்தேனின் ருசியாலே உறங்னாய். (எ - று.) 29

வாதனைபோய்நிட்டையும்போய் மாமௌனராச்சியம்
பேதமறநின்றவிடம் பெற்றனையேநெஞ்சமே [போய்

(பொ - ரை) ஓ மனமே! நீவாசனை நிட்டை, மௌன நிலை, ஆகிய இவைகளெல்லாம் ஒழிய யாதொரு விகற்பமுமில்லாத இடத்தை யடைந்தாய், (எ - று) 30

இரதம்பிரிந்துகலந் தேகமாம்வாறேபோல்
விரகந்தவிர்ந்தணல்பால் மேவினையேநெஞ்சமே

(பொ - ரை) மனமே! நீ தேரானது பிரிந்தபோது அப்பெயரடையாமலும் சேர்ந்தபோது அப்பெயரடைவது போல் உன்னுடைய அவாக்களையெல்லாம் ஒழியப்பெற்றுச்சிவபெருமானிடத்தில் சேர்ந்து விட்டாய். (எ - று)

இனி உனக்கு யாதொரு சங்கடமுமில்லை என்பது குறிப்பு 31

சோதியான்சூழ்பனிநீர் சூறைகொளுமாறேபோல்
நீதிகுருவின் றிருந்தாள் நீபெற்றாய்நெஞ்சமே

(பொ - ரை) மனமே, நீ சூரியனானவன் பனிச்சலத்தை அடக்கிக் கொள்வதுபோல நல்ல ஞானாசிரியன் திருவடிகளை யடைந்தாய்.

இப்படி யிருப்பதால் நீ அச்சிவபெருமான் திருவடிகளை மறவாதிருக்கவேண்டியது முக்கியம்என்பது குறிப்பு.

## பட்டினத்துப்பிள்ளையார் புலப்பல்

### மூலமும்-பொழிப்புரையும்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



பத்திரகிரியார் திருநட்சத்திர வெண்பா.

---

ஓங்குதிரு வெண்காட் டயரடிகள் தண்ணருளைப்
பாங்குபெற வேபெற்ற பத்திரகிரி—யாங்கொளியாய்ச்
சித்திரைமாமகத்திற் சேர்ந்தனனே மாமருதூர்க்
கத்த னருளிற் கலந்து.

---

பூவை - கலியாணசுந்தர முதலியார் இயற்றியது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

பட்டினத்தடிகளின் சீடராகிய

# பத்திரகிரியார் சரித்திரச் சுருக்கம்.

இல்லறத்தவர்கள் சொல்லுதற்கரிய வல்லவராகிய துல்லியமன முடைய பட்டினத்துசுவாமிகள் தம்வீடு, நாடு, முதலியவற்றை யகன்று சகல தேசமுந்திரிந்து ஐய மேற்பதில்லை யென்று உறுதிகொண்டு பத்திரகிரி மகா ராஜன் ஊர்ப்புறத்திலுள்ள கணபதியாலய மடைந்து ஞான நிஷ்டை கூடியிருக்குஞ் சமையம் கள்ளர்சிலர் கூட்டமிட்டு பத்திரகிரி யரசன் மனையிற் புகுந்து வெகு பொருள்களைக் கவர்ந்து போகுங்கால் வழியிலுள்ள கண பதிக்கொன்று பரிசளிக்க நினைந்து ஓர் இரத்தின ஆரத்தை வீசி எகுங்கால் அவ்வாபரணம் பட்டினத்தடிகள் கண்டத்தில் விழுந்திருக்க உதையத்தில் அரண்மனைக் காவலர் கண்டு இவருங் கள்வரைச் சேர்ந்தவரென்று வற்புறுத்தி அரசன் முன்னிலையில் கொண்டுபோய் விடுக்க அவர்வினைக் கட்கெல்லாம் சிவ! சிவ! வென்றிறைஞ்சிய அடிகளைக் கண்ணுற்ற அரசன் சற்று மயங்கி அமைச்சனை நோக்கி, நீ உன்னுடைய மனம்படி ஆக்கினை தருகவென்றிசைக்க அவ்வமைச்சன் கழுவேற்ற நியமித்தனன், பின் பட்டினத்தடிகள் காவலரால் கழுமரத்தை யடைந்து சற்றுஞ் சலிப்புறாத புன்னகை கொண்டு (என்செயலாவதியா தொன்று மில்லை யினித்தெய்வமே) என்னுஞ் செய்யுளைப்

பாட கழுமரம் கொழுந்து விட்டிரிந்தது அதுகண்ட காவலர் அரசனுக்கறிவிக்க அரசன் திடுக்கிட்டுப் பாதசாரியாயோடி வந்து பட்டினத்தடிகள் பாதத்தில் விழ மன்னன் மனப்பக்குவமறிந்து கண்ணோக்க அப்பத்திரகிரி யரசன் இராஜகோலம் நீக்கி உடன்தொடர நீ திருவிடை மருதூருக்குச் செல்வாயென வாக்களித்து மீண்டும் சிவஸ்தலங்கள் திரிந்து திருவிடைமருதூரை யடைந்து கீழ்கோபுர வாயிலில் வீற்றிருக்க பத்திரகிரியரசனும் பலஸ்தலங்களுக்குச் சென்று திருவிடைமருதூரை யடைந்து குருவைக் கண்டு வணங்கி அவர் சொற்படி மேலைக் கோபுரவாயிலிருந்து பிச்சை யேற்று வந்து குரு நிவேதனஞ் செய்து மீதிசேடத்தையுண்டு யோகமெய்தியிருந்தனர். இவ்வாறிருக்க பத்திரகிரியாரிடம் ஒரு பெட்டை நாய்க்குட்டிவந்து வாலைகுழைத்து தன்பசி நோயைக் குறிப்பித்து நிற்க அதனை யறிந்து தமது சேடப்பிரசாத மளிக்க பசியாறி அவருடன் கூடவேயிருக்க இதைச் சிவபெருமானறிந்து பட்டினத்தாரிடஞ் சென்று அதிக பசியுள்ளவர் போல் அபிநயிக்க பட்டினத்தடிகள் யான் கோவணந் தாங்குவதே பாரமாக வுடையோன் மேற்குக் கோபுரவாயிலிருக்கிறான் சமுசாரி அவனண்டையேகினால் பசியாற்றுவானென இதைச் செவியுற்ற ஈசன் மேற்கு கோபுரவாயிலிருக்கின்ற பத்திரகிரியாரையடுத்து கீழ்த்திசைவாயிலிருக்கும் பட்டினத்தடிகள் புகன்றதையுரைக்க பத்திரகிரியார் இவ்வோடும் நாய்க்குட்டியுமோ என்னைச்சமுசாரியாக்கின என்று பாத்திரத்தை எடுத்தெரிய அப்பாத்திரம் நாய் சிரசின் மேல் பட்டு மரித்தது, உடனே சிவபெருமான் மறைந்தருள, பின்பு பத்திரகிரியார் திருப்புலம்பல் முதலிய பல தமிழ்க் கண்ணிகளு மியற்றியும் சிவயோக மெய்தியு மிருக்க மரித்த நாய் காசிராஜன் மகளாய்ப்

பிறந்து வளர்ந்து பக்குவ மடைந்ததை அரசனறிந்து புரோகிதரை யழைத்து என் புத்திரிக்குத் தக்க புருடனை நியமிக்க வேண்டுமென அதைக் கேள்வியுற்ற பெண் திடுக்கிட்டு பிதாவைநோக்கி யானொருவனுக்குரியவளல்லள், திருவிடை மருதூரில் மேலைக் கோபுரவாயிலில் வீற்றிருக்கும் எனது குருநாதரிடம் ஒப்புவிப்பீரென அரசன் அதிசயித்து உண்மையை விசாரித்தறிந்து புத்திரியை பத்திரகிரியார் முன் கொண்டுவந்துவிட அவர் நிஷ்டையிலிருந்து விழித்து நோக்க அப்பெண் அடிநாய்மீண்டுந் திருவடியை நாடிவந்தது என யாவு மறிந்த ஞானியாரெழுந்து அப்பெண்ணின் கரத்தைப்பற்றிச் சென்று குருவாகிய பட்டினத்தடிகளிடம் விட்டு நம்முச்சிட்ட முண்ட நாய்க்கு மிப்பிறவி நோய் வரலாமோவென பட்டினத் தடிகள் (அவன் செயலன்றி யாவதொன்று மில்லை) யென திருவருளை நாடினர் அப்போது ஒரு பெருஞ் சோதிதோன்றி அதில் அப்பெண்ணுடன் பத்திரகிரியார் மறையச் சோதியும் மறைந்தது.

பத்திரகிரியார் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திரகிரியார்

திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞானப் புலம்பல்.

## மூலமும் - பொழிப்புரையும்.

---

### வினாயகர் வணக்கம்

முத்திதரும்வேத மொழிந்தபுலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவதெக்காலம்

(பொ - ரை) சர்வ ஆன்மாக்களுக்கும் மோக்ஷத்தை யடையும் வழியை இடைவிடாமற் தெரிவித்துக் கொண்டிராநின்ற வேதங்களிற் சொல்லியபடியே நானும் இந்த மெய்ஞ்ஞானப் புலம்பல்என்னும் ஒரு அரியநூலைச் சொல்லுதற்கு, எந்தக்காலத்தில் யானைமுகத்தை யுடைய வினாயகக் கடவுளுடைய திருவருளைப் பெறுவேன்? (எ-று)

அந்தக்கடவுளுடைய அருளைப் பெறுவேனாகில் நான் சொல்லும் இந்த நூலானது இடையூறில்லாமல் முடியும் என்றபடி.

### நூல்.

ஆங்காரமும்மடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்து
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம், 1

(பொ - ரை) நான் என்னுடைய சகசமலமாகிய அகங்காரத்தை உள்ளேயே யடக்கச் செய்தும் ஐம்புலன்களையும் அறவே சுட்டெரித்தும், தூங்காமல் தூங்குவதற்குரிய நின்மலாவஸ்தையில் சேர்ந்த பேரானந்தச்சுகத்தையடைந்திருப்பது எந்தக்காலத்திலோ? அறியேன் (எ-று)

நீங்காச்சிவயோக நித்திரைகொண்டேயிருந்து
தேங்காக்கருணைவெள்ளந் தேக்குவதுமெக்காலம்

(பொ - ரை.) எக்காலத்திலும் கொஞ்சமும் பிரியாதபடி சிவயோக சமாதியிலிருந்து அதினால் தெவிட்டாத கிருபா வெள்ளமானது மேன்மேலும் பெருகிவந்து என்னைத் தெவிட்டுவிப்பது எந்தக்காலத்திலோ? அறியேன்.

தேங்காக்கருணைவெள்ளந் தேக்கியிருந்துண்பதற்கு
வாங்காமல்விட்டகுறை வந்தடுப்பதெக்காலம்

(பொ - ரை) முன் சொன்ன கிருபா வெள்ளமானது மிகவும் பெருகி யிருக்கவும் அதையுண்டு அநுபவித்துச் சுகித்திருக்கும்படி விட்டகுறை தொட்டகுறை ஆகிய இவைகள்வந்து என்னைச்சேருங் காலம் எதுவோ? அறியேன், (எ - று)

அங்ஙனம் விட்டகுறை வருமானல் நான் அக்கிருபா வெள்ளத்தில் மூழ்குவது திண்ணம் என்பார் இங்ஙனம் கூறினர் 3

ஓயாக்கவலையினு ளுள்ளுடைந்துவாடாமல்
மாயாப்பிறவி மயக்கறுப்பதெக்காலம்

(பொ - ரை.) எக்காலத்திலும் ஒழியாத துன்பத்தினால்மனமிளகி வாடாமல் என்னைத்தொடர்ந்து கொண்டே வந்திரா நின்ற ஜெந்ம சாகரத்தை வற்றப் பெறுவது எந்தக்காலத்திலோ? அறியேன். (எ - று.) 4

மாயாப்பிறவி மயக்கத்தையூடறுத்துக்
காயாபுரிக்கோட்டை கைக்கொள்வதெக்காலம்

(பொ - ரை) இந்தச் சென்மசாகரத்தை யொழித்து இந்தத் தேகமாகிய கோட்டையைச் சித்தியாக்கிக் கொள்வது எந்தக்காலத்திலோ? அறியேன் (எ - று)

காயாபுரிக் கோட்டை கைக்கொள்வது என்றது காயசித்தியை 5

காயாபுரிக்கோட்டை கைவசமாய்கொள்வதற்கு
மாயாவனுபூதி வந்தடுப்பதெக்காலம்.

(பொ - ரை) மேற்சொன்ன காயசித்தியை யடைவதன் பொருட்டு என்றும் அழியாத சிவாநுபூதி கைகூடவ் வேண்டுவது அவசியமாகையால் அது கைகூடுவது எந்தக் காலத்திலோ? அதை அறியவல்லவர் யாவர்? (எ-று) 6

சேயாய் சுமந்து செவிடூமைபோற்றெறிந்து
பேய்பொலிந்துன் பிரமைகொள்வதெக்காலம்

(பொ - ரை( நான் ஒருபிள்ளையாகப் பிறந்து செவிடரைப்போலவும், ஊமைகளைப் போலவும், பசாசைப்போலவும் திரிந்து உன்னுடைய சிவாநுபவ மயக்கத்தை யடைவது எந்தக்காலத்திலோ? (எ-று.) 7

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்துபெண்ணைத்
தாய்போனினைத்துத் தவமுடிப்பதெக்காலம்

(பொ - ரை) பேயைப்போல் திரிந்தும், பிணத்தைப் போல் அசைவில்லாம லிருந்தும், பெண்களைத் தாய்மார் போல் நினைத்தும் இருந்து சிவப்பேற்றை அடைதற்குத் தகுந்ததான தவத்தை நான் எந்தக்காலத்தில் முடிப்பேன்? (எ - று.) 8

கால்காட்டிக்கைகாட்டிக் கண்கள்முகங்காட்டி
மால்காட்டுமங்கையரை மறந்திருப்பதெக்காலம்

(பொ - ரை) நான் இந்த உலகத்தி னிடமாகக் காலையும், கையையும், கண்களையும், முகத்தையும், பலவகையாகக்காட்டியபின் அவைகளால் மயக்கத்தைக் கொடாநின்ற பெண்களை மறந்திருப்பது எந்தக்காலத்திலோ? ()

அப்படி எனக்குப் பெண்கள்மறதி உண்டாகுமானால் கண்களார்த்தரிசிக்கும் சிவபதவி கிடைக்கும் என்பது குறிப்பு 9

பெண்ணினல்லா ராசைப் பிறமதனைவிட்டொழிந்து
கண்ணிரண்டுமூடிக் கலந்திருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான்பெண்ணாசையை யறவே விட்டு இரண்டுகண்களையும், மூடிச் சிவத்தோடிரண்டறக் கலத்தலாகிய அரியதவத்தை யடைவது எந்தக்காலத்திலோ? (எ - று) 10

வெட்டுண்டபுண்போல் விரிந்தவல்குற்பைதனிலே
தட்டுண்டுநிற்கை தவிர்வதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் வெட்டுப்பட்ட புண்ணைப்போல் விரிந்திருக்கின்ற பெண்கள் அல்குல் என்கின்றபையில் தட்டுப்பட்டு விழுகின்ற செய்கையினின்று எந்தக் காலத்தில் நீக்குவேனோ? (எ-று) 11

ஆறாதபுண்ணி லழுந்திக்கிடவாமல்
தேறாதசிந்தைதனைத் தேற்றுவதுமெக்காலம்

(பொ - ரை) நான் எக்காலத்தும் ஆறாத புண்ணாகிய மாய்கையில் அழுந்தியிராமல், அதினின்றும் தேர்ச்சியடையாம லிருக்கிற என்னுடைய மனத்தை நான்எந்தக்காலத்தில் தேற்றுவேன்? (எ - று) 12

தந்தைதாய்மக்கள் சகோதரரும்பொய்யெனவே
சிந்தைதனிற்கண்டு திறுக்கறுப்பதெக்காலம்

(பொ - ரை) மனமே, நான் தகப்பன், தாய், பிள்ளைகள், கூடப்பிறந்தவர்கள் ஆகியஇவர்களெல்லாம் நமக்குத் துணையானவர்களல்லர் என்று மனதிற்கொண்டு தெரிந்து சதா அவனுடைய திருவடிகளே துணையாவனவென்று நினைந்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ-று) 13

மன்னுயிரைக்கொன்று வதைத்துண்டுழலாமல்
தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம்

(பொ - ரை) மனமே, நாம் பிறஜெந்துக்களைக்கொன்றுதின்று அதினால் பாவமேலிட்டு வருந்தித் திரியாமல் அவ்வுயிர்களையும் நம்முயிர் போலாமென்று நினைத்துச் சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்து முடிப்பது எந்தக் காலத்திலோ? அறியோம். (எ - று) 14

பாவியென்றேபேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல்
ஆவிநின்றசூத்திரத்தை யறிவதினியெக்காலம்

(போ - ரை) நான் இந்த உலகத்தில் பாவியென்கிற பேரைப் பெற்றுக்கொடி நரகக்குழியில் வீழாதபடி உயிரிருக்கும் சூஸ்திரத்தை எந்தக்காலத்தில் தெரிந்துக்கொள்வேன்? (எ - று) 16

உளியிட்டகல்லு முருப்பிடித்தசெஞ்சாந்தும்
புளியிட்டசெம்புபோற் பொருளாவதெக்காலம்

(போ - ரை) நான் உளியார்செதுக்கிச் சுத்தப்படுத்திய கல்லைப் போலவும், ரூபமைத்த சந்தனமரத்தைப் போலவும், புளியாற் சுத்திக்கப்பட்ட செம்பைப்போலவும் நிர்மலமடைந்து எந்தக்காலத்தில் புனிதனுவேன்? (

வேடிக்கையுஞ்சொகுசு மெய்ப்பகட்டும்பொய்ப்பகட்டும்
வாடிக்கையெல்லா மறந்திருப்பதெக்காலம்

(போ - ரை.) மனமே, நான் எந்தக்காலத்தில்வேடிக்கையையும் சொகுசையும், பகட்டுகளையும், இன்னுமுள்ள என்னுடையவழக்கங்களையும் மறந்து சும்மாவிருப்பேனோ தெரியவில்லை. (எ - று) 17

பட்டுடையுமொப்பனையும் பாவனையுந்தீவினையும்
விட்டுவிட்டுன்பாதம் விரும்புவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் தரிக்கும் பட்டு வஸ்திரங்களையும், பாவனைகளையும், கொடிய செய்கைகளையும், அறவேவிட்டு உன்னுடைய திருவடிகளைச் சேர்வது எந்தக்காலத்தில். (எ - று) 18

ஆமைவருமாட்கண் டைந்தடக்கஞ்செய்தாற்போல்
ஊமையுருக்கொண் டொடுங்குவதுமெக்காலம்

(போ - ரை) சுவாமீ, ஆமையானது தனக்குச் சமீபமாக வருகின்ற மனிதரைப்பார்த்து தன்னுடைய கருவிகளை உள்ளே யடக்கிக் கொண்டதுபோல் நானும் மௌனரூபத்தை யடைந்து ஒடுங்கி நிற்பது எந்தாகாலத்திலோ? அறியேன். (எ - று) 19

தண்டிகையுஞ்சாவடியுஞ் சாளிகையுமாளிகையுங்
கண்டுகளிக்குங் கருத்தொழிவதெக்காலம்

(போ - ரை) மனமே, நாம் இதுவரைக்கும், பல்லாக்கு, சத்திரம் மாளிகைகள் முதலானவைகளைக் கண்டு களித்திருக்கின்றோம். அந்தக்களிப்பை எந்தக்காலத்தில் ஒழியப்பெறுவோமோ? (எ - று)

அதை நாம் அறவே ஒழிப்போமானல் முத்திநிலை கைகூடு மென்பது குறிப்பு. 20

அத்தனிருப்பிடத்தை ஆராய்ந்துபார்த்துமிதஞ்
செத்தசவம்போற் றிரிவதினியெக்காலம்

(போ - ரை) மனமே! நாம் தினந்தோறும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தை ஆராய்ந்துபார்த்து மௌனிகளாக எந்தக் காலத்தில் திரிவோமோ? தெரியவில்லை, (எ - று) 21

ஒழிந்ததருமைத்தினைவைத்துள்ளெலும்புவெள்ளெலும்பா
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம் [ய்க்

(போ - ரை) மனமே, பாவத்தினின்றும் நீங்கிய தருமத்தைச் செய்து உள்ளிருக்கின்ற எலும்புகள் வெள்ளெலும்பாய் மாலும் பிணம் போலத்திரிந்து வசிப்பது எந்தக் காலத்திலோ? (எ - று.)

செத்தசவம்போற் றிரியும் செய்கை எனக்குக் கிடைக்குமானல் மோக்ஷ சாதனம் கைகூடு மென்பதற்கு யாதொரு ஆசங்கையு மில்லை என்பது குறிப்பு. 22

அற்பசுகமறந்தே யறிவையறிவாலறிந்து
கொப்பத்தில்வீழ்ந்துகொண்டுகோளறுப்பதெக்காலம்

(போ - ரை) மனமே! நாம் சிறுசுகமாகிய இவ்வுலக வாழ்க்கையை மறந்து சிவபெருமானை நம்முடைய அறிவைக்கொண் டுணர்ந்து அஞ்ஞானத்தின் வலிமையை அடக்கி நிற்பது எந்தக்காலத்திலோ தெரியாது. (எ-று)

கருப்படுத்திஎன்னையமன் கைப்பிடித்துக்கொள்ளாமுன்
உருப்படுத்தியாள உடன்படுவதெக்காலம்

(போ - ரை) மனமே! என்னைப்பிறப்பித்தபின் எமனுனவன் கொண்டுபோகாமுன் சிவரூபத்தை யடைந்து அவனேடு ஐக்கியபதத்தை அடைவது எக்காலத்திலோ? 24

தூண்டுவிளக்கணைய தொடர்ந்திருள்முன் சூழ்ந்தாற்போல்
மாண்டுபிழைத்துவந்த வகைதெரிவதெக்காலம்

(பொ - ரை) சுவாமி? விளக்கானது அணைந்தவுடன் இருளானது தொடர்ந்து சூழ்ந்துகொள்வதுபோல் இறந்து இறந்து பிறந்து பிறந்து வந்தவழியை நான் எந்தக்காலத்திற் தெரிந்துக்கொள்வேன்? (எ - று) 25

தூரியினின்மீன்போற் சுழன்றுமனம்வாடாமல்
ஆரியனைத்தேடி யடிபணிவதெக்காலம்

(பொ - ரை) மனமே! தூண்டில்முள்ளில் அகப்பட்டு வருந்துகின்ற மீனைப்போல் மனம் வருந்தாமல் குருமூர்த்தியைத்தேடி அவருடைய திருவடிகளில் வணங்கி நமஸ்காரஞ்செய்வது எந்தக்காலத்திலோ (எ - று) 26

எண்ணூறுகமிருந்து எய்தாதவீடுபெற
வெண்ணீறுபூசி விளங்குவதுமெக்காலம்

(பொ - ரை) மனமே! நாம் எண்ணூறு யுகங்களாக வீணாகவிருந்தாலும் கிடைக்காத மோக்ஷசாதகத்தையடையும்பொருட்டு எந்தக்காலத்தில் திருநீற்றைத்தரித்து விளங்குவோமோ (எ - று)

திருநீற்றைத்தரிப்பது மோக்ஷத்திற்கு ஒரு வழியாதலால் இங்ஙனம் கூறினர். 27

அவ்வேடம்பூண்டிங் கலைந்துதிரியாமற்
சிவவேடம்பூண்டு சிறந்திருப்பதெக்காலம்

(பொ - ரை) மனமே! வீணான வேஷங்களையெல்லாம் போட்டுக்கொண்டு இவ்விடத்தில் வீணே திரிந்து அலையாமல் சிவவேடம் தரித்துச் சிறப்புற்றிருப்பது எந்தக்காலத்திலோ? அறியேன். (எ - று) 27

அண்டருக்காகநஞ்சருந்தி அம்பலத்திலாடுசிவன் [காலம்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வதெக்

(போ - ரை) மனமே, நாம் தேவர்கள் பிழைப்பதற்காகவே ஆலகால விஷயத்தையுண்டு சிற்றம்பலத்தில் நடனஞ்செய்கின்ற சிவபெருமானை துதிசெய்வது எந்தக்காலத்திலோ? அதுதெரியவில்லை. (எ - று) 28

பன்றிவடிவெடுத்துப் பாரிடந்துமால்காணுக்
குன்றில்விளக்கொளியை கூறுவதுமெக்காலம்

(போ - ரை) மனமே! நாம் விஷ்ணுவானவர் பன்றிரூபந்தாங்கி தேடியும் காணப்படாத தேஜோமயனான சிவபெருமானைத் துதிசெய்வது எந்தக்காலத்தில்? (எ-று)

அவனைத் துதிசெய்வோமானால் நம்முடைய அல்லல் ஒழிந்துபோம் என்பது குறிப்பு. 30

தித்திக்குந் தெள்ளமிர்தை சித்தாந்தநுட்பொருளை
முத்திக்குவித்தை முதனினைப்பதெக்காலம்

(போ - ரை) மனமே, நாம் இனிப்பைத் தராநின்ற அமிர்தம் சித்தாந்தமாதத்தில் தீர்மானப்பட்டுள்ள உட்கிடைப் பொருளும் மோக்ஷத்திற்கும் காரணமுமாகவுள்ள தலைவனை எந்தக்காலத்தில் துதிசெய்வோம்? (எ - று) 31

வேதாந்தவேதமெல்லாம் விட்டொழிந்தே நிஷ்டையி
ஏகாந்தமாக யிருப்பதினியெக்காலம் [லே

(போ-ரை) மனமே, நாம் வாய்ஞ்ஞானமாகிய வேதாந்த முதலியவைகளை எடுத்துப் பேசுவதாகிய வீண்தொழிலைவிட்டு நிஷ்டாபரராய்த் தனியேயிருப்பதுஎந்தக்காலத்திலோ? அறியோம். (எ-று) 32

மற்றிடத்தைத்தேடியென்றன் வாழ்நாளைப்போக்காமல்
உற்றிடத்தைத்தேடி யுறங்குவதுமெக்காலம்

(பொ - ரை) நான்வேறு வீணன இடங்களைத்தேடி என்னுடைய வாழ்நாளை வீணே கழித்து விடாமல் சிவபெருமானிடத்தில் அறவே கலப்பதற்குக் காரணமாகவுள்ள இடத்தைத்தேடி அவ்விடத்தில் சிவயோக நித்திரை செய்வது எந்தக்காலத்திலோ? (எ - று.) 33

இன்றுளோர்நாளை யிருப்பதுவும்பொய்பெனவே
மன்றுளோர்சொல்லும் வகையறிவதெக்காலம்

(பொ - ரை) கடவுளே! நான் இன்றைக்குயிரோடு இருக்கின்றவர்கள் நாளைக்கும் இருப்பதுபொய்யாமென்று சபையிலுள்ள பெரியோர்கள் சொல்லும் வார்த்தையின் அநுபவத்தைஎந்தக்காலத்தில் தெரிந்துகொள்வேன்? ()

கஞ்சாவபினியுடன் கள்ளுண்டுவாடாமற்
பஞ்சாவமிர்தம் பருகுவது மெக்காலம்

(பொ - ரை) நான் கஞ்சா, அபினி, கள், இவைகளை அநுபவித்து அதினல் மனம் வருந்தாமல் யோகத்தின்கண் சந்திரமண்டலத்தி லிருந்து வராநின்ற பஞ்சாமிர்தத்தைக் குடித்துச் சுகித்திருப்பது எந்தக்காலத்திலோ? ()

கெஞ்சலத்தினற்றிரண்ட ஜெனனமோக்ஷம்பெறவே
சஞ்சலத்தைவிட்டுன் சரணடைவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் தாயின் கருப்பாசயரக்தமானது திரண்டு எடுத்த ஜென்மத்தினின்றும் நீங்கி மோக்ஷத்தைப் பெறுவதன் பொருட்டு உன்னுடைய திருவடிகளில் எந்தக்காலத்தில் சேர்வேன்? (எ - று.) 36

கும்பிக்கிரைதேடிக் கொடுப்பாரிடந்தோறும்
நம்பித்திரிகை தடுப்பதினியெக்காலம்

(போ - ரை) கடவுளே! நான் என்னுடைய வயிற்றி னிமித்தம் ஆகாரந்தேடித் திரவியங் கொடுப்பவர்களைத் தேடித்தேடிப் போகும் தொழிலை நீக்குவது எந்தக்காலத் திலோ? அறியேன். (எ - று) 37

ஆடுகின்றசூத்திரந்தா னறுமளவுமேதிரிந்து
போடுகின்றநாள்வருமுன் போற்றுவதுமெக்காலம்

(போ - ரை) ஆடிக்கொண் டிராநின்ற இந்தத் தேக மானது தளரும் வரைக்கும் வீணேதிரிந்து இது இறக்கும் தறுவாயில் சிவபெருமானே! உன்னைத் துதிசெய்வது எந் தக்காலத்தில்? (எ - று.) 38

நவசூத்திரம்போட்டு நானலநீயென்றிருந்த
சிவசூத்திரத்தைத் தெரிந்தறிவதெக்காலம்

(போ - ரை) ஒன்பது சூத்திரங்களையும் அவனிடத் தில் போட்டுப் பார்த்தவர்க்கு அப்பொருள் நானன்று, நீ என்று சொல்லும்படி வாராநின்ற சிவபெருமானுடைய சூஸ்திரத்தை நான் எந்தக்காலத்தில் அறிந்து கொள் வேனோ? (எ - று) 39

மறந்துமலசலங்கள் மாயும்புழுக்கூட்டைவிட்டுக்
கரந்துனடிபிணைக்கீழ்க் கலந்துநிற்பதெக்காலம்

(போ - ரை) மலசலங்கள் மறந்தும் வெளிவந்து இறந்துபடும் இந்தத்தேகத்தைவிட்டுஉன்னுடைய இரண்டு திருவடிகளில் சேர்ந்திருக்கும்வாழ்வு எனக்கு எந்தக் காலத்தில் கிடைக்குமோ? (எ - று.) 40

இம்மைதனிற்பாதகனு யிருவினைக்கீடாயெடுத்த
பொய்ம்மைதனிற்போட்டுன்னைப் போற்றிநிற்பதெக்கால[ம்

(பொ-ரை) இப்பிறப்பிற் பாவத்தை மிகவும்செய்து பாவியானமையால் இருவினைக்கீடாக எடுத்துள்ள என் தேகத்தை நீக்கி உன்னைத் துதிசெய்யும் கிரியை எந்தக் காலத்தில் எனக்கு கிடைக்குமோ தெரியவில்லை, (எ-று)

உப்பிட்டபாண்ட முடைந்துகருக்கொள்ளுமுன்னே
அப்பிட்டவேணியனுக் காட்படுவதெக்காலம்

(பொ - ரை) மனமே, நாம் நம்முடைய தேகமானது இறந்துபட்டு வேறோர் தேகத்தை யெடுப்பதற்கு வாரா முன்னரே, கங்கையைத் தரித்த சடாபாரத்தையுடைய சிவபெருமான் திருவடிகளுக்கு எந்தங்காலத்தில் அடிமைப் படுவோமோ அது தெரியவில்லை (எ - று) 42

சேவைபுரிந்த சிவரூபவாட்சிகண்டு
பாவைதனைக்கழித்துப் பரமடைவதெக்காலம்

(பொ-ரை) சிவதரிசனஞ்செய்து அவனுடைய மெய் ரூபத்தின் காட்சியை ஞானமார்க்கத்தா லறிந்து பெண்கள் மயக்கத்தை அறவேயொழித்து பரம்பொருளைச்சேர் வது எந்தக்காலத்திலோ. (எ-று) 43

காண்டத்தைவாங்கிக் கருமேகமீண்டதுபோல்
பாண்டத்தைநீக்கிப் பரமடைவதெக்காலம்

(பொ - ரை) பெரியமேகமானது சமுத்திரத்திலுள்ள ஜலத்தைக் குடித்துத் திரும்பியதுபோல இந்தத் தூலதேகத்தை நீக்கி, மேலானசிவபெருமானை நான்எந்தக்காலத்தில் அடைவேன்? (எ - று) 43

சோற்றுத்துருத்திதனைச் சுமந்தலைந்துவாடாமல்
ஊற்றைச்சடம்போட் டுனையடைவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னாற் சுமக்கப்பட்டுள்ள இந்தத்தேகத்தால் மனம் வருந்தாமல் இதை

இங்ஙனே தள்ளிவிட்டு உன்னுடையதிருவடிகளை அடையப் பெறுவது எந்தக்காலத்திலோ? (எ-று)

நான் எந்தக்காலத்தில் தேகப்பற்றிலிருந்தும் நீக்குகின்றேனோ அப்பொழுதே உன்னுடைய திருவடிகளையடைந்தேன் என்பது குறிப்பு. 45

தொடக்கைச்சதமெனவே சுமந்தலைந்துவாடாமல்
உடக்கைசுழற்றி உனையறிவதெக்காலம்

(போ - ரை) நான் எடுத்துள்ள இந்த தேகத்தையே நிலையுள்ளதென்று நினைத்து இந்த உலகத்தின்கண் வாழாமல் இதை நீக்கிச் சிவபெருமானே, உன்னை எந்தக்காலத்தில் அடையப்பெறுவேனோ. (எ - று)

எனக்கு அந்தக்காலம் வரும்போது நீயே முன்னின்று உன்னை கொடுத்தருளல்வேண்டும் என்பது குறிப்பு. 46

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணித்தீபத்தி லொன்றிநிற்பதெக்காலம்

(போ-ரை) மனமே! நான் ஆசையென்கின்றகொடிய பாசத்திற்சிக்கிக்கெடாதபடி நாத தத்துவத்தி லுண்டாம் தீபமாகிய சோதியில் கலந்து அதின்மயமாய் நிற்பது எந்தக்காலத்திலோ, (எ-று) 47

கூரறியநால்வேதங் கூப்பிட்டுங்காணாத
பாரரகசியத்தைப் பார்த்திருப்பதெக்காலம்

(போ - ரை) சொல்லுதற் கருமையான நான்குவேதங்களும் நெடுநாளாகக் கூப்பிட்டும் அவைகளால் காணப்படாத பெரிய இரகசியமாகிய பரம்பொருளை நான் எந்தக்காலத்தில் கண்டு ஆநந்தத்தை யடைந்திருப்பேனோ? ()

புல்லாய்விலங்காய்ப் புழுவாய்நரவடிவா
யெல்லாப்பிறப்பி னிருளகல்வதெக்காலம்

(பொ - ரை) மனமே! நாம் புல்லாகவும், மிருகங்களாகவும், புழுவாகவும், நரர்களாகவும் பிறந்து பிறந்து இறக்கின்றோமே யொழிய அவற்றைத்தவிர்த்தோமில்லை ஆகையால் நாம் எந்தக்காலத்தில் அவைகளை நீக்கிக்கொள்வோமோ? (எ - று.) 49

தக்கும்வகைக்கோர்பொருளுஞ் சாராமலேநினைவில்
பக்குவம்வந்துன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, என்னுடைய மனதின்கண் மாயசம்பந்தமான பொருள்கள் ஒன்றையும் நினைக்கா வண்ணம் மலபரிபாக காலம்வந்து உன்னுடைய திருவருளைத் தரிசித்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ-று) 50

புருவத்தலைவரொடும் புல்கியின்பங்கொள்வதற்குத்
தெரிவைப்பருவம்வந்து சிக்குவதுமெக்காலம்

(பொ - ரை) நான் என்னுடைய புருவத்தின் கண் எழுந்தருளி யிருக்கும் தலைவருடன் கூடிச் சுகித்து ஆனந்தித்திருக்கும் படியாக அடியேனுக்கு தெரிவை யென்னும் பருவம்வந்து கூடுவது எந்தக் காலத்தில் (எ - று)

தெரிவையுறும்பக்குவத்தின் சீராட்டெல்லாமறிந்து
குருவையறிந்தேதநினைத்துக் கும்பிடுவதெக்காலம்

(பொ - ரை) மேலேசொன்ன தெரிவைப்பருவத்தின் சீராட்டுதலை யெல்லா முணர்ந்து பின்னர் ஞானசிரியனை ஆராய்ந்தறிந்து அவனை நமஸ்காரஞ் செய்து வணங்குவது எந்தக்காலத்தில் (எ - று) 52

வம்படிக்குமாதருடன் வாழ்ந்தாலுமன்னுபுளி
யம்பழமுமோடும்போ லாவதினியெக்காலம்

(பொ - ரை) மனமே! நாம் வீண்லீலையைக்காட்டி நம்மைக்கெடுக்கின்ற பெண்களுடன் கூடிவாழ்ந்தாலும்,

புளியம்பழமும் அதின் ஓடும்போல் பற்றில்லாமல் வாழ்ந் திருப்பது எந்தக்காலத்திலோ? (எ - று)

அப்படி பற்றுதலில்லாமல் வாழ்ந்திருப்போ மானால் அப்பொழுதே சிவப்பேற்றை யடைவதற்கு யாதொரு சந் தேகமுமில்லை என்பது குறிப்பு. 53

பற்றற்றுநீரிற் படர்ந்தவன்னம்பச்சிலைபோல்
சுற்றற்றுநீக்கிமனந் தூரநிற்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, என்னுடைய மன மானது யாதொருபொருளிலும் பற்றுவைப்பதையும் சுற் றத்தார்மேல் வாஞ்சையையும் அறவேயொழித்து வெளிப் பட்டு இழிப்பது எந்தக்காலத்திலோ (எ - று) 54

சல்லாபலீலையிலே தன்மனைவிசெய்தசுகம்
சொல்லாரக்கண்டெனக்குச் சொல்வதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, சரசசல்லாபத்துடன் செய்யும் மனைவியின் சுகத்தை நன்றாய்க்கண்டு எனக்கு என்மனம் அறிவிக்காமை போல உன்னுடைய சுகத்தை எக்காலத்தில் அறிவிக்கப் போகிறாய்? (எ-று) 55

மருவுமயற்புருடன் வருநேரங்காணாமல்
உருகுமனம்போலெனுள முருகுவதுமெக்காலம்

(போ - ரை.) அந்நியபுருஷன்மேல் விருப்பம் வைத் தவள் அவன் வராவிட்டால் அவளுடைய மனம் எப்படி இளகுகின்றதோ அப்படியே நீவராவிட்டால் 'என்மன மும் இளகுவது எந்தக்காலத்திலோ (எ-று) 56

தன்கணவன்றன்சுகத்திற் றன்மனம்வேறானதுபோல்
என்கருத்திலுன்பதத்தை யேற்றுவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, தன்னுடைய கணவனிடத்தில் சுகத்தையனுபவிக்குங் காலத்தில் தன் எண்ணம் மாத்திரம் வேறாயிருப்பதுபோல என்னுடைய மனத்தின்கண் உன்னுடைய திருவடிகளை எந்தக்காலத்தில் சதா துதிக்கும்படியான பேறுகிடைக்குமோ (எ - று) 57

கூடிப்பிரிந்துவிட்ட கொம்பனையைக்காணுமல்
தேடித்தவிப்பவன்போல் சிந்தைவைப்பதெக்காலம்

(போ - ரை) சிவ பெருமானே, ஒரு பெண்ணேடு கூடியிருந்து சில காலஞ்சென்று அவளைக் காணுமையால் அவளைத் தேடிவாடுகின்றவனைப்போல் என்னுடைய மனமும் உன்னைத்தேடி அவனுடைய குணம்போன்ற குணத்தைப் பெறுவது எந்தக்காலத்திலோ. (எ -று) 58

எவ்வனத்தின்ஸ்திரீமோகம் எப்படியுண்டப்படிபோல்
கவ்வனத்திலுன்னைக் கலந்திருப்பதெக்காலம்

(போ - ரை.) ஒருவனுக்கு நல்ல யவ்வனத்தில் ஒரு பெண்ணின்மேல் எவ்வளவுமோகம் உண்டாகுமோ அப்படிபோல சிரசின்ஸ்தானமாகிய சுழிமுனையில்எழுந்தருளியுள்ள உன்னைக்கலந்து உன்னேடு ஐக்கியப் பட்டிருப்பதான வாழ்வு எனக்கு எந்தக் காலத்தில் கைகூடுமோ. (

கண்ணுலருவி சுசிந்துமுத்துப்போலுதிரச்
சொன்னபரம்பொருளைத் தொகுத்தறிவதெக்காலம்

(போ - ரை) மனமே, இரண்டு கண்களிலும் வெண்மை பொருந்திய முத்தைப்போல ஆனந்தபாஷ்பமான நீர் சிந்த மேலே வேதங்களால் சொல்லப்பட்டு வராநின்ற மேலான சிவபெருமானை இப்படிப்பட்டவனுகுமென்று ஆராய்ந்தறிவது எக்காலத்திலோ. (எ - று) 60

ஆகமிகவுருக வன்புருகவென்புருகப்
போகவனுபூதி பொருந்துவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, என்னுடைய தேகமானது மிகவும் உருக, அதினால் எலும்பு உருகும்படியான அன்புபெருக சிவபோக வநுபூதியானது என்னைச் சேர்வது எந்தக்காலத்திலோ. (எ-று)

நான் எப்பொழுது சிவாநுபூதிச் செல்வனவேன் என்பது கருத்து. 61

நீரிற்குமிழிபோ னிலையற்றவாழ்வைவிட்டுன்
பேரிற்கருணைவெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்

(போ - ரை) சலத்திற்ருேன்றிய முட்டைபோல் நிலையில்லாததாகிய இந்த உலகவாழ்வை விட்டு சிவபெருமானே, உன்னுடைய திரு நாமஸ்மரணை செய்து அதினால் கிருபா வெள்ளமானது என்னிடத்தில் உருகபெருகக் காண்பது எந்தக்காலத்திலோ. (எ - று) 62

அன்பையுருக்கி யறிவையதன்மேற்புகட்டித்
துன்பவலைப்பாசத் தொடக்கறுப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, என்னுடைய அன்பை உருகச் செய்து அதின்மேல் அறிவைச்சேர்த்து அதினல் துன்பத்தைக் கொடுப்பதாகிய மாயாபந்தத்தின் தொடக்கையறவே நீக்குவது எந்தக்காலத்திலோ. (எ - று)

அந்தக்காலத்தை நான் கிடைக்கப் பெறுவேனுனல் என்னுடைய பாசம் நீங்கிப் புனிதனவேன் என்பது குறிப்பு.

63

கருவின்விழியறிந்து கருத்தைச்செலுத்தாமல்
அருவிவிழிசொரிய அன்புவைப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, எனக்கு நேரிடும் ஜென்மத்தின் குறிப்பையறிந்து அந்தச் சென்மத்தை மறு படியும் எடுக்கும்படியாக அறிவை அதின் வழியே விடாமல் கண்கள் ஆநந்த பாஷ்பஞ்சொரியும்படி உன்னிடத்தில் நான் எந்தக்காலத்தில் அன்பைச் செலுத்துவேனோ.

தெளியத்தெளியத் தெளிந்தசிவானந்தத்தேன்
பொழியப்பொழியமனம் பூண்டிருப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, அறிவு மிகவும் தேர்ச்சி யடையவும் சிவாநந்தம் என்கிற தேனானது மிகவும் பொழியவும் நான் அதினை அநுபவித்து உன்னுடைய திருவடிகளில் மனம் வைத்திருப்பது எந்தக்காலத்தில் கைகூடுமோ? (எ-று.) 65

ஆதாரமூலத் தடியிற்கணபதியைப்
பாதாரவிந்தம் பணிந்திருப்பதெக்காலம்

(போ - ரை.) மனமே! மூலாதாரம் என்னும் இடத்தில் எழுந்தருளியுள்ள விநாயக மூர்த்தியைத் தரிசித்து அவருடைய திருவடித்தாமரைகளில் நமஸ்காரஞ்செய்துகொண்டிருக்கும் காரியம் எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ? தெரியவில்லை. (எ-று) 66

மண்வளைந்தநற்கீற்றில் வளைந்திருந்தவேதாவைக்
கண்வளைந்துபார்த்துள்ளே கண்டிருப்பதெக்காலம்

(போ - ரை) மனமே, அதின்மேல் பிருதிவி யென்னும் இடத்தில் நாற்கோணத்தினுள்ளே எழுந்தருளி யிருக்கும் பிரமதேவனை உள்ளே கண்டுதெரிசித்து மனமகிழ்ந்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ-று) 67

அப்புபிறைனடுவே யமர்ந்திருந்தவிட்டுணுவை
உப்புக்குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவதெக்காலம்

(பொ - ரை) மனமே! அதின்மேல் அப்புவென்னும் இடத்தில் மூன்றும் பிறைபோன்ற சக்கரத்தின்கண் எழுந்தருளியிராநின்ற விஷ்ணுமூர்த்தியைக்கண்டு தரிசிப்பதற்கான காலம் எதுவோ? (எ - று.) 68

மூன்றுவளையமிட்டு முளைத்தெழுந்தகோணத்தில்
தோன்றுமுருத்திரனை தொழுதுநிற்பதெக்காலம்

(பொ - ரை) மூன்று கீற்றுகளாகிய முக்கோண சக்கரமுள்ள அநாகதம் என்னும் இடத்தில் எழுந்தருளியிராநின்ற உருத்திரமூர்த்தியைக் கண்டு தரிசிப்பதற்கான காலம் எதுவோ. (எ - று.)

ஆனால் என்னுடைய ஆசாரியசுவாமிகளின் கிருபையால் அந்தகாலமும் எனக்குக் கைகூடும் என்பது குறிப்பு. 69

வாயுவருகோணமதில் வாழுமகேச்சுரனைத்
தோயும்வகைகேட்கத் தொடங்குவதுமெக்காலம்

(பொ - ரை) மனமே!, விசுத்தி என்னும்வாயு பூதஸ்தானமாகிய அறுகோணவீட்டில் எழுந்தருளியிராநின்ற மகேச்சுரனைத் தரிசித்து அவனுடன் கலக்கும் வழியை ஆராய்ந்து தொடங்குவது எந்தக்காலத்திலோ? (எ-று)70

வட்டவழிக்குள்ளே மருவுஞ்சதாசிவத்தைக்
கிட்டவழிதேடக் கிருபைசெய்வதெக்காலம்

(பொ - ரை) மனமே! வட்டமான கீற்றையுடைய ஆஞ்ஞையென்னும் இடத்தில் எழுந்தருளியிராநின்ற சதாசிவமூர்த்தியைச் சேரும்படியாகச் சமீபவழியை விசாரிக்கும்பொருட்டு சிவபெருமானனவர் நமக்கு எந்தக்காலத்தில் கிருபைசெய்வாரோ. (எ - று.) 71

உச்சிக்கிடைநடுவே யோங்குகுருபதத்தை
நிச்சயித்துக்கொண்டிருந்து நேர்வதினியெக்காலம்

(பொ - ரை) மனமே! சிரசின் மத்தியில் சதானந்தர் கூடிவாழுமிடத்தில் எழுந்தருளி யிருக்கும் ஆசாரிய சுவாமிகளின் திருவடிகளைக் கண்டுதரிசித்து அவ்விடத்திலே எக்காலமும் அமர்ந்திருக்கும்படியான வாழ்வு எனக்கு எந்தக்காலத்தில் வருமோ (எ - று) 72

பாருகிபார்மீதிற் பஞ்சவர்னந்தாளுகி
வேருகிநீமூளைத்த வித்தறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! நீ பிருதிவியாகியும் அந்தப் பிருதிவியிலுண்டான பலவர்ணங்களாயும், அவற்றிலிருந்தும் வேருகியும், அந்தந்த அவசரத்திற்குத்தகுந்த விதமாகத் தரிசனங் கொடுத்து அடியார்களை ஆண்டுகொண்டு வாராநின்ற பெருங்கருணைத்திறத்தை நான் எந்தக்காலத்தில் அறிவேனே? (எ - று.) 73

கட்டறுக்கவொண்ணுக் கருவிகரணுதியெல்லாஞ்
சுட்டருத்துநிட்டையிலே தூங்குவது மெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் ஒன்றைவிட்டொன்றுகப் பிரிக்கக்கூடாத கருவி, கரணம் முதலியவைகளையெல்லாம் அறவே நீக்கி சதா நிஷ்டையிலிருந்து அதினுல் பேரின்பசுகத்தை யநுபவிக்கும்படியான காலம் எதுவோ. (எ - று.)

அந்தக்காலத்தை எனக்குச்சீக்கிரத்தில் கைகூட்டல் வேண்டும் என்பது இரக்கம், 74

கள்ளக்கருத்தையெல்லாம் கட்டோடுவேறறுத்திங்
குள்ளக்கருத்தை யுணர்ந்திருப்பதெக்காலம்

(போ - ரை.) சிவபெருமானே, நான் என்னிடத்தி லுள்ள திருட்டெண்ணங்களை யெல்லாம் அடியோடு வெட் டிக்களைந்து அறிந்துவிட்டு இவ்வுலகத்தின்கண் என்னுள் ளத்திலுள்ள அறிவின்குணத்தை யாராய்ந்து கொண்டி ருப்பது எந்தக் காலத்திலோ (எ - று.) 75

அட்டகாசஞ்செலுத்து மவத்தைச்சடலத்துடனே
பட்டபாடத்தனையும் பகுத்தறிவதெக்காலம்

(போ - ரை) மனமே, நான் பெருமை டம்பம் முத லிய பலவகையான அட்டகாசங்களைச் செலுத்திக்கொண் டிருந்த இந்தத் தேகத்தோடு இதுவரைக்கும் கூடியிருந்து அடைந்த துன்பங்களை ஆராய்ந்து பார்ப்பது எந்தக் காலத்திலோ அறியேன். (எ - று.) 76

அறிவிக்கருவியுட னவத்தைபடும்பாட்டையெல்லாப்
பிரியவுடனிருத்திப் பெலப்படுவதெக்காலம்

(போ - ரை) மனமே! நான் என்னுடைய அறிவு என்று சொல்லப் படுகின்ற ஒரு கருவியோடு கூடியிருந்து அநுபவித்த துன்பங்களை யெல்லாம் வெவ்வேருகப் பிரித்து ஓரிடத்திலே யிருக்கச் செய்து எந்தக்காலத்தில் சிவாநுபவத்தில் பலப்படுவேனோ? (எ - று) 77

பூதம்பொரிகரணம் போந்தவிந்துநாதமுமாய்
பேதம்பலவிதமும் பிறித்தறிவதெக்காலம்

(போ - ரை) மனமே! நான் அச்சிவ பெருமானைத் தடத்த லக்ஷணமாகப் பூதம், பொறி, கரணம், விந்து, நாதம், ஆகிய இவைகளையெல்லாம் இதுவென்று இது வென்று என்று நிராகரித்து அறிந்துய்யும்படியானவழி எந்தக்காலத்தில் கைகூடுமோ. (எ - று.) 78

தோன்றுசைமூன் றுந் தொடர்ந்துவந்து சுற்றுமல்
ஊன்றுசைவேரையடி யூடறுப்பதெக்காலம்

(போ - ரை.) மனமே! எனக்கு இடை இடையே உண்டாகி வந்து என்னை மறைக்கின்ற மூன்று ஆசைகளையும், மீண்டு மீண்டு வந்து தொடராதபடி அந்த ஆசைகளை வேரோடு வெட்டி யெறியத்தக்க செய்கை எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ. (எ - று.) 79

புன்சனனம்போற்றுமுன்னே புரிவட்டப்போகிலினி
யென்சனனமீடேறு மென்றறிவதெக்காலம்

(போ - ரை) இப்பொழுது எடுத்துள்ள இந்தச்செனனத்தில் சிவபெருமானைத் துதிசெய்யாத முன்னரே இந்தத் தேகமானது இறந்து பட்டுவிட்டால் வேறெந்தச் சென்னத்தில் அந்தக்காரியம் ஈடேறப் போகிறது என்று விசாரித்தறியும்படியான அளவு எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ தெரியவில்லை. (எ-று.) 80

நட்டனடுவினின்று நற்றிரோதாயியருள்
கிட்டவழிகாட்டிக் கிருபைசெய்வதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நடுவு நிலைமையாயிருந்து நல்லதிரோதாயியானவள் எனக்கு உன்னுடைய திருவருளை யடையும்படியாகச் சமீப வழியைக் காட்டி அருள் செய்வது எந்தக்காலத்திலோ அறியேன் (எ-று.)

நானேநானென்றிருந்தேன் நடுவினிற் கட்டழகி
தானேவெளிப்படுத்தித் தருவளென்பதெக்காலம்

(போ - ரை.) சிவபெருமானே, நான் நானேபிரமமென்று நினைந்திருந்தேன் அப்படியிருந்த என்னிடத்தில் ஒரு பெண்ணானவள் வெளிப்பட்டு வந்து நீயே பிரம்மமாகமாட்டாய். அப்படிப் பிரமமாவானை நான் காட்டு

கிறேன். நீ பார்ப்பாயாக வென்றுஎனக்கு அருள் செய்வது எந்தக்காலத்திலோ. (எ - று.) 82

அடர்ந்தமனக்காட்டை யஞ்செழுத்தாம்வாளாலே
தொடர்ந்துதொடர்ந்துவெட்டி சுடுவதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னை நெருக்கிச்சூழ்ந்துள்ள மனமென்னும் காட்டை பஞ்சாட்சரம் என்னும் வாளாயுதத்தினுல் பின்வாங்காமல் வெட்டி யெறிந்து (ஞானமென்னும் தீயிட்டுக் கொளுத்திச் சிவமென்னும் பயிரிடுவது) எந்தக்காலத்திலோ. (எ - று) 83

ஐந்துபொறிவழிபோ யலைந்துமிந்தபாழ்மனதை
வெந்துவிழப்பார்த்து விழிப்பதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் ஐம்பொறிகள் போகும் வழியேபோய் அலைந்துதிரிந்தும் இந்தக்கொடிய மனத்தை அறவேயொடுக்கி ஜிவாநந்தத்தில் கண் விழித்திருக்கும் காரியம் எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ.

இனமாண்டுசேர்ந்திருந்தோ ரெல்லாருந்தான்மாண்டு
சினமாண்டுபோகவருள் சேர்ந்திருப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, என்னை இனம் இனமாகச் சேர்ந் திருந்தவர்களெல்லாம் ஒடுங்கி, அவர்கள் ஒடுங்கினமையால் என்னுடைய கோபமும் நீக்கி நான் தனியே யிருக்கும்படி எனக்கு எந்தக் காலத்தில் திருவருள் பலிப்பாயோ (எ - று)

இனமாண்டு சேர்ந்திருந்தோர் என்றது தத்துவங்களை.

85

அமையாமனதமையு மானந்தவீடுகண்டால்
இமையாமநோக்கி யிருப்பதினியெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, எக்காலத்தும் ஒரு வழிப்பட்டிராத என்னுடைய மனமானது சுகத்தைத் தராநின்ற மோக்ஷ வீட்டைக் கண்டால் அதிலிருந்தும் அந்த வீட்டின் இலட்சணத்தை கண்ணிமையாற் பார்த்திருந்தும் வாழ்வு எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ.

கூண்டுவிடுஞ்சீவன்மெள்ளக்கொட்டாவிகொண்டாற்போ
மாண்டுவிடுமுன்னேநான் மாண்டிருப்பதெக்காலம் [ல்

(பொ-ரை) சிவபெருமானே, தேகத்தைவிட்டு நீங்கவிருக்கின்ற உயிரானது ரொம்பவும் மெள்ளக்கொட்டாவி விட்டதுபோல, நான் என்னுடைய தேகத்தை விட்டுப் புறப்பட்டு வெளியே போகு முன்னரே சிவசமாதியிலடைவது எந்தக்காலத்திலோ. (எ - று) 87

ஊனிறைந்தகாய முயிரிறந்து போகுமுன்னம்
நானிறந்துபோகவினி நாள்வருவதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, இந்தத் தேகத்தினுள்ள உயிரானது வெளிப்பட்டுப் போகா முன்னமே நான் சிவானந்தப் போகத்தில் மூழ்கியிறப்பது எந்தக் காலத்திலோ (எ - று.) 88

கெட்டுவிடுமாந்தர் கெர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடுமுன்னென்னைச் சுட்டிருப்பதெக்காலம்

(பொ - ரை) மனமே! வீணே காலங்கழித்துக் கெடுகின்ற உலக மனிதர்கள் மிக்க ஆங்காரவார்த்தைகளைப் பேசிக்கொண்டுவந்து என்னைச் சுடுமுன்னமே நானே என்னைச்சுட்டுக் கொள்ளும்படியான அருள் எனக்கு எந்தக்காலத்தில் வரப்பண்ணுவையோ. (எ - று).) 89

தோலேணிவைத்தேறித் தூரநடந்தெய்க்காமல்
நாலேணிவைத்தேறி நோக்குவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, தோலேணி யாகிய இந்தத்தேகத்தைக் கொண்டு வெகுதூரமான வழிகளெல்லாம் நடந்து அதினல் வாடாமல் கலைகளால் உன்னை உணர்ந்து சதா தரிசித்திருப்பது எந்தக்காலத்திலோ. ()

வாயோடுகண்மூடி மயக்கமுற்றுநில்லாமல்
தாயோடுகண்கூடித் தழுவிநிற்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் வாயையும், கண்களையும்மூடி உலகமாய் கையிற் சிக்கிநில்லாமல் திருவருட்சத்தியோடு கலந்து அவளைச் சதாகூடிச் சுகித்திருக்கும்படி நீ எந்தக்காலத்தில் கிருபை செய்வாயோ. (எ-று)

காசினியெலாநடந்து காலோய்ந்துபோகாமல்
வாசிதனிலேறி வருவதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் இந்தஉலகமெல்லாம் நடந்து அதினல் காலோய்ந்து போகாதபடி வாசிமார்க்கத்தால் மேலேறி உன்னுடைய திருவடிகளில்எந்தக்காலத்தில் வந்து சேருவேனே? (எ - று) 92

ஒலிபடருங்குண்டலியை யுன்னியுணர்வாலெழுப்பிச்
சுழிமுனையின்றுள்திறந்து தாண்டுவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் நாதமாத்திரையாய் விளங்காநின்ற குண்டலிசத்தியை நினைத்து அச்சத்தியை என்னுடைய சுயஅறிவால் எழும்பி அவளால் சுழிமுனையிற் சென்று அங்குள்ள கதவைத் திறந்து தேஜோமயனுகிய உன்னை அடைவது எந்தக்காலத்திலோ. (எ-று)

இடைபிங்கலைநடுவே யியங்குஞ்சுழிமுனையில்
தடையறவேநின்று சலிப்பருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் இடைகலை, பிங் கலைகளுக்கு நடுவே நின்று விளங்கும் சுழிமுனையினூடு போய் என்னுடைய மயக்கத்தை அறுப்பது எந்தக்காலத் திலோ. (எ - று) 94

மூலநெருப்பைவிட்டு முட்டிநிலாமண்டபத்தில்
பாலையிறங்கியிண்டு பசியொழிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் மூலாதாரத்தி லுள்ள நெருப்பைக்கொண்டு சந்திரமண்டலம் வரைக்கும் போய் அந்த மண்டலத்திலிருந்தும் இறங்கும் அமிர்தத் தைக் குடித்து பசியை நீக்கிக்கொள்வது எந்தக்காலத் திலோ. (எ - று) 95

ஆகவெளிக்குள்ளே யடங்காய்புரவிசொல்ல
ஏகவெளி லிருப்பதினியெக்காலம்

(பொ-ரை) சிவபெருமானே, தேகத்தின்கண்ணுள்ள அகத்தாகாயத்தில் வாசிக்குதிரையானது போகும்படி நான் என்றும் ஒரே தன்மையதான சிதாகாயத்தில் கூடி யிருப்பது எந்தக்காலத்திலோ? (எ - று) 96

பஞ்சரித்துப்பேசும் பலகலைகெட்டாப்பொருளில்
சஞ்சரித்துவாழ்ந்து தவம்பெருவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, பலவகையான நியா யத்தோடு பேசாநின்ற பலசாஸ்திரங்களுக்கும் எட்டாத உன்னுடைய சர்வவியாபகத்தில் வாசஞ்செய்து வாழ்வதற் கான தவத்தைச் செய்யப்பெறுவது எந்தக்காலத்திலோ.

மலமுஞ்சலமுமற்று மாயையற்றுமானமற்று
நலமுங்குலமுமற்று நானிருப்பதெக்காலம்

(போ - ரை.) சிவபெருமானே, மலம், சலம், மாயை, மானம், நன்மை, ஜாதி இவைகளை யறவே யொழித்து சிவாநந்தப்பேற்றில் எக்காலத்தில் அமர்ந்திருப்பேனோ?()

ஓடாமலோடி யுலகைவலம்வந்துசுற்றித்
தேடாமலென்னிடமாய்த் தெரிசிப்பதெக்காலம்

(போ-ரை) சிவபெருமானே, நான் இந்த உலகத்தை வலமாகப் பலமுறை சுற்றி உன்னைத் தேடாதபடி என்னிடத்திலேயே தெரிசிக்கும்படியான வாழ்வு எனக்கு எந்தக்காலத்தில் வருமோ. (எ - று.) 99

அஞ்ஞானம்விட்டே யருண்ஞானத்தொல்லைதொட்டு
மெய்ஞ்ஞானவீடுபெற்று வெளிப்படுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! நான் என்னுடைய அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானததைப்பெற்று மோட்சசாதனத்தை யடைந்து வெளிப் படுவது எந்தக்காலத்திலோ, (எ - று.) 100

வெல்லுமட்டும்பார்த்து வெகுளியெலாம் விட்டகன்று
செல்லுமட்டுஞ்சிந்தை செலுத்துவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, என்னுடைய கோபங்களை நான் வெற்றிக்கொள்ளும் வரைக்கும் பார்த்திருந்து அதை வெற்றிகொண்டு ஒழித்து என்மனத்தை உன்னுடைய திருவடிகளில் செல்லுகின்றவரைக்கும் செலுத்திச் சுகமடைந்திருப்பது எந்தக்காலத்திலோ?

மேலாம்பதந்தேடி மெய்ப்பொருளையுள்ளிருத்தி
நாலாம்பதந்தேடி நான்பெறுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் மேலாகிய மோக்ஷபதவியை விரும்பி உண்மைப்பொருளான உன்னை மனத்திலிருக்கச் செய்து நான்காவது பதமாகிய ஞானத்தை எந்தக்காலத்தில் அடைவேனே 102

எண்ணுததூரமெல்லா மெண்ணியெண்ணிப்பாராமல்
கண்ணுடிக்குள்ளொளிபோற் கண்டறிவதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நான் உன்னைக்காணுப்படி நினைப்பதற்கருமையான மார்க்கங்களை யெல்லாம் நினைத்து நினைத்துப் பாராமல், கண்ணுடிக்குள்ளே ஒளியைக்காணுமாறுபோல், உன்னை எனக்குள்ளே கண்டுணர்வது எந்தக்காலத்திலோ (எ-று) 103

என்னையறிந்துகொண்டே னெங்கோமானேடிருக்கும்
தன்மையறிந்து சமைத்திருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னுடைய தன்மையை இப்படிப்பட்டதாதுமென்று உணர்ந்துகொண்டேன். பின்னர் எம்பெருமானுகிய உன்னேடு கலந்திருக்கும் தன்மையை உணர்ந்து அங்ஙனமே ஐக்கியமாயிருப்பது எந்தக்காலத்திலோ. (எ-று)

நான் தன்னையறிந்தேன் ஆனல் தலைவனையறிந்து இருக்க, முயல்கின்றேன் என்பது குறிப்பு தன்னையறிவது பசுவிலக்கணம் தலைவனையறிவது பதியிலக்கணம்.

ஆறுதாரங்கடந்த வானந்தப்பேரொளியை
பேருகக்கண்டுநான் பெற்றிருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! ஆறு ஆதாரங்களையும் கடந்து விளங்காநின்ற பரம்பொருளாகிய உன்னை

நான் அடைதற்குரிய பேருகக் கொண்டு உன்னில் கலந்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ - று) 105

ஆணவமாயத்தா லழிந்துடலம்போகாமுன்
காணிதலாலின்பமற்றுக் கண்டறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னுடைய அகங்காரமாகிய மாய்கையால் தேகம் இறந்துபடா முன்னரே சர்வ பரிபூரணனுகிய இவனைக் கண்டுணர்வது எந்தக்காலத்திலோ? (எ - று.) 106

மும்மலமுஞ்சேர்ந்து மூளத்தெழுந்தகாயமிதை
நிர்மலமாய்க்கண்டுவினை நீங்கிருப்பதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நான் ஆணவம், கன்மம், மாயை, என்னும் மூன்று மலங்களும் ஒன்றுகச் சேர்ந்ததினல் உண்டான இக்காயத்தைப் பரிசுத்தமாக்கி என்னுடைய தீவினைகளை எந்தக் காலத்தில் நீக்கிக்கொள்ளுவேனே. (எ - று.) 107

முன்னைவினைகெடவே மூன்றுவகைகாட்சியினல்
உன்னைவெளிப்படுத்தி யுருவதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, என்னுடைய பூர்வவினையானது கெட அதினின்றும் நீங்கி திரிவிதமான காட்சியினல் உன்னைநேராகக்கண்டு உன்னுடன் கலந்திருப்பது இனி எந்தக்காலத்திலோ? (எ - று.) 108

கண்ணிணெளிபாய்ந்ததுவுங் கருத்தறிந்துகொண்டதுவும்
விண்ணிலொளிகண்டதுவும் வெளிப்படுவதெக்காலம்

(பொ-ரை) சிவபெருமானே, நான் கண்ணினிடமாக ஒளியானது பரவியிருப்பதையும், என்னுடைய கருத்து பலவகையான விஷயங்களையும் தெரிந்துகொண்டதையும்,

ஆகாயத்தினிடமாகத் தேஜோமயத்தைக் கண்டதையும், தெரிந்துகொள்வது எந்தக்காலத்திலோ. (எ - று)

அவைகளையெல்லாம் நான் அறிந்துகொள்வேனானால் ஞானமுதிர்ச்சியாயிற்றென்பது எனக்கு விளங்கும் என்ற படி. 109

கனவுகண்டாற்போலெனக்குக் காட்டிமறைந்தேயிருந்த
நினைவைப்பரவெளிமேல் நிறுத்துவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் கனவுகண்டு அதை உடனே மறந்துவிடுந் தன்மைபோல எனக்கு என் எண்ணமானது பலவகைப்பட்ட பொருள்களையும் காட்டிக் காட்டி மறைத்துக்கொண்டே யிருக்கின்றது. அப்படிப்பட்ட எண்ணத்தை உன்னுடைய திருவடிகளில் வைப்பது எந்தக்காலத்திலோ. (எ - று) 110

ஆரென்றுகேட்டதுவு மறிவுவந்துகண்டதுவும்
பாரென்றுசொன்னதுவும் பகுத்தறிவதெக்காலம்.

(போ - ரை) சிவபெருமானே, என்னுடைய குருசுவாமி யானவர் எழுந்தருளிவந்து என்னை நீயார் என்று கேட்டதையும், அந்தக்கேள்விக்கு அறிவே வெளிப்பட்டு வந்து நான்தான், என்றுசொன்னதையும், இதைப்பார்த்துக்கொள்வாயாக என்று உபதேசித்ததையும் நான் விசாரித்தறிந்துகொள்வது எந்தக்காலத்திலோ? (எ - று) 111

நினைக்குநினைவுதொறும் நிறைந்தபரிபூரணத்தை
முனைக்குமேற்கண்டுகண்ணில் முளைத்தெழுப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் எண்ணும் எண்ணங்களிலெல்லாம் வியாபித்திருக்கின்ற பரிபூரணனாகிய உன்னைச் சுழிமுனையென்னும் இடத்திற்கு மேற்பட்ட

ஞானக்கண்ணால் காணப்பெறுவது இனி எந்தக் காலத்திலோ? (எ - று) 112

முப்பாழும்பாழாய் முதற்பாழுஞ்சூனியமாய்
அப்பாழும்பாழா யன்புசெய்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, மூன்று பாழ்களும் பாழாகவும், அதற்குமுற்பட்டிருந்த முதற்பாழும்வெறும் பாழாகவும், அந்த வெறும்பாழும் பாழாகவும், அதன் பின்னிருந்து நான் உன்னிடத்தில் அன்பைச்செலுத்தும் படியான காலம் எதுவோ? (எ-று)

சீரென்றெழுந்து தெளிந்து நின்றவான்பொருளை
நீரென்றுகண்டு நிலைபெறுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, சீர் என்னும் ஒரு நாதத்துடன் வெளிப்பட்டுவந்த மேலான பொருளாகிய உன்னை மங்கள குணத்தரென்று தெரிந்து நானும் உன்னிடத்திலேயே நிலைத்திருக்கும்படியான வாழ்வு எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ? (எ - று) 114

வவ்வெழுத்துமவ்வெழுத்தும் வாளாகுஞ்சிவ்வெழுத்தும்
அவ்வெழுத்தினுள்ளே யடங்கிநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, வகாரம் என்னும் பீஜாட்சரமும் மகாரமென்னும் பீஜாட்சரமும் அஞ்ஞானத்தைக் களைதற்குரிய வாளாகும். ஆகையால் சிகாரமென்னும் பீஜாட்சரமும் முன்சொன்ன அந்த இரண்டு எழுத்துக்களின் முன்னடங்கிநின்றால் எந்தக்குணமாமோ அந்தக்குணத்தை நான் எந்தக்காலத்தில் பெறுவேனோ?

வகாரமும், மகாரமும், சிகாரமும் சேருங்குணம் என்பது சிவம் என்னும்குணம். அந்தக்குணத்தை நான் எப்பொழுது பெறுவேன் என்பார் இங்ஙனம் கூறினர். 115

எழுத்தெல்லா மாண்டிறந்தே யேகமாய்நின்றநிலே
அழுத்தமாச்சிந்தைவைத் தன்புகொள்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் எழுத்துக்களெல்லாம் தாங்கள் நாதத்தொனியைத் தாராமல் ஒடுங்கிப்போகின்றதனிமையான இடத்திலே என்மனத்தை வைத்து அன்பைச் செலுத்துவது எந்தக்காலத்திலோ?

அருவாகியுருவாகி ஆதியந்தமாகிநின்ற
குருவாகிவந்தெனையாட் கொண்டருள்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நீயே அரூபமாகவும், ரூபமாகவும், ஆதியாகவும், அந்தமாகவுமுள்ள ஆசாரிய சுவாமியாய் எழுந்தருளி வந்து என்னை அடிமைகொள்வது எந்தக்காலத்திலோ. (எ - று) 117

நானென்றறிந்தவனை நானறியாக்காலமெல்லாம்
தானென்றுநீயிருந்து தனுவரிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, எல்லா விடத்திலும் நான் நான் என்று முன்னிட்டுவந்து அவைகளையெல்லாம் அறிந்த உன்னை நான் தெரிந்து கொள்ளாத காலமெல்லாம் போக இனியேனும் நீ முன்னின்று சர்வவிஷயங்களிலும் வியாபிக்கின்றாய் என்பதை எந்தக்காலத்தில் அறிந்து கொள்வேனோ? (எ - று) 118

என்மயமாய்க்கண்டதெல்லா எண்ணிஎண்ணிபார்த்தபின்
தன்மயமாய்க்கொண்டதிலே சார்ந்துநிற்பதெக்காலம் [பு

(பொ - ரை) சிவபெருமானே? நான் பாசஞானத்தால் என்மயமாகவே கண்ட எல்லாப்பொருள்களையும் அறவே விசாரித்துப் பார்த்தபோது எல்லாம் உன்மயமாயின ஆகையால் நானும் உன்மயமாகவே கலந்திருக்

கும்படி எனக்கு எந்தக்காலத்தில் உன்னுடைய திருவருள் கிடைக்குமோ? (எ-று) 119

ஒளியிலொளியா முருப்பிறந்தவாறதுபோல்
வெளியில்வெளியான விதமறிவதெக்காம்

(பொ-ரை) சிவபெருமானே சோதியினிடத்தில் சோதியான உருவொன்று காணப்பட்டதுபோல் சிதாகாயமாகிய வெளியிலே வேறோர் வெளியும் கலந்திருந்த தன்மையை நான் எந்தக் காலத்தில் அறிவேனோ? (எ-று)

ஒளியிட்டமெய்ப்பொருளை யுள்வழியிலேயடைந்து
வெளியிட்டுசாத்திவைத்து வீடுருவதெக்காலம்

(போ-ரை.) சிவபெருமானே, தேஜோமயனான உன்னை அகத்தின்கண் சேர்ந்து சிதாகாயவழியாக எழுந்தருளப்பண்ணி நமஸ்காரம் செய்து அதினால் நான் எந்தக்காலத்தில் மோக்ஷவீட்டை அடைவேனோ (எ-று) 121

காந்தம்வலித்திரும்பைக் கரத்திழுத்துக்கொண்டதுபோல்
பாய்ந்துபிடித்திழுத்துன் பதத்தில்வைப்பதெக்காலம்

(போ-ரை.) சிவபெருமானே, காந்தமென்னும் ஒரு லோகமானது இரும்பைப் பிடித்திழுத்துத் தன்னோடு சேர்த்துக் கொள்வது போல உன்னுடைய திருவடிகளில் என்னுடைய மனத்தைப் பிடித்திழுத்து வைத்து உன்திருவருட் பேற்றை அடைவது எந்தக்காலத்திலோ? (எ-று)

பித்தாயங்கொண்டு பிரணவத்தையூட்டுருத்துச்
செத்தாரைப்போல திரிவதினியெக்காலம்

(போ-ரை) சிவபெருமானே, பிரணவமென்னும் பீஜாட்சரத்தை கொண்டு இறந்து பட்டவர்களைப்போல் பித்தங்கொண்டு திரியும் வாழ்வு எந்தக்காலத்தில் கைகூடுமோ. (எ-று) 123

ஒழிந்தகருத்தினைவைத் துள்ளெலும்புவெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம்போலிருந்து காண்பனியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் சற்றும் ஓரிடத்தில் நிலைபெறாத எண்ணத்தைக்கொண்டு மனமுருகி இறந்தபிணம் போலிருந்து உன்னுடைய திருவடிகளை எந்தக் காலத்தில் தரிசிப்பேனோ, (எ-று) 124

ஆதிகபிலர்சொன்ன வாகமத்தின்சொற்படியே
சாதிவகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, பூர்வத்தில் கபிலர் சொல்லியருளிய உண்மை நூலின்படியே சாதிபேத முதலியவற்றை நீக்கி எல்லா மொன்றாகக் கொண்டு வாசஞ் செய்யும் நெறி எனக்கு எந்தக்காலத்தில் வரப்பண்ணுவையோ (எ-று.) 125

சூதுங்களவுந் தொடராவினையஞ்சுட்டக்காற்
றாதுந்துருத்தியைப்போட் டுனையடைவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, சூது, களவு, இருவினைகள் இவைகளை அறவே சுட்டொழித்து அவைகளின் காரியமாகிய தேகத்தையுந்தள்ளிப்போட்டு உன்னுடைய திருவடிகளை எந்தக்காலத்தில் அடைவேனோ (எ - று)

ஆசைவலைபாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம்

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நான் ஆசையாகிய பாசவலையி லகப்பட்டு வீணே சாகாமல் நாதத்தைத்தாராநின்ற அழகிய தேஜோமயத்தில் கலந்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ-று.) 127

கல்லாய்மரமாய் கயலாய்ப்பறவைகளாய்ப்
புல்லாய்ப்பிறந்தஜென்மம் போதுமென்பதெக்காலம்

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, நான் இது வரைக்கும் எடுத்தெடுத்து இளைத்த கல்-மரம்-கயல்-பட்சிகள்-புல்-ஆகிய இந்தச் சென்மங்களை யெல்லாம்போதுமானவை யென்றுசொல்லி அவைகளை நீச்கிக்கொள்வது எந்தக்காலத்திலோ. (எ - று) 128

தக்கும்வகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவமாயுன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்

(போ - ரை) எங்கும் நிறைந்த வஸ்துவே, எனக்கென்று ஒருபொருளையும் மனத்தில் வையாமல் திருவருட் பக்குவத்தைத் துணையாகக்கொண்டு உன்னுடைய கருணையைத் தரிசித்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ - று)129

தூரோடிசைந்து சுழன்றதத்துவத்தை
வேரோடிசைந்து விளங்குவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, மிகவும் குற்றத்துடன் விளங்கிக்காரியங்கள் செய்து கொண்டிருந்த தத்துவங்களை வேரோடுகளைந்து பரிசுத்தனாய் காணப்படுவது எந்தக்காலத்திலோ? (எ - று.) 130

பாதநடுமாறிப் பயந்தெழுந்தசித்திரத்தை
காகநடுமூலத் திருத்துவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, இப்படியும், அப்படியும், பலவிதங்களாக மாற்றி வருந்தாமல் அனுகதமென்னும் நடுப்பக்கத்திலிருந்து அட்சரத்தைமாற்றி அதினால் அங்கு உண்டான சித்திரமாகிய சோதியைத் தனிமையான நடுமூலத்தில் சேர்த்துவைத்து உன்னுடைய திருவருளைப்பெறுவது எந்தக்காலத்திலோ. (எ - று.) 131

ஓரின்பங்காட்டு முயர்ஞ்ஞானவீதிசென்று
பேரின்பவீடுகண்டு பெற்றிருப்பதெக்காலம்

(பொ-ரை) எங்கும்நிறைந்தவஸ்துவே, நான் எண்ணுதற்கரிய ஒரு சுகத்தைத்தாராநின்ற ஞானம் என்னும் தெருவழியாகப்போய் அங்கே பேரின்பமாகிய மோக்ஷத்தைப் பார்த்து அதைப்பெற்று அதினிடத்தில் குடியிருப்பது எந்தக்காலத்திலோ. (எ-று.) 132

காரணமாய்வந்தென் கருத்தினுரைத்ததெல்லாம்
பூரணமாகக்கண்டு புகழ்ந்திருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நீயே காரணகுருவாகத் திருமேனி தாங்கி எழுந்தருளிவந்து எனக்குத் திருவாய்மலர்ந்தருளிய விஷயங்களை யெல்லாம், முழுமையும் ஆராய்ந்தறிந்து சிறப்பித்திருப்பது எந்தக் காலத்திலோ.

ஆயுங்கலைகளெல்லா மாராய்ந்துபார்த்ததற்பின்
நீயென்றுநில்லா நிசங்காண்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, உன்னை ஆராய்ந்து பார்க்கின்ற சாஸ்திரங்களை யெல்லாம் நான் ஆராய்ந்து பார்த்ததற்பின்னர் நீயென்று ஒருபொருள் முன்னிலையாக வந்துநில்லாத உண்மையை நான் எந்தக்காலத்தில் பார்ப்பேனோ (எ - று.)

முன்னர் கலைஞானமும், பின்னர் சிவஞானமுமாகையால் ஆயுங்கலைகளெல்லா மாராய்ந்து பார்த்ததற்பின், நீயென்று நில்லாநிசங்காண்பது என்றார்.

குறியாகக்கொண்டு குலமளித்தநாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, என்னை ஒருஇலக்காக வைத்து எனக்குச் சிவமென்னும் குலத்தைப் பாலித்தரு

ளிய என்னுடைய தலைவனாகிய உன்னை என்றும் பிரியாத படி கலந்து என்னுடைய ஜென்மத்தை நீக்கிக்கொள்வது எந்தக்காலத்திலோ? (எ - று). 135

மத்தடுத்துநின்று மருளாடுவார்போலே
பித்தடுத்துநின்னருளைப் பெற்றிருப்பதெக்காலம்

(போ - ரை.) சிவபெருமானே, மயக்கத்தைப்பெற்று மருளாட்டமாடுவதுபோல நான் சிவப்பித்தங்கொண்டு உன்னுடைய திருவருளைப்பெற்று சுகித்திருப்பது எந்தக் காலத்திலோ. (எ - று) 136

சாவாமற்செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேவாமல்வெந்திருக்க வேண்டுவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் சாவாமற் செத்திருக்கவும் நல்ல ஞானாசிரியனுடைய திருவடிகளின் கீழே யிருந்து வேகாமல் வெந்திருக்கவும் எந்தக் காலத்தில் உன்னை வேண்டுவேனோ? (எ - று.)

சாவாமற்சாவதும் வேகாமல் வேகுவதும் மௌன நிலையென்றறிக.

என்னையறியாம லிருந்தாட்டுஞ்சூத்திரநின்
தன்னையறிந்து தவம்பெறுவதெக்காலம்

(போ - ரை.) சிவபெருமானே, நான் என்னையறியாத படி எனக்குள்ளேயிருந்து என்னை ஆட்டுகின்ற சூத்திர தாரியாகிய உன்னுடைய சுபாவகுணத்தை உள்ளபடியே யுணர்ந்து உன்னைநோக்கி எந்தக்காலத்தில் தவஞ் செய்வேனோ (எ - று) 138

உள்ளமறியா தொளித்திருந்தநாயகனை
கள்ளமனந்தெளிந்து காண்பதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, என்னுடைய மனத்திற்குத் தெரியாதவண்ணமே எனக்குள் ஒளித்துக்கொண்டிருந்த தலைவனாகிய உன்னை என் வஞ்சக மனத்தாலறிந்து தரிசிக்குங்காலம் எதுவோ. (எ - று) 13

வாசித்துங்காணுமல் வாய்விட்டும்பேசாமல்
பூசித்துந்தோன்றாப் பொருள்காண்பதெக்காலம்

(பொ-ரை) சிவபெருமானே, நான் வாசிமார்க்கத்திற்பழகி இரேசக, பூரக, கும்பகங்களைச் செய்தும் காணுமலும், வாயைத்திறந்து பேசாமல் பூசைசெய்ததினுல் வெளிப்படாமலு மிருக்கின்ற உன்னை எந்தக்காலத்தில் எந்தவழியாகக்காண்பேனே. (எ - று)

இத்தனை மார்க்கங்களாலும் காணப்படாத உன்னை இனி எந்தக் காலத்நில் காணப் பெறுவேன் என்பது குறிப்பு. 140

பன்னிரண்டுகாற்புரவி பாய்ந்துசில்லடங்கட்டாமல்
பன்னிரண்டுசங்கிலிக்குட் பிணைப்பதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, பன்னிரண்டங்குலம் வெளிப்பட்டு கெட்டுப்போகின்ற வாசியை அப்படி வெளிப்படுத்தாமல் உள்ளடக்கி பின் இரண்டு சங்கிலிகளாகிய இடைகலை, பிங்கலையாற் கட்டிச் சேர்ப்பது எந்தக் காலத்திலோ (எ - று)

இது பிராணுயாமத்தின் விஷயத்தைக் கூறுகின்றது.

நாட்டுக்காலிரண்டும்விட்டு நடுவுக்காலூடேபோய்
ஆட்டுக்காலிரண்டினுள்ளே யமர்ந்திருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, இரண்டு கால்களாகிய இரேசகபூரகங்களை யொழித்து நடுவே ஒருகாலாகிய கும்

பகத்திற் போய் அங்கே சுழிமுனையின்கண் உன்னுடைய நடனஞ் செய்கின்ற இரண்டு திருவடிகளில் அமர்ந்திருக்கும் வாழ்வை எனக்கு எந்தக்காலத்தில் திருவருள் செய்வாயோ (எ - று.) 142

பாற்பசுவையோட்டி பதியில்வந்துசீராட்டிக்
காற்பசுவையோட்டியதிற் கட்டிவைப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் பாசத்தாற் கட்டியிருக்கும் பசுஞானத்தை யொழித்து பதிஞானத்தை யடைந்து அங்கே வாசியென்கிற ஒரு பசுவினையோட்டி முன்சொன்ன ஞானத்தை எந்தக்காலத்தில் நிறுத்திவைப்பேனோ? தெரியவில்லை. (எ - று) 143

பலவிடத்தேமனதைப் பாயவிட்டும்பாராமல்
நிலவரையினூடேபோய் நேர்ப்படுவதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் என்னுடைய மனத்தைப்பல விடத்திலும் செல்லவிடாமல் பிருதிவியின் மார்க்கமாகச் சென்று யோகசாதனஞ் செய்து உன்னை எந்தக் காலத்தில் அடைவேனோ? அதைநீயே எனக்குத் தெரிவிக்கவேண்டும். (எ - று) 144

காமக்கடல்கலந்து கரையேறிப்போவதற்கே
ஓமக்கனலைவளர்த்தி யுள்ளிருப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் எனக்கிருக்கும் காமக்கடலைக் கடந்து சிவமென்னும் கரையேறிப் போவதற்கு ஓமக்கனலை உள்ளேயே வளர்த்தி உன்னுடைய திருவடிகளிலிருக்கும் வாழ்வு எந்தக்காலத்தில் கைகூடுமோ.

உதயச்சுடர்மூன்று முள்வீட்டிலேகொளுத்தி
இதயத்திருநடன மினிக்காண்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, உதயமாகின்ற ஆசுவனீயம், தக்ஷிணாக்கினியம், காருகபத்தியம், என்னும் மூன்று நெருப்புக்களையும் உள்வீட்டிலேயே வளர்த்திச் சிதாகாய னிடத்தில் நீ நடிக்கின்ற நடனத்தை நான் எந்தக்காலத்தில் காண்பேனோ (எ - று). 146

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறிபேகடந்து
நாதாந்தமூல நடுவிருப்பதெக்காலம்

(பொ - ரை) எங்கும் நிறைந்தவஸ்துவே, நான் வேதாந்தங்களையெல்லாம் நிராகரித்து அவைகளைத்தாண்டிவந்து நாதத்தின் அந்தரத்தில் விளங்காநின்ற மூலப்பொருளில் கலந்திருக்கும்படி திருவருளை யடைவது எந்தக்காலத்திலோ. (எ - று) 147

பட்டமற்றுக்காற்றிற் பறந்தாடுஞ்சூத்திரம்போல்
விட்டுவெளியாக விசுவரிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, காற்றின் மூலமாக ஆகாயத்தில் பறக்கும் காற்றாடியைப்போல எல்லாவற்றையும் விட்டு வெளிப்பட்டு உன்னை நாடித்திரியும் சன்னியாசம் எனக்கு எந்தக்காலத்தில் கொடுத்தருளுவாயோ. ()

அட்டாங்கயோகமதற் கப்பாலுக்கப்பாலாய்
கிட்டாப்பொருள தனைக் கிட்டுவதுமெக்காலம்

(பொ.-ரை) சிவபெருமானே, எட்டுவகையான யோகமார்க்கங்களுக்கும் அதீதப்பட்டு அன்பில்லார்களால் அறியப்படாத பொருளாகிய உன்னைநான் எந்தக்காலத்தில் அடையப்பெறுவேனோ. (எ - று) 149

ஒட்டாமலொட்டிநிற்கு முடலுமுயிரும்பிரித்தே
எட்டாப்பழம்பதிக்கிங் கேணிவைப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, பற்றில்லாதபடி பற்றியிருக்கின்ற தேகத்தையும், தேகியையும் வேறுவேருகப் பிரித்து எட்டாதபழமாகிய உன்னிடத்தில் ஏறிவருவதற்காக ஞானம் என்னும் ஏணியை நான் எந்தக்காலத்தில் வைப்பேனே? (எ - று) 150

பாசத்தைநீக்கிப் பசுவைப்பதியில்விட்டு
நேசத்தினுள்ளே நினைந்திருப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் என்னுடைய பாசபந்தங்களை அறவேயொழித்துப் பசுவாகிய உன்னைப் பதியாகிய உன்னிடத்தி லிருக்கச்செய்து மனத்தின் கண் உன் திருவடிகளில் வாஞ்சைவைத் திருப்பது எந்தக்காலத்திலோ. (எ - று) 151

ஆசாரநேய வனுட்டானமும்மறந்து
பேசாமெஞ்ஞானநிலைப் பெற்றிருப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமான, நான் ஆசாரம், விருப்பம், அனுட்டானம் இவைகளைநீக்கி எந்தக் காலத்தும் பேசாத மௌனமாகிய மெய்ஞ்ஞானநிலையை எந்தக்காலத்தில் அடைந்திருப்பேனே. (எ - று.) 152

பல்லாயிரங்கோடிப் பகிரண்டமும்படைப்பே
அல்லாதுவேறிலையென் றறிவதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் பல்லாயிரங் கோடிக்கணக்கினளவாகிய பகிரண்டங்களெல்லாம் ஒருவனால் சிருஷ்டிக்கப் பட்டனவே யல்லாமல் வேறுவிதமாய் உண்டானவை யல்லவென்று எந்தக் காலத்தில் அறிந்து கொள்வேனே? (எ-று) 153

நான் அதை அறிந்து கொள்வேனானால் என்றும் நித்திய மூர்த்தியாகிய உன்னைக்கணநேரமும் விடமாட்டேன் என்பது குறிப்பு. 153

ஆதிமுதலாகிநின்ற அரியென்றவட்சரத்தை
ஓதியறிந்துள்ளே யுணர்வதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, எல்லாவற்றிற்கும் முதன்மையாய் நின்று விளங்கும் அரியென்று சொல்லும் எழுத்தைத் துதித்து அதின் பொருளை யுணர்ந்து மானத்தின்கண் சிந்தித்திருப்பது எந்தக்காலத்திலோ. (எ-று)

சாத்திரத்தைச்சுட்டிச் சதுர்மறையைப்பொய்யாக்கிச்
சூத்திரத்தைக்கண்டு துயரறுப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் சாத்திரத்தை நான்கு வேதங்களையும், பார்த்துப் பார்த்து அவைகளைப் பொய்ப்படுத்தி அவைகளின் சூத்திர தாரியாகிய உன்னைக்கண்டு என்னுடைய துன்பத்தை நீக்கிக் கொள்வது எந்தக்காலத்திலோ. (எ - று) 155

அல்லும்பகலுமென்ற னறிவையறிவாலறிந்து
சொல்லுமுறைமலர்ந்து தூங்குவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் இரவும், பகலுமாக என்னுடைய அறிவை அந்த அறிவினாலே அறிந்து சொல்லும், சொல்லின் பொருளும் மறந்து சுகாநந்தத் தூக்கத்தில் எந்தக்காலத்தில் அமர்வேனோ. (எ - று) 156

இறங்குஞ்சராசரத்தி லெள்ளுமெண்ணெயும்போல்
முயங்குமந்தவேத முடிவறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் வாசஞ் செய்கின்ற சரம், அசரம் என்னும் இரண்டனுள்ளும் எள்ளி

எண்ணெணைப்போலக் கலந்து விளையாடுகின்ற வேதமுடி வில்நடிக்கின்றவனாகிய உன்னை எந்தக்காலத்தில் உணர்ந்து கொள்வேனோ. (எ - று.)

ஊனாகிவூனி லுயிராகியெவ்வுலகுந்
தானாகிநின்ற தற்பரமறிவதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே! சரீர மாகவும், அதி னுள்ளிருக்கின்ற சரீரியாகவும், எந்தவுலகமும் தானேயா கவும் நீ விளையாடுகின்றதை எந்தக்காலத்தில் நான் ஆரா ய்ந்தறிந்து கொள்வேனோ. (எ -று) 158

என்னைவிட்டுநீங்காம லென்னிடத்துநீயிருக்க
உன்னைவிட்டுநீங்கா தொருப்படுவதெக்காலம்

(போ-ரை) சிவபெருமானே! நீ என்னைவிட்டு நீங்கா திருக்கவும்; நான் உன்னை விட்டு நீங்காதொன்றுபட்டும் இருப்பது எந்தக்காலத்திலோ. (எ - று)

அந்தவாழ்வு எனக்குக் கிடைக்குமானல் பெரிய சிவப்பேற்றை அடைந்தவனானேன் என்பது குறிப்பு, 156

இன்னதென்றுசொல்லவொண்ணா
வெல்லையற்றவான்பொருளைச்
சொன்னதென்றுநானறிந்து
சொல்வதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, இப்படிப் பட்ட தென்று சொல்லுதற்குக்கூடாத அளவுசொல்லப்படாத பெரும் பொருளாகிய உன்னை ஆசாரிய மூர்த்தியால் உப தேசிக்கப்பட்ட பொருளா மென்று அறிந்து சொல்வது இனி எந்தக்காலத்திலோ. (எ-று) 160

மனதையொருவில்லாக்கி வான்பொறியைநாணாக்கி
எனதறிவையம்பாக்கி யெய்வதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னுடைய மனத்தை ஒரு வில்லாக்கியும், பெரிய ஐம்பொறிகளையும் நாணாக்கியும், என்னுடைய அறிவை அம்பாக்கியும் அஞ்ஞான மென்னும் பகைவன் மேல் நான் எந்தக்காலத்தில் பிரயோகிப்பேனோ (எ - று) 191

என்னையிறக்கவெய்தே யென்பதியையீ டழித்த
உன்னைவெளியில்வைத்தே யொளிந்துநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! நான் என்னை அடங்கும்படி செய்து என்னுடைய இடத்தைக்கெடுத்த உன்னையும் அவ்விடத்தினின்றும் வெளிப்படுத்தி நான் ஒளித்திருப்பது எந்தக்காலத்திலோ? (எ - று) 162

கடத்துகின்றதோணிதனைக் கழையள்குத்திவிட்டாற்போ
நடத்துகின்றசித்ரேத்தை நானறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! மீகாமனால் நடத்தப்படுகின்ற தோணியை மூங்கில்கள் எறிந்து விட்டபோலப் பகிரங்கமாக எல்லாவற்றையும் நடத்துகின்ற விநோதத்தின் சிறப்பை நான் எந்தக்காலத்தில் உணர்ந்து கொள்வேனோ? (எ - று) 163

நின்றநிலைபேராம நினைவிலொன்றுசாராமல்
சென்றநிலைமுத்தியென்று சேர்ந்தறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! நானிருக்கும் நிலையினின்றும் பேராமலும், மனத்தில் ஒருபொருளையும் நினையாமலும், மேலேறிப்போன உண்மை நிலையே மோக்ஷமாகு மென்று நினைத்து அவ்விடத்திற்போய் அதினுண்மையை நான் எந்தக் காலத்தில் அறிவேனோ. (எ-று)164

பொன்னும்வெள்ளியும்பூண் பொற்பதத்தையுள்ளமைத்து
மின்னுமொளிவெளியே விட்டடைப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! பொன்னையும், வெள்ளியையும் தரித்திராநின்ற அழகிய திருவடிகளை மனதில் வைத்து தேஜோமயனாகிய உன்னை வெளிப்படுத்தி என்னை அவ்விடத்திலிட்டு அடைத்து வைப்பது எந்தக்காலத்திலோ. (எ - று.) 165

கூட்டிலடைப்பட்டபுழு குளவியுருக்கொண்டதுபோல்
வீட்டிலடைப்பட்டருளை வேண்டுவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! கூண்டிலே அடைக்கப்பட்டிருந்த புழுவானது குளவியின் ரூபத்தைப் பெற்றவாறுபோல் நான் மோக்ஷ வீட்டிலடைக்கப்பட்டு உன்னுடைய திருவருளை எந்தக்காலத்தில் விரும்புவேனோ. ()

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போல்
உடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! சமுத்திரத்தில் மறைந்திருக்கும் வடவாமுகாக்கினியானது வெளிப்பட்டு வந்தாற்போல என்னுடைய தேகத்தின் கண்ணே மறைந்திருக்கின்றவனான நீ வெளிப்பட்டு எனக்கு அருள்செய்வது எந்தக்காலத்திலோ. (எ-று) 167

அருணப்பிரகாச மண்டமெக்கும்போர்த்ததுபோல்
கருணைத்திருவடியிற் கலந்துநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! சூரியனுடைய பிரகாசமானது உலகமெங்கும் பரவியிருப்பதுபோல உன்னுடைய திருவடிகளில் நான் எந்தக்காலத்தில் கலந்திருப்பேனோ. (எ - று) 168

பொன்னிற்பலவிதமாய் பூஷணமுண்டானதுபோல்
உன்னிற்பிறந்ததுன்னி லொடுக்குவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! பொன்னென்னும் ஒருலோகத்திலிருந்து பலவகையான ஆபரணங்கள் உண்டாவதுபோல உன்னிடத்திலே பிறந்து மீண்டும் உன்னிடத்திலே அடங்கும்படியான வாழ்வு எனக்கு எந்தக்காலத்தில் கைகூடுமோ. (எ - று) 169

நாயிற்கடைப்பிறப்பாம் நான்பிறந்த துன்பமற
வேயிற்கனலொளிபோல் விளங்குவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! நாயைப்பார்க்கிலும் இழிவாக நான் பிறந்திருக்கும் இத்துன்பம் நீங்கும் பொருட்டு நீ தேஜோமயனாகி எனக்கு எதிரே தோன்றுவது எந்தக்காலத்திலோ. (எ - று) 170

சூரியகாந்திவெளி சூழ்ந்துபஞ்சைசுட்டதுபோல்
ஆரியன்றோற்றத் தருள் பெறுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! சூரியனுடைய சுடரானது வெளிப்பட்டும் பஞ்சைக்கொளுத்தியது போல குருசாமியினுடைய பார்வையால் உன்னுடைய திருவருளைப்பெறுவது எந்தக்காலத்திலோ? (எ - று) 171

இரும்பிற்கனன்மூட்டி யிவ்வுருபோயவ்வுருவாய்க்
கரும்பிற்சுவைரசத்தைக் கண்டறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! இரும்பி னிடத்தில் தீயை மூட்டின் பழையரூபம் போய் அந்த அவசரத்தில் வேறு ரூபத்தைக் காட்டியதுபோல சிவரூபத்தைப்பெற்று கரும்பின் ரசம இனிப்பது போல் இனிமேல் மெய்ப்பொருளாகிய உன்னை நான் எந்தக்காலத்தில் தரிசிப்பேனோ. ()

கருக்கொண்டமுட்டைதனைக் கடலாமைதானினைக்க
'உருக்கொண்டவாறதுபோ லுனையடைவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! கடலாமையானது தான் கரையிலிட்ட முட்டையை மீண்டுமொருகால் நினைக்க அம்முட்டையினின்றும் ரூபமுண்டாகிறது போல் நானும் உன்னை யடைந்து உனது சங்கற்பத்தால் உன்னுடைய அருள்மயனாவது எந்தக்காலத்திலோ? (எ - று)

வீடுவிட்டுப்பாய்ந்து வெளியில்வருவார்போல்
கூடுவிட்டுப்பாயுங் குறிப்பறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! பரகாய பிரவேசம் செய்ய உணர்ந்து கொண்ட பெரியவர்களைப் போல் நானும் எனக்குள்ள கூண்டாகிய இந்தத் தேகத்தை விட்டு வெளிப்பட்டுப் போகுங் காலத்தின் குறிப்பை எந்தக் காலத்தில் அறிந்து கொள்வேனோ. (எ று) 174

கடைந்தவெண்ணெய்மோரிற் கலவாதவாறதுபோல்
உடைந்துதமியே னுனைக்காண்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! முன்னர் ஒன்றாக விருந்தாலும் அதைக் கடைந்தெடுத்து விட்ட பிறகுஇந்த வெண்ணெயானது மோரில் கலக்காததன்மையைப்போல உன்னை விட்டுப்பிரிந்து விட்ட நானும் மறுபடியும் உன்னை எந்தக் காலத்தில் காண்பேனோ? (எ - று.) 175

இருளைவெளிவிழுங்கி யேகவுருக்கொண்டாற்போல்
அருளைவிழுங்குமிரு ளகன்றுநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! இருட்டை ஆகாயமானது தன்னுள்ளடக்கி ஒரே வெளியாய் நின்றதுபோல திருவருளைக் காட்டாமல் மறைக்கின்றது அஞ்ஞானத்தை நான் எந்தக்காலத்தில் நீங்கி யிருப்பேனோ? (எ-று) 176

மின்னெழுந்துமின்னொடுங்கி விண்ணிலுறைந்தாற்போல்
என்னுணின்றதென்னுள்ளே யானறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! ஆகாயத்திலே மின்னல் தோன்றி மீண்டும் அம்மின்னலானது தோன்றின இடத்திலேயே ஒடுங்கிப் போனது போல எனக்குள்ளே யிருக்கின்ற தலைவனாகிய உன்னை நான் அறிந்து கொள்வது எந்தக் காலத்திலோ, (எ-று) 177

கண்டபுனற் குடத்திற் கதிரொளிகள்பாய்ந்தாற்போல்
கொண்டசுரூபமதைக் கூறறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! ஓரிடத்தில் வைத்துள்ளே நீர்க்குடத்தில் சூரியனுடைய ஒளியாபித்தது போல எங்கும் வியாபகமாய் நின்ற உன்னுடைய சொரூபத்தைப் பற்றி நான் துதிசெய்ய அறிந்து கொள்வது எந்தக் காலத்திலோ, (எ - று) 178

பூணுகின்றபொன்னணிந்தாற் பொன்சுமக்குமோ வுடலைக்
காணுகின்றவென் கருத்திற் கண்டறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! அணியத்தக்க பொன்னை பொன்னாபரணங்களுக்கே அணிந்தால் அவைசுமப்பனவோ? இல்லை ஆகையால் காணத்தக்க என்னுடைய கருத்தைக் கொண்டு உன்னைக் கண்டுணர்வது எந்தக்காலத்திலோ. (எ-று) 179

செம்பிற்களிம்புபோற் சிவத்தைவிழுங்குமிக
வெம்பினின்றமும்மலத்தை வேறுசெய்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! செம்பிலுள்ள களிம்பைப்போல உன்னுடைய சொரூபத்தை வெளிப்படுத்தாமல் மறைந்திருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் அறுத்தெறிவது எந்தக்காலத்திலோ. (எ-று) 180

ஆவியுங்காயமும்போ லாத்துமத்து நின்றதனைப்
பாவியறிந்துமனம் பற்றிநிற்பதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே! உடலும் உயிரும் போல் என்னுள் கலந்திருக்கின்ற உன்னைப் பாவியாகிய நான் நன்குயாராய்ந்து சிந்தனை செய்யும்படியான வாழ்வு எனக்கு எந்தக் காலத்தில் கைகூடுமோ. 181

ஊமைக்கனுக்கண் டுரைக்கறியாவின்பமதை
நாமறிந்துகொள்வதற்கு நாள்வருவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! ஒரு ஊமையானவன் கனுக்கண்டு அவன் கண்டதைச் சொல்ல வகையறியாமை போல நம்மாலும் சொல்லுதற் கருமையான சுகத்தை நாம் தெரிந்து கொள்வதற்குப் பரிகாரம் எந்தக் காலத்தில் வருமோ. (எ - று.) 182

சாகாசிவனடியைத் தப்பாதாரெப்போதும்
பாரேவுடலகன்று போவரென்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! எந்தக்காலத்திலும் அழிதலில்லாத சிவபெருமானுடைய திருவடிகளிற் சதா மனத்தை வைத்துள்ள ஞானிகள் என்றும் தம்மைவிட்டு நீங்காத தேகத்தை விட்டும் நீங்கிப் போவார் என்று சொல்லும் அறிவு எனக்கு எந்தக் காலத்தில் உதயமாகுமோ, (எ - று.) 183

நிட்டைதனைவிட்டு நினைவறிவுதப்பவிட்டு
வெட்டவெளியில் விரவிநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே! நான் நிஷ்டை, நினைப்பு, உணர்ச்சி இவைகளை அறவே விட்டொழித்து மேலான சிதாகாயத்தில் கூடி யிருக்கும்படியான வாழ்வு எனக்கு எந்தக் காலத்தில் கைகூடுமோ? 184

வெட்டவெளிதன்னில் விளைந்தவெம்பாசத்தை
திட்டமுடன்கண்டு தெளிவதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் எனக்கு ஒரு ஏதுகரமு மில்லாமல் வந்துசேர்ந்த பந்தத்தை அறிய வேண்டிய மார்க்கத்தா லறிந்து அது வந்தவிதத்தை யெந்தக்காலத்தில் கண்டு பிடிப்பேனே? 185

எங்கும்பரவடிவா யென்வடிவுநின்வடிவாய்க்
கங்குல்பகலின்றியுனைக் கண்டிருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் சர்வம் சிவமயமாகவும், என்னுடையரூபம் உன்னுடைய ரூபமாகவும் இராப்பகலில்லாமல் உன்னைக்கண்டு தரிசிப்பது யெந்தக் காலத்திலோ (எ - று.) 186

உண்டதுவுமாதருடன் கூடிச்சேர்ந்தின்பங்
கண்டதுவுநீயெனவே கண்டுகொள்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் புசித்ததும், பெண்களுடன் கூடிச்சுகித்ததும் உன்னுடைய செய்கைகளே யென்று ஞான உணர்ச்சியினால் யெந்தக் காலத்தில் உணர்ந்து கொள்வேனோ. (எ - று.) 187

ஈமென்றுகெட்டதுவு மென்னுள்ளேநின்றதுவும்
ஓமென்றுசொன்னதுவு முற்றறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, என்னுடைய ஆசாரிய மூர்த்தியானவர், (ஈம்) என்று சொல்லப்படும் மந்திராட்சரத்தால் என்னைக் கேட்டதையும், பின்னர் என்னுள்ளேயிருந்ததையும், அதன்பினனர் (ஓம்) என்றுஉபதேசித்ததையும் நான் யெந்தக்காலத்தில் அறிந்து கொள்வேனோ ()

சத்தம்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம்பிறந்தவிடந் தேர்ந்தறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் சத்தம் பிறந்ததாகவும், பெல்லாம் தன்மயமானதாகவும், மனம் உதித்ததாகவும் இருக்கின்ற இடத்தை நான் எக்காலத்தில் விசாரித்தறிவேனோ. (எ-று) 189

போக்கும்வரவும் புறம்புள்ளுமாகிநின்றும்
தாக்குமொருபொருளைச் சந்திப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, போதலும், வருதலும், வெளிப்பொருளாகியும் உட்பொருளாகியும், எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற உன்னை நான் எந்தக்காலத்தில் அடைந்துய்வனோ. (எ - று) 190

நானெனவுநீயெனவு நாமிரண்டுமற்றொன்றும்
நீயெனவேசித்தைதனி னேர்படுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான், நீ என்கிற இரண்டுபகுப்பொழிந்து எல்லாம் நீயே யாவாய் என்னும் ஞானமானது என்னுடைய மனத்தில் எந்தக்காலத்தில் உதயமாகுமோ. (எ-று) 191

அறிவையறிவாலறிந்தே யறிவுமறிவுதனில்
பிறிவுபடாமில்லாமல் பிடிப்பதினியெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நான் என்னுடைய அறிவை அந்த அறிவினாலேயே உணரப்பெற்று (அப்படி உணர்ந்த) அந்த அறிவை விட்டுப் பிரியாமல் கடைப்பிடியாகப் பிடித்துய்வது எந்தக் காலத்திலோ. (எ-று.) 192

நீடும்புவனமெல்லாம் நிறைந்துநிந்தூரமதாய்
ஆடுந்திருக்கூத்தை யறிவதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நீ இந்த ஈரேழுபதி னான்கு புவனங்களெல்லாம் தூள்படும்படியாக நடிக்கின்ற ஆனந்தக்கூத்தை நான் எந்தக்காலத்தில் தரிசித்துய்வேனோ . 193

தீத்தியென்றகூத்துத் திருச்சிலம்பினோசைகளும்
பத்தியுடனேகேட்டு பணிவதினியெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நீ நடிக்கும்போது உன்னுடைய திருவடிகளில் தரித்திருக்கும் சிலம்பின் ஓசைகளை என்னுடைய காதால் கேட்டு நான் உன்னை நமஸ்காரஞ்செய்யப் பெறுவது எந்தக் காலத்திலோ. ()

நயனத்திடைவெளிபோய் நண்ணும்பரவெளியில்
சயனத்திருந்து தலைப்படுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நெற்றியின் மத்தியிலி ராநின்ற சுழிமுனையாகிய சிதாகாசத்தில்போய் அவ்விடத்தி லிருக்கும் மேலான சிற்றம்பலத்தில் ஆனந்த நித்திரை செய்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ - று.)

அருவிமலைநடுவே யாயிரக்கால்மண்டபத்தில்
திருவிளையாடற்கண்டு தெரிசிப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, அருவி யாறுனது பாய்ந்து கொண்டேயிருக்கும் ஒரு மலையின் நடுவிலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் நீ ஆடுகின்ற ஆனந்தக்கூத்தை நான் எந்தக்காலத்தில் தரிசிப்பேனோ. (எ - று) 196

மீனைமிகவுண்டுநக்கி விக்கிநின்றகொக்கதுபோல்
தேனைமிகவுண்டுநக்கி தெவிட்டிநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, கொக்கானது ஜலத்தி லிருக்கும் மீனைத்தின்று ருசித்துதெவிட்டி நிற்பதுபோல

நானும் ஆனந்தத்தேனையுண்டு நக்கித்தெவிட்டியிருப்பது எந்தக்காலத்திலோ. (எ-று) 197

பொல்லாதகாயமுனைப் போட்டுவிடுக்குமுன்னே
கல்லாவின்பால்கறப்பக் கற்பதினியெக்காலம்

(போ-ரை) சிவபெருமானே, என்னுடைய தேகமானது உன்னைப்போட்டு வெளிப்பட்டு போகுமுன்னமே கல்லாவாகிய ஞானமென்னும் பசுவானது பாலைத்தரநான் கறந்துண்பது எந்தக் காலத்திலோ (எ - று.) 198

வெட்டவெளிக்குள்ளே விளங்குஞ்சதாசிவத்தைக்
கிட்டவரத்தேடக் கிருபைசெய்வதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, வெட்ட வெளியாகிய சிதாகாசத்தில் விளங்கும் சதாசிவமூர்த்தியாகிய உன்னை என்னிடத்தில் வந்து சேரும்படி நான் தேடும்படி எனக்குத் திருவருள் செய்வது எந்தக் காலத்திலோ (எ - று.)

பேரறிவிலேமனதை பேராமலேயிருத்தி
ஓரறிவிலென்னுளு மூன்றிநிற்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே! என்னுடைய மனத்தைப் பேரறிவாகிய உன்னிடத்தில் எக்காலத்தும் பதிந்திருக்கச்செய்து பின்னர் ஒரு அறிவாகிய இரண்டறக்கலத்தலாகிய நிலையில்நான் எந்தக்காலத்தில் இப்பேனோ,(எ-று)

அத்துவிதம்போலுமென்ற ஞுத்துமத்தினுள்ளிருந்து
முத்திதரநின்ற முறையறிவதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நீயே அத்து விதத்தினுண்மை நிலையைப்போல உன்னுடைய உயிரின்கண் கலந்திருந்து எனக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும்படி எழுந்தருளியிருந்தவகையை நான் எந்தக்காலத்தில் அறிவேனோ.

நாவின்றபாசமதி னிருந்துமாளாமல்
நீவின்றகோலமதில் விறவிவிற்பதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நான் இதுவரைக்கும் கூடியிருக்கும் பந்தத்திலிருந்தோ இறவாமல் நீ எழுந்தருளியிருக்கும் கோலதசனமாகிய பதிஞானத்தில் சேர்ந்து உன்னை யடைந்திருப்பது எந்தக்காலத்திலோ ()

எள்ளுங்கரும்பு மெழுமலரும்காயமும்போல்
உள்ளும்புறம்புவின்ற துற்றறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, எள்ளில் எண்ணெய் போலும் கரும்பில் இரசம்போலவும், மலரில்வாசனைபோலும், உடலில் உயிர்போலும் நீ உள்ளும் வெளியும் இருக்கின்ற வியாபகத்தை நான் எக்காலத்தில் அறிவேனோ? ()

அன்னம்புலனை வகுத்தமிர்தைபுண்டதுபோல்
என்னைவகுத்துன்னை யினிச்காண்பதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, அன்னப்பட்சியானது நீரைப்பிரித்து பாலைக்குடிப்பதுபோல நானும் என்னைப் பிரிந்து உன்னைக்காண்பது எந்தக்காலத்திலோ (எ - று)

அன்னப்பட்சியானது பாலில் கலந்திருக்கும் நீரைப் பிரித்தகற்றுவதுபோல உன்னிற்கலந்திருக்கும் என்னை நீக்கி உன்னைத்தரிசிக்கவேண்டும் என்பது கருத்து 214

அந்தரத்தினீர்பூத் தலர்ந்தெழுந்ததாமரைபோல்
சிந்தைவைத்துக்கண்டு தெரிசிப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, ஆகாய கங்கையினிடமாகப் பூத்துமலர்ந்த தாமரையைப்போல உன்னுடைய திருவடிகளில் மனத்தை வைத்துக்கொண்டு தரிசிப்பது எந்தக்காலத்திலோ. (எ - று) 215

பிரப்புமிரப்புமற்றுப் பேச்சுமற்றுமூச்சுமற்று
மறப்புநினைப்புமற்று மாண்டிருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் பிறப்பு, இறப்பு, பேச்சு, மூக்சு, மறப்பு, நினைப்பு ஆகிய இவைகளை அறவே விட்டொழித்து சிவானந்தத்தை அனுபவிக்கும் பொருட்டுச் சாக்கிராதீதமாகிய இடத்தில் கூடியிருப்பது எந்தக் காலத்திலோ, (எ - று) 216

மன்னும்பரவொளியை மனவெளியிலடைத்தறிவை
என்னுமொருநினைவை யெழுப்பிநிற்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, எக்காலத்தும் அழியாமல் நிலைபெற்றிருக்கின்ற பரவொளியை என்னுடைய மனமாகிய வெளியிலடைத்துவைத்து அரிவையென்னும் குண்டலிசத்தியாகிய ஒருநினைப்பை யெழுப்பி நின்றிருப்பது எந்தக்காலத்திலோ.

ஆசைகொண்டமாத ரடைகனவநீக்கியுன்மேல்
ஓசைகொண்டுநானு மொடுங்குவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெரு மானே, விருப்பம் வாய்ந்த பெண்களைக் காண்கின்ற கனவினையறவே யொழித்து உன்னுடைய திருவடிகளின் நாதமாத்திரையைப் பெற்றுநான் தனியிடத்தில் ஒடுங்கியிருப்பது எந்தக்காலத்திலோ. ()

அடைகனவுநீக்கி என்றது சொப்பனவத்தையை.

தன்னுயிரைக்கொண்டு தான்றிரிந்தவாரதுபோல்
உன்னுயிரைக்கொண்டிங் கொடுங்குவதுமெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, தன்னுடைய உயிரின் சகாயத்தால் வெளியிடங்களிலெல்லாம் திரிந்தது போல உன்னை நான்பெற்று இவ்விடத்தில் சமாதியிலிருப்பது எந்தக்காலத்திலோ. (எ - று) 219

சேற்றிற் கிளைநாடுந் திடமாமுடலையினிக்
காற்றிலுழல்சூத்திரமாய்க் காண்பதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, சேற்றில் நடப்படும் கிளியைப்போல் நிலையில்லாததாகிய இந்தத்தேகத்தைக் காற்றிற் சஞ்சரிக்கின்ற யந்திரமென்று அறிவது எந்தக் காலத்திலோ. (எ-று) 210

என்வசமுங்கெட்டிங் கிருந்தவசமும்மழிந்து
தன்வசமுங்கெட்டருளைச் சார்ந்திருப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னுடைய சுவாதீனத்தையும், நான் இருந்த தேகத்தின் சுவாதீனத்தையும், உன்னுடைய சுவாதீனத்தையும் அறவே யொழித்து உன்னுடைய திருவருளின் சுவாதீனமா யிருப்பது எந்தக் காலத்திலோ. (எ - று) 211

தன்னைமறந்து தலைத்துணைமறந்து
கன்மமற்று கதிசெருவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னையும் எனக்குத்தலைமையாயிருக்கும் இடத்தையும் அதினால் விளையும் கர்மத்தையும் விட்டு மோக்ஷத்தையடைவது எந்தக்காலத்திலோ; (எ - று) 212

என்னையென்னிலேமறந்தே யிருந்தபதியும்மறந்து
தன்னையுந்தானேமறந்து தனித்திருப்பதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நானே என்னையும், என்னிடத்திலே யெனக்குத் தெரியாமலிருக்கின்ற பதியாகிய உன்னையும் அறவே மறந்து தனியாயிருப்பதான சமாதியில் எந்தக்காலத்தில் இருப்பேனோ. (எ - று) 213

தன்னையுந் தானேமறந்து தலைவாசற்றாள்போட்டே
உன்னைநினைந்துள்ளே யுறங்குவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் என்னைநானே மறந்து உனக்குச் சம்பந்தமான வீட்டிற் பிரவேசித்து அதன் தாளைப்போட்டு விட்டு அங்கே உன்னுடைய திருவடிகளைச் சிந்தித்துத் தூங்காமற் றூங்குவது எந்தக்காலத்திலோ. (எ - று) 214

இணைபிரிந்தபோதலரி யின்பமுறுமன்றிலைப்போல்
துணைபிரிந்தபோதருளூல்தொடர்ந்துகொள்வதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, அன்றில் என்னும் ஒரு வகைப்பக்ஷியானது தன்னுடைய துணையான பெண் பக்ஷியையாயினும், ஆண் பக்ஷியையாயினும். ஒன்றைவிட்டொன்று பிரியுமானல் தங்களுடைய சுகத்தை விட்டுத் துக்கிப்பது போல நான் உன்னைப் பிரிந்தபோது திருவருட் கலைஞானத்தை யெந்தக்காலத்தில் பெறுவேன்,

ஆட்டமொன்றுமில்லாம லசைவுசற்றுங்காணுமல்
தேட்டமற்றவான்பொருளைத் தேடுவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, ஆடுதலும், அசைதலும், சற்றும் இல்லாமலும் யாவராலும் தேடுதற்குக்கூடாமலு மிருக்கின்ற பெரிய பொருளாகிய உன்னை நான் எக்காலத்தில தேடியடையப் பெறுவேனே, (எ-று) 216

முன்னைவினையாலறிவு முற்றுமற்புன்மறைந்தால்
அன்னைதனைத்தேடி யழுதுண்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே. நான் என்னுடைய பூர்வகர்மத்தினல் அறிவை முதிர பெறுமல் மறைந்தமையால் என்னுடைய தாயாகிய திருவருட்சத்தியை நான் எக்காலத்தில் காணப்பெறுவேன். (எ - று) 217

கள்ளுண்டவர்போற் களிதருமானந்தமதாற்
றள்ளுண்டுநின்றாடித் தடைபடுவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் கள்ளுண்டவர்கள் தள்ளாடுவதுபோல நானும்உன்னுடைய ஆநந்தத்தை அநுபவிப்பதால் தள்ளாடி அதிலேயே அமிழ்ந்திருப்பது எந்தக்காலத்திலோ. (எ-று) 218

தானென்றவாணவமுந் தத்துவமுங்கெட்டொழிந்தே
ஏனென்றபேச்சுமிலா திலங்குவதுமெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நான் நானென்னும் ஆணவத்தையும் என்னைக் கலந்திருந்து சேஷ்டை செய்து கொண்டு வாராநின்ற தத்துவங்களையும் விட்டு நீங்கி, ஏன் என்கிறசொல்லும் இல்லாதபடி மௌனத்தை யடைந்துய் வது எந்தக்காலத்திலோ. (எ - று) 219

நானவனைக்காண்பதெல்லா ஞானவிழியாலறிந்து
தானவனைநின்று சரணடைவதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் உலகத்தி னிடமாகக்காணும் பொருள்களை யெல்லாம் நீயாகவே ஞான மார்க்கத்தால் கண்டு எல்லாம் நீயேயாய்ப் பின் உன்னுடைய திருவடிகளை நான்எந்தக்காலத்தில் அடைவேனோ.

தானந்தமில்லாத தற்பரத்தினூடுருவி
ஆனந்தங்கண்டே யமர்ந்திருப்பதெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் என்னும் அழிதலில்லாத மேலான பரம்பொருளிற் கலந்து அங்கே அநுபவிப்பதாகிய ஆநந்தத்தில் அமிழ்ந்திருந்து உன்னுடைய திருவடிகளில் கலந்திருப்பது எந்தக்காலத்திலோ. (எ-று)

உற்றவெளி தனிலே உற்றுப்பார்த்தந்தரத்தே
மற்றமரமாய்கை மாள்வதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, நான் ஆகாயத்தினிடமாக விளங்கிக்கொண்டிருக்கும் ஆஞ்ஞாஸ்தானத்தில் போய் அதினால் என்னுடைய மாய்கையை எந்தக்காலத்தில் போக்கிக்கொள்வேனோ. (எ - று)

ஏடலர்ந்தபங்கயமு மிருகருணைநேத்திரமுந்
தோடணிந்தகுண்டலமுந் தோன்றுவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, எனக்கு உன்னுடைய சொரூபலட்சணம் எந்தக்காலத்தில் வெளிப்படுமோ அதை நான் அறிகிலேன். (எ - று.) 223

ஐயாறுமாறு மகன்றுவெறுவெளியில்
மையிருளில்நின்றமன மாள்வதினியெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்துபோய் அங்கேயுள்ள வெட்ட வெளியிலிருந்து அதினால் என்னுடைய மனத்தின் கனுவுள்ள அஞ்ஞானத்தை எந்தக்காலத்தில் போக்கடிப்பேனோ (எ- று.)

காட்டுமருண் ஞானக் கடலிலன்பு கப்பல்விட்டு
மூட்டுங்கருணைக்கடலின் மூழ்குவதுமெக்காலம்

(போ - ரை) சிவபெருமானே, வெளிப்படையாய்க் கூட்டுகின்ற திருவருட் கடலில் அன்பென்னும கப்பலைச் செலுத்திப் பின்னர் அக்கப்பலும் நானும் கருணையென்னும் கடலில் மூழ்குவது எந்தக் காலத்திலோ (எ-று)

நானாரோநீயாரோ நற்றும்பரமானந்
தானாரோவென்றுணர்ந்து தவமுடிப்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, நானென் பதையும் நீயென்பதையும் முன்னிலையாக வையாமல் திருவருளை யடைதற்குரியதவத்தை எந்தக்காலத்தில் செய்து முடிப் பேனே. (எ - று) 226

எவரெவர்களெப்படிகண் டெந்தபடிநினைத்தார்
அவரவர்க்கப்படிநின்று மென்பதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, யார் யார் எப்படி யெப்படி பாவித்து நிலைக்கின்றார்களோ அந்த அந்தப்ப டியே வெளிப்படுவேன் நீயேயென்று, உணர்ந்து கொள் வது எந்தக்காலத்திலோ. (எ-று.)

யார் எப்படி நினைக்கிறார்களோ அப்படியே வருப வன் ஈசனொருவனே யாவான் என்பதை.

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகிய வெங்கள் மாதொருபாகனார் தாம்வருவார்" என்று சித்தி யாரில் சொல்லியிருப்பதினாலறிக. 227

உற்றுற்றுப்பார்க்க வொளிதருமானந்தமதை
தெத்திக்குநேர்கண்டு நிலைப்பதினியெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, உற்றுப் பார்க்கப் பார்க்க விளங்கிக் கொண்டிருக்கும் தேஜோமயத்தை சுழி முனை யென்னும் ஸ்தானத்தில் கண்டுகளிப்பது எந்தக் காலத்திலோ. (எ - று) 228

விளங்குகின்றதாரகையை வெய்யோன்மறைத்தாற்போல்
களங்கமறவுன்காட்சி கண்டறிவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, விளங்கிக் கொண்டி ருக்கின்ற நட்சத்திரத்தை சூரியன் மறைத்ததுபோல

என்னைமறைந்திருக்கின்ற மாய்கையை நீக்கி உன்னைத் தெரிசிப்பது எந்தக்காலத்திலோ? (எ - று) 229

என்னையேநானறியே னிந்தவண்ணஞ்சொன்னதெல்லா
முன்னையோர்கைக்கொள்ள முன்பணிவதெக்காலம்

(பொ - ரை.) சிவபெருமானே, நான் என்னை உணர மாட்டேன் ஆனாலும் இதுவரைக்கும் சொன்னதெல்லாம் முன்னோர்கள் அங்கீகரிக்கும்படி நான் அவர்களை நமஸ்கரிப்பது எந்தக்காலத்திலோ?

ஐஞ்சுகரத்தனை யடியிணையைப்போற்றிசெய்து
நெஞ்சிற்பொருந்தி நிலைபெருவதெக்காலம்

(பொ - ரை) சிவபெருமானே, ஐந்து திருக்கரங்களை யுடைய விநாயகமூர்த்தியின் திருவடிகளைநெஞ்சில்வைத்து நமஸ்காரஞ் செய்து அவருடைய திருவடியில் நிலைத்திருப்பது எந்தக் காலத்திலோ அதை நான் அறிந்தேனில்லை. ()

# பத்திரகிரியார் புலம்பல்

## மூலமும் - பொழிப்புரையும்.

### முற்றிற்று.

---

பி. எஸ். டி. எம். அண்டு ஸன். பதிப்புகள்.

மலையாள அனுபோக

# மாந்திரீக ஆசிரியன்

மூலமந்திர யந்திரத்துடன் அணா 8.

இதில் விநாயகர் வசியம், சுப்பிரமணியர் வசியம், சத்திவசியம், லோகவசியம், ஜீவவசியம், வியாபார வசியம், வழக்கு வெல்லும் வசியம், ஸ்திரீவசியம், வசியம், மோகனம், ஸ்தம்பனம், ஆக்ருஷ்ணம், உச்சாடனம், வித்துவேஷணம், மாரணம், முதலிய அஷ்டகன்மம், வாருகி, சத்தி, காளி, மாடன், மோகினி, வீரன், குறளி முதலிய சில்லரை தெய்வவசியங்கள், பஞ்சபக்ஷி மாந்திரீகம், சரவியல் சூக்ஷும மனோவசிய சர்வசக்தி பூஜை ஆனந்ததரிசன மாந்திரீக திறவுகோல் முதலிய அனேக ரகஸ்யமான கணக்கில்லாத அனுபோகமான மாந்திரீகங்களும், அதற்குரிய கோசபீஜ யந்திரங்களும், மூலமந்திரங்களும் பூஜாவிதியும் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறது. இதனை ஒருமுறை வாசித்தவர்கள் அவர்களே வாத்தியாரில்லாமலும் பிறர் உதவியில்லாமலும், சகல மாந்திரீக வசிய வல்லவர்களாகவும், எட்டு சித்தும் விளையாடும் கலியுக சித்தர்களுமாவார்கள்.

# அகட விகட சமுசாரி

இதன்விலை அணா 6.

விலாசம்,—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்.
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

# அஷ்டதிக்கு ஆரூடம்.

## பஞ்சபக்ஷி சக்கரத்துடன் ரூபா 1.

இதில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன் வாயு, குபேரன், ஈசானியன் முதலிய 8-திக்குகளையும்வருகுந் திக்கறிந்து, சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றுகாலபலனையும் தெரிந்து சொல்லலாம் இன்னும் பஞ்சபட்சி ஆரூடம், ஆஞ்சநேய ஆரூடம், ஜெயமுனிவர் ஆரூடம், வால்மீகர் ஆரூடம் ஆக 5-ஆரூடம் சேர்ந்திருக்கிறது. இந்த ஆரூட சாஸ்திரத்தை யாரொருவர் கையாண்டு வருகிறார்களோ அவர்களை ஆரூடசாஸ்திரக் காரர்களென்று பலருமதிப்பார்கள். ஆரூடமும் கேட்பார்கள்.

# ஔவைக் குறள்.

## ஞானதீபார்த்த உரை அணா 8.

சரஸ்வதிதேவியின் அம்சமென உலகத்தாரால் புகழ்ந்து கூறப்படும் ஔவைப்பிராட்டியாரால் திருவாய் மலர்ந்தருளியபலநூல்களில்ஒன்றாகிய குறள் யோகசாதனையும் ஞானநிலையும் கூறுவதால் அது விஷயார்த்தத்தைத் தெரிந்து நடந்து நாம்உய்யுமாறு உபமான உபமேயங்களுடன் தெளி பொருளாக உரையெழுதி பதிப்பிக்கப்பட்டது.

# பச்சிலை மூலிகை அகராதி

## இதன் விலை அணா 12.

உலகில் சர்வ மூலிகைகளும் நமக்கே கடவுள் உற்பத்தி செய்திருக்க, அதில் அனேகருக்குச் சில மூலிகைகள் தெரிந்தும் அனேக மூலிகைகள் தெரியாமலும் இருப்பதியற்கையே ஆனதால், குடும்பஸ்தர்களுக்கும் வைத்தியர்களுக்கும், வாதிகளுக்கும் தெரிந்து உபயோக மாகும்படி தெள்ளத்தெளிய அதன் மர்மம் செய்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

விலாசம்—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்.
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

# நோயில்லா வாழ்வு.

## இதன் விலை ரூபா 1

சரீர சாஸ்திரம், சயனசாஸ்திரம், சரீரநிதானம், பதார்த்தகுணம், இப்பேர்க்கொத்த உயர்ந்த சாஸ்திரங்களில் ஆராய்ச்சிசெய்து அச்சிட்ட (நோயில்லாவாழ்வு) இது எவ்வருணத்தாருக்கும் ஒவ்வொரு புத்தகம் இருக்கவேண்டுமென்றறிக.

## இலாகிரிப் பிரியரென்னும்

# குடியர் துயரம்.

## இதன் விலை அணா 8

கள் சாராயம் கஞ்சா அபின் முதலிய மயக்கந்தரும் வஸ்துக்களையுண்டு வெறிகொண்டு தான் தேடியதும் தந்தைதாய் பாட்டன், பூட்டன் முதலானோர் சேகரித்து வைத்துவைத்த திரவியங்களெல்லாம் கள்ளுக்கும் சாராயத்திக்கும் பின்னும் கூத்தி கூத்துவம்புவழக்கு சூதாட்ட முதலானவைகளுக்கும் வாரி யிறைத்துவிட்டு அதன்பிறகு குந்தினையுங் குரங்கே உன்சந்தடி அடங்க என்ற பழமொழிக்கிணங்க, ஆட்ட பாட்ட ஆர்பாட்டமெல்லாம் அடங்கி கட்டக் கந்தைக்கும் தின்னசோற்றுக்கும் இருக்க இடத்துக்கும் அலைந்து திரிந்து தங்கள் பொன்போன்ற தேகத்தையுங் கெடுத்துக்கொண்டு தம்மையொத்த பெரிய மனிதர்களை கண்டபோதெல்லாம் வெட்கப்பட்டுத் தலைகுனிந்தும்போகும்படியான நிலைமைக்கும் வந்துவிடும் இலாகிரிப் பிரியரின் சரித்திரங்களை இனிய தமிழ்நடையில் பலேதமாஷாக விகடமாகவும் எழுதியிருக்கின்றது.

**விலாசம்.—பி. எஸ். டி: எம். அண்டு ஸன்.**

**வேப்பேரி போஸ்டு, மதறாஸ்.**

பி. எஸ். டி. எம். அண்டு ஸன். பதிப்பு

18-சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# வாதக்கோவை.

இதன் விலை ரூபா 1.

அனேக மனிதர்களுக்கு இரசவாதஞ் செய்வதில் விருப்பமுண்டு. அந்த விருப்பத்தின்படியே அதைச்செய்து முடித்துக்கொள்ள எவ்வளவோ திரவியங்கள் வீணே செலவாகின்றன. ஆகையால் அப்படி திரவிய நஷ்டம் வாராதபடி கற்றுக்கொண்டு செய்து பார்க்க ஸ்ரீ அகஸ்திய முனிவர் முதலியோர் திருவாய் மலர்ந்த இரசவாதங்களை யெல்லாம் ஒன்ருய்த்திரட்டி பொழிப்புரை யெழுதி, யாவருக்கும் பயன்படும்படி அச்சிடப்பட்டிருக்கிறது.

ஸ்திரீ புருஷ

# லக்ஷணக் குறி சாஸ்திரம்

இதன் விலை ரூபா 1.

இலக்ஷணக்குறி இக்ஷணமறிய
உச்சிதநூலா மீதுணர்.

ஸ்திரீ புருஷர்கள் பிறந்தபோதிலும் பருவகாலத்தின் போதும், விவாக காலத்தின் போதும், ஜோதிடரின்றி அவரவர்களே தங்கள் தங்கள் உள்ளங்கால் முதல் உச்சி வரையிலும் உள்ள அவயவங்கள் லக்ஷணத்தாலும், அஸ்தரேகையாலும், ஆயுள்-செல்வம்-வறுமை-கல்வி-விவாகம்-தாரம், புத்திரர் முதலிய சுபாசுப பலன்களை அனுபவமாகத் தெரிந்து கொள்ளலாம். கைகண்டதால் இதுவே.

விலாசம்,—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்.
வேப்பேரி போஸ்டு, மதருஸ்.

# கைமுறை பாக்கெட் வைத்தியம்.

## இதன் விலை ரூபா 1.

சுமார் 30வருஷகாலமாக கைமுறையாக சுருதி யுக்தி அனுபவத்துடன் கைபாகம் செய்பாகம் தீட்சை பாகம் தவறாமல் செய்[illegible] முடித்து பலருக்கும் கொடுத்து பூரண சௌக்கியம் [illegible]ண்டாகி எங்கும் பிரபலமான அநேகமுறைகளை உலகபரோபகாரமாக இதில் எழுதியிருக்கிறது ஒவ்வொருவரும் எவ்வித நோய்கள் வந்தபோதிலும் ஆபத்து காலத்தில் வைத்தியரை தேடாமலே இதிலுள்ள ஔஷத முறைகளை நம்பிக்கையாகச் செய்து; சௌக்கியத்தையும் ஆச்சரியத்தையும் அடையலாம். இது ஒவ்வொரு குடும்பங்களிலும் அவசியமாககையிருப்பில் இருக்க வேண்டியதாகும். எப்போடம் ஜேபியில் மடியில் இருப்பதற்காக சிறியபாக்கெட் சைசில் அழகிய பயிண்டுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. போலி புத்தகங்களை வாங்கி யேமாறாமல் [illegible]கைமுறையென்னும், சுந்திர விலாசம் அச்சுக்கூடத்தில் பதிப்பித்ததென[illegible]றல் கவனித்து வாங்குங்கள். சுமார் 600 முறை அட[illegible]கி இருக்கிறது.

ஆயுர்வேத

## [illegible] ணவைத்தியம்.

இதன் விலை அணு 8.

அபூர்வ ஆச்சரிய

## பீதாம்பர ஜாலரத்தினம்

இதன் விலை அணு 8.

விலாசம்—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்.

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

# வேமன்ன பத்தியம்.

## மூலமும் உரையும் அணா 6.

தென்னாட்டிலே பிரசித்தியடைந்திருந்த பட்டணத்துச் சுவாமிகள் பத்திரகிரியார் முதலான மஹான்களைப் போலவே வடநாட்டில் திருவவதாரஞ் செய்து அனேக அற்புதங்களை நடாத்திய வேமன்ன யோகீஸ்வரர் 100-பாடலுக்கு மாத்திரம் ஸ்ரீமத்பரம அம்ச பரிவிராச ஆசாரியராய் விளங்கும் தட்சிணாமூர்த்தி சுவாமிகளது தொண்டனும், திரிபுராம்பிகை அடிமையும் இந்து ரிஜிலியஜியஸ் இஸ்கூல் மானேஜருமாகிய சீதாராம் பிரசாத் அவர்களால் உரையெழுதி அச்சிட்டிருக்கிறோம்.

பிர்மரஹசிய

# ஜோதிட ஹரிச்சுவடி.

## நாலு பாகம் விலை அணா 8.

பிறர் உதவியின்றி முப்பது நாளிலேயே ஜோதிடம் தெரிந்துக் கொள்ளுவதற்கு இந்நூல் ஒன்றே போதுமானதாகும். இதில், கிரகதத்துவ சீலங்கள், கிரக இராசிசத்துருமித்துரு சமத்துவம், இராசி இலக்கினம், இலக்கின நிச்சயம், தசாபுக்தி அந்தரம் முதலியவைகள் கணிப்பதற்கு சுலபமான வழிகளும், துவாதச பாவக தசாபுக்தி அந்தர பலன்களும், கோட்சாரபலன்களும், ஆயுள், கண்டம், மாரகதிசைகளும், இன்னும் ஜோதிடத்திற்கு வேண்டிய அரிய ரகசியங்களும் கரதலாமலகம் போல் விளக்கிக் காட்டியிருக்கிறது. ஜோதிடர்களும், சோதிடம் கற்றுக் கொள்ள விருப்பமுடையவர்களும் இந்நூலைப் பார்க்க வேண்டியது அவசியமேயாகும்.

**விலாசம்—பி. எஸ். டி. எம். அண்டு ஸன்.**

**வேப்பேரி போஸ்டு, மதரூஸ்.**